# T.N.L.A Debates

OFFICIAL REPORT

VOL: LVIII NO: 1

FEB 22 1984

D
V211,31 N84
N84.58.1
136217

23100 / 25-3-85
ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாறு ஆராய்ச்சி
27 MAR 19..
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-8.
2755

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை, பிப்ரவரி 22, 1984—தொகுதி LVIII எண் 1
Wednesday, 22nd February 1984—Volume LVIII No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3-50 காசுகள்]
[Price Rs. 3-50 Paise

Y811,31 N84

136217

சென்னை-600 008.

உள்ளடக்கம்.

1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் நாள்.


| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் .. .. .. .. | i-vii |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | ix |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட அகரவரிசை) .. .. | xi–xix |
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1–38 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 39–94 |
| 2. தகவல். கோரல் : | |
| (அ) சென்னை மாநகராட்சிப் பணிகள் குறித்து .. .. | 95–96 |
| (ஆ) பி. சி. மில் பகுதியை வெள்ளப் பகுதியென அறிவிப்பது. .. .. | 96 |
| 3. அறிவிப்புகள் :— | |
| (அ) சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை — உறுப்பினர்கள் தேர்தல். | 97 |
| (ஆ) அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை—உறுப்பினர்கள் தேர்தல். | 97 |
| (இ) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியம் உறுப்பினர் தேர்தல்.. .. | 98 |
| 4. ஒத்திவைப்புத் தீர்மானம் :— | |
| மீஞ்சூர் காவல் நிலையத்தில் கைதி மரணம் | 98–107 |
| 5. கவன ஈர்ப்புகள் :— | |
| (அ) திருப்போரூர் ஒன்றியம் கழிப்பட்டூர் கிராமத்திலுள்ள இறால்தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் விளை நிலங்கள் பாதிக்கப் பெறுவது .. | 107–110 |
| (ஆ) தமிழகத்தில் கோமாரி மற்றும் கால், வாய் நோயினால் கால்நடைகள் பாதிக்கப் பெறுவது .. .. | 10–117 |

6. அரசினர் சட்ட முன்வடிவுகள் :—

| | |
|---|---|
| (அ) வரி விதிப்புத் திருத்த (காலவரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு 1984 .. .. .. .. | 118 |
| (ஆ) மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக்கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு 1984. | 119–133 |
| (இ) பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984 .. .. | 134–168 |
| (ஈ) தொலைக்காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு 1984 .. .. .. .. | 168–180 |
| (உ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் தமிழ்நாடு வேளாண்பொருள் அங்காடிகள் (திருத்தம் — சிறப்பு விதித்துறைகள்) திருத்த சட்டமுன்வடிவு, 1984 .. .. .. .. | 180–181 |

7. அறிவிப்பு :—

| | |
|---|---|
| மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு 1984 (ஆ.இ.) | 118 |

8. ஒழுங்குப் பிரச்சினை :—

| | |
|---|---|
| சட்ட முன்வடிவுகளின் படிவங்களை உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே அளித்தல் | 181–182 |

9. அரசினர் தீர்மானம் : —

| | |
|---|---|
| வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கை—விவாதம் .. | 182–276 |
| மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் | 182, 184, 185, 186, 187, 188, 194, 233, 234, 247, 248, 250, 261–276 |





| | |
|---|---|
| திரு. அன்பில் தர்மலிங்கம் | 183–195 |
| திரு. எம். அண்ணாதாசன் | 195–201 |
| திரு. எல். இளையபெருமாள் | 201-206 |
| | 248, 233, 245 |
| | 248-269 |
| திரு. த. வீராசாமி | 206-212 |
| திரு. எம். செல்லமுத்து | 212-217 |
| திரு. ஏ. தங்கராசு | 217-221 |
| திரு. இரா. கருப்பையா | 222-228-272 |
| திரு. கா. கோபாலகிருஷ்ணன் | 228-231 |
| திருமதி டி. யசோதா | 231-236 |
| திரு. சு. முத்துக்கிருஷ்ணன் | 236-237 |
| திரு. சு. பாலன் | 238-241 |
| திரு. பெ. திருமாறன் | 241-246 |
| திரு. எஸ். ஆண்டித்தேவர் | 246-254 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 254-258 |
| திரு. என். பழனிவேல் | 258-260 |
| திரு. எம். ஆறுமுகம் | 260-261 |

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 276-277

2785

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் ஆயத்துறை. மற்றும் மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங் ல் நீங்கலாக)

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை-அமைச்சர்)—மின்சாரம், மற்றும் இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால் பெருக்குத் திட்ட அமைச்சர்)—பால், பால் பெருக்கு திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய், வணிக வரிகள், மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா; சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) — தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)— வேளாண்மை, வேளாண்மை மறுநிதி வேளாண்மை பொறியியல் பிரிவு, மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர்) — சட்டம். நீதி மன்றங்கள் சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், பெருந் தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம்.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)— நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமி தானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) — தொழிலாளர் புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)— மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், மற்றும் துறைமுகங்கள்

14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்) நெசவாலைகள் கைத்தறி மற்றும் கூட்டுறவு.

15. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)—பயண இசைவுச் சீட்டு, சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்படுத்தல்,

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்)— ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராசன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (பொதுப் பணித் துறை அமைச்சர்) — வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம். மற்றும் பொதுப்பணித்துறை மற்றும் பொதுபணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.



19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)—கதர்

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்பாசனத் துறை அமைச்சர்) — வேளாண்மைப் பணி கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) — கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத் துறை அமைச்சர்)—மீன் வளம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU.

THIRU SUNDAR LAL KURANA.

*Members of the Council of Ministers.*

1. HON. DR. M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, and other All India Services, District Revenue Officers, Deputy Collectors Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology and Excise, Prohibition (excluding grant of liquor permits),

2. HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASAMY (Minister for Dairy Development)—Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes and Census.

6. HON. THIRU R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and Grant of Liquor permits.

7. HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education)—Education, including Technical Education, Official Language.

8. HON. DR. K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. HON. THIRU C. PONNAIYAN (Minister for Law and Industries)-Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, Large Scale Industries, Mines and Minerals.

10. HON. THIRU P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Union-Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. HON. THIRU S. RAGHAVANANDHAM (Minister for Labour) Labour, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board Town Planning and Accommodation Control.

12. HON. DR. H. V. HANDE (Minister for Health)—Health.

13. HON. THIRU S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and ports.

14. HON. THIRU S. THIRUNAVUKKARASU (Minister for Handlooms and Co-operation)—Textiles, Handlooms and Co-operation.

15. HON. THIRU S. N. RAJENDRAN (Minister for Environmental Pollution Control)—Passports and Environmental Pollution Control.

16. HON. THIRU M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi-Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. HON. THIRU R. SOUNDARARAJAN (Minister for Nutritious Meals)—Nutritious Meals.

18. HON. THIRU S. R. ERADHA (Minister for Public Works)—Housing, Slum Clearance Board, Public Works Department and Establishment matter relating to Public Works Department.

19. HON. THIRU M. R. GOVENDHAN (Minister for Backward Classes)—Backward Classes.

20. HON. THIRUMATHI, GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare Animal Husbandry, Beggers Home, Orphanages, Indian Overseas Refugees and Evacuees and Correctional Administration.



21. HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi)—Khadi.

22. HON. THIRU Y. S. M. YUSUF (Minister for Irrigation and Wakf)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. HON. THIRU R. ARUNACHALAM (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries.

24. HON. THIRU K. KALAIMANI (Minister for Fisheries)—Fisheries

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. க. இராசாராம்

### பேரவைத் துணைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

### † மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. வே. இரா. ஜெயராமன்.
2. டாக்டர் கே. சமரசம்.
3. டாக்டர் கே. சௌரிராஜன்.
4. திரு. சு. பாலன்.
5. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.,

### துணைச் செயலாளர்கள்

திரு. இரா. பாலகுரு, பி.ஏ.,
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.,
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.,

### குழு அலுவலர்.

திரு. சா. சீனிவாசன், பி. எஸ்.சி.,

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி. காம்., பி.ஜி.எல்.,
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி. எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.,
திரு. வ. சா. ஜான், பி.ஏ.,

### எஸ்டேட் அலுவலர்.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி. எல்.,

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்

### விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.,

### தலைமை நிருபர்.

திரு. வி. இராமச்சந்திரன், எம். ஏ., எல்.எல்.பி.,

---

*** 21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.**
**†† 15—2—1984 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.**

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. அங்குசாமி, திரு. ச. .. | திருவாடணை |
| 2. அண்ணாதாசன், திரு. எம். .. | திருவரம்பூர் |
| 3. அப்துல்ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4. அப்பாதுரை, திரு. மு. .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5. அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி |
| 6. அமிர்தராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர் |
| 7. அரங்கநாதன், திரு. எஸ். .. | தர்மபுரி |
| 8. அரங்கநாதன், திரு. மு. .. | குன்னூர் (செ. வ.) |
| 9. அரங்கநாயகம், திரு. செ. .. | கோவை (மேற்கு) |
| 10. அருணகிரி, திரு. இரா. .. | திருப்பத்தூர் |
| 11. அருணாசலம், திரு. இரா. ... | நாமக்கல் (செ.வ.) |
| 12. அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி |
| 13 அன்பழகன், திரு. தி. .. | நாட்ரம்பள்ளி |
| 14. அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 15. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 16. ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 17. ஆறுமுகம், திரு. எம். .. | அவினாசி (செ.வ.) |
| 18. சேலம் ஆறுமுகம், திரு. மு... | சேலம்-2 |
| 19. ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 20. ஆனூர் ஜெகதீசன், திரு. பு.கோ. | செங்கல்பட்டு |
| 21. இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி |
| 22. இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 23. இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 24. இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி |
| 25. இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல்(செ.வ.) |
| 26. இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 27. | இராசாராமன், திரு. என். .. | பாபநாசம் |
| 28. | இராசு, திரு ஜே. எஸ். .. | பெரம்பலூர் செ.வ. |
| 29. | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 30. | இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 31. | இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 32. | இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி |
| 33. | இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி |
| 34. | இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 35. | இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம் |
| 36. | இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 37. | இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 38. | இராமலிங்கம், டாக்டர் கே.பி. | இராசிபுரம் |
| 39. | இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர் |
| 40. | இராஜசேகரன், திரு. வே. .. | டாக்டர் ராதாகிருஷ்ண நகர். |
| 41. | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 42. | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 43. | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 44. | ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் திரு. | அம்பாசமுத்திரம் |
| 45. | உகம்சந்த், திரு. எஸ். டி. .. | மதுராந்தகம் |
| 46. | உச்சி, திரு. கே. .. .. | கூடலூர் |
| 47. | உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 48. | உமாநாத், திரு. ரா. .. | நாகை |
| 49. | கண்ணன், திரு. ம. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 50. | கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 51. | கணேசன், திரு. .. | இடைப்பாடி |
| 52. | கணேசன், திரு. சி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 53. | கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு |
| 54. | கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர் |
| 55. | கபாலி, திரு. டி. கே. .. | மைலாப்பூர் |
| 56. | கருப்பசாமி பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 57. | கருப்பையா, திரு. இரா. .. | குளித்தலை |
| 58. | கருப்பையா, திரு. ஏ.டி. .. | வால்பாறை (செ.வ) |
| 59. | கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம் |
| 60. | கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம் |
| 61. | கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ.வ.) |
| 62. | கலையரசன், திரு. நன்னிலம், அ. | நன்னிலம் (செ.வ.) |
| 63. | காளிமுத்து, திரு. டாக்டர். கா. | திருப்பரங்குன்றம் |
| 64. | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 65. | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. .. | ஆயிரம்விளக்கு |
| 66. | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. .. | ஆண்டிமடம் |
| 67. | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. | நெல்லிக்குப்பம் |
| 68. | கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1. |
| 69. | கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர் |
| 70. | குப்புசாமி திரு. என். .. | மொரப்பூர் |
| 71. | குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம் |
| 72. | குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ.வ.) |
| 73. | குமரி அனந்தன், திரு. .. | திருவொற்றியூர் |
| 74. | குருசாமி, திரு. ப. .. .. | அந்தியூர் (செ. வ.) |
| 75. | குலசேகர், திரு. ஏ. டி. .. | சிங்காநல்லூர் |
| 76. | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 77. | குழந்தைவேலு, திரு. ப. .. | உடுமலைப்பேட்டை |
| 78. | கோபால், திரு. சி. .. .. | சோளிங்கர் |
| 79. | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 80. | கோபாலன், திரு. ஆர். டி. .. | கம்பம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 81. கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 82. கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 83. கோவைத் தம்பி, திரு. .. | பேரூர் |
| 84. சக்கரபாணி, திரு. ஆர். .. | பொன்னேரி (செ.வ.) |
| 85. சங்கரய்யா, திரு. என். .. | மதுரை (கிழக்கு) |
| 86. சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 87. சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி |
| 88. சண்முகம் திரு ஏ.சி. | ஆரணி |
| 89. சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி |
| 90. சந்திரசேகரன், திரு. எ. .. | சோழவந்தான் |
| 91. சபாபதி, திரு. சி. .. .. | அரூர் (செ.வ.) |
| 92. சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டிணம் |
| 93. சாகுல் ஹமீது, திரு. ஏ. .. | கடையநல்லூர் |
| 94. சாமிக்கண்ணு, திரு. நா. .. | செங்கம். |
| 95. சித்தன், திரு. என். எஸ். வி... | திருமங்கலம் |
| 96. சிதம்பரம், திரு. சி. த. .. | காரைக்குடி |
| 97. சிவசாமி, திரு. செ. .. .. | இளையான்குடி |
| 98. சிவஞானம், திரு. ந. .. | திருவோணம் |
| 99. சிவப்பிரகாசம், திரு. சீ. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 100. சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர் |
| 101. சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம் |
| 102. சின்னசாமி, திரு. எம். .. | கரூர் |
| 103. சின்னதுரை, திரு. ஏ. .. | மேல்மலையனூர் |
| 104. சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி |
| 105. சின்னராசு, திரு. மா. .. | தொண்டாமுத்தூர் |
| 106. சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம் |
| 107. சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர் |
| 108. சுந்தரம், திரு. மு. .. .. | ரிஷிவந்தியம் |
| 109. சுந்தரமூர்த்தி, திரு. ஆர். .. | முகையூர் |
| 110. சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம் |
| 111. சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர் |
| 112. சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 113. சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 114. சுப்பிரமணியன், திரு. மா. .. | திருவையாறு |
| 115. சுப்பிரமணியன், திரு. வி. .. | திருநாவலூர் |
| 116. சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 117. சுவாமிநாதன், திரு. வி.வி. .. | புவனகிரி |
| 118. செங்கோட்டையன், திரு. கு.. அ. | கோபிசெட்டிப்பாளையம் |
| 119. செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம் |
| 120. செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.) |
| 121. செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம் |
| 122. சென்னிமலை என்கிற கந்தசாமி திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 123. சேதுராமன், திரு. ஏ. எம். .. | ஆற்காடு |
| 124. சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 125. சோமசுந்தரம், திரு. எஸ்.டி. | பட்டுக்கோட்டை |
| 126. சோமு, திரு. என்.வி.என். .. | பூங்காநகர் |
| 127. சௌந்திரராஜன் திரு. கே. .. | திருச்சி-2 |
| 128. சௌந்திரராஜன், திரு. திருச்சி, ஆர். | ஸ்ரீரங்கம் |
| 129 சௌரிராஜன், டாக்டர் கே. | தி. நகர் |
| 130. தங்கமணி கவுண்டர், திரு. கே.எம். | திண்டிவனம் |
| 131. தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132. தங்கவேல்ராஜ், திரு. பி.எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 133. தங்கவேலு, திரு. பி. .. | செயங்கொண்டான் |
| 134. தவசி, திரு. ஆர். .. | பரமக்குடி (செ.வ.) |
| 135. தனபால், திரு. ப. .. | சங்கரி (செ.வ.) |
| 136. தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 137. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 138. தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம் |
| 139. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 140. திருமாறன், திரு. பெ. | .. | ஆலங்குடி |
| 141. திருமான், திரு. இரா. | .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 142. திருவேங்கடம், திரு. பெ. சு. | | கலசப்பாக்கம் |
| 143. தீர்த்தராமன், திரு. ப. | .. | பெண்ணாகரம் |
| 144. துரைசாமி, திரு. பி. எஸ். | .. | பர்கூர் |
| 145. துரைமுருகன், திரு. | .. | ராணிப்பேட்டை |
| 146. துரைராமசாமி, திரு. | .. | வெள்ளக்கோவில் |
| 147. துரைராஜ், திரு. பி. | .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 148. தேவராஜ், திரு. வி. எம். | .. | வேலூர் |
| 149. வெற்றிடம் | | |
| 150. நரசிம்மன், திரு. பூ. மு. | | பள்ளிப்பட்டு |
| 151. நல்லப்பன், திரு. தி. கா. | .. | பெருந்துறை |
| 152. நவநீதகிருஷ்ண பாண்டியன் | | ஆலங்குளம் |
| 153. நாச்சிமுத்து, திரு. கே. பி. | | மேட்டூர் |
| 154. நாராயணசாமி, திரு. கே. | | திருவண்ணாமலை |
| 155. நாராயணன், திரு. பி. ஜி. | | பவானி |
| 156. நெடுஞ்செழியன், டாக்டர், இரா. | | திருநெல்வேலி |
| 157. நெடுமாறன், திரு. ப. | .. | மதுரை (மத்திய) |
| 158. பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | | கும்பகோணம் |
| 159. பட்டாபிராமன், திரு. செ. | | திருவள்ளூர் |
| 160. பம்மல் நல்லதம்பி, திரு. | .. | தாம்பரம் |
| 161. பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | | பல்லடம் |
| 162. பலராமன், திரு. இல. | .. | போளூர் |
| 163. பழனிச்சாமி, திரு. சு. | .. | மேட்டுப்பாளையம் |
| 164. பழனிமுத்து, திரு. சி. | .. | ஆத்தூர் |
| 165. பழனியப்பன் திரு. கு. பா. | .. | விழுப்புரம் |
| 166. பழனிவேல், திரு. என். | .. | பழனி (செ.வ.) |
| 167. பாண்டியன், திரு. பி. எச். | | சேரன்மாதேவி |
| 168 பாபு கோவிந்தராஜன், திரு. | | கடலூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 169. பாபு ஜனார்த்தனன், திரு. | | செய்யாறு |
| 170. பாரமலை, திரு. க. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 171. பாலகிருஷ்ணன், திரு. ச. | .. | மொடக்குறிச்சி |
| 172. பாலகிருஷ்ணன், திரு. வி. | | சிவகாசி |
| 173. பாலசுப்பிரமணியன், திரு. க. | | சீர்காழி (செ.வ.) |
| 174. பாலசுப்பிரமணியன், வேடச்சந்தூர், திரு. வி. பி. | | வேடசந்தூர் |
| 175. பாலன், திரு. சு. | .. | பெரம்பூர் (செ.வ.) |
| 176. பாலுச்சாமி, திரு. ஏ. | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 177. பிச்சை, திரு. எம். | .. | அருப்புக்கோட்டை |
| 178. பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | | வில்லிவாக்கம் |
| 179. புருஷோத்தமன், திரு. து. | .. | சைதாப்பேட்டை |
| 180. பூங்காவனம், திரு. என். ஏ. | | காட்பாடி |
| 181. பெரியசாமி, திரு. ஏ. | .. | தாராபுரம் (செ.வ.) |
| 182. பெரியசாமி, திரு. ரா. | .. | தொட்டியம் |
| 183. பெருமாள், திரு. என். | .. | வரகூர் (செ.வ.) |
| 184. பெருமாள், திரு. ரா. கு. | | விளாத்திகுளம் |
| 185. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | | நிலக்கோட்டை (செ.வ.) |
| 186. பொன்னுரங்கம், திரு. ப. | .. | ராயபுரம் |
| 187. பொன்னையன், திரு. சி. | .. | திருச்செங்கோடு |
| 188. மணி, திரு. டி. | .. .. | விளவங்கோடு |
| 189. மணிமாறன், திரு. ஆர். | .. | திருப்பூர் |
| 190. மாணிக்கம் திரு. எம். எஸ். | | வேதாரண்யம் |
| 191. மாரிமுத்து, திரு. த. | .. | குளத்தூர் (செ.வ.) |
| 192. முகமது இஸ்மாயில், திரு. பி. | | பத்மநாபபுரம் |
| 193. முசிறிபுத்தன், திரு. பி. | .. | திருச்சி-1 |
| 194. முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | | கன்னியாகுமரி |
| 195. முத்துசாமி, திரு. சு. | .. | ஈரோடு |
| 196. முத்துராமலிங்கம், திரு. இ. | | ராதாபுரம் |
| 197. முத்துவேல், திரு. என். | .. | வானூர் (செ.வ.) |
| 198. மூத்தையா, திரு. இரா. | .. | சேடப்பட்டி |

| தொடர்எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 199. முனிரத்தினம், திரு. இரா.சா. | கும்மிடிப்பூண்டி |
| 200. முனுசாமி, திரு. மு.ப. .. | பாலக்கோடு |
| 201. மூர்த்தி, திரு.ஜி. .. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 202. மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 203. யசோதா, திருமதி டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 204. ரகுமான்கான், திரு அ. .. | சேப்பாக்கம் |
| 205. ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |
| 206. ரங்கசாமி திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 207. ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 208. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 209. ராஜமாணிக்கம் திரு. எம்.கே. | முசிறி |
| 210. ரெத்தினராஜ், திரு.எஸ். .. | குளச்சல் |
| 211. வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல் |
| 212. விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. | வீரபாண்டி |
| 213. வின்சென்ட் திரு. மி. | நாகர்கோவில் |
| 214. விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 215. விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார் |
| 216. விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 217. விசுவநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 218. வீராசாமி, திரு. த. .. | ஒரத்தநாடு |
| 219. வீராணம்பலம், திரு. க.வெ. | மேலூர் |
| 220. வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 221. வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 222. வெங்கடேசன், திரு. பி.எம். | பெரணமல்லூர் |
| 223. வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 224. வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 225. வேலப்பன், திரு. சி.வி. .. | கபிலமலை |
| 226. ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 227. ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 228. ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 229. ஹாஜா செரீப், திரு. கே.எஸ்.ஜி. | திருவல்லிக்கேணி |
| 230. ஹேமசந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு. |
| 231. மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் திருமதி. | நியமன உறுப்பினர். |
| 232. | வெற்றிடம் |
| 233. | வெற்றிடம் |
| 234. | வெற்றிடம் |
| 235. | வெற்றிடம் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைபெற்றவர்கள்

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் அமைச்சர்
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் —அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே —அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா—அமைச்சர்
5. மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் —அமைச்சர்.
6. மாண்புமிகு திரு. க. கலைமணி —அமைச்சர்.
7. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி – தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984, பிப்ரவரி 22, புதன்கிழமை

மாசி 10, ருத்ரோத்காரி, திருவள்ளுவர் ஆண்டு—2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது :

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்.

ஒருவருக்குத் துணையினது நன்மை செல்வத்தை மட்டும் கொடுக்கும். அதனோடு அவர் செயல் நலமும் பெற்றிருந்தால் அவர் விரும்பும் எல்லா நன்மைகளையும் அந்தச் செயல் நலம் தரும்.

## 1. வினாக்கள் —விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கலைக்கல்லூரிகள் திறப்பதற்கான அனுமதி.

115 —(*வினா எண். 17018) —திரு. என். பழனிவேல் : திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் இனி கலைக்கல்லூரிகளைத் திறப்பதற்கு அனுமதி கொடுப்பதில்லை என்று அரசு முடிவெடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ அன்ட் ஆ) : தமிழகத்தில் புதிதாகக் கல்லூரிகள் திறப்பது குறித்து கல்லூரி இணைப்பு மானியக்குழு ஏற்படுத்தப்பட்டு, அக்குழு ஒவ்வொரு ஆண்டும் கூடி முடிவெடுக்கும். 1983–84-ம் ஆண்டு புதிய கல்லூரிகள் திறப்பது குறித்து அக்குழு எடுத்த முடிவின்படி 1983–84-ஆம் ஆண்டில் புதிதாகக் கலை மற்றும் கல்வியல் கல்லூரிகள் தொடங்க அனுமதிக்க வேண்டாம் என்று கொள்கை அளவில் அரசு முடிவு செய்துள்ளது. எனவே இவ்வாண்டு புதிய கலை மற்றும் கல்வியியல் கல்லூரி எதையும் திறக்க அரசு அனுமதி வழங்கவில்லை.

[1984 பிப்ரவரி 22

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு புதியதாக ஏற்படுத்திய 1983-84 ஆம் ஆண்டு கூடிய அந்தக் குழு, புதிய கலைக் கல்லூரிகளைத் திறக்க வேண்டாம் என்று முடிவு செய்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு சமுதாயத்தில் இருக்கக்கூடிய வளர்ந்து வரும் சூழ்நிலையில் கல்வி, கற்பதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டுகிற இந்த நேரத்தில், அதை நிறுத்தி விடுவதும் பிரச்னை. அதே மாதிரி கல்லூரியில் படித்து விட்டு வெளியில் வருகின்ற லட்சக் கணக்கான மாணவர்கள், வேலை இல்லாமல் திண்டாடுகிறார்கள். ஆகவே, இவை இரண்டையும் ஒரு நல்ல முடிவுக்கு கொண்டு வருவதற்கு அரசு புதியதாக ஏதாவது யோசனையை செய்து கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கலைக் கல்லூரிகளை நாம் துவங்கவில்லை என்பது உண்மை. ஆனால் அதே நேரத்தில், இருக்கின்ற கலைக்கல்லூரிகளில் புதிய வகுப்புகளைத் தொடங்கியும், மாலை நேர வகுப்புகளை நடத்தியும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தைப் போலவே, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில், அஞ்சல் வழி நேர் தொடர்பு பயிற்சி வகுப்புகளைத் தொடங்கியும், பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு கலை சம்பந்தப்பட்ட பட்டப்படிப்பு படிக்கின்ற வாய்ப்புகளை நாம் ஏற்படுத்தித் தந்திருக்கிறோம், பி.யூ.சி.-ஐ எடுத்ததன் மூலம் வேலைப்பாதுகாப்பு பாதிக்கப்பட்ட ஆசிரியப் பெருமக்கள் எல்லாம், இன்றைக்கு அதே கல்லூரியில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால், அந்த அளவுக்கு அவர்களுக்கு வேலை தரக்கூடிய அளவுக்கு, இந்தப் பட்டப் படிப்புகளில் மாணவர்கள் சேர்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்தியிருக்கிறோம்.

கலைக் கல்லூரிகளில் படித்துவிட்டு மாணவர்கள் வெளியிலே வருகிறபோது, அவர்கள் குறிப்பிட்ட ஒரு வேலைக்கும் தகுதி படைத்தவர்களாக இல்லை. குறிப்பாக ஒரு குமாஸ்தா என்ற அளவுக்கு அவர்கள் போகலாமே தவிர, மற்றபடி எந்த குறிப்பிட்ட வேலைக்கும், அவர்களுக்குப் பயிற்சி தரவில்லை என்ற காரணத்தால், படித்திருக்கிறார்களே தவிர வேலை வாய்ப்பு என்பது அவர்களுக்கு அதிகமான அளவுக்கு கிடைக்க வாய்ப்பு இல்லை. ஆகவே, அதை வைத்துப் பார்க்கிறபோது, கலைக் கல்லூரிகளுக்கு நாம் செலவு செய்து, மிகக் குறைந்த வேலை வாய்ப்பு உள்ள அத்தகைய கல்வி முறையால் அவர்களுக்கு வாய்ப்புக்களை தருவதை விட, நல்ல வேலை வாய்ப்பு உள்ள கல்வி — அதாவது தொழிற் கல்வி — போன்றவைகளுக்கு ஊக்கம் தருவது



1984 பிப்ரவரி 22]

நல்லது என்று கருதி, அதிலேதான் இன்றைக்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அதை இன்னமும் விரைவாக எடுக்க வேண்டும் என்று தான், மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் ஆணை இட்டிருக்கிறார்கள். அதன்படி திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் பார்க்கிறபோது, நம்முடைய மாணவர்களுக்கு எந்த முறையில் கல்வியைத்தந்தால், அவர்களுக்குப்பயன் உள்ளதாகவும், வேலை கிடைக்கக்கூடியதாகவும் இருக்கும் என்பதைப் பார்த்துத்தான் செய்யவேண்டும். இருக்கின்ற கலைக் கல்லூரிகளிலேயே, இருக்கின்ற பாடத் திட்டங்களில் வேலை வாய்ப்புள்ள ஒரு பாடத்தை அல்லது அம்சத்தை சேர்க்க வேண்டும் என்பதையும் பல்கலைக் கழகம் ஆராய்ந்து கொண்டு இருக்கிறது.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாணவர்களுடைய கல்வி ஆர்வம் குன்றாமல் இருப்பதற்காக மாலைநேரக் கல்லூரிகள் ஆரம்பித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்குப் பட்டப்படிப்பு படித்தவர்கள்கூட கிளார்க் வேலை போன்ற வேலைகளுக்குத் தான் லாயக்குள்ளவர்களாக இருக்கிறார்களே தவிர மற்ற வேலைகளுக்கு அவர்கள் தோதுப்படவில்லை என்று சொன்னார்கள். இப்போது மின்சார வாரியத்திலே 40 ஆயிரம் வேலைகள் வேக்கன்ட் ஆக இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அந்த வேலைகளில் இப்படிப் படித்துவிட்டுச் சும்மா இருக்கிறவர்களை நியமிக்க அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியே துறை சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கேட்கப்படவேண்டும். மின்சார வாரியம் இப்போது நட்டத்திலே ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் அப்படிப்பட்ட வாய்ப்பு இருக்குமா என்பது சந்தேகம்தான்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, புதிய கலைக் கல்லூரிகள் ஏற்படுத்துவது சம்பந்தமாக அரசு முக்கியமான ஒரு கொள்கை அறிவிப்பைச் செய்திருக்கிறது. இந்தக் கொள்கை அறிவிப்பையொட்டி சில இடர்ப்பாடுகள் நிச்சயமாக ஏற்படும். ஏனென்றால் எங்களுடைய தென் மாவட்டங்களில் அரசினர் கலைக் கல்லூரிகள் ஒன்றோ இரண்டோதான் இருக்கின்றன, கிராமப்புறங்களிலே கலைக் கல்லூரிகள் இல்லை. அரசாங்கம் பாடத் திட்டத்தை மாற்றியமைப்பது என்பது வேறு. ஆனால் பாடத் திட்டத்தை மாற்றியமைத்த பின்னாலாவது அரசினர் கலைக் கல்லூரிகளை ஏற்படுத்துகிறபோது அந்தக் கிராமப்புறங்களிலே அமைப்பதற்கு கொள்கையை அரசு உறுதி செய்யுமா ?

[1984 பிப்ரவரி 22

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, கல்வி நிறுவனங்களை கிராமங்களிலே அமைக்கவேண்டுமென்ற கோரிக்கை ஒரு நியாயமான கோரிக்கை ஆகும். அதிலே எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் நம்முடைய அனுபவம் எல்லாம் அரசினர் கலைக் கல்லூரிகளுக்கு அங்கே ஆசிரியர்களை பணிக்கு அனுப்புகிறபோது பெரும்பாலும் அவர்கள் போவதில்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. இப்போது அரசால் கிராமத்திலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற பல கல்லூரிகள் பாதிக்கப்படுகின்றன, அந்த அனுபவத்தை நாம் மனத்திலே வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையை அணுகவேண்டியிருக்கிறது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : தலைவர் அவர்களே, புதிதாகக் கலைக் கல்லூரிகள் அமைக்கப் போவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே குளித்தலையிலே பெண்கள் கலைக்கல்லூரியொன்று ஆரம்பிக்க வேண்டுமென்ற முறையிலே அதற்காக 30 ஏக்கர் நிலமும் தேர்ந்தெடுக்கப்பட்டு 5 லட்சம் ரூபாயும் அளிக்க ஏற்பாடு செய்யப்படுகின்றது. அது கடந்த 2, 3 ஆண்டுகளாக பெண்டிங்காக இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு பெண்கள் கலைக் கல்லூரி அமைப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் ஒரே மாதிரியான நிலைமை இருந்து வருகிறது. வேலைவாய்ப்பு என்று வருகிறபோது ஆண்கள் பாதிக்கப்படுவதைப் போலவேதான் பெண்களும் பாதிக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே தொழில் அம்சம் இல்லாமல் நாம் சொல்லித்தருகின்ற பாடங்கள் மாணவர்கள் மத்தியில் சமுதாயத்தோடு ஒட்டிச்செல்லுகின்ற எண்ணத்தை வளர்ப்பதற்குப்பதிலாக அவர்கள் மக்களை அன்னியர்கள் மாதிரி கருதுகிற நிலைமையைத்தான் வளர்த்துக் கொண்டிருக்கிறது.

திரு ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, சட்டக் கல்வியை, கலைக் கல்லூரியிலே ஒரு பிரிவாக அமைக்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட யோசனை இல்லை.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, கலைக் கல்லூரி திறப்பதற்கு அனுமதிக்கவில்லையென்றால் புரபஷனல் காலேஜ் இல்லாமல் இருக்கிற மாவட்டங்களில் புரபஷனல் காலேஜ் திறப்பதற்கு அனுமதியளிக்கப்படுமா ?



1984 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படித் திறக்கிறபோது அந்த மாவட்டங்களைக் கருத்தில் கொள்ளலாம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : கலைக் கல்லூரிகளை திறப்பதற்கு அனுமதி இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். 1983–84 ஆம் ஆண்டிலே உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் திறப்பதற்கு அனுமதி கேட்டு பல இடங்களிலே பொது மக்களிடமிருந்து ரூ. 10 ஆயிரம் செலுத்தியிருக்கிறார்கள். அப்படிச் செலுத்திய இடங்களிலே புதிய உயர்நிலைப் பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்க அரசு அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. கேள்வி கல்லூரிகளைப் பற்றியது. பள்ளிகளைப்பற்றியது அல்ல.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பை முன்னிட்டு 1982–83 ஆம் ஆண்டு அந்தக் குழுவினுடைய அறிக்கையின் அடிப்படையில் கலைக் கல்லூரிகள் திறப்பதில்லை என்று முடிவெடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தேவையை முன்னிட்டு தொழில் கல்லூரிகளை ஆரம்பிக்கிறபோது தனியார்துறைக்கு விடாமல் அரசே ஆரம்பிக்க முன்வருமா ?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையில் ஆரம்பிப்பது, தனியார் துறையில் ஆரம்பிப்பது என்பது எல்லாத் துறையையும் பொருத்துத்தான். கல்வித் துறையில் மட்டும் அல்ல எல்லாத் துறையிலும் வருகிறது. நம்முடைய நாட்டில் தனியார் துறையும் இருக்கிறது, அரசுத். துறையும் இருக்கிறது. இப்போது நாம் தனியார் துறையை அடியோடு ஒழித்து விட்டோம் என்ற நிலை இல்லை. அதை அடியோடு ஒழித்துவிட்டு எல்லாவற்றையும் அரசுத் துறையில் எடுத்துக் கொள்கை அளவில் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பும் இல்லை. அது சரியான நிலையும் இல்லை. அதை விட்டு விட்டு தனியார் துறை இருக்கின்றபோது அவர்களிடத்திலே வசதிகள் இருக்கின்ற போது அந்த வசதிகளை நாட்டு நலனுக்காக சமுதாய நலனுக்காக பயன்படுத்த முடியுமானால் பயன்படுத்திக் கொள்ளுவது தேசத்திற்கு நல்லதே தவிர அதை விட்டுவிட்டு நாம் இப்போது பயன்படுத்திக்கொள்ள கூடாது என்று சொல்லி அரசே ஆரம்பிக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருப்பது என்பது நாம் இருக்கின்ற வசதிகளை நாட்டுக்கு பயன்படுத்தவில்லை என்கிற ஒரு தவறைச் செய்வது ஆகும்.

[1984 பிப்ரவரி 22

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினர் கலைக் கல்லூரிகள் துவங்குவதை நிறுத்தி வைத்து இருப்பது நிரந்தரமானதா ? அல்லது 1984–85-ல் மறு பரிசீலனைச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா ? தனியார்கள் சேர்ந்த இயக்கங்கள், சமூக நல ஸ்தாபனங்கள் மூலமாக புதிய கல்லூரிகள் துவக்குவதற்கு முன் வருமானால் அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரி திறக்கக் கூடாது என்பது நிரந்தரமான முடிவு அல்ல. நிரந்தரமான முடிவாக இருந்தால் இப்போது இருக்கும் கல்லூரிகளையே மூட வேண்டி இருக்கும். கொள்கை அளவில் இப்போது நாம் திறக்கப் போவது இல்லை என்று முடிவு எடுத்து இருக்கிறோம். பிறகு நம்முடைய நிலைமைகளையும், தேவைகளையும் பாடத் திட்டங்களில் ஏற்பட்டு இருக்கிற மாறுதல்களையும் வைத்து நாம் பிறகு அதைப் பற்றி முடிவு செய்யலாம்.

**வீடுர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்.**

*116*—(*வினா எண். 18808)—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திண்டிவனம் கல்வி மாவட்டம் வீடுர் அரசினர் உயர் நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டும் பணி துவக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

(ஆ) எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) திண்டிவனம், வீடுர் பகுதியில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக கடும் வறட்சியினால் ஏற்பட்ட தண்ணீர்ப் பஞ்சத்தினால் ஒப்பந்தக் காரர் இப்பணியைச் செய்ய இயலவில்லை.

(ஆ) அண்மையில் பெய்த மழை காரணமாக, கிடைத்து உள்ள தண்ணீர் வசதியைக் கொண்டு கட்டடப் பணி ஆரம்பிக்கப் பட்டு, தற்போது மேல் தளம் அளவில் கட்டப்பட்டுள்ளது.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஏடு தூக்கி நாளைய தினம் நாட்டைக் காக்க இருக்கின்ற மாணவர்களுக்கு பள்ளிக்கூட வசதி இல்லாமல் சுற்றுப்புற சூழ்நிலைகளைக் கவனித்துக் கொண்டு பாடம் போதிக்கின்ற ஆசிரியர்களை கவனிக்காமல் இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட காரணத்தால் அந்த உயர் நிலைப் பள்ளிக் கட்டிடத்தை உடனடியாக கட்டித் தர அரசு முன் வருமா என கேட்க ஆசைப்படுகிறேன் ?



1984 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, வேலை ஆரம்பிக்கப்பட்டு மேல் தளம் வரை கட்டப்பட்டு வேலை நடந்து கொண்டிருக்கிறது. விரைவில் இந்தப் பணி முடிக்கப்படும் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்து இருக்கிறார்.

**மாவட்ட அளவில் அதிகாரிகள்— ஆசிரியர்கள் அடங்கிய கல்விக் குழுவினை அமைக்கும் திட்டம்**

*117*—(*வினா எண். 19226)—திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் மற்றும் திரு சி. கணேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட அளவில் அதிகாரிகள்-ஆசிரியர்கள் அடங்கிய கல்விக் குழுவை அரசு அமைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) அவ்வப்போது ஏற்படும் ஆசிரியர்களின் குறைகளைக் களைய கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவிலான மூன்றடுக்கு ஆசிரியர் ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்தது. அதில் கல்வி மாவட்ட ஆசிரியர் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி ஆகியவற்றின் ஆசிரியர்களுக்கானது).

| | | |
|---|---|---|
| 1. | மாவட்டக் கல்வி அதிகாரி .. | தலைவர். |
| 2. | கல்வி மாவட்ட தலைமையிடத்து உதவிக் கல்வி அலுவலர். | உறுப்பினர். செயலாளர். |
| 3. | கல்வி ம வட்டத்திலுள்ள அனைத்து உதவிக் கல்வி அலுவலர்கள். | உறுப்பினர். |
| 4. | அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ் நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணியின் கல்வி மாவட்ட அமைப்பின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் இருவர் (ஆசிரியர் பணியில் உள்ளவர்கள்). | உறுப்பினர். |

[1984 பிப்ரவரி 22

## ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாட்டின் சார்பில் பங்கு கொண்ட விளையாட்டு வீரர்கள்

118—(*வினா எண். 19501) திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுடில்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாட்டின் சார்பில் எத்தனை விளையாட்டு வீரர்கள் பங்கு கொண்டனர்?

(ஆ) அவர்கள் பெற்ற பரிசுகள் யாவை?

(இ) அவர்களுக்காகச் செலவிட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 22 பேர்.

(ஆ) (1) திரு. சார்லஸ் புரோமியோ 800 மீட்டர் ஓட்டம். — முதலிடம் தங்கப் பதக்கம்.

(2) திரு. எஸ். வாசுதேவன் டென்னிஸ் — இரண்டாம் இடம் வெள்ளிப் பதக்கம்.

(3) திரு. எஸ். பாலசுப்பிரமணியன் மும்முறைத் தாண்டுதல் — மூன்றாம் இடம் வெண்கலப் பதக்கம்.

(4) திரு. ராம்கோபால் நாராயணன் நீச்சல் பந்து. — ஷை.

(5) திரு. ஏ. ஓய். எஸ். சார்லஸ் நீச்சல் பந்து. — ஷை.

(இ) பரிசுத் தொகைக்கென ரூ. 1,40,000 அரசு அனுமதித்துள்ளது. பயிற்சி முகாம் உணவுச் செலவுக்காக ரூ. 22,250 செலவு செய்யப்பட்டுள்ளது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஏறக்குறைய ஆறேழு பரிசுகளைப் பெற்றுத் தங்கப் பதக்கங்களையெல்லாம் வாங்கியிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் பரிசு பெற்றவர்களையும், இந்த விளையாட்டில் ஈடுபட்டவர்களையும் ஊக்குவிப்பதற்காக அதிக அளவிற்கு விளம்பரப்படுத்துவதற்கு, குறிப்பாகப் பத்திரிக்கைகளிலேயும், ரேடியோவிலேயும் டெலிவிஷனிலேயும் விளம்பரப்படுத்துவதற்கு அரசு முன் வருமா? அத்துடன் மாநில அளவில், இன்டர்ஸ்டேட் அளவில் போட்டிகள் நடத்த அரசு முன் வருமா? இந்த ஆண்டு விளையாட்டுத் துறைக்கு அரசு எவ்வளவு செலவிட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.



1984 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பரிசுத் தொகையை வழங்க, ஒரு சிறப்பான விழாவை, விளையாட்டுத் துறைக்குப் புதிய கட்டிடத் திறப்பு அமைப்பில் ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த விழா நடக்கும் பொழுது பெரிய விளம்பரம் விளையாட்டு வீரர்களுக்குக் கிடைக்கும். அந்த நேரத்தில் பரிசுத் தொகைகளை வழங்க இருக்கிறோம். மற்றபடி விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட அளவில், மாநில அளவில் என்று இரண்டு மூன்று நிலைகளிலே வருகின்றபொழுது கடந்த மூன்றாண்டுக்காலமாக நடைபெற்று வருகிறது. இன்றைக்கு விளையாட்டுத் துறைக்கு ஏறக்குறைய ஒன்றரை கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு வருகிறது. நாங்கள் வந்தபொழுது பத்து பதினாறு இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்ட இந்த துறையில் தற்பொழுது பத்து மடங்கு அதிகமாகச் செலவு செய்து வருகிறோம். இந்த முயற்சிகளையும், திட்டங்களையும் அடிப்படையாக வைத்து மேலும் அதிகப் பணம் செலவு செய்யவும் தயாராக இருக்கிறோம்.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது எல்லாம் விளையாட்டுத் துறையில் மக்களுக்கு அதிக ஈடுபாடு ஏற்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். இப்பொழுதெல்லாம் நட்சத்திரங்கள் கிரிக்கெட் விழா என்று பொது மக்கள் ஏராளமாக ஆர்வம் காட்டி மிக அதிகமான மக்கள் கூடுகின்ற நிலையில் விளையாட்டுத் துறையைத் தனியாக ஆக்கி சினிமாத் துறையில் உள்ள நடிகையை அமைச்சராக ஆக்கினால் இன்னும் ஆர்வமாக இருக்கும். இந்தத் துறை அதனால் மேலும் வளரும் என்ற எண்ணத்தில் அப்படி இந்த அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட சிபாரிசுகளை நாம் ஏற்றுக்கொள்ள இயலாது. விளையாட்டுத் துறையில் இருக்கின்ற ஆர்வத்தைப் பொறுத்தவரையில் இந்த கிரிக்கெட்டைப் பார்ப்பது என்பதை வைத்து நாம் எடை போட முடியாது. கிரிக்கெட்டைப் பார்ப்பது என்கின்ற உணர்வு வேறு விதமானது. இன்னும் சொல்லப்போனால் ரஷ்யா போன்ற நாடுகளில் கிரிக்கெட்டை விளையாட அனுமதிப்பது கூட இல்லை. ஆகவே அதை வைத்துக் கொண்டு விளையாட்டுத் துறையினை விமர்சிப்பது என்பது நோக்கத்தை நிறைவேற்ற உதவியாக இருக்காது. விளையாட்டிலே ஆர்வத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற வகையிலே, மற்ற மற்ற விளையாட்டுக்களை எல்லாம் சென்னையிலே மட்டும் நடத்தினால் சிறப்பாக இருக்காது என்பதற்காகத்தான் அண்மையிலே தர்மபுரியிலே பொங்கல் விளையாட்டுப் போட்டிகளை நடத்தினோம். சேலத்திலே குடியரசு தின விளையாட்டுப்

போட்டிகளை நடத்தினோம். இவைகளை எல்லாம், ஆசிய விளையாட்டுப் போட்டியில் நடத்திய முறைகளைப் பின்பற்றி பொதுமக்கள் ஆர்வத்தோடு பார்க்கின்ற வகையில் சிறப்பாக நடத்தினோம். இப்படி வருடத்திற்கு ஒரு முறை வெவ்வேறு மாவட்டங்களில் அதாவது தமிழ்நாட்டிலே பரவலாக நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் நடத்துவது, விளையாட்டுக்களைப் பார்க்கின்ற உணர்வினை மக்களிடத்திலே அதிகப்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான், அந்த வாய்ப்பினைத் தருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோல் மக்களிடத்திலே விளையாட்டுக்களில் ஆர்வம் தூண்டப்பட்டாலொழிய விளையாட்டுக்களில் நல்ல வீரர்களாக, சிறந்தவர்களாக நம்முடைய இளைஞர்களை ஆக்குவது என்பது மிகச் சிரமமான காரியம். விளையாட்டுக்களில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காக அரசு எடுத்துக் கொள்கின்ற பல்வேறு முயற்சிகளில் மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அதிலும் குறிப்பாக கிராமப் புறங்களில் இருந்து வருகின்ற உறுப்பினர்கள் கொஞ்சம் ஒத்துழைப்பு தரவேண்டும்.

கிராம விளையாட்டுக் கேந்திரங்களில் நடத்தப்படுகின்ற விளையாட்டுக்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கவனம் எடுத்துக்கொண்டு சரியான ஒத்துழைப்புத் தருவதாகத் தெரியவில்லை. அதையும் அந்த உறுப்பினர்கள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. கோபாலன் :** தலைவர் அவர்களே, விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பான தகுதியினைப் பெற கல்வித் திட்டத்தில் ஏதேனும் மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, பள்ளிகளுக்கிடையே போட்டிகளை நடத்துவதிலும், அவற்றை மாவட்ட அளவில் மாநில அளவில் நடத்துவதிலும் தேவையான ஆர்வத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல. இந்த விளையாட்டு வீரர்களுக்கு என்று தனியான பள்ளிகளைக் கூட நடத்துகிறார்கள். அங்கே அவர்களுக்குத் தேவையான தங்கும் விடுதி போன்றவற்றை எல்லாம் வைத்து நடத்துகிறார்கள். அவ்வாறு ஒய்.எம்.சி.ஏ. கல்லூரியில் ஒரு பள்ளிக்கூடம் நடத்தப்படுகின்றது. அதேபோன்று பெத்தநாயக்கன்பாளையம், காரைக்குடி, சிதம்பரம் போன்ற இடங்களில் இப்படிப்பட்ட பள்ளிகள் நடத்தப்படுகின்றன. எனவே இவ்வாறு விளையாட்டு வீரர்களுக்கென்றே தனியாக மேல்நிலைப்பள்ளி போன்றவற்றை ஆரம்பித்து அங்கே அவர்களுக்கு பாடங்களைப் போதிப்பதோடு காலையிலும், மாலையிலும் விளையாட்டுப் பயிற்சிகளை அளிக்கின்ற வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன இந்த வகையில் உடற்பயிற்சிகளையும், விளையாட்டுப் பயிற்சிகளையும் தந்து கொண்டிருக்கிறோம். அவர்களுக்கான அந்த செலவை அரசே ஏற்றுக்கொள்கின்றது.



**திரு. கு. பாலன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கால்பந்தாட்டத்திற்கு அதிகமான ரசிகர்கள் இருக்கின்றார்கள். ஆகவே ஆசிய விளையாட்டுப் போட்டியில் நடத்தப்பட்டது போல் தமிழ்நாட்டிலே கால்பந்தாட்டப் போட்டியினை நடத்துகின்ற வகையிலே அதற்குத் தகுதியான இடம் இல்லை. எனவே அதிகமான ரசிகர்கள் வந்து பார்க்கின்ற வகையிலே இங்கே ஒரு ஸ்டேடியத்தை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற ஸ்டேடியங்களை விரிவுபடுத்த வேண்டும் என்பது உண்மை. ஆனால் இருக்கின்ற ஸ்டேடியங்களை எல்லாம் நாம் முழுமையாகப் பயன்படுத்துகிறோமா என்று பார்க்கவேண்டும். பல இலட்சக்கணக்கான பணத்தைப் போட்டு புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்ற பல ஸ்டேடியங்களில் மாதத்திற்கு 4, அல்லது 5 மேட்ச்கள்தான் நடக்கின்றன. எனவே இருக்கின்ற ஸ்டேடியங்களை நல்லமுறையில் பயன்படுத்துவதற்குரிய வகையிலே முதலியே நாம் திட்டங்களை வகுக்க வேண்டும். மாஸ்கோவிலே உள்ள ஸ்டேடியத்தை நான் பார்த்தேன். லெனின் ஸ்டேடியத்தை நான் பார்த்தேன். அங்கே உள்ள ஸ்டேடியங்களைப் பொறுத்தவரையில் காலை 8 மணியிலிருந்து 10 மணி வரையிலும் ஒவ்வொரு குழுக்களாக வந்து விளையாடி அந்த ஸ்டேடியங்களைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். என்ற நிலைமையினைப் பார்க்கின்றபோது இங்கே பல ஸ்டேடியங்கள் மாதத்திற்கு 4 தடவை, 5 தடவை 10 தடவைதான் பயன்படுத்தப்படுகின்ற நிலைமையினைப் பார்க்கிறோம். ஆகவே இருக்கின்ற ஸ்டேடியங்களை முழு அளவிலே பயன்படுத்துகின்ற வகையில் நாம் அமைப்பு முறைகளை வைத்துக்கொண்டிருக்கவில்லை. ஆகவே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத்தான் நாம் சிறப்பான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, விளையாட்டுக்களில் இளைஞர்கள் ஆர்வத்தோடு ஈடுபடுவதை ஊக்குவிக்கின்ற வகையில் விளையாட்டுக்களில் சிறப்பிடம் வகிப்பவர்களுக்கு அரசாங்க வேலைவாய்ப்புக்களில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, பல நிலைமைகளில் அப்படி ஒரு ஆதரவு தரவேண்டும் என்ற கருத்து ஏற்கப்பட்டிருக்கிறது. பல நிறுவனங்களில் தந்து கொண்டுமிருக்கிறார்கள்.

[1984 பிப்ரவரி 22

திரு. கே. சௌந்திரராசன் : தலைவர் அவர்களே, வருகிற ஏப்ரல் மாதத்தில் திருச்சியில் கால்பந்தாட்ட

Foot ball Federation Cup போட்டி நடைபெற இருப்பதையும் அது அகில இந்திய அளவில் ஒரு சிறப்பான இடத்தை பெற இருப்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இந்த அரசாங்கத்தின் சார்பில் அதைச் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அந்தக் கால் பந்தாட்டப் போட்டி நடைபெறுவது பற்றி என்னிடம் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அசோஸியேஷனைச் சேர்ந்தவர்கள் அந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான உதவியை அரசாங்கம் செய்யும், அது மட்டுமல்ல. அந்தப் போட்டிகளை நடத்துகிற பொறுப்பை அந்த அசோஸியேஷனே எடுத்துச் செய்து கொண்டிருக்கிறது.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கிற முறையில் கல்லூரிகளில், குறிப்பாக என்ஜினியரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரி மாணவர்களை ஊக்குவிக்கிறமுறையில் அவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா? விளையாட்டு வீரர்களை விளையாட்டில் ஆர்வம் கொள்ளச் செய்து சிறப்பாக தங்களுடைய விளையாட்டு வீரத்தைக் காண்பிப்பதற்கு அரசாங்கம் தனியாக உதவி செய்து அவர்களை முழு நேரமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களை பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்புகளை இந்த விளையாட்டுத் துறையில் உள்ளவர்கள். கொடுக்கிறார்கள். ஆனால் என்ஜினியரிங் கல்லூரி மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், விளையாட்டைப் பொறுத்த வரையில் அவர்கள் திறமைக்கேற்ப சில மார்க்குகளைப் போடச் சொல்லி இன்டர்வியூ சமயத்தில் கேட்டு வாய்ப்பளிக்கிற ஒரு சிறிய உதவியைச் செய்கிறோம். வேறு விதத்தில் அந்த விளையாட்டு வீரர்களுக்கு அதிகமான அளவிற்கு மார்க்குகள் போட ஆரம்பித்தால் நமக்குச் சிறந்த என்ஜினியர்கள் அல்லது சிறந்த டாக்டர்கள் கிடைக்கமாட்டார்கள்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே விளையாட்டில் மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் ஆர்வத்தை ஏற்படுத்துகிற வகையில் ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளிக்கும் ஒரு மைதானம் என்ற அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் முக்கியமான பகுதியில் ஒரு விளையாட்டு மைதானத்தை அமைக்கிற வகையில் அரசு ஏற்பாடுகளைச் செய்ய முயலுமா?



1984 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில் ஒரு பள்ளியைத் துவங்க அதை ஒரு நிபந்தனையாக வைத்துக்கொண்டிருக்கிறோம். கிராமங்கள் போன்ற பகுதிகளில் விளையாட்டிற்காக ஒரு மைதானத்தை தேர்ந்தெடுத்து கிராம விளையாட்டு மையங்கள் ஆரம்பிக்கவேண்டும் என்ற முறையை சில ஆண்டுகளாக செயல்படுத்திக்கொண்டு வருகிறோம். இவைகள் எல்லாம், பொது மக்களுக்கு அந்த ஆர்வத்தை உண்டுபண்ண இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகின்றன. இருந்தாலும் விளையாட்டு ஆர்வம் என்பது மனிதனுக்கு இயற்கையாக இருக்கவேண்டும். அது நம் நாட்டில் இயற்கையாக இல்லை.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, ஆசிய விளையாட்டுப் போட்டியில் நாம் எதிர்பார்த்த அளவிற்கு தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் வெற்றிபெறவில்லையென்பதை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் சைனா, கொரியா போன்ற நாடுகள் முதல் இடங்களை தட்டிக் கொண்டு போய்விட்டன. எப்படி அந்த வீரர்கள் அந்தளவிற்கு முதல் இடங்களை தட்டிக்கொண்டு போனார்கள் என்பதை ஆராய்ந்து அந்த முறைகளில் தமிழ்நாட்டில் ஊக்குவிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம். ஒன்று, நான் ஏற்கனவே சொன்னதுபோல் இயற்கையாக ஒரு ஆர்வம் மக்களிடத்தில் இருக்கவேண்டும். விளையாடவேண்டும் என்ற ஆர்வம்—வறுமை இருந்தாலும் ஏழ்மை இருந்தாலும் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் இருந்தாலும் பொதுவாகப் பார்க்கின்றபோது விளையாடவேண்டும் என்று இயற்கையான ஒரு ஆர்வம் சமுதாயத்தில் இருக்கவேண்டும். ஆனால், நம் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் சும்மா இருக்கவேண்டும் என்ற ஆர்வம் தான் அதிகமாக இருக்கிறது. சும்மா இருந்தாலே அதை ஒரு பெரிய காரியம் போல் நினைக்கிற ஒரு தவறான எண்ணத்தை வளர்த்து வைத்துக் கொண்டிருக்கிறோம். மக்களிடையே விளையாட்டு ஆர்வத்தை தோற்றுவிக்க வேண்டும். இப்போது விளையாட்டுகளை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு விளையாட்டும் வேகமான அளவிற்கு முன்னேறிக்கொண்டு வருகிறது. ஓட்டமாக இருந்தாலும், புட்பால் விளையாட்டாக இருந்தாலும் வளர்ந்து வரும் உத்திகளை உடனடியாக அங்குள்ள வீரர்களுக்குச் சொல்லித் தருகிறார்கள். இங்கு அதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன. 1988-ல் தென் கொரியாவில் ஒலிப்பிம் விளையாட்டுகள் நடைபெற இருக்கின்றன. அதற்கு இப்போதே அவர்கள் அங்கு வேலைகளை ஆரம்பித்துவிட்டார்கள். அதற்கு விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி தரப்படுகிறபோது 1988-ல் தென் கொரியாவில், அதன் தலைநகரான ஸியோலில் சீதோஷ்ண

நிலை எப்படியிருக்கும் என்று பார்ந்து அதற்கேற்ப இப்போதே விளையாட்டு வீரர்களை பழக்கப்படுத்துகிற அளவிற்கு கிழக்கு ஜெர்மனி போன்ற நாடுகளில் விளையாட்டு பயிற்சி முன்னேறியிருக்கிறது. நாம் அப்படியில்லை. மதறாஸில் ஓடிவிட்டு வேறு இடத்தில் ஓடி பரிசு வாங்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எந்தயிடத்தில் ஓடுகிறோமோ அதேபோன்றதொரு சூழ்நிலையை உருவாக்கி பயிற்சி தருகிற அளவிற்கு நாம் இன்னும் முன்னேறவில்லை. அந்த உத்திகளையெல்லாம் கடைப்பிடிக்க நாம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

(முற்பகல் 9-30)

**திரு. ஏ. எம். சேதுராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியங்களில் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படுகின்ற முயற்சி கடந்த சில ஆண்டுகளாக எடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது சில மாவட்டங்களில் நடைமுறையில் சரியாக தேர்ந்தெடுக்கப்படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? கிராமங்களிலே உள்ள உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள பிள்ளைகள் விளையாடுவதற்கு பொருட்கள் கிடைப்பதிலே தவறுகள் செய்கின்ற சூழ்நிலை இருப்பதால், விளையாட்டில் ஆர்வம் குறைகின்ற நிலை ஏற்பட்டு இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதே சமயத்திலே நமது மாநிலத் தப் பொறுத்த வரையில், விளையாட்டுக்காக ஒரு தனி இலாகாவை அமைத்து அதற்கு ஒரு கார்ப்பரேஷன் அமைப்பது பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. அதுவும் விரைவில், நடைமுறைப்படுத்தப்படுமா, ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலுள்ள பள்ளிகளைப் பொறுத்தவரையில், அங்கே மைதானங்கள் இருக்கின்றன; விளையாட்டுப் பொருட்கள் இருக்கின்றன. குறிப்பாக, கிராமங்களில் உள்ள பள்ளிகளில் விளையாட்டுப் பொருட்கள் இல்லை என்றால், அங்குள்ள உடற்பயிற்சி ஆசிரியர்தான் அதற்குப் பொறுப்பு. ஆகவே, அப்படிப்பட்ட தவறு எங்காவது நடைபெற்றிருக்குமானால், அதை என்னுடைய கவனத்திற்கு கொண்டுவந்தால், அதற்குரிய நடவடிக்கையை நாம் எடுக்கலாம். விளையாட்டுத் துறைக்கு ஒரு கார்ப்பரேஷன் அமைப்பது சம்பந்தமான ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் இருந்துக்கொண்டிருக்கிறது.





**திரு. கே. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிய விளையாட்டுப் போட்டியில் மூன்றாவது பரிசைப் பெற்ற பாலசுப்பிரமணியம் என்பவர் எங்கள் கிராமத்தைச் சார்ந்தவர். அவருக்கு அளிக்கப்பட்ட பரிசளிப்பு விழாவில் ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களும், அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அந்த நேரத்திலே, மேலும் ஒலிம்பிக்கில் கலந்து கொள்வதற்கு பயிற்சி அளிப்பதற்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபட அரசாங்கம் உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் விளையாட்டின் முன்னேற்றத்திற்காக எடுக்கின்ற பல்வேறு முயற்சிகளில் இப்படிப்பட்டவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளையாட்டு சம்பந்தமான கேள்வி. ஆகவே, உறுப்பினர்களுக்கு கேள்விகள் கேட்பதற்காக அதிக நேரத்தை அனுமதித்து இருக்கிறேன். விளையாட்டில் உள்ள உங்களுடைய ஆர்வத்தை நான் பாராட்டுகிறேன். இப்போது மணி 9.32 ஆகிவிட்டது. அடுத்த கேள்விக்குச் செல்கிறேன். (குறுக்கீடு).

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களை மேலும் உருவாக்க, ஊக்கப்படுத்த விளையாட்டிற்காக தனி வாரியத்தை விரைவில் அமைக்க அரசு முன்வருமா? இந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்களிடையே விளையாட்டை ஊக்கப்படுத்த "விளையாட்டு தினம்" கொண்டாடப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாரியம் அமைப்பது சம்பந்தமான கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது என்று நான் முன்னமேயே சொன்னேன். அந்த பரிசீலனை முடிந்த பிறகு, சர்க்கார் உரிய நடவடிக்கை எடுக்கும். சட்டமன்ற உறுப்பினர்கள் விளையாட்டு தினம் கொண்டாடுவது குறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முடிவெடுப்பார்கள். இருந்தாலும், இளைஞர்களும், முதியோர்களும் போட்டியிடுகின்ற விளையாட்டில், நாஞ்சில் வின்சென்ட் முதற் பரிசு பெறுவதை ஒரு பெரிய விளையாட்டு சாதனையாக ஏற்றுக்கொள்ள முடியாது. (சிரிப்பு).

**திரு. சா. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியப் பகுதிகளில் விளையாட்டுப் பயிற்சிகளைத் துரிதப்படுத்த ஸ்டேடியம் அமைப்பதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டும், இன்னும் ஸ்டேடியம் அங்கே அமைக்கப்படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அடுத்து, விளையாட்டுத் துறையில் ஆர்வம் செலுத்தி வருகின்ற அரசு, ஒன்றியத்திற்காக தனி நிதி ஒதுக்கி, பொங்கல், தீபாவளி போன்ற நன்னாட்களில் கிராமங்களில் விளையாட்டு விழாக்களை நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் விளையாட்டு போட்டிகள் நடத்த வேண்டுமென்பது இந்த அரசின் நோக்கம். ஆனால், கிராமங்களில் நாம் நடத்துகின்றபோது, அதற்குத் தகுந்த போதுமான அளவிற்கு விளையாட்டு அமைப்புகள் ஏற்படுத்தப்படவில்லை. இப்போது இருக்கின்ற நிலையில், அரசு இதிலே முன்முயற்சி எடுத்துக்கொண்டாலும், ஒன்றியத்தில் ஒன்றிரண்டு விளையாட்டு மையங்கள்கூட வரவில்லை. அதைத்தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன் ; போதுமான ஆர்வம் மக்களிடத்திலே இல்லை என்பதுதான். இரண்டாவது, அப்படி ஆரம்பிக்கப்பட்ட மையங்கள் நம் நோக்கத்திற்கு ஏற்ப செயல்படவில்லை. அதற்கு மாறாக, அங்குள்ள விளையாட்டு மையங்கள் பொழுது போக்கு மன்றங்களாக மாறிக் கொண்டு வருகின்றன. விளையாட்டில் இளைஞர்களுக்கு பயிற்சி தரக்கூடிய மையங்களாக இருக்க வேண்டும் என்பது நம் நோக்கம். இதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், இன்றைக்கு பொழுதுபோக்கு, மன்றங்களாக மாறிவருகின்ற வேதனைகளை நாம் பார்த்து வருகிறோம். இதைத் தடுத்து நிறுத்தி, விளையாட்டுப் பயிற்சி தருகின்ற மையங்களாக அந்த மையங்கள் செயல்படுவதற்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் போன்ற மக்களிடத்திலே செல்வாக்கு உள்ளவர்கள் இதிலே கொஞ்சம் ஆர்வம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**வெள்ள பொட்டல் கிராமம் அருகேயுள்ள கண்மாய்க் கரையைப் பழுது பார்க்கும் திட்டம்.**

*(*119—வினா எண் 14192)—***திரு. இரா. தாமரைக்கனி :** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி **வத்திரா** இருப்பு ஒன்றியம் வெள்ளபொட்டல் கிராமம் அருகே உள்ள பஞ்சாயத்து யூனியன் கண்மாய் புயல், வெள்ளத்தால் 1977 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்டு கண்மாய்க்கரை உடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் எப்பொழுது பழுது பார்க்கப்படும ?





**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(ஆ) கண்மாய் மராமத்து மற்றும் கலிங்கு கட்டுவதற்காக அரசு ரூ. 4.10 இலட்சம் அனுமதியளித்திருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டு வெள்ளம் வந்து இந்தக் கண்மாயினுடைய கலிங்கு, மற்றும் கரை எல்லாம் உடைத்துச் செல்லப்பட்டது. உள்ளாட்சித்துறை அதிகாரிகளிடம் இதைப் பராமரிக்க வேண்டுமென்று சொன்னபொழுது, இது பொதுப்பணித்துறை கண்மாய் என்று சொல்கிறார்கள். பொதுப் பணித்துறை அதிகாரிகளிடம் சொல்லியபொழுது, இது உள்ளாட்சித்துறை கண்மாய் என்று சொல்கிறார்கள். இப்படி 8 வருஷமாக இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் நான் முறையிட்டிருக்கிறேன். ஆதலால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வருங்காலத்திலாவது இந்தத் தவறுகள் நடவாதவண்ணம், இனிமேல் ஏதாவது சேதம் அடைந்தால், உடனடியாக மராமத்து பார்க்க வேண்டிய காரியங்களைச் செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் சார்பிலும், பொதுப் பணித்துறையின் சார்பிலும் பல்வேறு கண்மாய்கள் மராமத்து செய்யப்படுகின்றன. 110 ஏக்கர்களுக்கு மேலே பாசன வசதி அளிக்கக்கூடிய கண்மாய்களாக இருந்தால் அவை பொதுப்பணித் துறையின், சார்பிலும், 100 ஏக்கர்களுக்குக் குறைவாக பாசன வசதி அளிக்கக்கூடிய கண்மாய்களாக இருந்தால் அவை ஊராட்சி ஒன்றியங்களின் சார்பிலும் பராமரிக்கப்படுகின்றன. இந்தக் குறிப்பிட்ட கண்மாய் 76 ஏக்கர் பாசன வசதி அளிக்கக்கூடியது. ஆகவே, பஞ்சாயத்து யூனியன் சார்பிலே பராமரிப்பு செய்யப்பட வேண்டுமென்று அரசாணையிடப்பட்டு, 1983 ஆம் ஆண்டிலே ரூ. 4.10 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உரிய காலத்திலே வேலைகள் சீக்கிரமாக நடத்தப்படும்.

**தகட்டூரில் பணியார் விடுதி கட்ட வேண்டுமென்பதற்கான கோரிக்கை.**

*(*120—வினா 17020—***திரு. எம். எஸ். மாணிக்கம்:** *மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் தாலூகா தகட்டூரில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் பயணியர் விடுதிக் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விரைவில் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

[1984 பிப்ரவரி 22

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தகட்டூரிலிருந்து 18 கி.மீ. தூரத்தில் வேதாரண்யத்தில் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பின்கீழ் ஒரு பயணியர் விடுதியும், மற்றும் தகட்டூரில் இருந்து 17 கி.மீ. தூரத்தில் திருத்துறைப் பூண்டியில் பொதுப்பணித்துறையின் பராமரிப்பின்கீழ் ஒரு ஆய்வு விடுதியும் உள்ளன. எனவே, தற்பொழுது தகட்டூரில் உடனடியாக பயணியர் விடுதி கட்ட வேண்டிய அவசியமில்லை.

நிலக்கோட்டை வட்டம் மெட்டூர் கேட் இரயில்வே லயினுக்கு அருகில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம்.

(*121—வினா 19937)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் மெட்டூர் கேட் இரயில்வே லையனுக்கு அருகில் போக்குவரத்திற்காக சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) பணி எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இவ்விடத்தில் சுரங்கப்பாதைக்குப் பதிலாக ரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

(ஆ) திட்டத்தின் மதிப்பீடு ரூ. 46.442 இலட்சம்.

(இ) ரயில்வே மேம்பாலத்தின் இரு பக்கங்களிலுள்ள அணுகு சாலைகளின் நில உரிமை பெறுவதற்கான மதிப்பீட்டிற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேம்பாலம் கட்டுவதற்கு இரயில்வே வாரியத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. நில உரிமை பெறல் முடிந்தவுடன் மேம்பாலம் மற்றும் அணுகு சாலைகள் மதிப்பீட்டிற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு சாலை வேலை தேசிய நெடுஞ்சாலைத் துறையால் எடுத்துக் கொள்ளப்பட்டு, மேம்பாலப் பகுதி ரயில்வே துறையினரால் நிறைவேற்றப்படும்.



1984 பிப்ரவரி 22]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட ரூ. 46½ இலட்சம் அளவிற்கு இந்தத் திட்டம் மதிப்பிடப் பட்டுள்ளது. அங்கே தினசரியும்—வருஷம் 365 நாளும் ஏதாவது ஒரு ஆக்சிடன்ட் நடந்து, பல பேர்கள் அந்த இடத்திலே இறந்து போயிருக்கக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தாலே விரைவிலே ரெயில்வே துறை அந்தப் பணியை எடுத்துக்கொள்ள—ஆரம்பிக்க நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைக் கூட 1977-78-லேயே கொண்டு வர வேண்டுமென்றுதான் மத்திய அரசுக்குத் தாக்கீதுகள் கொடுத்தும்கூட காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்த அளவில் பல்வேறு பகுதிகளில் இது போன்ற ரெயில்வே மேம்பாலங்கள் கட்ட வேண்டுமென்று ரெயில்வே துறையை அணுகி கேட்டுக் கொண்டிருக்கிறோம். 1 இலட்சம் டிரெயின் வெகிகில்ஸ் இருந்தால் பாலம் கட்டலாம் என்று விதிமுறைகள் வைத்துள்ளார்கள். ஆனால், நாம் கேட்டுக்கொண்டதன் பேரில், 50,000 டிரெயின் வெகிகில்ஸ் இருந்தாலே மேம்பாலம் கட்டலாம் என்று தளர்த்தப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும்கூட ரெயில்வே மேம்பாலத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படவில்லை, திட்டத்திலே சேர்க்கப்படவில்லை என்று சொல்லிக்கொண்டுதானிருக்கிறார்கள். ஆனாலும் இந்த ரெயில்வே மேம்பாலத்தைப் பொறுத்தவரை, உரிய நடவடிக்கைகள் சீக்கிரமாக எடுக்கப்பட்டு இந்த ஆண்டே அந்தப் பணத்தைப் பெறுவதற்குரிய முயற்சிகள் எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. ஆனால் நிலம் ஆர்ஜிதம் செய்வதை நாம்தான் பார்க்கிறோம். அதிலே கூட காலதாமதம் ஏற்பட்டிருக்கிறதே, அதை விரைவிலே துரிதப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதத்தைப் பொறுத்தவரையில் தமிழக அரசுதான் செய்ய வேண்டும். அணுகு சாலைகளுக்காகத்தான் நில ஆர்ஜிதம் செய்யப் போகிறோம். அதை உடனடியாகச் செய்து விட முடியும். ஆனால் ரூ. 46 இலட்சம் மத்திய அரசிடத்திலே இருந்து வர வேண்டியிருக்கிறது. அதற்குரிய நடவடிக்கைகளைத்தான் நாம் சீக்கிரமாக விரைவுபடுத்த வேண்டும்.

[1984 பிப்ரவரி 22

(முற்பகல் 9-40)

திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மேலூர், சமயநல்லூர் பக்கத்திலும் ரெயில்வே மேம்பாலம் இல்லாத காரணத்தால் இதுபோன்ற போக்குவரத்து இடைஞ்சல்கள் இருக்கின்றன. ஆகவே அவைகளையும் இந்தத் திட்டத்தோடு சேர்த்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் மட்டுமல்ல, எல்லா மாவட்டங்களிலும் இது போன்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 326 இடங்களில் ரெயில்வே மேம்பாலம் கட்டவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்கெனவே நாம் மத்திய அரசிற்கு அனுப்பி இருக்கிறோம். ஆகவே ஒன்றல்ல, இரண்டல்ல, 326 இடங்களில் நாம் கேட்டிருக்கிறோம். அந்த அளவிற்கு ரெயில்வேயின் குறுக்கீடுகள் நம்முடைய சாலையின் குறுக்கே வருவதால்தான் இதுபோன்ற நிலைமை ஏற்படுகிறது. இந்த அவையின் மூலம் ரெயில்வேத் துறையைக் கேட்டுக்கொள்வது, எவ்வளவு சீக்கிரமாக இந்தப் பணத்தை ஒதுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வோம்.

### துடியலூர்-சின்னத்தடாகம் நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணி.

(*122 வினா 21336)—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், துடியலூர்-சின்னத் தடாகம் நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) இப் பணி எப்பொழுது முடிவுறும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : இப்பணிக்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அரசின் நிதி நிலை, வேலையின் முக்கியத்துவம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இப்பணியை மேற்கொள்வது சம்பந்தமாக ஆராயப்படும்.



1984 பிப்ரவரி 22]

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் துடியலூர்-சின்னத்தடாகம் நெடுஞ்சாலை கடந்த ஐந்து ஆண்டுகளாக பஸ்போக்குவரத்து தடைபடுகிற அளவிற்கு மிக மோசமான நிலையில் இருக்கிறது. இது என்னுடைய சொந்த ஊருக்கு போகிற சாலை. இந்தப் பக்கத்திலே எதிர்க்கட்சிக்காரர்கள் நான் செய்யத் தவறியதாக சுட்டிக் காட்டி பிரச்சாரம் செய்வது இந்த ஒரே வேலையைத்தான். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அங்கு வந்து பார்த்து இருக்கிறார்கள். ஆகவே, அதைக் கருத்திலே கொண்டு இந்தப்பணியை விரைவிலே செய்து முடிக்க அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஊருக்குப் போகிற சாலை என்ற முக்கியத்துவம் மட்டுமல்லாது இது மிக முக்கியமான போக்குவரத்து சாலையாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே 9 கிலோ மீட்டர் அளவிற்கு நீளமுள்ள சாலை இன்றைக்கு மதிப்பீடுகள் தயார் செய்து 33 லட்சம் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இரண்டாம் பகுதித் திட்டத்திலே எடுத்துக் கொள்ளலாமா என்பது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதனுடைய அவசியத்தைக் கருதி இந்த நிதியாண்டிலேயே அதற்கான நிதியை' ஒதுக்கித் தரவேண்டும். கோவை மாவட்டத்திலே இரண்டுவிதமான நிலை ஏற்பட்டது. ஒரு பக்கத்திலே வறட்சி இருந்தாலும், தொண்டாமுத்தூர், சிறுவாணி அடிவாரப் பகுதியிலே பலத்த மழை பெய்து வெள்ளத்தால் சேதப்பட்ட பகுதியாக இருக்கிறது. சாலைகள் எல்லாம் வெள்ளத்தின் காரணமாக மிகவும் பழுதடைந்து இருக்கின்றன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியாக எடுக்கப்படாவிட்டாலும், இந்தச் சாலைகளுக்கு சீர் செய்வதற்காக தனியாக நிதி ஒதுக்கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே வெள்ள நிவாரணப் பணிகளுக்காக கோவை மாவட்டத்திற்கு ஒரு கோடியே 72 லட்சம் ரூபாய் அரசின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இந்தச் சாலையைப் பொறுத்தவரையில் தனியாகத்தான் எடுத்துச் செய்ய வேண்டிய சாலையாக இருக்கிறது. நிதி வசதி தேவையான அளவிற்கு இருந்தால் கண்டிப்பாக இந்த ஆண்டிலேயே எடுத்துக் கொள்ளப்படும்.

[1984 பிப்ரவரி 22

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, துடியலூர் சின்னத்தடாகம் நெடுஞ்சாலையை சீர்செய்து கொடுக்கவேண்டுமென்று மாவட்ட அபிவிருத்தி மன்ற கவுன்சிலில் கூட இதுசம்பந்தமாக திரு. சின்னராசு அவர்களும், நானும் கேட்டும்கூட, அங்கே இருக்கிற அதிகாரிகள் சாலைபோடுவதற்கு தார் இல்லையென்று தொடர்ச்சியாக சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இதனால் தான் அந்தச் சாலை போடுகிற வேலை தடைபடுகிறதா என்பதை அறிய விரும்புவதோடு, மாவட்டம் முழுவதிலும் இப்படிப்பட்ட நிலமைகள் இருப்பதால் முறையாக எல்லா ரோடுகளையும் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தார் கிடைப்பது இல்லை என்ற நிலை இல்லை. கடந்த ஆண்டில், அதிலும் குறிப்பாக பிப்ரவரி, மார்ச் மாதங்களில் இப்படிப்பட்ட நிலை இருந்தது. அதற்கு முந்திய ஆண்டும் இப்படிப்பட்ட நிலை இருந்து வந்தது. ஆனால் இப்போது தார் கிடைப்பது இல்லை என்று இல்லை. தாரின் விலை அதிகமாகிவிட்டது. இப்போதுள்ள பிரச்சினை அது தான். அதற்காக மத்திய பெட்ரோலியம் அமைச்சருக்குக் கடிதம் அனுப்பி 1973 ஆம் ஆண்டில் எவ்வளவு விலை இருந்ததோ அந்த அளவிற்குக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். போக்குவரத்தில் முக்கிய பங்கு வகிப்பது சாலைகள் தான். ஆகவே, அந்தச் சாலைகளை கோர் செக்டாரிலே கொண்டு வரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம், நெடுஞ்சாலைத் துறையைப்பற்றிப் பேசுகிறோம், ஆனால் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. சாலைகள் மூலமாகத் தான் எல்லாப் பணிகளும் நடைபெறுகின்றன. இந்த எண்ணம் நமக்கு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, அதை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அதைக் கோர் செக்டாரிலே சேர்க்க வேண்டும் என்று கடிதம் எழுதி வற்புறுத்தி இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 123 முதல் 126 வரை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.



1984 பிப்ரவரி 22]

1980-81-ல் வடாற்காடு மாவட்டத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க கையகப்படுத்தப்பட்ட மனைகள்.

(*127-வினா 10919)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980–81-ல் வடாற்காடு மாவட்டத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க கையகப் படுத்தப்பட்ட மனை எவ்வளவு ?

(ஆ) அதற்காக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) 1980–81-ல் வடாற்காடு மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க கையகப்படுத்தப்பட்ட மனைகள் 2,211.

(ஆ) இதற்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 10,16,172.75.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் செலவழிக்கப்பட்ட தொகை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். 1981–82 ஆம் ஆண்டில் மொத்தம் எத்தனை கிராமங்களில் இதுபோன்ற வீட்டு மனை தேவை என்று அந்த மக்கள் விண்ணப்பித்தார்கள்? அதிலே, எவ்வளவு பேருக்கு, எத்தனை கிராமங்களில் நிலம் கையகப்படுத்திக்கொடுக்கப்பட்டது, இன்னும் எத்தனை பாக்கி இருக்கின்றன என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டைப் பொறுத்த வரையில் வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை மக்களுக்கு வீட்டு மனை கொடுக்கப்பட்டது என்கிற விவரத்தை எடுத்துச்சொன்னேன். எத்தனை இடங்களில் இருந்து கோரிக்கை வரப்பெற்றன என்கிற விவரம் இல்லையென்றாலும்கூட, இந்த அரசைப் பொறுத்தவரையில் அதிகமான வீட்டு மனைப் பட்டா கொடுக்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டிருப்பதால், வடாற்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் இருக்கின்ற மக்களைக் கணக்கில் கொண்டு இப்பிரச்சினையை அணுக வேண்டும் என்ற முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் வடாற்காடு மாவட்டத்தில்

[1984 பிப்ரவரி 22

மட்டும், 1980 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 10 லட்சம் ரூபாய் நாம் வீட்டு மனைகளை ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கவேண்டும் என்பதற்காக திட்டம் வைத்து, அதற்காக பணம் ஒதுக்கியிருந்தாலும், இறுதியில் பார்க்கிறபோது ரூ. 16,172 அதிகமாக அதற்காகச் செலவழித்து இருக்கிறோம் என்பதை நான் உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அறிவித்ததுபோல் மனைகள் வாங்கப்பட்டும்கூட பல்வேறு கிராமங்களில் அங்கேயிருக்கின்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு அவை பிரித்துக் கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அவற்றை விரைவில் பிரித்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய பிரச்சினைகளை பல்வேறு மாவட்டங்களுக்கு நான் செல்கிறபோதும் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தைக் கூட்டி நான் அதிலே கலந்து கொள்கிறபோதும் இங்கே சட்டமன்றத்தில் மானியக்கோரிக்கை விவாதம் வருகின்றபோதும், உறுப்பினர்கள் பலரும் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

நம்முடைய மாநிலத்தைப்பொறுத்தவரையில், பல மாவட்டங்களில் சில இடங்களில் இத்தகைய நிலமை இருந்தது என்பதை உணர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அரசுச் செயலாளர் மூலமாக அத்தகைய நிலமைகளைக் களையவேண்டும் என்று அரசு பிரத்யேக ஆணைகள் பிறப்பித்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைகள் கொடுப்பதற்காக கையகப்படுத்தப்படுகின்ற நிலங்கள் நஞ்சை நிலங்களா, அல்லது புஞ்சை நிலங்களா என்பதை அறியவிரும்புகிறேன். புஞ்சை நிலங்கள் இல்லாத இடங்களில் நஞ்சை நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? சில இடங்களில் புஞ்சை நிலங்கள் இல்லாமல் நஞ்சை நிலங்கள் மட்டும் இருந்து, அதைக் கையகப்படுத்துகின்ற நேரத்தில் அரசுக்கு ஏதேனும் சிக்கல் ஏற்பட்டுள்ளதா? ஆமெனில், அந்தச் சிக்கலைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அறியவிரும்புகிறேன்.



1984 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனை கொடுப்பதற்காகப் பெரும்பாலும் அரசு நிலங்களையே எடுக்க முயற்சிக்கிறோம். அப்படிக் கிடைக்காத இடங்களில் புஞ்சை நிலங்களைக் கையகப்படுத்துகிறோம். புஞ்சை நிலம் இல்லாத இடங்களில் நஞ்சை நிலம்தான் இருக்கிறது என்பது அரசின் கவனத்திற்கு அதிகாரிகளால் கொண்டு வரப்படுகிறபோது, என்னுடைய ஒப்புதலுடனும் வருவாய்த் துறை அமைச்சரின் ஒப்புதலுடனும் முதலமைச்சரின் ஆணை பெற்று நஞ்சை நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு போதுமான நடவடிக்கைகளை அரசு தற்போது எடுத்து வருகிறது.

(முற்பகல் 9-50)

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும் போது காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்று உறுப்பினர்கள் சொன்னதையெல்லாம் நினைவுபடுத்தினார்கள். இன்றைக்கு வடாற்காடு மாவட்டமானாலும் சரி, தமிழ்நாட்டில் பிற இடங்களானாலும் சரி, அரசாங்கம் கையகப்படுத்திய நிலங்களை முறைப்படி காலாகாலத்தில் பிரித்துக் கொடுக்காத காரணத்தால் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு பெற்று, அதன் காரணமாக மீண்டும் 5 ஆண்டு, 10 ஆண்டு காலம் தாமதம் ஏற்படுகிறது. சரியான காலத்தில் அதிகாரிகள் முறைப்படிச் செய்யாத காரணத்தால் இப்படிப்பட்ட பிரச்சனைகள் வருகின்றன. அதனால்தான் வீட்டு மனைகளை சரியான காலத்தில் உரிய முறையில் கொடுக்க முடியாத நிலைமை வந்திருக்கிறது. உயர் நீதிமன்றத்தில் தடை விதித்தார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். உயர் நீதிமன்றம் விதித்த தடையை நீக்கி, விரைவிலே வீட்டுமனை வழங்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்பு 1894-வது சட்டத்தின்படி ஆதிதிராவிட மக்களுக்கு நாம் நிலங்களை கையகப்படுத்தி வந்தோம். அந்தச் சட்டத்திலே காலம் தாழ்த்த பல வழி முறைகள் இருந்த காரணத்தால் நிலங்களை கையகப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. அந்த தாமதத்தை தவிர்க்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு 1978-லே ஒரு புதிய சட்டத்தை உருவாக்கி, அதன் மூலம் விரைவாக ஆதி திராவிட மக்களுக்கு நிலங்களை கையகப்படுத்தி, வழங்க நடவடிக்கை எடுத்தார்கள். அந்த வகையிலே புதியச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதை எதிர்த்து நிலச் சொந்தக்காரர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள் ; உயர்நீதி மன்றம் அந்தச் சட்டம் செல்லாது என்று தீர்ப்பு அளித்தது. தற்போது அதை எதிர்த்து நம்முடைய அரசு உச்ச நீதிமன்றத்திற்கு அப்பீல்

செய்திருக்கிறது. உச்ச நீதிமன்றம் 10—12—1981-ல் நிலச் சொந்தக்காரர்கள் அந்த மக்களை நிலத்திலிருந்து வெளியேற்று வதினின்று தடை செய்து, ஒரு தடை உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. ஆதிதிராவிட மக்களுக்கு நாம் எந்த உணர்வோடு நிலங்கள் வழங்க வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருக்கிறோமோ அதே உணர்வோடு அதிகாரிகளைக் கொண்டு தற்போது அரசு பழைய சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, விரைவிலே இந்த மாதிரியான பிரச்சனைகள் தீர்ந்து விடும் என்று நம்புகிறோம்.

திரு. இ. க. [illegible] : தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலே ஆதிதிராவிட மக்களுக்கு நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையில் நிலங்களை எடுத்துக் கொடுப்பதாக அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். ஆனால் ஏற்கனவே நிலம் எடுக்கப்பட்ட பகுதிகளில் மேடாக இருந்தால், அந்த நிலச் சொந்தக்காரர்கள் அந்த இடங்களைப் பள்ளமாகச் செய்து, விவசாயத்திற்குத் தகுந்தாற்போல் பல்வேறு ஊர்களில் செய்திருக்கிறார்கள். அரசு நிலங்களை எடுக்கும்போது அதையும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைகளைத் தரும்போது, அந்த இடங்கள் பள்ளமாக இருக்கக்கூடாது என்று அரசு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறது, இருந்தாலும் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிற வீட்டு மனைகள் பல இடங்களில் பள்ளமாக, தாழ்வான பகுதியாக இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மனைச் சொந்தக்காரர்கள் மேடான இடங்களைப் பள்ளமாக்குகிறார்கள் என்று சொன்னார்கள். அத்தகைய தவறுகள் எதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை. ஏற்கனவே கொடுக்கப்பட்ட இடங்கள் பள்ளமாக இருந்தால், அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அந்த இடங்களை என். ஆர். ஈ. பி. திட்டத்தின்கீழ் மேடாக்கிக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. கு. [illegible] : தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் பதிலிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்ட நிலங்களை அரிசன மக்களுக்கு பட்டா செய்து கொடுத்திருந்தும்கூட அவர்கள் அனுபவிக்க முடியாமல் மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். மதுரையில் பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவில் ஒரு இடத்தில் ஏழு ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டும், அது அந்த அரிசனங்களுக்குப் போய்ச் சேரவில்லை. பல இடங்களில் இப்படி இருக்கிறது. இதுகுறித்து விசாரிக்க அரசு ஏதாவது ஒரு குழுவை நியமித்து, விரைவான நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக குழு அமைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதியிலே ஏதாவது பிரச்சினைகள் இருக்குமேயானால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவாரேயானால், அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தமிழ் படித்துப் பட்டம் பெற்ற வேலையில்லாத பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் உதவிப் பணம்

*128 வினா எண் 16837–திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ் படித்துப் பட்டம் பெற்ற வேலையில்லாத பட்டதாரிகள் எத்தனை பேருக்கு உதவிப்பணம் வழங்கப்படுகிறது ?

(ஆ) இதனால் ஆண்டிற்கு அரசிற்கு ஏற்படும் செலவு என்ன ?

(இ) உதவித் தொகையை அதிகரிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) 1982 டிசம்பர் மாதம் வரை, 325 தமிழ் படித்துப் பட்டம் பெற்ற வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

(ஆ) இந்தத் திட்டத்தால். ஆண்டுக்கு அரசுக்கு ஏற்படும் செலவு விவரம் வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1980 | .. .. | 93,600 | முந்தைய ஆண்டுகளில் வேலை வாய்ப்பற்றோர் நிவாரணம் அனுமதி அளிக்கப்பட்டவர்களுக்கானதும் செலவும் உள்ளடங்கும். |
| 1981 | .. .. | 1,72,200 | |
| 1982-83 | .. | 1,95,000 | |

(இ) இது குறித்து செயல் குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேலை இல்லாத பட்டதாரி வாலிபர்கள், டிப்ளமா பெற்றவர்கள், இவர்களுக்கெல்லாம் தமிழ்நாடு முழுவதும், தமிழக அரசு உதவித் தொகை வழங்குகிறது. இதுவரையில் தமிழ்நாடு பூராவும் அளிக்கப்பட்ட உதவித் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் தகுதி வாய்ந்தவர்களில் 7 பிரிவுகளைச் சார்ந்த பட்டதாரிகளுக்கும் டிப்ளமா பெற்றவர்க்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படு கிறது. என்னிடத்தில் இருக்கின்ற குறிப்பின் அடிப்படையில், 1980 ஆம் ஆண்டு முதல் 1983 ஜனவரி முடிய, அரசு இதற்காக ஏறத்தாழ ரூ. 150·56 இலட்சம் நிவாரணம் அளித்திருக்கிறது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகையை மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் தான் கொடுக் கின்ற நிலைமை இப்போது உத்தரவில் இருக்கிறது. ஆனால் வேலை இல்லாத பட்டதாரி வாலிபர்களுக்கு இந்த மூன்று ஆண்டு களுக்குள்ளாக வேலை கிடைக்காமல் இருந்தாலும், வேலை கிடைக்கும் வரையில், மேலும் இந்த உதவித் தொகையை இந்த அரசு தொடர்ந்து அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய உதவித் தொகையை தமிழகத்திலே மட்டுமல்லாமல் மற்ற மாநிலங்களிலும் தந்து கொண்டிருக்கி றார்கள். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அவர்களுக்கு பலவிதமான சலுகைகள்—உதாரணத்திற்கு, பெற் றோரின் ஆண்டு வருமானம் பொறுத்த வரையிலும், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், ரூ. 24,000 ஆக இருக்க வேண்டும் என்று இதுவரை எந்த மாநிலத்திலும் கொடுக்காத அளவிற்கு தமிழ்நாடு கொடுத்திருக்கிறது. கொடுக்கின்ற கால அளவைப் பொறுத்த வரையில் எல்லா மாநிலங்களும் ஓரே கால அளவைத்தான் நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய மாநிலத்திலே 3 ஆண்டுகள் என்ற குறியீட்டை நிர்ண யித்திருக்கிறோம். எனவே அதனை நீட்டிப்பதற்கு தற்போது அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. இரே. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980-83 ஆம் ஆண்டு வரை 325 தமிழ் படித்துப் பட்டம் பெற்ற வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்கியதாக அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். இந்த மூன்று ஆண்டுகளில் உதவித் தொகை கோரி மனு செய்தவர்கள் எத்தனை பேர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் வேலை இல்லாத தமிழ் பட்டதாரிகள் 1,141 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களில் நிவாரணம் பெறத் தகுதி பெற்றவர்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டவர்கள் 1,141 பேர்கள். இவர்களில் 524 நபர்கள் மட்டும் வேலையற்றோர் நிவாரணத்திற்காக விண்ணப்பித் தார்கள். இவர்களில் பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு



அதிகாரிகளால், அதற்கான விண்ணப்பங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. வட்டாட்சியர் ஆய்வு செய்ததற்குப் பின்னர், 325 விண்ணப்பங்களை அனுமதித்திருக்கிறார்கள். 54 விண்ணப் பங்கள் நிராகரிக்கப்பட்டன. 145 விண்ணப்பங்கள் இன்னும் பல்வேறு காரணங்களுக்காகப் பரிசீலனையில் பல்வேறு கட்டங் களில் இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த பட்டதாரிகளுக்கு உதவித் தொகை என்று ஏறத்தாழ $1\frac{1}{2}$ கோடி ரூபாய் அளவில் அரசு கொடுத்துக்கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப் பிட்டார்கள். தற்போது ரேசன் கார்டுகளுக்காக கணக்கெடுப் பதற்கும், அவைகளை விநியோகிப்பதற்கும் மற்றும் உள்ள பணிகளை அரசாங்க ஊழியர்களே செய்து வருகிறார்கள். அது மட்டுமல்லாமல், பல்வேறு அரசு அலுவலகங்களில் வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. எனவே இந்த வேலையில்லா பட்டதாரி களை, அரசு அலுவலகங்களில் பயன்படுத்தி, ஏற்கனவே இருக்கும் வேலைப் பளுவை குறைக்கும் வகையில் அவர்களைப் பயன்படுத்த அரசு பரிசீலிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகையைப் பெறுகின்றவர் களைப் பொறுத்தவரையில் பயன்பெறுபவர்களுடைய மாத வருமானம் 50 ரூபாய்க்கு உள்ளாக இருக்கவேண்டும் என்று நாம் நிர்ணயித்து இருக்கிறோம். அதற்குள்ளாக வருமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அரசு பரிசீலிக்கும்.

**முதுகுளத்தூரில் ஆதி திராவிட மாணவியர் விடுதி துவக்குவதற்கான கோரிக்கை.**

*129—வினா எண் 17393—திரு. க. பாரமலை : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவிகளுக்கு ஒரு ஹாஸ்டல் திறக்க வேண்டுமென அப் பகுதி மக்களிடமிருந்து கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

[1984 பிப்ரவரி 22

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ) 1983–84-ஆம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ், அரசு துவக்கவுள்ள 10 புதிய விடுதிகளில் இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் மாணவியர் விடுதியும் ஒன்றாகும்.

திரு. க. பாரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சாதகமான பதில் அளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஆர். எஸ். மங்களம் கண்மாயில் புதிய வடிகால் வெட்டும் திட்டம்

130—*வினா எண். 17382—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர். எஸ். மங்களம் கண்மாய் 560 அடி நீளமுள்ள தாம்போகி தண்ணீருக்குப் போக்கு இல்லாததால் புதிய வடிகால் வெட்டும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் பற்றிய கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை. ஆனால் இதற்கான ஒரு மதிப்பீடு ரூ. 25.70 இலட்சத்திற்கு தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே ரூ. 25.70 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் ஆய்வில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் 'நீண்ட காலமாக இந்தத் திட்டம் நடைபெறாமல் இருந்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் 5–12–1973-லே போடப்பட்டு அரசுக்கு வந்து இங்கே தேங்கிக் கிடக்கின்றது. எனவே அமைச்சர் அவர்கள் சீக்கிரத்தில் ஏற்பாடுகள் செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஏற்கனவே பரிசீலனையில் உள்ளது. தற்போது கூடுதல் விவரங்கள் தேவைப்படுகின்ற காரணத்தினால், தல அதிகாரிகளிடம் இருந்து அந்த விவரங்கள் கோரப்பட்டு இருக்கின்றன. அந்தக் கூடுதல் விவரங்கள் வந்தவுடன், அதன் அடிப்படையில் அரசு இந்தத் திட்டத்தை ஆய்வு செய்யும்.



1984 பிப்ரவரி 22]

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆர். எஸ். மங்களம் கண்மாய் 20 கிலோ மீட்டர் அளவு உள்ள, 12 ஆயிரம் ஏக்கர்களுக்குப் பாசன வசதி கொடுக்கக்கூடிய மிகப் பெரிய கண்மாய். இந்தக் கண்மாயின் தென் பகுதியில் 560 அடி நீளமுள்ள ஒரு கலுங்கு இருக்கிறது. அந்தக் கலுங்கில் மழைக் காலத்தில் தண்ணீர் அதிகமாகப் போவதன் காரணமாக, ஆர். எஸ். மங்களம் கண்மாய்க்கு இடையிலே உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அழிந்துவிடுகின்றன. இதை கடந்த 7 வருடங்களாக அரசினுடைய பார்வைக்கு கொண்டு வந்தேன். இருந்தாலும், கூட, இன்றைக்கு வரையிலும் எஸ்டிமேட் சேங்சன் ஆகாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. எனவே சீக்கிரத்தில் அந்த எஸ்டிமேட்டை சேங்க்சன் செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு அமைச்சர் ஏற்பாடு செய்வாரா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல இப்போது ஆய்வு நிலை முடிந்து, அதற்குக் கூடுதல் விவரங்கள் தேவைப்பட்ட காரணத்தால் தல அதிகாரிகளிடம் அந்த விவரங்களைக் கேட்டிருக்கிறோம். ஆகவே அந்த விவரங்கள் வந்த பிறகு இந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### நந்தன் கால்வாய்த் திட்டம்.

(*131—வினா 19336)—திரு. ஆர். சுந்தரமூர்த்தி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் நந்தன் கால்வாய்த் திட்டம் முடிவு பெற்றுவிட்டதா ?

(ஆ) சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து தண்ணீரை நந்தன் கால்வாய்க்கு விடும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம் (ஆ) இல்லை.

H. 2 A 370—5

குமரி மாவட்டத்தில் புதிதாகத் தொழில் தொடங்க முனைவோருக்கான வசதிகள்.

*(133—வினா 16871)—திரு. டி. மணி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கடந்த ஆறு ஆண்டுகளாக குமரி மாவட்டத்தில் புதிதாகத் தொழில் தொடங்க முன்வருபவருக்கு அபிவிருத்தி செய்யப்பட்ட நிலமோ, தொழிற்பேட்டைகளோ வழங்கப்பட வில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிதாகத் தொழில் தொடங்க முன்வருவோருக்கு அந்த வசதிகள் செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) கன்னியா குமரி மாவட்டத்தில், கோணம், மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் அரசு தொழிற்பேட்டைகள் அமைந்துள்ளன. கோணம் தொழிற்பேட்டையில் இதுவரை 19 மேம்படுத்தப் பட்ட மனைகளும், 8 தொழிற்கூடங்களும் தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன. இன்னும் 5 மேம் படுத்தப்பட்ட மனைகள் காலியாக உள்ளன. மார்த்தாண்டம் தொழிற்பேட்டையில் 5 தொழிற்கூடங்கள் வழங்கப்பட் டுள்ளன. இத்தொழிற்பேட்டையில் மேம்படுத்தப்பட்ட மனைகளுக்குத் தேவை ஏற்படவில்லை.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழில் முனை வோர்கள் மேலும் தொழிற்கூடங்கள் தேவை என முன் வந்தால் புதிய தொழிற்பேட்டையினை நிறுவுவது குறித்து 'சிட்கோ' பரிசீலனை செய்யும்.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இந்த மார்த்தாண்டம் தொழிற் பேட்டையில் ஏற்கனவே பலர் விண்ணப்பித்தும், அவர்களுக்குத் தொழில் துவங்குவதற்கான அனுமதி வழங்கவில்லை என்றும், அதற்குப் பதிலாக அந்தத் தொழிற் பேட்டையில் உணவு வினியோகத் துறையின் மூலமாக வினியோகம் செய்யப்படுகின்ற அரிசி கொட வுனை அமைத்திருக்கிறார்கள் என்றும் அதன் காரணமாகவே அங்கே தொழிற்பேட்டை உருவாவதற்கு அனுமதி வழங்கப் படவில்லை என்றும் புகார் வந்துள்ளது. எனவே அந்த அரிசி கொடவுனை அங்கேயிருந்து மாற்றி, காயர் போர்டு மூலமாக, தேங்காய்மட்டை நாரையும், ரப்பரையும் பயன் படுத்தி, மெத்தைகள் தயாரிக்கின்ற ஒரு யூனிட்டைத் துவங்கு வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்த்தாண்டத்தில் உள்ள தொழிற்பேட்டையின் நிலங்களில், பயன்படுத்தப்படாத 5 ஏக்கர் நிலம், தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்குத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. மார்த்தாண்டத்தில் உள்ள தொழிற்பேட்டையில் உள்ள, 5 வாடகை தவணை முறை தொழிற்கூடங்கள் தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன. தற்போது எந்தக் கூடமும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அரசு ஆணை எண். 383, தேதி 19-3-1982-ன்படி 5 வாடகை முறை தொழிற் கூடங்கள், தவணை முறை தொழிற் கூடங்களாக மாற்றம் செய்யப்பட்டு அதற்கான ஒதுக்கீடு கருவிகள், தொழில் முனைவோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(முற்பகல் 10-10)

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, என்னுடைய கேள் வியே தொழிற்பேட்டையை அங்கு தொடங்குவதற்குப் பதில் அரிசி கொடவுன் வைப்பதற்கு அதை வழங்கியிருப்பது சரியல்ல. அதை நிறுத்துவதற்கு அரசு முன்வருமா ? என்பது இன்னொன்று, நரசிங்கராஜபுரத்திலே 1982 இல் காயர் போர்டு மூலமாக காயர் உற்பத்தி செய்து பாய்களும் தடுக்குகளும் தயாரிப்பதற்கு ஒரு யூனிட் ஆரம்பிப்பதற்கு அரசாலே பரிசீலிக்கப்பட்டு 1983 இல் ஆரம்பிக்க முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் இதுவரைக்கும் அது ஆரம்பிக்கப்படவில்லை. அந்த வேலையை ஆரம்பிக்க நட வடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவர் அவர்களே, காயர் யூனிட் ஏற்படுத்துவது பற்றிய குறிப்பு தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணவுப் பொருள் வழங்கு துறைக்கு வழங்கிய நிலத்தைப் பற்றி கூறிய அந்த ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, காயர் போர்டு கொல்லன்கோடு என்ற கிராமத்தை மாதிரி கிராமமாக தேர்ந்து எடுத்து இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அந்த மாதிரி கிராமத்தில் என்ன என்ன தொடங்குவதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

[1984 பிப்ரவரி 22

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, புதிதாகத் தொழில்கள் தொடங்குவதற்கு இடம் மற்றும் மற்றத் தேவையான வசதிகளை செய்து கொடுக்கின்ற முறையிலே நாகர் கோவிலில் கோணம், மார்த்தாண்டம் ஆகிய இடங்களிலே இடம் கேட்டு மனுச் செய்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ? உதவி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ? புதிதாகத் தொழில் துவங்க அரசு செய்திருக்கிற அறிவிப்பின்படி தொழில் துறையிலே பின் தங்கிய தாலுகாவாக தோவாளை தாலுகாவை அறிவித்திருக்கிறார்கள். அந்தத் தோவாளை தாலுக்காவிலே தொழில்கள் ஆரம்பிப்பதற்காக அதிகாரிகள் எல்லாம் வந்து பார்வையிட்டார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தொழில் செய்வதற்கு எந்தவிதமான இடமும் ,தற்போது இல்லை. கோணம், மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் அங்கே இருக்கின்ற தொழில் பேட்டையைப் போல் மீண்டும் ஒரு தொழிற் பேட்டையை துவங்க யாரேனும் முன்வந்தால் அவர்களுக்கு அரசு நிச்சயமாக உதவி செய்யும்.

கோவையில் இயங்கிடும் தமிழ்நாடு பால்பண்ணைக் கருவிகள் கூட்டுறவுத் தொழிலியல் சங்கம்.

(*134—வினா 18510)—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவையில் இயங்கும் தமிழ்நாடு பால் பண்ணைக் கருவிகள் கூட்டுறவு தொழிலியல் சங்கம் தற்போது எந்த நிலையில் இயங்கி வருகிறது ?

(ஆ) அதன் 1981–82 ஆம் வருடத்திய இலாபம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) நட்டத்தில் இயங்கிக் கொண்டு வருகிறது.

(ஆ) நட்டத்தில் இயங்கியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள் —விடைகள் முடிவுற்றன.



1984 பிப்ரவரி 22]

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

அரிசனங்களுக்கு ஈமக்கடன் செய்ய உதவித் தொகை வழங்கப்பட்டோர் எண்ணிக்கை

1—வினா 1678—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ் நாட்டில் 1978–79 ஆம் ஆண்டில் இறந்த அரிசனங்களுக்கென ஈமக்கடன் செய்வதற்கான உதவித்தொகை கேட்டு வந்த மனுக்கள் எத்தனை ?

(ஆ) எவ்வளவு பேருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது?

(இ) செலவானத் தொகை எவ்வளவு ?

விடை —

(அ) 12,761 மனுக்கள்

(ஆ) 12,191.

(இ) ரூபாய் 6,09,550.

திருச்சி மாவட்ட நூலக அதிகாரி மீதான புகார் மனு.

2—வினா 5421 —திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்ட நூலக அதிகாரியான திருமதி எஸ். பத்மாவதி என்பவர் மீது திரு. ஆர். செல்வராஜு என்பவரால் அரசுக்குப் புகார் மனு அனுப்பப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) புகார்கள் குறித்து பொது நூலக இயக்குநரின் அறிக்கை அரசுக்குக் கிடைத்துள்ளது. அது பரிசீலனையில் உள்ளது.

[1984 பிப்ரவரி 22

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஒலியம் குன்றை அரசு கையகப்படுத்தும் திட்டம்.

3—வினா 5628—திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள "ஒலியம் குன்றை" (Olium Rocks)ஐ அரசு கையகப்படுத்தும் செயற்குறிப்பு உண்டா?

விடை—

ஆம், செயற் குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

கூடலூர் தாலுக்கா தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக அரசு மருத்துவ மனை கட்டும் திட்டம்.

4—வினா 5673—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலுக்கா சேரன்கோடு, நெல்லியாளம், சேரன்பாடி, தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிக்காக அரசு மருத்துவமனை கட்ட அரசுக்கு யோசனை உண்டா ?

(ஆ) அவ்வாறாயின் அதன் மதிப்பீடு என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.



1984 பிப்ரவரி 22]

இராஜபாளையம் தொகுதியில் குடிநீர் வழங்கும் திட்டம்.

5—வினா 5805—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதி சொக்கநாதம்புத்தூர் மேலூர் துரைசாமியாபுரம் பஞ்சாயத்துக்களுக்கு குடிநீர் கொடுக்க 1971 ஆம் வருடம் மேற்படி பஞ்சாயத்துக்கள் ஆய்வுத் தொகையாக ரூ. 9,000 கட்டியுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், ஆய்வு எந்த அளவில் உள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆய்வு முடிந்தது. ரூபாய் 7.35 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது குடியிருப்புக்களுக்கு முன்னோடி திட்டத்தின் கீழ் மே 1981 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் தேக்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவுற்றதும் குழாய்கள் மூலமாக குடிநீர் விநியோகிக்கப்படும்.

ஸ்ரீரங்கம் கோவில், கர்ப்பக் கிரகம், காயத்ரி மண்டபத்திலுள்ள பித்தளை தகடுகளுக்குப் பதிலாக பளிங்குக் கல் பதிக்கும் திட்டம்.

6—வினா 5969—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் கோவிலில் கர்ப்பக்கிரகம், காயத்ரி மண்டபம் ஆகியவற்றில் உள்ள பித்தளை தகடுகளை அகற்றி பளிங்குக்கல் பதிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அதை மாற்றும் நோக்கம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினாக்களுக்கு இடமில்லை.

[1984 பிப்ரவரி 22

### தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்திற்கு பல மாடிக் கட்டிடம் கட்டும் திட்டம்.

7—வினா 6124—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டுப் பாடப்புத்தகச் சங்கத்திற்கு நுங்கம்பாக்கத்தில் உள்ள கல்வி இயக்குநரின் அலுவலகச் சுற்றுக்குள் பல மாடிக் கட்டிடம் கட்டும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

விடை—

தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்திற்கு நுங்கம்பாக்கத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு அருகில் பலமாடிக் கட்டிடம் கட்டும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒரு பகுதி கட்டப்பட்டுள்ளது. மற்ற பகுதி கட்டிடப் பணிகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

### 1979-80-ல் சேலம் மாவட்டத்தில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிறைவேற்றப்பட்ட புதிய திட்டங்கள்.

8—வினா 6319—திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 1979-80 நிதி ஆண்டில் குடி நீர் வடிகால் வாரியம் எத்தனை புதிய திட்டங்கள் தயார் செய்தது ?

(ஆ) அவைகளில் எத்தனை நிறைவேற்றப்பட்டன ?

விடை—

(அ) சேலம் மாவட்டத்தில் 1979-80-ம் ஆண்டில் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் கிராமப் புறத்தில் 161 குடி நீர் வசதி திட்டங்களும், நகர்ப் புறத்தில் 3 திட்டங்களும் மேற் கொள்ளப்பட்டன.

(ஆ) அவற்றில் 78 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



1984 பிப்ரவரி 22]

### விருதுநகர் குற்றவியல் நீதிமன்ற வளைவுக்குள் முதல் வகுப்பு நீதி மன்றக் கட்டிடம் கட்டும் திட்டம்.

9—வினா 6374—திரு. மு. சுந்தரராஜன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் நீதித்துறை குற்றவியல் நீதி மன்ற காம்ப வுண்டுக்குள் முதல் வகுப்பு நீதி மன்றத்திற்கு கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது கட்டி முடிக்கப்படும் ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) உயர் நீதிமன்றத்திடமிருந்து வரைபடங்களும் மதிப் பீடுகளும் பெறப்பட்டு, இச்செயற் குறிப்பு அரசின் பரிசீலனை யில் உள்ளது.

### நெடுஞ்சாலைத் துறையின் சம்பளப் பட்டியலை செயற் பொறியாளரே அனுமதித்து பட்டுவாடா செய்யும் திட்டம்.

10—வினா 7272—திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

நெடுஞ்சாலைத் துறையின் சம்பளப் பட்டியலை செயற் பொறியாளரே அனுமதி செய்து பட்டுவாடா செய்ய அரசு உத்தரவிடுமா ?

விடை —

பொதுப்பணித் துறையில் கோட்டக் கணக்கர்கள், தலைமைக் கணக்கர் அலுவலகத்தைச் சார்ந்தவர்கள். ஆகவே, ஆணை (நிலை) எண். 387 நிதித்துறை (கருவூலம் மற்றும் தணிக்கை) நாள் : 27-3-1973-இன் படி காசோலை மூலம் பணம் வழங் கும் முறை ஓர் அனுபவ நடவடிக்கையாக பொதுப்பணித் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டது. பொதுப்பணித்துறையி னைப் போலன்றி நெடுஞ்சாலைத் துறை கோட்டக் கணக்கர்கள்

தலைமைப் பொறியாளர்கள் (நெடுஞ்சாலை) அவர்களின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வருவதாலும் அவர்கள் இத்துறையைச் சார்ந்தவர்கள் என்பதாலும், காசோலை முறையானது நெடுஞ்சாலைத் துறையில் அறிமுகப்படுத்தப்படவில்லை. இம்முறையை நெடுஞ்சாலைத் துறைக்கு விரிவு படுத்த வேண்டும் என்ற முடிவானது (அ.து.) ஊழியர்களுக்கு காசோலையின் மூலம் ஊதியத்தினை வழங்குவது மற்றும் அவற்றை கோட்டக் கணக்கில் சேர்ப்பது கருவூலங்களில் பட்டியல்களை அளிப்பதற்கு மாறாக கோட்ட அலுவலக ஊழியர்களுக்கு மட்டுமின்றி தலைமைப் பொறியாளர் அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் உள்ள ஊழியர்களுக்கும் கூடுதல் சுமையாக அமையும். மேலும் கருவூல ஊழியரால் பட்டியல்களைச் சரிபார்க்கும் முறையானது தவறுதலாக அளிக்கப்படும் பட்டியல்களைத் தடை செய்வதற்கு மிகவும் ஏதுவாக இருக்கும்.

இம்முறையைக் கடைப்பிடிப்பதால், கோட்ட அலுவலகங்களிலும், தலைமைப் பொறியாளர் அலுவலகத்தின் கணக்குப் பிரிவிற்கும் தேவைப்படும் கூடுதல் ஊழியர்களின் அளவினைப் பரிசீலித்த பின்பு நெடுஞ்சாலைத் துறைக்கு காசோலை முறையினை விரிவு படுத்துவது குறித்து முடிவெடுக்க ஏதுவாகும்.

### பொது நூலகத்துறை மூலம் 1978-1981-ல் பதிப்பகங்களிடம் இருந்து வாங்கப்பட்ட புத்தகங்களின் மதிப்பு.

11—வினா 7429—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பொது நூலகத் துறையின் சார்பில் 1978-79, 1979-80, 1980-1981 ஆகிய மூன்று ஆண்டுகளில் பதிப்பகங்களிடமிருந்து புதிதாக வெளியிடப்பட்ட புத்தகங்கள் எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டுள்ளது ?

விடை—

விபரம் வருமாறு :—

| ஆண்டு. | வாங்கப்பட்ட நூல்களின் மொத்த மதிப்பு. ரூ. | பை. |
|---|---|---|
| 1978-79 .. .. .. | 30,38,462 | 83 |
| 1979-80 .. .. .. | 35,95,907 | 45 |
| 1980-81 .. .. .. | 18,[illegible] | 66 |





### ஓமந்தூர்-அபினிமங்கலம் தார் சாலையினைச் செப்பனிடும் பணி

12—வினா 7711—திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி துறையூர் வட்டம் ஓமந்தூரிலிருந்து அபினிமங்கலம் செல்லும் தார் சாலை செப்பனிடும் வேலை பாதியில் நிறுத்தப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) 4 கி. மீ. நீளமுள்ள இச்சாலையில் தார் பரத்தல் வேலை தற்பொழுது முடிக்கப்பட்டுள்ளது.

### இனாம்கல்பாளையம் ஒன்றியப்பள்ளி ஆசிரியர்களுக்காக கட்டப் பட்டுள்ள வீடுகள்.

13—வினா 7726—திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்ணச்சநல்லூர் ஒன்றியம் இனாம்கல்பாளையம் ஒன்றியப் பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்காக கட்டப்பட்டிருக்கும் வீட்டில் ஆசிரியர்கள் குடியிருக்கிறார்களா ?

(ஆ) இல்லையென்றால் காரணம் என்ன ?

விடை—

(அ) ஆம். இந்த குடியிருப்பில் ஆசிரியர்கள்தான் குடியிருக்கிறார்கள். இதில் குடியிருந்த ஆசிரியை திருமதி கே. இராசாமணி 3-7-1981-ல் காலி செய்து விட்டார். இக் குடியிருப்பில் சில பழுதுகள் உள்ளன. இவை சரி செய்யப்பட்ட பின் வேறு ஆசிரியைக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[1984 பிப்ரவரி 22

இராமேசுவரம் தனுஷ்கோடி கடற்கரை பகுதி காலி நிலங்களில் மரம் வளர்த்தல்.

14—வினா 8100—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேசுவரம் தனுஷ்கோடி பகுதியில் கடற்கரை பகுதி நிலம் அதிகமான அளவிற்கு காலியாக இருந்து வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், வனத்துறை மூலம் அதைப் பயன்படுத்தி மரம் வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இராமேசுவரம் தனுஷ்கோடி பகுதியில் கடற்கரை பகுதி நிலம் மரம் வளர்க்கும் அளவுக்கு ஏற்றதாக தற்சமயம் இடம் ஏதும் காலியாக இல்லை.

1975-1980 முடிய தஞ்சை மாவட்டத்தில் விதவை மணம் செய்து கொண்டோர் எண்ணிக்கை.

15—வினா 8819—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1975-லிருந்து 1980 முடிய விதவை மணம் செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) உதவித் தொகை கேட்டு விண்ணப்பம் செய்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) எத்தனை பேருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு உள்ளது ?



1984 பிப்ரவரி 22]

விடை—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1975-லிருந்து 1980 முடிய விதவை மணம் செய்துக் கொண்டவர்கள் எத்தனை என்ற விவரம் இல்லை. ஏனெனில் விதவை திருமணம் செய்து கொண்டவர்கள் அனைவரும் அரசுக்கோ, சமூக நல இயக்குநர் அலுவலகத்திற்கோ அல்லது மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கோ தெரிவிப்பதில்லை.

(ஆ) 1975 முதல் 1980 வரை தஞ்சை மாவட்டத்தில் உதவித் தொகை கேட்டு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 444 ஆகும்.

(இ) 73 பேருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

அறநிலையத்துறை கோயில்களுக்கான செயல் அலுவலர்கள் நியமனம்

16—வினா 9186—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறநிலையத் துறை கோயில்களுக்கு இ. ஓ.க்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர் ?

(ஆ) இ. ஓ. இல்லாத கோயில்களுக்கு இ. ஓ.-க்கள் நியமிக்கும் திட்டம் ஏதும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) அறநிலையத் துறையில் உள்ள கோயில்களில் இ.ஓ. உள்ள கோயில்கள் எத்தனை ? இல்லாத கோயில்கள் எத்தனை ?

விடை—

(அ) இந்து சமய அறநிலைய சட்டப் பிரிவு 45 (1)-ன் கீழ் மடங்களைத் தவிர எல்லா ஆலயங்களுக்கும், மடங்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ள ஆலயங்களுக்கு சட்டப் பிரிவு 43-ஏ யிலும், ஆலயங்களில் முறைகேடுகள் காணப்படின் செயல் அலுவலர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். இது தவிர சீரான நிர்வாகத்திற்கு துணை ஆணையாளர்களாலும் நீதி மன்றத்தாலும் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகத் திட்டப்படி செயல் அலுவலர்கள் நியமனம் செய்ய வகையுள்ளது.

[1984 பிப்ரவரி 22

(ஆ) 1978 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாளில் நிர்வாக அதிகாரி நிலை 1 முதல் நிலை 4 உள்ள கோவில்கள் 1,362 ஆக இருந்தது. அதற்குப் பின் மூன்று ஆண்டுகளில் 87 திருக்கோயில்களுக்கு செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். பிறகு 1980 ஆம் ஆண்டு 125 திருக்கோயில்களுக்கு செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கோவில்களின் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக அதிக எண்ணிக்கையில் செயல் அலுவலர்களை நியமிக்க வேண்டியது அவசியம் ஆகிறது. ஆகவே 35 கூடுதல் செயல் அலுவலர்கள் பதவிகள் ஏற்படுத்துவதற்காக கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயத்தில் துணை ஆணையர் நிலையில் ஒரு செயல் அலுவலர் உள்ளார். உதவி ஆணையர் நிலையில் நிர்வாக அதிகாரிகள் 10 கோயில்களில் பணியாற்றி வருகின்றனர்.

தற்பொழுது மொத்தம் 33,604 திருக்கோயில்களில் 1,574 திருக்கோயில்களுக்குத்தான் 444 செயல் அலுவலர்கள் நிர்வாகத்தை கவனித்து வருகிறார்கள்.

### திருவில்லிப்புத்தூர் தொகுதியிலுள்ள கால்நடை தீவனம் பயிர் வளர்ப்புத் திட்டம்

17—வினா 9413—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

முகவை மாவட்டம் திருவில்லிபுத்தூர் தொகுதி அருகே 1978-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள, கால்நடை தீவனப் பயிர் (புல்) வளர்ப்பு திட்டம் செயல் படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

விடை—

இராமநாதபுரம் கோட்டத்தைச் சேர்ந்த திருவில்லிப்புத்தூர் வனப் பண்ணைச் சரகத்தில், வறண்ட பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 63 ஹெக்டர் பரப்பளவில் கொழுக்கட்டைப் புல் தோட்டம் எழுப்பப்பட்டு 1979-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்தோட்டப் பகுதியில் செம்மறி யாடுகள் மேய்வதற்கு கட்டணம், ஆடு ஒன்றுக்கு ஒரு வருடத்திற்கு ரூ. 1 ஆகும். ஆனால், இதில் ஒன்றிரண்டு நபர்கள் தவிர இதர கிராம மக்கள் கட்டணம் செலுத்தி ஆடுகளை மேய்க்க ஆர்வம் காட்டவில்லை. 1981-ம் ஆண்டு வரை 4 நபர்களே, உரிய கட்டணம் செலுத்தி 1,250 ஆடுகளை மேய்த்துள்ளனர்.



1984 பிப்ரவரி 22]

2. மேலும் 1981-82-ம் ஆண்டில் (ஜூலை முதல் துவங்கும் ஆண்டு) இத்தோட்டப் பகுதியில் விதை சேகரம் செய்வதற்காகவும், கூபாபுல் நாற்றுக்கள் நட்டு, கால்நடை தீவன அபிவிருத்தி செய்வதற்காகவும், தோட்டம் மேய்ச்சலுக்கு மூடப்பட்டுள்ளது. எனவே, கால்நடை தீவன பயிர் வளர்ப்புத் திட்டம் செயல்பட்டுக்கொண்டுதான் உள்ளது.

### கூம்பூரில் காவல் நிலையம் அமைப்பதற்கான விண்ணப்பம்.

18—வினா 9611—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேடசந்தூர் வட்டம் கூம்பூரில் காவல் நிலையம் அமைக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பம் ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் வட்டம் கூம்பூரில் காவல் நிலையம் அமைக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பம் ஏதும் வரவில்லை.

### மதுவிலக்கு குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டோர் எண்ணிக்கை.

19—வினா 9622—திரு. செ. செம்மலை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுவிலக்கு தளர்த்தப்படுவதற்கு முன்பாக மதுவிலக்குச் சட்டப்படி கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டு விட்டார்களா ?

(ஆ) ஆம் எனில், அப்படி விடுதலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 54.

[1984 பிப்ரவரி 22

**மைலம் காவல் நிலையத்தில் தாலி திருட்டு சம்பந்தமாக பெறப்பெற்ற புகார்கள்.**

20—வினா 9760—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திண்டிவனம் வட்டம், மைலம் காவல் நிலையத்தில் 1978-ம் ஆண்டிலிருந்து தாலி திருடுபோனது சம்பந்தமாக வந்த புகார்கள் எத்தனை ?

(ஆ) எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன ?

(இ) அவ்வழக்குகளில் நீதிமன்றங்களில் குற்றங்கள் நிருபிக்கப்பட்டு தண்டனை தரப்பட்ட வழக்குகள் எத்தனை ?

**விடை**—

(அ) 7 புகார்கள்.

(ஆ) 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

(இ) துப்பு ஒன்றும் கிடைக்கவில்லை என்ற காரணத்தால், இவ்வழக்குகள் அனைத்தும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

**நீரோடி முதல் மண்டைக்காடு வரையுள்ள கால்வாயை விரிவுபடுத்தி சீரமைக்கும் பணி.**

21—வினா 10174—திரு. எஸ். ரெத்தினராஜ், திரு. மி. வின்செண்ட், திரு. டி. மணி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் நீரோடி முதல் மண்டைக்காடு வரை உள்ள A.V.M. கால்வாயை விரிவுபடுத்தி சீரமைத்து குமரி முனை வரை நீட்டி சுற்றுலா படகுவிட அரசு முயற்சிக்குமா ?

**விடை**—

1979-ம் ஆண்டு இக்கால்வாயை சீரமைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்து, திட்டத்தை நிறுத்தி வைக்க முடிவு செய்தது. தற்போது இதுபற்றிய திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.



1984 பிப்ரவரி 22]

**இராமப் புறங்களில் புற்றுநோய் பரவுவதைத் தடுக்க மேற்கொண்ட நடவடிக்கை.**

22—வினா 10289—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கிராமப்புறங்களில் புற்றுநோய் பரவுவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**விடை** —

கிராமப்புறங்களில் புற்றுநோய் பரவுவதைத் தடுப்பதற்கு திட்டம் ஏதும் இல்லை. ஆனால், மருத்துவக்கல்வி இயக்குநரின் கீழ் இயங்கும் எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும், காஞ்சிபுரத்தில் உள்ள அறிஞர் அண்ணா புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்திலும் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கு வேண்டிய வசதிகள் உள்ளன.

**1980-81 ஆம் ஆண்டில் கோயில்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் மூலம் வாடகையாக கிடைத்த தொகை.**

23—வினா 10682—திரு. செ. செம்மலை: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980-81-ம் ஆண்டில் கோயில்களுக்குச் சொந்தமான கட்டிடங்களின் மூலம் வாடகையாக கிடைத்த தொகை எவ்வளவு ?

(ஆ) அதை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

**விடை**—

(அ) 1980-81-ம் ஆண்டில் கோயில்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் மூலம் வாடகையாக கிடைத்த தொகை ரூ. 1,07,34,324.78.

[1984 பிப்ரவரி 22

(ஆ) 1974 ஆம் ஆண்டிற்கு முன் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களின் வாடகையை பொருத்தமட்டில், தமிழ்நாடு வாடகைக் கட்டுப்பாடு சட்டம் அமுலில் இருந்ததால் நியாயமான அளவு கூட வாடகையை உயர்த்த இயலவில்லை. பின் 1974-ல் அரசு ஆணை எண் 1998, உள்துறை, நாள் 12—8—1974-ல் மேற்படி சட்டத்தில் இருந்து சமய நிறுவனக் கட்டிடங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அதன் விளைவாக சமய நிறுவனங்களின் கட்டிட வாடகைகளைத் திருத்தி அமைக்க 1976-ம் ஆண்டில் நியாய வாடகைக் குழு ஏற்படுத்தப்பட்டது. இந்த குழுவானது சம்பந்தப்பட்ட அறநிலைய துணை ஆணையரைத் தலைவராகவும், இதற்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நிர்வாகப் பொறியாளரை டெக்னிக்கல் மெம்பராகவும் சம்பந்தப்பட்ட ஆலயச் செயல் அலுவலரைச் செயலாளராகவும் கொண்டு இயங்கி வந்தது. அக்குழு சில சமய நிறுவனக் கட்டிடங்களுக்கு அறங்காவலர் குழுக்கள் அமைக்கப்படவே, 1—2—1979 முதல் மேற்கண்ட வாடகை நிர்ணயக் குழு கலைக்கப்பட்டு விட்டது. தற்பொழுது ஆலய நிர்வாகிகளே, ஆணையாளர் சுற்றறிக்கையில் சொல்லப்பட்ட வழிகாட்டி முறைகளை அனுசரித்து குறைந்த வாடகை உள்ள இனங்களின் வாடகையை நியாயமான அளவுக்கு உயர்த்தி வருகின்றனர். அவ்வாறு வாடகையை உயர்த்தியதின் பலனாக 1—7—1978 முதல் 31—12—1981 முடிய 3½ ஆண்டு காலத்தில் சமய நிறுவன கட்டிடங்களுக்கு வாடகை உயர்த்தப்பட்டு கூடுதல் வாடகையாக ரூ. 23,72,112.15 வருமானம் வரப் பெற்றுள்ளது.

## திருப்பத்தூர் அரசு மருத்துவமனையிலுள்ள காச நோய் மருத்துவப் பகுதி.

24—வினா 10979—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் அரசாங்க மருத்துவமனையில் தற்போது டி.பி. (T. B.) நோய் மருத்துவம் செய்யும் பகுதி உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால், அதை விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?



1984 பிப்ரவரி 22]

விடை—

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் அரசாங்க மருத்துவ மனையில் 10 படுக்கைகள் கொண்ட காச நோய் பகுதியை காசநோய் கழகம் வழங்கியுள்ள ரூ. 1 லட்சம் தொகையில் கட்டப்பட்டு, மருத்துவ துறையிடம் ஒப்படைக்கப் பட்டு விட்டது.

## குசிலியம்பாறையில் பேருந்து நிலையம் அமைக்கும் பணி.

25—வினா 11124—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் வேடசந்தூர் தாலுக்கா குசிலியம்பாறையில் பேருந்து நிலையம் அமைக்கும் பணி காலதாமதமாவது ஏன் ?

(ஆ) எப்பொழுது பணி துவங்கப்படும்.

விடை—

(அ) மதுரை மாவட்டம் வேடசந்தூர் தாலுக்கா, குசிலியம்பாறை பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்கும் பணி சிமெண்ட் இல்லாததால் காலதாமதம் ஆயிற்று.

(ஆ) தற்போது பணி துவங்கப்பட்டு 5 பேருந்துகள் நிற்க மேல் கூரையுடன் அமைக்கப்பட்டுவிட்டன. மேலும் தேவையான சிமெண்ட் கிடைத்தவுடன் 5 பேருந்து நிற்குமிடங்கள் அமைக்கப்பட்டு பேருந்து நிலையம் பூர்த்தியடைந்துவிடும் என தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை) தெரிவித்து உள்ளார்.

[1984 பிப்ரவரி 2-2

## கண்தெரியாத பெண்களுக்குப் பயிற்சியளிக்கும் பெண்கள் மறுவாழ்வு நிலையம்.

26—வினா 11176—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வின்ாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்தெரியாத பெண்களுக்குப் பயிற்சி அளித்து வேலை அளிக்கும் ஊனமுற்ற பெண்கள் மறுவாழ்வு நிலையம் எங்கே எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது ?

(ஆ) அந்த நிலையத்தில் பயிற்சி பெற்ற பெண்கள் சென்ற ஆண்டு வரை எத்தனை பேர் ?

விடை—

(அ) கண் தெரியாத பெண்களுக்குப் பயிற்சி அளித்து பின் வேலை அளிக்கும் மறுவாழ்வு நிலையம் 18—3—1978-ல் சென்னை சாந்தோமில் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு, நெசவு, சாக்கட்டி செய்தல் போன்ற பணிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சிக்குப் பின் அங்கேயே வேலையும் வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு உணவு, உறைவிட வசதியும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

(ஆ) மேற்படி பயிற்சி நிலையத்தில் நடப்பாண்டு வரை 49 பார்வையற்றோர் பயிற்சி பெற்றுள்ளனர். பயிற்சிக்குப் பின் அந்நிலையத்திலேயே வேலையிலும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

## குடகனாறு அணைத் திட்டத்திற்கான நிலங்களை குத்தகைக்கு விடுவதன் மூலம் கிடைத்த வருமானம்.

27—வினா 11542—திரு. வே சந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம் அழகாபுரியில் குடகனாறு அணைக்கட்டப்படுவதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் பரப்பு எவ்வளவு ?

(ஆ) தற்போது அந்த நிலங்களை குத்தகைக்கு விடுவதின் மூலம் அரசுக்கு கிடைக்கும் ஆண்டு வருமானம் எவ்வளவு ?

(இ) குத்தகைக்கு விடுவதில் குத்தகை தொகை வசூலிக்காமல் பாக்கியாக யார், யாரிடம் எவ்வளவு உள்ளது ?



1984 பிப்ரவரி 22]

விடை—

(அ) மற்றும் (ஆ): குடகனாறு அணை திட்டத்திற்கு 801.50 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டது. இந்நிலங்களை குத்தகைக்கு விட்டத்தில் கிடைத்த வருமானம் பின்வருமாறு :—

| ஆண்டு. | வருமானம். (ரூபாய்.) |
|---|---|
| 1979-80 .. .. .. .. .. | 19,080 |
| 1980-81 .. .. .. .. .. | 19,259 |
| 1981-82 .. .. .. .. .. | 21,926 |

(இ) வசூலிக்கப்படவேண்டிய குத்தகை நிலுவைத் தொகை ஏதுமில்லை.

## குன்னூர் கிராமத்திலுள்ள இளநிலை மின்பொறியாளர் அலுவலகத்தை மங்களம் கிராமத்திற்கு மாற்றும் திட்டம்.

28—வினா 11574—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் தொகுதி குன்னூர் கிராமத்தில் செயல்பட்டு வரும் இளநிலை மின் பொறியாளர் அலுவலகத்தை மங்களம் கிராமத்திற்கு மாற்றும் செய்ற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

திருவில்லிபுத்தூர் தொகுதி குன்னூரில் செயல்பட்டு வரும் இளநிலை மின் பொறியாளர் அலுவலகத்தை மங்களம் கிராமத்திற்கு மாற்றுவது குறித்து மின்வாரியம் பரிசீலனை செய்து மாற்றம் தேவையில்லை என முடிவெடுத்துள்ளது.

### Number of Taluks taken for the construction of Low Income Group Houses.

29—*Q.* 11616—Thiru P. VENKATASUBRAMANIAM: Will the Hon. Minister for Environmental Pollution Control be pleased to state, the number of taluks in each district, wherein the Tamil Nadu Housing Board has taken up the construction of Low Income Group houses?

*Answer.*—The number of Taluks in each district of Tamil Nadu wherein the Tamil Nadu Housing Board has taken up the construction of Low Income Group Houses is furnished below:—

| *Name of the district.* | *Number of Taluks wherein the Tamil Nadu Housing Board has taken up the construction of L.I.G. houses.* |
|---|---|
| 1. South Arcot | |
| 2. North Arcot | 4 |
| 3. Thanjavur | 7 |
| 4. Tiruchirappalli | 2 |
| 5. Pudukkottai | 3 |
| 6. Salem | 1 |
| 7. Dharmapuri | 4 |
| 8. Coimbatore | 3 |
| 9. Periyar | 3 |
| 10. Madurai | 1 |
| 11. Tirunelveli | 3 |
| 12. Chengalpattu | 3 |
| 13. Ramanathapuram | 9 |
| 14. Kanyakumari | 2 |
| 15. Madras City | 1 |
| | 4 |



### நூலக ஆணைக்குழு உள்ள மாவட்டங்கள்.

30—வினா 11748—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நூலக ஆணைக் குழு எந்தெந்த மாவட்டங்களில் உள்ளன?

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நூலக ஆணைக் குழு இல்லை என்பது உண்மையா?

விடை—

(அ) தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டம் தவிர்த்து ஏனைய எல்லா மாவட்டங்களிலும் நூலக ஆணைக் குழுக்கள் உள்ளன.

(ஆ) 10—5—1982 நாளிட்ட கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் அரசாணை நிலை எண். 873-ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் நூலக ஆணைக் குழு ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. விரைவில் அங்கு நூலக ஆணைக் குழு ஏற்படுத்தப்படும்.

### எரிவாயு மூலம் பேருந்துகளை இயக்கும் திட்டம்.

31—வினா 12060—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எரிவாயுவினால் பேருந்துகளை இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை. ஆனால், ''எத்தனால்', ( Ethanal ) என்னும் பொருளைத் தனியாகவோ பெட்ரோல் அல்லது டீசலுடன் கலந்தோ உந்து வண்டிகளில் பயன்படுத்து வதற்காக இதுவரை அண்ணா பல்கலைக் கழகத்தில் நடந்துள்ள ஆராய்ச்சிப் பணிகள் ஊக்கம் தருவதாக உள்ளது. இப் பரிசோதனைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**அரசு விதைப் பண்ணைகளின் மூலம் விநியோகிக்கும் விதைகளின் தரம்.**

32—வினா 12136—திரு. செ. செம்மலை : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு விதைப் பண்ணைகளின் மூலம் விநியோகிக்கப் படும் விதைகளின் தரம் குறைந்து இருப்பதாக விவசாயிகளிட மிருந்து அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க எடுக்கப்பட்ட நட வடிக்கை யாது ?

விடை—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில், மர்மடக்கி கிராமத் தைச் சேர்ந்த திரு. முத்துவேல் என்பவரிடமிருந்து அண்ணாப் பண்ணையில் வாங்கிய $1\frac{1}{2}$ கிலோ மிளகாய் விதை முளைக்க வில்லை என்று ஒரே ஒரு புகார் மட்டும் வந்துள்ளது.

(ஆ) விதைகள், ஆராய்ச்சிப் பண்ணைகள்/அரசு விதைப் பண்ணைகளில் கருவிதை/ஆதாரவிதை மற்றும் சான்றிதழ் விதை என்ற மூன்று வெவ்வேறு முக்கிய நிலைகளிலும் பயிர் நிபுணர்கள்,



அலுவலர்கள் நேரடிப் பார்வையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. விதைகள் அறுவடைக்குப்பின் பல பரிசோதனைகளுக்கு உட் படுத்தப்பட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்சத் தகுதி களைப் பெற்றிருந்தால் மட்டுமே சான்றிதழ் அட்டைகள் பொருத் தப்பட்டு விநியோகத்திற்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆதலின், அரசு விதைப் பண்ணைகள் மூலம் விநியோகிக்கப்படும் விதைகள் யாவும் தரம் மிக்கவையாகும். அண்ணாப் பண்ணையில் 1981-82 ஆம் ஆண்டில் இது நாள் வரை 1,742 கிலோ மிளகாய் விதை விநியோகம் செய்யப்பட்டிருப்பினும் மேற் குறிப்பிட்ட புகாரைத் தவிர வேறு எவரிடமிருந்தும் இது குறித்துக் புகார் வரவில்லை. சம்பந்தப்பட்ட இந்த விவசாயி நாற்று விட்ட முறையில் ஏதாவது தவறுகள் இருந்து முறைப்புத்திறன் குறைந் திருக்க வாய்ப்புண்டு. மேற்படி பண்ணையின் உதவி வேளாண்மை இயக்குநரின் அறிக்கையிலிருந்து இவ்விவசாயிக்கு வழங்கப்பட்ட மிளகாய் விதை தரமான விதையென்றும் தெரியவருகிறது.

**பணி நீக்கம் செய்யப்பட்ட கிராம அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட தொகை.**

33—வினா 12429—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பணி நீக்கம் செய்யப்பட்ட கிராம அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து 30–9–1981 முடிய பெற்ற கூடுதல் சம்பளம் எவ்வளவு ?

(ஆ) மாதம் எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது ?

விடை—

(அ) பணி நீக்கம் செய்யப்பட்ட கிராம அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது சம்பளம் அல்ல. உச்ச நீதிமன்ற இடைக் கால ஆணையின்படி வழங்கப்பட்ட தொகையே ஆகும். பணி நீக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து (14–11–1980) 30–9–1981 முடிய வழங்கப்பட்ட கூடுதல் தொகை ரூ. 4,14,17,891.44.

(ஆ) 14–11–1980 முதல் 30–9–1981 முடிய சராசரியாக மாதம் ஒன்றுக்கு ரூ. 37,65,000 முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

சாயல்குடி அருகே பனங்கற்கண்டு தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம்.

34—வினா 12453—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்கு முகனை மாவட்டம் சாயல்குடி அருகே பனங்கற்கண்டு தொழிற்சாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு என்ன ?

விடை--

(அ) ஆம்.

(ஆ) வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் (Drought Prone Area Programme) இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி அருகே உள்ள மாரியூர் மற்றும் மண்டபம் ஆகிய இரு இடங்களில் ரூ. 24,566 இலட்சம் மதிப்பில் பனைபொருள் பெருவளத் திட்டம் செயல்படுத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் ரூ. 1.02 இலட்சத்தைக் கொண்டு பனங்கற்கண்டு உற்பத்தி செய்யும் நிலையம் (Palmyrah Candy Unit) ஒன்றை அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது.





சென்னை, திருச்சி, கோவை ஆகிய இடங்களில் பணிபுரியும் காவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

35—வினா 12557—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு. முதல் அமைச்சர் ,கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் வெளி மாவட்டங்களில் இருந்து வந்து பணி புரியும் போலீசாருக்கு மலிவு வாடகையில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) கோவை, திருச்சியில் உள்ள போலீசாருக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) சென்னை நகரில் பணியாற்றும் காவல் துறை சார்புப் பணியாளர்கள் அனைவரும் இலவசக் குடியிருப்பு வசதி பெறத் தகுதி பெற்றவர்களாவார்கள். எனவே, இவர்களுக்கு, இலவசக் குடியிருப்பு வசதி செய்து தரப்படுகிறது. இலவசக் குடியிருப்பு கொடுக்கப்படாதவர்களுக்கு வீட்டு வாடகைப்படி தரப்படுகிறது. எனவே, இக் கேள்வி எழவில்லை.

(ஆ) கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் காவல் துறையினருக்குக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆணையிட்டு உள்ளது.

(இ) இவ்வாணைகளின்படி கோயம்புத்தூர், அவினாசி சாலை மற்றும் வெரைட்டி ஹால் ஆகிய இடங்களில் 341 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி, சிந்தாமணியில் 104 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், கோட்டப்பட்டு கிராமத்தில் 84 குடியிருப்புகளும், கல்லக்குடியில் இருப்புப்பாதைக் காவலர்களுக்கென 50 குடியிருப்புகளும் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

[1984 பிப்ரவரி 22

**அச்சிறுபாக்கம் ஆரம்பச் சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம்.**

36—வினா 12591—திரு. சி. கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுபாக்கம் பேரூராட்சியில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட பொது மருத்துவமனையாக விரிவு படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) அச்சிறுபாக்கம் பேரூராட்சியில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட பொது மருத்துவமனையாக விரிவுபடுத்தும் உத்தேசம் தற்சமயம் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**தன்னிறைவுத் திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை.**

37—வினா 12807—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1980–81, 1981–82 ஆகிய ஆண்டுகளில் தன்னிறைவுத் திட்டப் பணிகளுக்காக அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு ?

விடை—

1980–81 ஆம் ஆண்டுகளில் 69 ஊராட்சி ஒன்றியங்களில் முதற் கட்டமாக நிறைவேற்றப்பட்ட தன்னிறைவுத் திட்டப் பணிகளுக்கென ரூ. 46.42 கோடியும், 1981–82 ஆம் ஆண்டுகளில் 150 ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டாவது கட்டமாக நிறைவேற்றப்படும் பணிகளுக்கென ரூ. 83.46 கோடியும் அரசு இது வரை ஒதுக்கியுள்ளது.



1984 பிப்ரவரி 22]

**மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள ஊராட்சி குளங்களில் மீன் வளர்ப்பதை ஊக்குவிக்கும் சிறப்புத் திட்டம்.**

38—வினா 12899—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை—கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஊராட்சி குளங்களில் மீன் வளர்ப்பதை ஊக்கப்படுத்த அரசிடம் சிறப்புத் திட்டம் உள்ளதா ?

விடை—

ஆம். 1981–82 ஆம் ஆண்டில் மதுரை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குளங்களில் இத் தீவிர மீன் வளர்ச்சித் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறது.

**மதுரை மீனாட்சி கோவிலைச் சுற்றி நிறுத்தப்படும் வாகனங்கள் மூலம் கிடைத்த வரி வசூல் தொகை.**

39—வினா 12926—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி கோவிலைச் சுற்றி நிறுத்தப்படும் வாகனங்களுக்கு மதுரை மாநகராட்சி வரி வசூல் செய்கிறதா ?

(ஆ) ஆம் எனில் அது பற்றிய விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இதனால் மதுரை மாநகராட்சிக்கு 1980-81, 1981-1982 ஆண்டுகளுக்கு முறையே ரூ. 54,500 மற்றும் ரூ. 80,001 வருவாய் கிடைத்துள்ளது.

[1984 பிப்ரவரி 22

### முடக்கு வாத நோயாளிகள் சங்கக் கட்டிடம் கட்ட முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி செய்யும் திட்டம்.

40—வினா 12989—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தசை முடக்குவாத நோயாளிகள் சங்கத்திற்கு கட்டிடம் கட்ட முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி செய்யும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு ரூபாய் கொடுக்கப்படும் ?

விடை—

(அ) தமிழ்நாடு முடக்குவாத நோயாளிகள் சங்கம் அமைப்பதாக கூறப்படும் கட்டிடத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி செய்யும் செயற் குறிப்பு ஏதும் தற்போது நிலுவையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

### தீயணைப்புத் துறையில் மாவட்டத்திற்கு ஒரு கோட்ட அலுவலகம் ஏற்படுத்துதல்.

41—வினா 13097—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீயணைப்புத் துறையில், மாவட்டத்திற்கு, ஒரு கோட்ட அலுவலகம் ஏற்படுத்தும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

இல்லை.

### கிராமக் கால்நடைப் பட்டிகளை செப்பனிட்டுப் பராமரிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி.

42—வினா 13116—திருவாளர்கள் வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், கே. குப்புசாமி, நன்னிலம் அ. கலையரசன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

கிராமக் கால்நடைப் பட்டிகளைச் செப்பனிடவும், மற்றும் பராமரிப்பதற்கும் 1981-82-ல் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ?



1984 பிப்ரவரி 22]

விடை—

கிராமக் கால்நடைப் பட்டிகளைச் செப்பனிடவும் மற்றும் பராமரிப்பதற்கும் 1981-82-ல் ரூபாய் 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கோவை நகராட்சி பகுதிகளில் மேல்நிலைப் பள்ளிகள் துவக்கும் திட்டம்.

43—வினா 13203—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சி பகுதியான ரத்தினபுரி, சங்கனூர்ப் பகுதிகளில் மேல்நிலைப் பள்ளிகள் துவங்க அரசு எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

விடை—

கோவை மாநகராட்சிப் பகுதிகளான ரத்தினபுரி, சங்கனூர் பகுதிகளில் மேல்நிலைப்பள்ளிகள் துவங்குவதற்கு அடிப்படைத் தேவையான உயர்நிலைப் பள்ளிகளே இல்லாத நிலையில், மேல் நிலைப் பள்ளிகளைத் தொடங்கும் பிரச்சினைக்கு இடமில்லை. ஆனால், அவ்விடங்களில் உள்ள மக்களுக்கு அதன் சுற்று வட்டாரத்தில் உள்ள கீழ்க்கண்ட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்கின்றன :—

1. அரசினர் உயர்நிலைப்பள்ளி, கணபதி.
2. மாநகராட்சி மகளிர் உயர்நிலைப்பள்ளி, சித்தாபுதூர்.
3. மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, சித்தாபுதூர்.
4. மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, வடகோவை.
5. மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, அரங்கநாதபுரம்.
6. டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் மேல்நிலைப்பள்ளி, கோவை.
7. சபர்பன் மேல்நிலைப்பள்ளி, கோவை.
8. அவினாசிலிங்கம் மகளிர் மேல்நிலைப்பள்ளி, கோவை.

[1984 பிப்ரவரி 22

### காஞ்சிபுர மாவட்ட மருத்துவமனைக் கட்டிடங்களைப் பழுது பார்க்கும் பணி.

44—வினா 13257—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்ட மருத்துவமனைக் கட்டிடங்களுக்கு எப்பொழுது வெள்ளையடித்தல், வர்ணம் அடித்தல், மின்சார இணைப்புகள் போன்றவைகள் செய்யப்பட்டன ?

(ஆ) எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை இக்காரியங்கள் செய்யப்பட வேண்டுமென அரசு ஆணைகள் கூறுகின்றன.

விடை—

(அ) 1982 மார்ச் திங்களில் வெள்ளையடித்தல், வர்ணம் பூசுதல் செய்யப்பட்டன. மின்சார இணைப்புகள் புதுப்பிக்கப் பட்டு வருகின்றன.

(ஆ) வெள்ளை அடித்தல் ஆண்டுக்கொரு முறையும், வர்ணம் பூசுதல் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையும் செய்யப்பட வேண்டும்.

### காஞ்சிபுரம் மாவட்ட மருத்துவமனையில் சைக்கிள், ஸ்கூட்டர் நிறுத்த ஷெட்டுகள் கட்டுதல்.

45—வினா 13259—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

காஞ்சிபுரம் மாவட்ட மருத்துவமனையில் பொதுமக்கள், அலுவலர்கள் ஆகியோர்களுக்கென சைக்கிள், ஸ்கூட்டர் ஷெட்டுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

தற்போதைக்கு எந்த செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1984 பிப்ரவரி 22]

### விளவங்கோடு தாலுக்காவில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

46—வினா 13352—திரு. டி. மணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்காவில் அஞ்சாலிக்கடவு தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பாலத்தின் வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

### பொய்ச் சான்றுகள் வழங்கப்பட்டதற்காக வருவாய்த்துறை அதிகாரிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை.

47—வினா 13377—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்டோரும் மற்றும் முன்னேறிய சமூகத்தினரும் 1979, 1980, 1981 ஆண்டுகளில் தங்களுக்கு பழங்குடியினர் (Scheduled Tribes) எனப் பொய்ச் சான்றுகள் வழங்கப்பட்டதற்காக மாவட்ட வாரியாக எத்தனை வருவாய்த் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டன ?

[1984 பிப்ரவரி 22

விடை—

1979, 1980, 1981 ஆம் ஆண்டுகளில் பிற்படுத்தப்பட்டோருக்கும், முன்னேறிய சமூகத்தினருக்கும் " பழங்குடிகள் " (Sch dul d Trib s) எனப் பொய்ச் சான்றிதழ்கள் வழங்கியமைக்காக மாவட்ட வாரியாக வருவாய்த் துறை அலுவலர்களின் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் கீழ் வருமாறு :—

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | அலுவலர்களின் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளின் எண்ணிக்கை. | | | மொத்தம். |
|---|---|---|---|---|
| | 1979 | 1980 | 1981 | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. சென்னை .. | .. | 1 | 2 | 3 |
| 2. வட ஆற்காடு .. | 2 | .. | .. | 2 |
| 3. தஞ்சாவூர் .. | 1 | .. | .. | 1 |
| 4. திருச்சிராப்பள்ளி | .. | 1 | .. | 1 |
| 5. மதுரை .. .. | .. | .. | 2 | 2 |
| 6. இராமநாதபுரம் .. | 1 | .. | .. | 1 |
| 7. திருநெல்வேலி .. | 3 | 8 | 7 | 18 |
| 8. செங்கல்பட்டு .. | .. | .. | .. | .. |
| 9. தென் ஆற்காடு .. | .. | .. | .. | .. |
| 10. புதுக்கோட்டை .. | .. | .. | .. | .. |
| 11. சேலம் .. .. | .. | .. | .. | .. |
| 12. தருமபுரி .. | .. | .. | .. | .. |
| 13. கோயம்புத்தூர் .. | .. | .. | .. | |
| 14. பெரியார் .. | .. | .. | .. | .. |
| 15. நீலகிரி .. .. | .. | .. | .. | .. |
| 16. கன்னியாகுமரி .. | .. | .. | .. | .. |
| | | மொத்தம் | .. | 28 |

விவசாயிகளுக்கான தக்காவிக் கடன் பற்றிய சர்வே.

48—வினா 13395 :—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு வழங்கப்பெறும் தக்காவிக் கடன் சம்பந்தமாக மாநிலத்தில் சர்வே நடந்துகொண்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளின் மொத்த தக்காவிக் கடன் தொகை எவ்வளவு ?



1984 பிப்ரவரி 22]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சங்கரன்கோவில் ஒன்றியப் பகுதிக்கான குடிநீர்த் திட்டங்கள்

49—வினா 13411—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் ஒன்றியம், கரிவலம்வந்தநல்லூர், பெரும்பத்தூர், சுப்பலாபுரம் பகுதியில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென கோரிக்கைகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கரிவலம்வந்தநல்லூர், பெரும்பத்தூர், சுப்பலாபுரம் ஆகிய மூன்று சிற்றூர்களுக்கும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருப்பத்தூர் தீயணைப்பு நிலயத்தில் ஆம்புலன்ஸ் வசதியை செயல் படுத்தும் திட்டம்

50—வினா 13422:—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள தீயணைக்கும் நிலையத்தில் ஆம்புலன்ஸ் வசதியை செயல் படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

[1984 பிப்ரவரி 22

விடை—

வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் தீயணைப்பு நிலையத்தில் ஆம்புலன்ஸ் வசதி ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு ஒரு ஆம்புலன்ஸ் ஊர்தி 29—3—1973-லிருந்து உபயோகத்திலிருந்து வருகிறது.

## ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டு மனைப் பட்டாக்களின் எண்ணிக்கை

51—வினா 13496—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1979-80, 1980-81 ஆகிய ஆண்டுகளில் தமிழகத்தில் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாவின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

நிலம் கையகப்படுத்தும் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 1979-80 ஆம் ஆண்டில் 17,258 மனைப்பட்டாக்களும் 1980-81-ஆம் ஆண்டில் 21,530 வீட்டு மனைப்பட்டாக்களும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு வழங்கப்பட்டன.

## பிற்பட்டோர் பட்டியலில் உப்பிலியர் சமூகத்தைச் சேர்த்தல்

52—வினா 13528—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்பட்டோர் பட்டியலிலிருந்து 'உப்பிலியர்' சமூகம் எப்போது நீக்கப்பட்டது ?

(ஆ) ஆம் எனில் அந்த சமூக மக்களை மீண்டும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு முன் வருமா ?



1984 பிப்ரவரி 22]

விடை—

(அ) உப்பிலியர் சமூகம் பிற்பட்டோர் பட்டியலிலிருந்து நீக்கப்படவில்லை. உப்பிலியர் சமூகம் 'உபாரா' சமூகத்தின் ஓர் உப-பிரிவாகப் விளக்கப்பட்டியலில் இணைக்கப்பட்டிருந்தாலும், முக்கிய பட்டியலிலுள்ள சமூகமாகவே கருதப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## கொல்லிமலை விவசாய மலைவாழ் மக்களுக்கு சவுக்கு யூகலிப்டஸ் மர நாற்றுகள் வழங்கும் செயற்குறிப்பு

53—வினா 13533 :—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலையில் விவசாய மலைவாழ் மக்களுக்கு விவசாயத்துறையின் மூலம் சவுக்கு, யூகலிப்டஸ் மர நாற்றுகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உண்டா ?

(ஆ) ஆம், எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கொல்லிமலையில் விவசாய மலைவாழ் மக்களுக்கு வேளாண்மைத்துறை மூலம் சவுக்கு, யூகலிப்டஸ் மர நாற்றுகள் வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் தற்போது இல்லை. ஆனால், வனத்துறையில், கொல்லிமலையைச் சார்ந்த இடங்களில் சேலம் மாவட்ட வன அலுவலர் சில்வர் ஒக், பைன்ஸ் மற்றும் யூகலிப்டஸ் செடிகளைப் பயிரிட்டு வருகிறார். சேலம் கோட்டத்தில் உள்ள வனச்சரகர் கொல்லிமலையிலுள்ள விவசாயிகளுக்கு வழங்குவதற்காக ஒரு வன நாற்றங்காலை கொல்லிமலையில் பராமரித்து வருகிறார். 1981-82-ஆம் ஆண்டில் 29,950 யூகலிப்டஸ் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளூர் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. இதில் பெரும்பாலான விவசாயிகள் மலைவாழ் மக்களே ஆவார்கள். மேலும் 1982-83 ஆம் ஆண்டிலும் இப்பகுதிகளில் யூகலிப்டஸ், சில்வர் ஒக், பைன்ஸ் நாற்றுகள் உற்பத்தி செய்து வனத்துறை மூலமாக பொது மக்களுக்கு வழங்கப்படும். சில்வர் ஓக் மரச் செடிகள் மட்டுமே சுமார் 2 லட்சம் வளர்த்து மழைக்காலத்தில் வழங்கப்பட உள்ளது.

[1984 பிப்ரவரி 22

### வாழவந்திநாடு ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக விரிவுபடுத்துதல்

**54—வினா 13542—திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லி மலையில் உள்ள வாழவந்திநாடு ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) கொல்லிமலையில் உள்ள வாழவந்திநாடு ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக விரிவுபடுத்தும் உத்தேசம் தற்சமயம் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### நாங்குநேரி அரசு மருத்துவமனையிலுள்ள பிணங்களை போஸ்டு மார்ட்டம் செய்யும் அறை

**55—வினா 12567—திரு. மு. ஜான் வின்சென்ட் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி அரசு மருத்துவமனையில் உள்ள போஸ்ட் மார்ட்டம் அறை அகற்றப்பட்ட வேண்டுமென்று புகார்கள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



1984 பிப்ரவரி 22]

### வேலூர் நகரைச் சுற்றியுள்ள மலைகளில் மரம் வளர்க்கும் திட்டம்

**56—வினா 13575—திரு. இல. பலராமன் :** மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

வட ஆற்காடு வேலூர் நகரத்தைச் சுற்றி இருக்கும் மலைகளில் மரம் வளர்க்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

1982 ஆம் ஆண்டில் வேலூர் கோட்டத்தில், கோட்டை மலையில் 10 ஹெக்டர் பரப்பளவில் தோட்டம் வளர்க்க முன்னேற்பாடு வேலைகள் நடந்துகொண்டு வருகின்றன. தகுதியான இடங்களில் இவ்வேலை தொடர்ந்து செய்யப்படும்.

### பழனி மகளிர் பாலிடெக்னிக்கில் மாணவியர்களைச் சேர்க்கும் எண்ணிக்கையை அதிகரித்தல்.

**57—வினா 13846—திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாவட்டம் பழனி நகரில் உள்ள மகளிர் பாலிடெக்னிக்கில் சேர்க்கும் மாணவியர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

### சேலம் மணிகூண்டு அருகே சுரங்கப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு

**58—வினா 13852—திரு. செ. செம்மலை :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சேலத்தில் மணிக்கூண்டு அருகே சுரங்க நடைபாதை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

[1981 பிப்ரவரி 22

### வேலூர் ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற வரப்பெற்ற விண்ணப்பங்கள்.

59—வினா 13870—திரு. இல. பலராமன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வேலூர் ஐ.டி.ஐ. தொழில்பயிற்சி நிலையத்திற்கு 1979-80, 1980-81, 1981-82-ம் ஆண்டுகளில் பயிற்சி பெற வந்த மொத்த விண்ணப்பங்கள் எவ்வளவு?

(ஆ) பயிற்சிபெற தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் எவ்வளவு பேர்?

விடை—

| | | |
|---|---|---|
| (அ) | 1979-80-ல் வந்த மொத்த விண்ணப்பங்கள் | 5,577 |
| | 1980-81-ல் வந்த மொத்த விண்ணப்பங்கள் | 4,111 |
| | 1981-82-ல் வந்த மொத்த விண்ணப்பங்கள் | 7,164 |
| (ஆ) | 1979-80-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் | 256 |
| | 1980-81-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் | 293 |
| | 1981-82-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் | 279 |

### மணிமுத்தாறு பாசனத்தின் கீழுள்ள குளங்கள்.

60—வினா 13907—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

(அ) மணிமுத்தாறு பாசனம் 1 முதல் 4 ரீட்சுகளில் உள்ள ஸ்பெஷல் குளங்கள் ரிசர்வ் குளங்களை ரெகுலர் குளங்களாக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

(அ) அண்ட் (ஆ) மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தில் நீர் இருப்பு சாதகமாக இருக்கும்பொழுது 'ரிசர்வ்' குளங்களுக்கு முதலிலும் 'ஸ்பெஷல்' குளங்களுக்கு அதையடுத்தும் நீர் வழங்கப்படுகிறது. இத்தேக்கத்தின் கீழ் உள்ள ரெகுலர் குளங்களுக்கு எல்லா ஆண்டுகளிலும் நீர் வழங்குவதே சிரமமாக உள்ளது. ஆகவே, ரிசர்வ் குளங்களையும் ஸ்பெஷல் குளங்களையும்



1984 பிப்ரவரி 22]

மணிமுத்தாறு பாசனத்தின் கீழ் 'ரெகுலர்' குளங்களாக சேர்க்க இயலாது. எனினும் ஆய்விலுள்ள மணிமுத்தாறு கால்வாயை சீரமைக்கும் திட்டத்தை நிறைவேற்றிய பின்னர் இக்குளங்களை 'ரெகுலர்' குளங்களாக மாற்றுவது பற்றி பரிசீலிப்பது சாத்தியமாகலாம்.

### பெரிய குளத்தில் இரத்த சேமிப்புக்கென தனிக் கட்டிடம் கட்டும் திட்டம்

61—வினா 13927—திரு. கே. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(ஆ) பெரியகுளத்தில் (Blood Bank)-க்கு என தனியாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதா?

(ஆ) எப்பொழுது (Blood Bank) செயல்படும்?

விடை—

(அ) தனியாகக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

(ஆ) தற்பொழுது புதிய கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

### பெரியகுளம் அரசு மருத்துவ மனையைவிரிவுபடுத்தும் திட்டம்.

62—வினா 13929—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரியகுளத்திலுள்ள அரசு மருத்துவமனை விரிவு படுத்தப்படுமா?

(ஆ) ஆமெனில் புதிய கட்டிடங்கள் எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழுவதற்கு இடமில்லை.

[1984 பிப்ரவரி 22

### பெரியகுளம் நகரில் காசநோய் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.

63—வினா 13931—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் நகரில் காசநோய் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது.

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

### பூங்காக்களில் மூலிகை செடிகளைப் பயிர்செய்து விற்பனை செய்யும் திட்டம்.

64—வினா 14014—திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சி மன்றங்கள், நகராட்சி, மாநகராட்சி ஆகியவைகளில் உள்ள பூங்காக்கள் பயனற்று இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) பூங்காக்களில் பயனுள்ள மூலிகைச் செடிகளை பயிர் செய்து குறைந்த விலையில் விற்பனை செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

(அ) அனைத்து பூங்காக்களும் பயனற்று இருக்கின்றன என்று கூறுவது சரியாகாது. உதாரணமாக, சென்னை நகரில் உள்ள "நாகேஸ்வரராவ் பூங்கா" போன்ற பல பூங்காக்கள் உள்ளாட்சிகளால் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) பூங்காக்கள் அமைப்பதன் நோக்கம் அதன் அருகில் வசிப்பவர்களுக்கு, சுத்தமான காற்றோட்டமுள்ள பொழுது போகும் இடமாக அமைத்துக் கொடுப்பதாகும். எனவே அழகு தரும் செடிகளை அங்கே வளர்ப்பதுதான் சரியாகும். மூலிகை செடிகளை அங்கே பயிர் செய்து விற்பனை செய்யலாம் என்ற கருத்து ஏற்கத் தக்கதல்ல.



1984 பிப்ரவரி 22]

### மரக்காணம் ஊராட்சி ஒன்றிய கிராமப் பஞ்சாயத்திலுள்ள வானொலிப் பெட்டிகள்

65—வினா 14041—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம், மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தின் கிராமப் பஞ்சாயத்தில் உள்ள வானொலிப் பெட்டிகள் காணாமல் போய்விட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

(இ) எல்லா ஊர்களிலும் வானொலிமன்ற கட்டிடம் கட்டி வானொலிப்பெட்டி வைக்க அரசு முன்வருமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அது காவல்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வழக்கு முடிந்ததும் திரும்பப் பெறப்படும்.

(இ) வானொலி மன்றக் கட்டிடங்களை அந்தந்த ஒன்றியங்களே கட்டிக் கொள்ளலாம். இதற்கு அரசின் அனுமதி தேவையில்லை.

### தம்மம்பட்டி மருத்துவமனைக்கான கட்டிடங்கள் கட்டும் திட்டம்

66—வினா 14048—திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தம்மம்பட்டி மருத்துவமனைக்கு உள்ளிருப்பு நோயாளிகளுக்கும் புறநோயாளிகளுக்கும் இரண்டு கட்டிடங்கள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எந்த ஆண்டில் நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**கீழ அருணாசலபுரம் நடுக்காட்டூருக்கு இணைப்புச் சாலை அமைக்கும் திட்டம்.**

67—வினா 14130—**திரு. ரா. கு. பெருமாள் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் புதூர் ஒன்றியத்திலுள்ள கீழ அருணாசலபுரம்—நடுக்காட்டூருக்கு தன்னிறைவுத் திட்டத்தில் இணைப்புச் சாலை போடாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், சாலை அமைக்க எடுத்த நடவடிக்கை யாது ?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) கீழ அருணாசலபுரம்—நடுக்காட்டூர் சாலை புதிதாக அமைக்கும் வேலை 1974 ஆம் ஆண்டு ஊரக சாலைத் துறையின ரால் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சாலை அமைக்கப்படும் போது சம்பந்தப்பட்ட நிலப்பட்டாதாரர்களால் ஆட்சேபணை செய்து நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நடை பெற்று வருகிறது. இதன் காரணமாக மேற்படி சாலை வேலை தொடர்ந்து நடைபெறாமல் உள்ளது. ஆதலால் தன் னிறைவுத் திட்டத்தில் இவ்வேலை நடைபெறவில்லை.

(ஆ) இந்தச் சாலை புதிதாக அமைக்கப்படவுள்ள நிலங் களை நில ஆர்ஜிதம் மூலம் எடுத்துக்கொள்ள ஊராட்சி ஒன்றிய ஆணையர் மாவட்ட வருவாய் அதிகாரிக்குச் செயற் குறிப்பு அனுப்பியுள்ளார்.

(இ) இந்தச் சாலை அமைக்கப்படவுள்ள நிலங்களை ஆர் ஜிதம் செய்தபின் சாலை அமைப்பு வேலை மேற்கொள்ள நட வடிக்கை எடுக்க முடியும்.

**விளாத்திக்குளம் தொகுதி மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.**

68—வினா 14132—**திரு. ரா. கு. பெருமாள் :** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திக்குளம் தொகுதியில் வேம்பார், தருவைகுளம், கீழவைப்பார், சிப்பிக்குளம் போன்ற மீனவர்கள் வாழும் பகுதியில் மீனவர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?





(ஆ) ஆம் எனில், எந்தெந்த ஊரில் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடி கோட்டத்தில் உள்ள வேம்பார், கீழவைப்பார் மற்றும் சிப்பிக்குளம் ஆகிய மீனவ கிராமங்களுக்கு முறையே 50, 75, 25 வீடுகள் கட்டி வழங்கிட ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. அவைகள் விரைவில் கட்டி வழங்கப்படும். தரு வைக்குளம் மீனவர் கிராமத்தில் 100 வீடுகள் கட்டி வழங்கப் பட்டுவிட்டன.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள முந்திரி.**

69—வினா 14137—**திரு. டி. மணி :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரி எந்த இடங்களில் எத்தனை ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது ?

விடை—

கன்னியாகுமரி மாவட்டத்தில் வனத் துறையினரால் முந்திரி தோட்டங்கள் வளர்க்கப்படவில்லை.

**திருவிடமருதூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக வேண்டுகோள் நிறுத்தமாக்கும் திட்டம்.**

70—வினா 14141—**திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து தடம் எண் 557 ஏனைய விரைவுப் பேருந்துகளை திருவிடைமருதூரில் (தாலுகா தலைநகர்) (Req[illegible]st[illegible]d S[illegible]p) ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமுல்படுத்தப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் ஆடுதுறைக்கும் கும்பகோணத்திற்கும் இடையில் ஆடுதுறையிலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்திலும், கும்பகோணத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது. இவ்விரு இடங்களிலிருந்தும் திருவிடை மருதூருக்கு போதுமான நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும் ஆடுதுறை ஒரு கட்டண நிலை (Stage) ஆகும். எனவே திருவிடைமருதூரை வேண்டுகோள் நிறுத்தமாக்க வாய்ப்பில்லை.

**திருத்துறைப்பூண்டியில் சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனை கட்டும் திட்டம்.**

71—வினா 14154—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டியில், சோழன் போக்குவரத்துக் கழக பணிமனை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருத்துறைப்பூண்டியில், 1.39 ஏக்கராவில் புதிய பணிமனை கட்டுவதற்கான நிலத்தை கையகப்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இடம் கிடைக்கப் பெற்றவுடன் புதிய பணிமனைக்கான கட்டிட வேலை ஆரம்பிக்கப்படும்.

**விளவங்கோடு தாலுக்காவில் பொய்த்துப்போன கிணறுகளுக்கு வழங்கிய கடனை ரத்து செய்யக் கோரி பெறப்பெற்ற மனுக்கள்.**

72—வினா 14203—திரு. டி. மணி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) விளவங்கோடு தாலுகாவில் பொய்த்துப் போன கிணறு களுக்கு வாங்கின கடன் வட்டி இவைகளை ரத்து செய்ய எத் தனை மனுக்கள் வந்துள்ளது ?

(ஆ) எத்தனை கடன், வட்டி ரத்து செய்யப்பட்டது ?

விடை—

(அ) இருபத்தி ஒன்று.

(ஆ) ஒன்று.





**வன்னியர்களை மிகவும் பின்தங்கியவர்களாக அறிவித்தல்**

73—வினா 14206—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வன்னியர்களை மிகவும் பின்தங்கியவர்களாக (Most Backward Class) அறிவிக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அறிவிக்கப்படும் ?

விடை—

(அ) 'வன்னிய குல க்ஷத்திரியர்' என்ற சமூகத்தினர் 1957 ஆம் ஆண்டிலிருந்தே மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளனர். 'வன்னிய குல க்ஷத்திரியர்' என்ற சமூகத்தின் உப பிரிவுகளாக வன்னியர், வன்னியா, வன்னிய கவுண்டர், கவுண்டர் அல்லது காண்டர், படையாச்சி, பள்ளி ஆகிய சமூகங் களும் மிகவும் பின்தங்கிய பட்டியலில் இடம் பெறுகின்றன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**சிங்கம்புணரி மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம்**

74—வினா 14265—திரு. இரா. அருணகிரி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்கம்புணரி மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்குப் போதிய இட வசதியில்லை என்பது உண் மையா ?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடம் கட்டி இடவசதி அளிக்க அரசு முன் வருமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இப்பள்ளியில் மாணவ, மாணவியர் இணைந்து 831 பேர் பயிலுகிறார்கள். இருக்கக்கூடிய 24 பிரிவுகளில் 14 பிரிவுகளுக்கு வகுப்பறைகள் உள்ளன. கட்டிடமே யில்லாத பல அரசுயர் பள்ளிகளின் நிலையை நோக்குங்கால் இப்பள்ளியின் நிலை ஓரளவு போதுமான இடவசதியுடனேயே உள்ளது. இருப்பினும் இப்பள்ளியின் கட்டிடத் தேவைகள் முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வோராண்டும் இதற்கென ஒதுக் கப்படும் நிதியொதுக்கத்திற்குள் கருத்திற் கொள்ளப்படும்.

**ஆசிரியர்கள் தபால் மூலம் கல்வி கற்பதில் நேரடி பயிற்சி வகுப்புகளுக்கு செல்ல முழு சம்பளத்துடன் விடுப்பு அளித்தல்**

**75—வினா 14271—திரு. ...** வெங்கட்டசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

"ஆசிரியர்கள் தங்களது கல்வித் திறனை தபால் மூலம் மேல் கல்வி கற்பதன்மூலம் உயர்த்தும் செயலில் ஈடுபடும்போது (Contact Seminar Programme) பல்கலைக் கழகத்தில் நடத்தப் படுகிறது. இப்பயிற்சிகளுக்கு செல்லும்போது ஆசிரியர்களுக்கு முழு சம்பளத்துடன் கூடிய விடுப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

அஞ்சல் வழிக் கல்வியில், பல்கலைக் கழகத்தினரால் நடத் தப்படுகின்ற 'நேரடி பயிற்சி வகுப்புக்கள்' (Contact Seminar Programme) சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை களிலும், அல்லது பொது விடுமுறை தினங்களிலுமே நடத்தப் படுகின்றன. மேற்படி விடுமுறை தினங்களில் ஆசிரியப் பணி யாளர்களுக்கு கல்லூரிகளில் வகுப்புக்கள் நடைபெறாத நிலை யில் உரிய அனுமதி பெற்று அவர்கள் மேற்படி வகுப்புக்களில் கலந்து கொள்ள இயலும், எனவே, முழுச் சம்பளத்துடன் கூடிய விடுப்பு அளிப்பது குறித்த பிரச்சினைக்கு இடமில்லை.

**ஆலங்குடி தொகுதியிலுள்ள இலங்கை அகதிகளுக்கான மறுவாழ்வுத் திட்டங்கல்**

**76—வினா 14294—திரு. பெ. திருமாறன் :** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி வம்பன், திருவரங்குளம் ஆகிய இடங்களில் உள்ள இலங்கை அகதிகள் மறு வாழ்விற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் திட்டத்தில், இந்திய அரசின் முன் ஒப்புதலு டன், புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், வம்பன்



மற்றும் திருவரங்குளம் ஆகிய இடங்களில் நிலக்காலனித் திட் டம் அமைக்க ஆணை வழங்கப்பட்டது. இதில் 300 குடும்பங் கள் குடியமர்த்த திட்டமிடப்பட்டது. ஆனால் முடிவில் 283 குடும்பங்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் குடியமர்த்தப் பட்டனர்.

2 திட்டத்தில் குடியமர்த்தப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றிற்கும் கீழ்கண்ட உதவிகள் வழங்கப்பட்டன

(1) குடும்பம் ஒன்றுக்கு 3 ஏக்கர் வீதம் நிலம் இலவச மாக ;

(2) விவசாயக் கடன் மற்றும் மானியம் ரூ. 4,659 ;

(3) வீட்டுக் கடன் மற்றும் மானியம் ரூ. 2,800 ;

(4) விவசாயத்தின் மூலம் மகசூல் வரும் காலம் வரையி லும், இரண்டு வருடத்திற்கு ரூ. 40-லிருந்து ரூ. 150 வரையில் குடும்பத்தின் அளவைப் பொறுத்து குடும்பப் பராமரிப்புத் தொகை.

3. தாயகம் திரும்பியவர்களுக்கு ஆரம்பக் கட்டத்தில் உதவியும், ஆலோசனைகளும் தந்திட இரு வருடங்களுக்கு அரசுப் பணியாளர்கள், தனியாக நியமனம் செய்யப்பட்டனர்.

இக்காலனித் திட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட எல்லா தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கும், மறுவாழ்வுத் துறை எல்லா உதவிகளையும் அளித்துள்ளது.

**ஆலங்குடியிலுள்ள மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டும் திட்டம்**

**77—வினா 14314—திரு. பெ. திருமாறன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் மேல்நிலைப் பள்ளியில் கூடுதலாக கட்டடங்கள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

இப்பள்ளியில் 1,018 மாணவர்கள் , 48 மாணவியர் உட்பட 1,066 பேர் பயிலுகிறார்கள். இப்பள்ளியிலுள்ள 27 பிரிவு களில் 17 பிரிவுகளுக்குக் கட்டட வசதி இருக்கிறது. இப்பள்ளிக் குப்போதிய கழிப்பிட வசதிகளும் உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இப்பள்ளியின் கட்டடத் தேவைகள் ஒவ்வோராண் டும் ஒதுக்கப்படும் நிதியொதுக்கத்திற்குள் முன்னுரிமை அடிப்படையில் கருத்திற் கொள்ளப்படும்.

[1984 பிப்ரவரி 22

**சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியிலுள்ள மேஜை, நாற்காலி, கரும்பலகை வசதிகள்**

78—வினா 14352—திரு. எல். இளையபெருமாள் : மாண்பு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உயர்நிலைப் பள்ளிகளில் போதுமான மேஜை, நாற்காலி, கரும்பலகை போதிய அளவிற்கு இல்லாது இருப்பது உண்மையா ?

விடை—

இல்லை.

**ஆதிதிராவிடர் நலத் துறை ஆசிரியர்களுக்கு வீடு கட்ட கடன் வழங்கும் திட்டம்**

79—வினா 14459—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் நலத்துறை ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் கடன் மாவட்ட ஆதிதிராவிடர் நல அதிகாரி மூலம் வழங்கப்படுமா ?

(ஆ) இதுவரை வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் தனி வாரியம் அமைக்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் நலத் துறை ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் கடன் மாவட்ட ஆட்சித் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டு மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

(இ) ஆதிதிராவிடர் நலத் துறை ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் தனி வாரியம் அமைக்கும் திட்டம் எதுவுமில்லை.



1984 பிப்ரவரி 22]

**பள்ளிக்கூட ஆய்வு முறைகளை மாற்றியமைக்கும் திட்டம்**

80—வினா 14472—திரு ப. வெங்கட சுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளிக்கூட ஆய்வு முறைகளைத் திருத்த அரசு செயர் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஆய்வுமுறைகளை மாற்றியமைக்கத் திட்டம் ஏதும் உடனடியாக இல்லை.

**பயிர்களை நோய் தாக்காமல் தடுப்பதற்கான புதிய முறை**

81—வினா 14489—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பயிர்களை நோய் தாக்காமல் இருக்க ஏதாவது புதிய முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

விடை—

நோய் எதிர்ப்பு தன்மையுள்ள பயிர் ரகங்கள் (Discese resistant varicties of crops) ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்தகைய ரகங்களைப் பயிரிடுவதன் மூலம் பயிர்களை நோய் தாக்காமல் தடுக்கலாம்.

மற்றும், பயிர்களை விதை மூலம் பரவும் நோய்களிலிருந்து பாதுகாக்க, கீழ்க்கண்ட முறைகளை விவசாயிகள் பின்பற்றலாம்.

"விதைக்கும் முன்பு ஒரு கிலோ விதைக்கு பாதரச விதை கலக்கும் மருந்து 2 கிராம் அல்லது "கேப்டான் அல்லது திரம்" 4 கிராம் வீதம் விதையுடன் நன்கு கலந்து 24 மணி நேரத்திற்குப் பிறகு விதையை ஊறவைத்து விதைக்க வேண்டும். தவிரவும் கார்பன்டைஸம் அல்லது கார்பாக்ஸின் 20 கிராம் மருந்தை 48 லிட்டர் தண்ணீரில் கலந்து அம்மருந்து கலவையில் முளைகட்டிய விதைகளை 15 நிமிடங்கள் ஊறவைத்தபின், விதையை சில நிமிடங்கள் நிழலில் பரப்பி வைத்திருந்து விதைப்பதின் மூலமும், விதை மூலம் பரவும் சில நோய்கள் வராமல் தடுக்கலாம்."

## சென்னை நகரில் மின் கட்டணம் வசூலிக்கும் இடங்களை அதிகரிக்கும் செயற்குறிப்பு.

82—வினா 14507—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் மின் கட்டணம் வசூலிக்கும் இடங்களை (Cash Counter) அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

## சென்னை சாந்தோம் சர்ச்சிலிருந்து அகில இந்திய வானொலி நிலையம் வரையிலுள்ள சாலைப் பகுதியை ஒரு வழிப் பாதையாக்கும் திட்டம்

83—வினா 14509—திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் சாந்தோம் சாலையில் சாந்தோம் சர்ச்சிலிருந்து அகில இந்திய வானொலி நிலையம் வரை உள்ள சாலைப் பகுதியை ஒரு வழிப் பாதையாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

அத்தகைய திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

## 1979-80, 1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளில் வடாற்காடு மாவட்டத்தில் நெல், கரும்பு உற்பத்தியான நிலப்பரப்பு

84—வினா 14631—திரு. இல. பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979–80, 1980–81, 1981–82 ஆம் ஆண்டுகளில் வடாற்காடு மாவட்டத்தில் நெல், கரும்பு உற்பத்தி செய்த நில அளவு யாது ?

(ஆ) இதனால் கிடைத்த நெல், கரும்பு அளவு யாது ?



விடை—

(அ) மற்றும் (ஆ): 1979–80, 1980–81, 1981–82ஆம் ஆண்டுகளில் வடாற்காடு மாவட்டத்தில் நெல், கரும்பு உற்பத்தியான நிலப்பரப்பும் விளைச்சல் அளவும் பின்வருமாறு :

பயிரிடப்பட்ட பரப்பளவு (ஹெக்டேரில்)

| | 1979–80 | 1980–81 | 1981–82 |
|---|---|---|---|
| நெல் .. .. | 307,354 | 125,000 | 174,000 |
| கரும்பு .. | 28,655 | 26,000 | 33,000 |

விளைச்சல் அளவு (டன்னில்)

| | 1979–80 | 1980–81 | 1981–82 |
|---|---|---|---|
| நெல் .. | 678,560 | 229,000 | 408,000 |
| கரும்பு .. | 2,243,740 | 2,054,000 | 2,805,000 |

## வேலூர் நகரில் முன்னாள் இராணுவ வீரர்கள் நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ள கடைகள்.

85—வினா 14634—திரு. இல. பலராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு, வேலூர் நகரில் முன்னாள் இராணுவ வீரர்கள் நிதியிலிருந்து கடைகள் கட்டப்பட்டுள்ளனவா ?

(ஆ) அதன் மதிப்பீடு யாது ?

(இ) அதனால் கிடைக்கும் வாடகை எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 72 கடைகள் கொண்ட படையினர் அங்காடியின் மதிப்பு ரூ. 9,51,800 ஆகும்.

(இ) இதுவரை வாடகைக்கு விடப்பட்டுள்ள 44 கடைகளிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ. 1,39,590 வாடகையாக பெறப்படுகின்றது. மீதியுள்ள கடைகளை வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

[1984 பிப்ரவரி 22

உதகை வட்டத்தை இரண்டு வட்டங்களாகப் பிரித்தமைத்தல்.

86—வினா 14747—திரு. கே. உச்சி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் உதகை வட்டத்தை நிர்வாக வசதிக்காக உதகை-குந்தா என்ற இரு வட்டங்களாக பிரிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மதுராந்தகம் நகராட்சியில் மத்திய ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தை அமுலாக்குதல்,

87—வினா 14842—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் நகராட்சியில் மத்திய ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் அமுலாக்கப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டத்திற்கான செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள நடமாடும் நூலகங்கள்.

88—வினா 14849—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் எத்தனை நடமாடும் நூலகங்கள் உள்ளன ?

(ஆ) அவைகளுக்கு 1980-81, 1981-82-ல் எவ்வளவு மதிப்பீட்டில் புதிய புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன ?



1984 பிப்ரவரி 22]

விடை—

(அ) நடமாடும் நூலகங்கள் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

ஜமீன்புதூர் கூட்டுறவுச் சங்கம்,

89—வினா 14862—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் ஜமீன்புதூர் கூட்டுறவுச் சங்கத்தில் சங்கத் தலைவர் கையாடல் செய்துள்ளாரா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மதுராந்தகத்திலிருந்து நகரப் பேருந்துகள் விடும் திட்டம்,

90—வினா 14867—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம்-சூனாம்பேடு நகரப் பேருந்து விடும் திட்டம் உள்ளதா ?

விடை —

மதுராந்தகம்-சூனாம்பேடு தடத்தில் நகரப் பேருந்து விடும் திட்டம் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் (மாவட்டப் பிரிவு) பரிசீலனையில் உள்ளது.

[1984 பிப்ரவரி 22

91—வினா 14868—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மதுராந்தகம் தொகுதி மதுராந்தகம்-கூவத்தூர் கிராமத்திற்கு நகரப் பேருந்து விடும் திட்டம் உள்ளதா?

விடை —

மதுராந்தகம்-கூவத்தூர் தடத்தில் நகரப் பேருந்து இயக்கும் திட்டம் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் (மாவட்டப் பிரிவு) பரிசீலனையில் உள்ளது.

ஒன்னுபுரம் கிராமத்திற்கு கூடுதல் பேருந்து வசதி,

92—வினா 14943—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மற்றும் திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வடாற்காடு மாவட்டம், ஆரணி தாலுக்கா ஒன்னுபுரம், வேலூருக்கு கூடுதல் பஸ் வசதி செய்யக் கோரி அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

விடை—

ஒன்னுபுரம் கிராமத்துக்கு தற்போது போதிய அளவு பேருந்து வசதி உள்ளது. எனவே கூடுதல் பேருந்து வசதி செய்து தருவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

திருவையாறு தாலுகா அலுவலகத்திற்கு புதியக் கட்டிடம் கட்டும் திட்டம்,

93—வினா 14971—திரு. மா. சுப்பிரமணியன் மற்றும் திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தாலுகா அலுவலகத்திற்கு புதியதாக கட்டிடம் கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது?

(இ) அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?



1984 பிப்ரவரி 22]

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) திருவையாறு வட்டாட்சி அலுவலகம் மற்றும் பிற அரசு அலுவலகங்களுக்கும் கட்டிடங்கள் கட்டுவதற்காக தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவையாறு வட்டம், திருவையாறு கிராமத்தில் புல எண்கள், 321—1சி, 321—1பி, 321—3சி, மற்றும் 321—10இல் உள்ள 5 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை நில எடுப்புச் சட்டத்தின் கீழ் நில எடுப்பு செய்வதற்காக பிரிவுகள் 4(1)6 மற்றும் 7 இவைகளின் கீழ் வரைவு—அறிவிப்புகளுக்கு ஒப்புதல் அளித்து ஆணை (நிலை) எண் 1652 வருவாய் நாள் 23–7–1981 இல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அந்நில எடுப்புக்காக ரூ. 80,000 செலவினையும் அரசு அனுமதித்துள்ளது. ஆயினும், அந்நில எடுப்பை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் உரிமைப் பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதன் பேரில், உயர்நீதி மன்றம் நில எடுப்பு பற்றிய மேற் நடவடிக்கையைத் தடை செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்,

94—வினா 14976—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவையாறு தாலுகா மன்னார் சமுத்திரம் வரகூர், அம்பதுமேல்நகரம் ஆகிய கிராமங்களில் ஆதி திராவிட மக்களுக்கு எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது?

(ஆ) இதுவரையில் எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன?

விடை—

(அ) தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டம், மன்னார் சமுத்திரம் வரகூர், அம்பதுமேல் நகரம் ஆகிய கிராமங்களில் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

[1984 பிப்ரவரி 22

## ஆயக்குடி கிராமத்திலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம்,

95—வினா 14998—திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதியில் உள்ள பழைய ஆயக்குடி கிராமத்தில் ஏழை அரிசன மக்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது கட்டித் தரப்படும் ?

விடை—

(அ) பழனி தொகுதியிலுள்ள பழைய ஆயக்குடி கிராமத்தில் ஏழை ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## அரசு மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்ட பட்ட மேற்படிப்பு படித்த ஆசிரியர்கள் எண்ணிக்கை,

96—வினா 15099—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 முதல் 1981 டிசம்பர் முடிய அரசு மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்ட மேற்படிப்பு படித்த ஆசிரியர்கள் எத்தனை பேர்கள்?

(ஆ) அவர்களில் தாழ்த்தப்பட்டோர் எத்தனை பேர்?

விடை—

(அ) 5,481 பேர்.

(ஆ) அவர்களில் 226 பேர் தாழ்த்தப்பட்டவர்கள் ஆவார்கள் (ஜாதி அடிப்படையில் பணியிடங்கள் ஒதுக்கீடு செய்வது நேரடி நியமனத்திற்கு மட்டுமே பொருந்தும். ஏற்கெனவே பணியில் உள்ளவர்கள் மாறுதல் மூலம் செய்யப்பட்ட நியமனங்கள் இதில் அடங்காது.)



1984 பிப்ரவரி 22]

## திருச்சி சட்டக் கல்லூரி நூலகத்திற்கு போதிய புத்தகங்கள் வாங்கும் திட்டம்.

97—வினா 15177 : திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி சட்டக் கல்லூரியில் உள்ள நூலகத்தில் போதிய புத்தகங்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் போதிய புத்தகங்கள் வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) தெரியும்.

(ஆ) 1979-ஆம் ஆண்டு ரூபாய் 25,000, 1980-ஆம் ஆண்டு ரூபாய் 25,000 ஆக இதுவரை மொத்தம் ரூபாய் 50,000-த்திற்கு புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் (1982–83) புத்தகங்கள் வாங்க ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. புத்தகங்கள் விரைவில் வாங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

## ஆசிரியர் சங்கங்களுக்கு அரசு அங்கீகாரம்.

98—வினா 15201 திரு. சேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஆசிரியர் சங்கங்களுக்கு அரசு அங்கீகாரம் எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது?

விடை—

அரசாணை நிலை எண். 2512, கல்வி: நாள் 24–10–1980-ல் அரசு வெளியிட்டுள்ள விதிகளின் அடிப்படையில் ஆசிரியர் சங்கங்களுக்கு அரசு அங்கிகாரம் அளிக்கின்றது.

[1984 பிப்ரவரி 22

### திருச்சி, கோவை சட்டக் கல்லூரிகளுக்கு விடுதிகள் கட்டும் திட்டம்,

99—வினா 15204—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி, கோவை சட்டக் கல்லூரிகளுக்கு விடுதி வசதியில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அவ்விடங்களில் விடுதிகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

(அ) அறியும்.

(ஆ) 1981–82ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் கோவை சட்டக்கல்லூரிக்கு விடுதி கட்ட ரூபாய் 5 இலட்சம் அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இதற்கு வேண்டிய நிலம் ஆர்ஜிதம் செய்யும் குறிப்பு பரிசீலனையில் உள்ளது. மேலும் கல்லூரி விடுதி கட்டிடம் கட்டுவதற்கான வரைபடமும் மதிப்பீடும் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி சட்டக்கல்லூரிக்கு விடுதி கட்டும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை,

### வத்திராயிருப்பில் விருந்தினர் விடுதி கட்டும் திட்டம்,

100—வினா 15568—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பில் V. I. Ps. தங்குவதற்கு பொதுப்பணித்துறையிலிருந்து விருந்தினர் விடுதி கட்டிக் கொடுக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

இல்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்.

### அ. சென்னை மாநகராட்சி பணிகள் குறித்து.

* திரு. எல். இளையபெருமாள்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே சேத்துப்பட்டிலே 1980 ஆம் ஆண்டு, 1982 ஆம் ஆண்டு தீ விபத்துக்கள் ஏற்பட்டன. முதலமைச்சர் அவர்களும் வந்தார்கள். ரெவின்யூ அமைச்சர் அவர்களும் வந்து பார்த்தார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சரும் பார்வையிட்டார்கள். இன்று வரையிலே விளக்குகள் எரியவில்லை. கல்யாணமேஸ்திரி என்ற இடத்திலே விளையாட்டுத் திடலாக இருந்த அந்த இடத்தைப் பயன்படுத்த ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டும்கூட விளையாடுகின்ற பிள்ளைகளுக்கு—விளையாட்டுக்காக இவ்வளவு செய்கின்ற நிலையில் இந்த அரசு இருக்கிறபோது—அந்த இடத்தைக் கொடுக்காமல் அந்த இடத்தை குப்பைகளை கொட்டும் இடம் ஆகப் பயன்படுத்துகிறார்கள். இதைப்பற்றி நான் அதிகாரிகளிடத்தில், அமைச்சர்களிடத்தில் சொன்னேன். உடனடியாக அதைச் செய்யப் போகிறார்களா? அதைச் செய்ய முடியாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை தங்கள்மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் சொன்ன இந்த பிரச்சினைப்பற்றி நானும் அவர்களும் அந்த இடங்களையெல்லாம் போய்ப் பார்த்தோம். ஆகவே பல்வேறு பணிகளை அந்த இடத்தில் மாநகராட்சி மூலமாக செய்ய வேண்டுமென்று ஆணையாளருக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது. விளக்குகள் எரியவில்லை, குப்பைகூளங்களை அகற்றவில்லை என்பதைச் சொல்லி அந்த விளையாட்டுத் திடல் அந்தப் பகுதிக்குத் தேவை என்பதைச் சொல்லி அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. எவ்வளவு சீக்கிரத்திலே அதைச் செய்ய முடியுமோ அதை நாம் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வி. என். சோமு: சார், ஒரே ஒரு பிரச்சினை முக்கியமானது.

திரு. ஏ. பொன்னுரங்கம்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பி]19ப்ரவரி 22
குறித்த பிரச்சினைகள் இருக்கலாம். எல்லோருக்கும் தொகுதி
வர்களுக்கு மட்டுமல்ல, இநத அவையிலே சென்னையிலே இருக்கிற
பினர்களுக்கும் தொகுதிப் பிரச்சினைகள் இருக்கிற 234 உறுப்
களையெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பி இருக்கலாம். அவை
கூடிய மரபை உருவாக்காதீர்கள். அப்படிப்பட்ட மரபு கிளப்பக்
அவையிலும் இல்லை. பாராளுமன்றத்திலேயும் இல்லை. ஆகவே எந்த
புது மரபை உருவாக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) பி அண்ட் சி மில் பகுதியை வெள்ளப் பகுதியென அறிவிப்பது.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இது முக்கியமான பிரச்சினை. பொதுப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வதை நான்
பார்ப்பேன். நோட்டீஸ் கொடுக்காமல் குறுக்கு வழியில் நுழைந்
தால் அதை நான் அனுமதிக்க மாட்டேன். நீங்கள் பேசியது
அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விடும்.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அண்மையில் அடித்த வெள்ளத்தினால்—ஏற்கனவே
பி. அண்ட் சி. மில் தொழிலாளர்கள் வேலையின்றி
இருக்கிறார்கள்—கூட்டுறவு சங்கம் அவர்களுக்கு கடன் கொடுப்
பதற்குத் தயாராக இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள்
அதை வெள்ளப் பகுதி என்று அறிவித்து விட்டால் கூட்டுறவுச்
சங்கம் அவர்களுக்கு கடன் கொடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெள்ள நிவாரணம் பற்றி
இன்று மாலை 4 மணி முதல் விவாதம் நடக்க இருக்கிறது.
(குறுக்கீடு) அப்போது தாங்கள் அதை எல்லாம் எடுத்துச்
சொல்லி தேவையான பதிலைப் பெற்றுக்கொள்ளலாம்.



3. அறிவிப்புகள்.

(அ) சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவைக்கு (Madras University Senate) கீழ்க்கண்ட செல்லுபடியான அறுவரின் நியமனங்கள் முறையாக ஏற்கப்பட்டுள்ளன.

1. டாக்டர் கே. சமரசம்.
2. திரு. சி. கோபால்.
3. திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்.
4. திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்.
5. திரு. எல். இளையபெருமாள்.
6. திரு. என். வி. என். சோமு.

முறைப்படி நியமனம் செய்யப்பெற்ற வேட்பாளர்களின் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் மேற்கண்ட அறுவரும் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவைக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

(ஆ) அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவைக்கு (Annamalai University Senate) கீழ்க்கண்ட மூவரின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளன.

1. திரு. ஏ. தங்கராசு.
2. திரு. ஆர். தியாகராசன்.
3. திரு. ஏ. இராமலிங்கம்.

முறைப்படி நியமனம் செய்யப் பெற்ற வேட்பாளர்களின் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் மேற்கண்ட மூவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவைக்கு (Senate) க்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

[1984 பிப்ரவரி 22

## (இ) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியம் உறுப்பினர் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கான தேர்தலுக்கு (Board of Management of Tamil Nadu Agricultural University) திரு. மா. சின்னராசு அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப் பெற்றுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளரின் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், திரு. மா. சின்னராசு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### மீஞ்சூர் காவல் நிலையத்தில் கைதி மரணம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ப. நெடுமாறன், கே. ஆர். சுந்தரம், தி. கா. நல்லப்பன், என். வரதராஜன், ரா. கிருஷ்ணன், எஸ். என். இராமசாமி, சு. பாலன், சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, எம். ஆறுமுகம், செ. சிவசாமி, என். ஏ. பூங்காவனம், ஏ.டி. கருப்பையா, ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து, டி. மணி, அ. ரகுமான்கான், ப. பொன்னுரங்கம் ஆகியோர் ''சென்னைப் பக்கமுள்ள மீஞ்சூர் போலீஸ் நிலையத்தில் 18-2-1984 அன்று போலீஸ் லாக்கப்பில் இருந்த வள்ளூரைச் சேர்ந்த ஏழுமலை என்பவர் போலீசாரின் அடி தாங்காது லாக்கப்பில் இறந்துள்ளதும், இதனால் ஆத்திரம் அடைந்துள்ள மக்கள் தாக்குதல் காரணமாக ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதும் இவற்றின் காரணமாக அப்பகுதியில் போலீசாரின் கெடுபிடி அதிகரித்துள்ளதால், மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள்

(முற்பகல் 10.20)

கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களை மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.



1984 பிப்ரவரி 22]

**திரு. கே. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 18-2-1984 ஆம் தேதியன்று போலீஸ் நிலையத்தில் ஏழுமலை என்ற வாலிபர் கைது செய்யப்பட்டு, போலீஸ் நிலையத்தில் காவல்காரர்களால் அடிக்கப்பட்டு, மரணம் அடைந்ததாக அந்த வட்டாரத்துப் பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். போலீஸ் தரப்பில் என்ன சொல்லப்படுகிறது என்றால், அந்த ஏழுமலை என்பவர் தங்கச் செயினைத் திருடித் தன்னுடைய காதலிக்குக் கொடுத்து விட்டதாகவும், போலீசார் விசாரித்த நேரத்தில் இதைத் தெரிவித்ததாகவும், அந்த இடத்தைக் காண்பிக்க வேண்டுமென்று போலீசார் கேட்டதன் பேரில் அவமானம் தாங்காமல் காவல் நிலையத்தில் தன்னுடைய சட்டையைக் கிழித்துக் தற்கொலை செய்துக் கொண்டதாகவும் போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் எல்லோருக்கும் தெரியும், போலீஸ் நிலையத்தில் லாக்கப்பிலே வைக்கும் நேரத்தில் அப்படி அடைக்கப்படும் நபர் தன்னுடைய சட்டையை கிழித்துத் தற்கொலை செய்து கொள்ளும் முறையில் லாக்கப்பிலே வைக்கும் நிலைமை உண்டா என்பது நமக்குத் தெரியும். அதற்கு அங்கே சாத்தியமில்லை. ஆனால் காவல் நிலையத்தில் போலீசாரால் அடிக்கப்பட்டு மரணம் அடைகின்ற நிலைமையில், இப்படித் தற்கொலை செய்து கொண்டார் என்று சொல்வது தொடர்ந்து சமீபத்தில் தமிழ்நாட்டில் பல்வேறு காவல்நிலையங்களில் நடந்த நிகழ்ச்சிகளிலெல்லாம் காரணம் சொல்லப்படுவதை நாம் அறிவோம்.

ஏற்கனவே தமிழகத்திலே இத்தகைய நிலைமைகள் ஏற்பட்ட நேரங்களிலேயெல்லாம் இதை விசாரித்து அறிய வேண்டும், அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்ட நேரங்களிலேயெல்லாம் அரசுத் தரப்பில் சொல்லப்படுவது, போலீசாரால் தரப்படுகின்ற அந்த அறிக்கைதான் இங்கே சொல்லப்படுகிறதே தவிர, அதன் முழு விவரங்களையும் அறிந்து பொது மக்கள் திருப்தியடையும் வகையில் செய்யவோ அல்லது அத்தகைய நிலைமைகள் தமிழகத்திலே இனிமேல் ஏற்படாமல் தடுக்கின்ற வகையில் செய்யவோ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது தமிழகம் முழுவதும் பேசிக் கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சியாகும்.

இந்த மன்றத்திற்குத் தெரியும். இரண்டொரு தினங்களுக்கு முன்புகூட மதுரையில் வைத்தியக் கல்லூரி மாணவர்கள் அடிக்கப்பட்டதால் மிகப் பெரிய பிரச்சினை எழுப்பப்பட்டு நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக நேற்றுகூட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, தமிழகத்தில் போலீசாருடைய இத்தகைய அத்து
மீறிய செயல்கள் தொடர்நது நடந்துக் கொண்டே இருக்கின்றன
என்பதை நாம் அறிவோம். இப்படிப்பட்ட நிலைமைகள் இனி
மேல் ஏற்படாமல் இருக்க வேண்டும. அது மட்டுமல்லாமல்
இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கின்ற நேரத்தில் அரசின் தரப்
பில் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அப்படி
எடுக்காத நேரத்தில், இதற்குக் காரணம் சம்பந்தப்பட்ட
போலீஸ் அதிகாரிகள்தான் காரணம் என்று நினைத்துக் கொண்டு
அநதப் பகுதி மக்கள் அந்தப் பகுதியிலுள்ள காவலர்களைத்
தாக்குவதாகச் செய்திகள் வருகின்றன. இதன் காரணமாக அந்த
வட்டாரப் பொது மக்களைப் போலீசார் மேலும் துன்புறுத்தி
அடிக்கின்ற வகையில் நடவடிக்கை எடுப்பதாக அறிகிறேன்.

ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் இருப்ப
தற்கு எதிர்காலத்தில் காவல் நிலையங்களுக்குச் செல்லும் கைதி
களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கும் முறையில் நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்பது குறித்தும் இன்னும் பல நிலைமைகளைக்
குறித்தும் எடுத்துப் பேச வேண்டும் என்பதற்காக அவையில்
இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்
களே, தமிழகத்தின் பல்வேறு போலீஸ் லாக்கப்புகளில் தொடர்ந்து
இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கின்றன. மீஞ்
சூரில் நடந்த நிகழ்ச்சி, இறந்த ஏழுமலை அரிசன சமுதாயத்
தைச் சேர்ந்த ஒரு இளைஞர். அவர்மீது ஒரு திருட்டுக் குற்றம்
சுமத்தப்படுகிறது. போலீசாரால் கைது செய்யப்படுகிறார்.
இந்த மாதம் பத்தாம் தேதி போலீசார் அவரைப் பிடிக்கிறார்கள்.
அந்த இளைஞர் 18-ஆம் தேதி இரவு இரண்டு மணிக்குப் போலீஸ்
லாக்கப்பில் இறக்கிறார். எட்டு நாட்கள் போலீஸ் லாக்கப்பில்
அவர் இருந்திருக்கிறார்.

யாராக இருந்தாலும் போலீஸ் லாக்கப்பில் வைக்கப்படுபவர்
கள் 24 மணி நேரத்திற்கு மேல் வைக்கப்படக்கூடாது; அவர்
கள் உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு ரிமாண்ட்
செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இதில் போலீசார் முத
லில் செய்த தவறு, ஏறக்குறைய எட்டு நாட்கள் அந்த அரிசன
இளைஞரை போலீஸ் லாக்கப்பில் வைத்து அடித்திருக்கிறார்கள்.
இது நம்பர் ஒன்று.

இரண்டாவதாக போலீஸ் லாக்கப்பிலே அவர் வெறும் அண்
டர்வியரோடுதான் இருந்திருக்கிறார் என்பதை போலீஸே ஒப்புக்
கொள்கின்றது.



136217



மூன்றாவதாக அவர் என்றைக்குக் கைது செய்யப்பட்டாரோ
அன்றைக்கே அவருடைய வலது கை முறிந்துபோய் இருக்கின்றது.
அவ்வாறு கை முறிந்த நிலையிலேயே போலீஸ் லாக் அப்பிலே
6, 7 நாட்கள் இருந்திருக்கிறார். அவரை எந்த மருத்துவ
மனைக்கும் அனுப்பவில்லை. எனவே, கை முறிந்த ஒருவர் எப்
படி தற்கொலை செய்துகொண்டிருக்க முடியும் என்பதையும்
நாம் அறிய வேண்டும். இது ஒரு குற்றம்.

அடுத்து போலீஸ் இந்தக் கொலையினை மறைப்பதற்கு
முயற்சித்து இருக்கின்றது. 18-ஆம் தேதி அன்று அதிகாலை 2
மணிக்கு அவர் இறந்துபோய் இருக்கிறார். ஆனால், 19-ஆம்
தேதி காலையில் அவரது உடலை வேனிலே ஏற்றும்போதுதான்
வெளியே இருப்பவர்களுக்கு அவர் இறந்து போனார் என்ற
செய்தி தெரிந்து பொது மக்கள் ஆவேசம் கொண்டு போலீஸ்
நிலையத்தை முற்றுகையிட்டிருக்கிறார்கள். அப்படி முற்றுகை
யிட்ட பொதுமக்களை போலீஸார் விரட்டி அடித்திருக்கிறார்கள்.
ஆகமொத்தத்தில் இதிலே போலீஸார் ஒரு வார காலத்திற்கு
மேலாக ஏழுமலையை போலீஸ் லாக்கப்பிலே வைத்திருக்கிறார்
கள். அவரது கையை அடித்து முறித்திருக்கிறார்கள். அதற்
குப் பிறகு, அவர் இறந்து போனதற்குப் பிறகு அந்தக் கொலை
யினை மறைக்க முயற்சித்து இருக்கிறார்கள். ஏன் என்று கேட்
பதற்கு வந்த பொதுமக்களை அடித்து இருக்கிறார்கள். இவ்வள
வையும் அந்தப் போலீஸ் அதிகாரிகள் செய்து இருக்கிறார்கள்.
இதுபோன்ற பிரச்சினைகள் தமிழகம் பூராவும் நடந்துகொண்
டிருக்கின்றன. எனவே, இவற்றுக்கு ஒரு முற்றுப்புள்ளியினை
வைக்கவேண்டும் என்றால் கர்நாடக மாநில அரசு இது சம்பந்த
மான பிரச்சினைகளிலே என்ன செய்ய வேண்டும் என்ற வகை
யிலே ஒரு உத்தரவை பிறப்பித்திருப்பதுபோல் தமிழகத்திலும்
செய்யவேண்டும்.

அதாவது போலீஸ் லாக் அப்பிலோ, சிறைச்சாலைகளிலோ
யாராவது ஒரு கைதி இறப்பாரேயானால் சம்பந்தப்பட்ட அதி
காரிகள் மீது உடனடியாகக் கொலைக் குற்றம் சுமத்தி அவர்கள்
மீது, அதாவது கொலைக்குற்றவாளிகள் மீது என்னென்ன நட
வடிக்கைகளைஎடுப்பார்களோ அந்த நடவடிக்கைகள் அத்தனை
யையும் உடனடியாக எடுக்கவேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட
அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு வந்து தாங்கள் நிரபராதிகள் என்
பதை நிரூபித்ததற்குப் பிறகுதான் அவர்களுக்கு மீண்டும் உத்தி
யோகம் கொடுக்கப்படும் என்ற உத்தரவினை கர்நாடக மாநில
அரசு பிறப்பித்திருக்கின்றது. அதைப்போலவே தமிழக அரசும்
ஒரு உத்திரவினைப் பிறப்பிக்காத வரையில் இதுபோன்று போலீஸ்
லாக் அப்பிலே அப்பாவிகள் அடித்து கொலை செய்யப்படுவதை
யாராலும் தடுக்க முடியாது. தமிழகத்திலே உள்ள எல்லா

[திரு. ப. நெடுமாறன்] [1984 பிப்ரவரி 22

மாவட்டங்களிலும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி
நடக்கின்றன. எனவே இநதப் பிரச்சனை பற்றி விரிவாக
விவாதிக்க வேண்டும என்பதால் இந்த அவையின் இதர
அலுவல்களை ஒத்திவைத்து விட்டு இது குறித்து விவாதிக்க
வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன்.

திரு இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே சென்னையை அடுத்து இருக்கின்ற மீஞ்சூர் காவல்
நிலையத்தில் 26 வயதுடைய ஏழுமலை என்ற விசாரணைக்
கைதி சென்ற 18-ஆம் தேதி அன்று சநதேகத்திற்கிடமான முறை
யில் இறந்தார் என்ற செய்தி அறிந்து அந்தப் பகுதியிலே இருக்
கின்ற மக்கள் அனைவரும் திரண்டு காவல் நிலையத்தை முற்று
கையிட்டு நீதி வேண்டும், நியாயம் வேண்டும் என்று கோரி ஒரு
மிகப்பெரிய கிளர்ச்சியினை நடத்தக்கூடிய அளவுக்கு நிலைமை
கள் சென்றிருக்கின்றன. ஏழுமலை என்பவர் குற்றம் செய்த
தாகக் கருதப்பட்டு காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்
பட்டிருக்கிறார். விசாரணைக் கைதியாகத்தான் அவர் வைக்கப்
பட்டிருக்கிறார். அவர் ஒரு வார காலம் காவல் நிலையத்திலே
வைக்கப்பட்டதற்குப் பிறகு திடிரென்று அவர் தற்கொலை
செய்து கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது. காவல் நிலையத்
திலே விசாரணைக் கைதியாக இருக்கக்கூடியவர்கள் எந்த அள
விற்குப் பாதுகாப்பான முறையிலே வைக்கப்பட வேண்டும் என்று
சட்டம் இருக்கின்றது. அதாவது கைதியாக வைக்கப்படுபவர்
கள் சாதாரணமாக அவர்கள் அணியக்கூடிய அரைஜான் கயிறைக்
கூட எடுத்துவிட்டதற்குப்பிறகுதான் அவர்களைக் காவல் நிலை
யத்திலே வைக்க வேண்டும் என்ற நிலை இருக்கின்றது. அது
சட்டப்படி இருக்கின்றது என்பதும், அந்த நிலையிலேதான் அவர்
கள் அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதும் நாடறிந்த உண்மை
யாகும். அப்படி இருக்கின்றபோது இந்த ஏழுமலை என்பவர்
தன்னுடைய சட்டையைக் கழற்றி அதன் மூலமாக அவர் தற்
கொலை செய்து கொண்டார் என்றும் அவர் தூக்கில் மாட்டிக்
கொண்டார் என்ற முறையிலேயும் இன்றைய தினம் செய்தி
வெளிவந்திருக்கின்றது. இவ்வாறு யாரும் நம்ப முடியாத நிலை
மையிலேதான் இந்தச் செய்தி இருக்கின்றது என்பதை நிச்சய
மாக அனைவரும் அறிவோம். ஆகவே, இந்த முறையிலே ஒரு
மிகப் பெரிய அக்கிரமம் நடக்கின்றது. அதாவது விசாரணைக்
கைதிகள் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதும்
அவர்கள் அங்கே சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்
யப்படுவது என்பதும்தான் இன்றைக்கு நாடு முழுவதும் இருக்
கின்ற மக்கள் நினைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.



1984 பிப்ரவரி 22] [திரு. இரா. கருப்பையா]

(முற்பகல் 10–30)

காவல் நிலையங்கள் இன்றைய தினம் சித்திரவதைக் கூடங்களாக
மாறி இருக்கின்றன. இது ஏதோ மீஞ்சூரிலே நடைபெற்ற தற்
செயலான நிகழ்ச்சியாக நாம் யாரும் கருத முடியாது. 1983-
ஆம் ஆண்டு சேலத்தில் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்
லப்பட்ட 14 வயதுடைய சிறிய பெண்—விசாரணைக்காக அழைத்
துச் செல்லப்பட்டவள்—தற்கொலை செய்துகொண்டாள் என்ற
செய்தியை நாட்டுக்கு அறிவித்ததையும் அதை நாட்டு மக்கள்
நம்ப மறுத்ததையும் நாம் எல்லோரும் அறிவோம். அதே மாதிரி
ஸ்ரீரங்கத்திலே ஒரு விசாரணைக் கைதி சீமெண்ணெயை ஊற்றிக்
கொண்டு தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தி அறி
விக்கப்பட்டது. ஸ்ரீரங்கம் என்றாலே இன்றைய தினம் நாடு
முழுவதுமே அறியக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கே
ஒரு அதிகாரி இறந்தபோது தற்கொலை செய்துகொண்டார் என்று
காவல் நிலைய அதிகாரிகள் அறிவிக்கக்கூடிய நிலைமை கூட
இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. மதுரையிலே நடைபெற்ற சம்ப
வமும் அனைவரும் அறிந்ததே. இன்றைய தினம் சட்டத்தையும்
ஒழுங்கையும் காக்க வேண்டிய காவல் துறை அதிகாரிகள், சட்
டத்தை அவர்கள் கையிலே எடுத்துக் கொண்டு காவல் நிலையங்
களை, கொலைக் கூடங்களாக, சித்திரவதைக் கூடங்களாக ஆக்கி
வருகிறார்கள். காவல் நிலையங்களில் பாதுகாப்பற்ற நிலைமை
ஏற்பட்டிருக்கிறது. விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படக்
கூடியவர்கள் உயிரோடு திரும்பி வர முடியாது என்ற நிலைமைகள்
ஏற்பட்டிருக்கின்றன. ஆகவேதான், மீஞ்சூரிலே நடைபெற்றிருக்
கிற சம்பவம் ஏதோ தற்செயலாக நடைபெற்ற சம்பவம் என்று
யாரும் கருத முடியாது. தனியாக நடைபெற்ற சம்பவம் என்றும்
யாரும் கூற முடியாது. காவலர்கள் இதைக் கொள்கையாக
வைத்திருக்கிறார்கள் என்று கூறுகின்ற அளவுக்குத்தான் இந்த
நிகழ்ச்சிகள் தெளிவாக்குகின்றன. கடந்த 2 ஆண்டுகளிலே
காவல் நிலையங்களிலே இறந்தவர்களை தற்கொலை நிகழ்ச்சிகள்
என்று அறிவிப்பது சர்வ சாதாரணமாக இருக்கிறது. ஆகவே,
கைதிகள் இறக்கும்போது இந்த மாதிரி இன்றைய தினம்
காவல் துறையினரால் அறிவிக்கப்படுகின்றன. ஆகவே, இம்
மாதிரி நிகழ்ச்சிகள் தொடர்வதைத் தடுத்து நிறுத்துவதற்கும்
பொதுமக்கள் நியாயம் பெறுவதற்கும் இன்றைய தினம் காவல்
நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படும் உயிர்களைப் பாது
காக்க சரியான நடைமுறைகளை உருவாக்கவும் என்ன நிலைமை
யிலே அவர்களுக்கு உத்திரவாதம் ஏற்படும் என்பதை விவாதிப்
பதற்காகவும், சரியான முடிவுகளை எடுப்பதற்காகவும் இந்த
அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவா
திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தினங்களுக்கு முன்னால் மீஞ்சூர் போலீஸ் ஸ்டேஷனிலே அடைக்கப்பட்ட ஏழுமலை தூக்கிலிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது. போலீஸ் தரப்பில் அவர் ஒரு பெண்மணியிடம் செயினைக் களவு செய்ததாகவும் அதனால் அவரை போலீஸ் லாக் அப்பிலே அடைத்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே போலீஸ் நிலையங்களிலே இரவுக் காவல் புரிவதற்கும் 1, 2 போலீஸ் காவலர்கள் நிரந்தரமாக அங்கே இரவு முழித்திருப்பார்கள். எனவே, ஏழுமலை என்பவர் தூக்கிலிட்டுக்கொள்ளும்போது, அந்தக் காவல் நிலையத்தில் பணிபுரிந்துகொண்டிருந்த போலீஸ்காரர்களுக்குத் தெரியாமல் அது நடந்திருக்க முடியாது. இந்தச் சம்பவம் எப்படி, அங்கு நடந்தது என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும் கூட, இன்று தமிழகத்திலே காவல் துறையிலே பணி புரிகின்ற அனைத்துக் காவல் துறையைச் சேர்ந்தவர்களும் பொதுமக்களிடத்திலே பொறுப்பில்லாமல் சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். ஆகவே, இது சம்பந்தமாக விரிவாகப் பேசிட இந்த மாமன்றத்தின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் செங்கற்பட்டு கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் அடுத்த வள்ளூரைச் சேர்ந்த ஏழுமலை என்ற அரிசன் ஒருவரை, ஏதோ பெண்களிடத்திலே செயினைத் திருடியதாக, அந்த ஊர் போலீசார் கைது செய்து, காவலில் வைத்திருந்த நேரத்தில்தான் தப்பி ஓடிவிட்டதாகவும், பிறகு அவனைக் கண்டுபிடித்து, கைது செய்து காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்ததாகவும் தெரிகிறது. ஆனால், கடந்த சனிக்கிழமையன்று அவன் காவலிலே இருந்த பொழுது, செயினை ஏன் திருடினான் என்று விசாரிப்பதற்காக அவனை மிருகத்தனமான முறையிலே இம்சித்திருக்கிறார்கள். கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். அடித்து இருக்கிறார்கள். அவனை உயிர்நிலையிலேகூட தாக்கி துன்புறுத்தியதன் காரணமாக இறந்துவிட்டிருக்கிறான் என்று அங்கே இருக்கிற மக்கள் பேசிக்கொள்கிறார்கள். மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை அவன் சட்டையைக் கழட்டி தூக்குப் போட்டுக் கொண்டதாக மக்களுக்குத் தெரிவித்ததன் காரணமாக அங்கேயுள்ள அரிசன காலனியைச் சேர்ந்த மக்கள் தங்கள் வகுப்பைச் சேர்ந்த ஒருவன் இறந்துவிட்டான் என்பதைத் தெரிந்து அங்கே வந்து போலீசிடத்திலே அவன் எப்படி இறந்தான் என்று கேட்ட நேரத்திலே போலீசார் அந்த மக்கள் மீது போலீஸ்காரர்களைத் தாக்கியதாக வழக்கு சுமத்தி இருக்கிறார்கள். இன்றைக்கு காவல்துறையில் எப்படி நடக்கிறது என்றால், லாக்கப்பில் ஒரு கைதி அடைக்கப்பட்டால் அவனுடைய உள்ளாடையைக்கூட கழட்டிவிட்டு நிர்வாணமாகத்தா ன்வைக்கிறார்கள். இப்படி இருக்கிறபோது





அவன் எப்படி சட்டையை அணிந்திருப்பான் என்பது புதிராக இருக்கிறது. ஆகவே, சென்னையில் மட்டுமல்லாமல் தமிழகத்தில் பல இடங்களில் இந்த நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதே நேரத்தில் போலீஸ்காரர்கள் திருவாதி என்ற கிராமத்திலே இரண்டு மூன்று பேர்களிடத்தில் வழிப்பறிக் கொள்ளையடித்திருக்கிறார்கள். இதுகுறித்து புகார் செய்யப்பட்டும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால், ஒரு ஏழை திருட்டுக் குற்றத்திலே அகப்பட்டுக்கொண்டான் என்பதாலே அவனை போலீசார் அடித்துக் கொன்றுவிட்டார்கள் என்ற செய்தி பரவலாக மக்களிடத்தில் இருப்பதால் அதை மேலும் ஆராய்ந்து விவரங்களைப் பெறுவதற்காக இதுபற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக மீஞ்சூர் காவல் நிலையத்தில் ஏற்பட்டதாக கூறப்படுகிற ஒரு நிகழ்ச்சியைப்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் எந்த ஒரு காவல் நிலையத்திலும் உள்ள சிறைக்கூடத்தில் கவனக்குறைவு காரணமாகவோ, அல்லது அடித்ததன் காரணமாகவோ அல்லது தற்கொலை என்ற காரணமாகவோ ஒரு கைதி இறந்துபட்டார் என்கிற நிலைமை ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தைத் தான் இந்த அரசு கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் துறைக்கு அடிக்கடி வற்புறுத்தி வருகிறார். காவல் நிலையத்தில் காவல் கைதியாக இருப்பவர்களுக்கு முழு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பதற்காக அங்கே இருக்கிற காவலர்களின் கவனக்குறைவால் இறந்தார்கள், அல்லது அடித்து இறந்தார்கள் என்று எந்தநிலை ஏற்பட்டாலும் அதற்கு காவல்துறையினர் தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று அடிக்கடி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். ஆனால் மீஞ்சூர் காவல் நிலையத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது உள்ளபடியே வருத்தத்தைத் தருவது தான். 5—2—1984 அன்று இரவு 7-15 மணிக்கு திருவொற்றியூர் சாலையில் நாகரத்தினம்மாள், அவரது மகள் மதாலசா இருவரும் சென்று கொண்டிருந்தபோது யாரோ இருவர் அவர்களது தாலிச் சரடுகளைப் பிடுங்கிக் கொண்டதாக மீஞ்சூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் மீஞ்சூர் காவல் நிலைய குற்ற எண். 39/84-ல் இ.பி.கோ. பிரிவு 379-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு சம்பந்தமாக மீஞ்சூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வள்ளூர் கிராமத்தில் வசிக்கும் சக்கரபாணி மகன் ஏழுமலை என்பவரை 18—2—1984 மதியம் மூன்று மணிக்கு எண்ணூர் குற்ற ஆய்வாளர் திருவேங்கடமும் அவரது குழுவினரும் கைது செய்து விசாரித்தனர். விசாரணையில் அவர் இந்தக் குற்றத்தை

ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்துள்ளார். அதன் பிறகு நகையை பறிகொடுத்த இரண்டு பெண்களும் வேறொரு மூதாட்டியும் அவரை இந்தக் குற்றத்தில் சம்பந்தப்படுத்தி அடையாளம் காட்டியுள்ளனர். இதன் பிறகு 8 மணிக்கு மீஞ்சூர் காவல் நிலையத்தில் அவரை தேகப்பரிசோதனை செய்து லாக்கப்பில் அடைத்து இருக்கிறார்கள். இறந்து போன ஏழுமலை முன்னமேயே மீஞ்சூர் காவல் நிலைய கேடியாக கண்காணிக்கப்பட்டு வருபவர். 1981-ல் மீஞ்சூரிலேயே இரண்டு கன்னக்கோல் களவுகளில் தண்டிக்கப்பட்டவர். சோழவரம் காவல் நிலையத்தில் இவருக்கெதிராகப் பதிவு செய்யப்பட்ட இரு மின்கம்பி திருட்டுகளும் மற்றொரு களவு வழக்கும் நீதிமன்ற விசாரணையில் உள்ளன. அடிக்கடி திருட்டு வழக்குகளில் ஈடுபடுபவர். 19—2—1984 அன்று காலை 6 மணியளவில் மீஞ்சூர் சட்டம்—ஒழுங்கு உதவி ஆய்வாளர் குற்றவாளி ஏழுமலை லாக்கப் கதவு கம்பிகளுக்கிடையில் தன் சட்டையை கிழித்து முறுக்கி அதன் உதவியால் தூக்கிட்டுக் கொண்டு தொங்கினார் என்று கண்டறிந்த உடன் மேலதிகாரிகள் அனைவருக்கும் தகவல் கொடுத்துள்ளார்.

(முற்பகல் 10-40)

ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கூறுகின்ற நிலைமைகளையும், பத்திரிகைகளில் வந்த செய்திகளையும் அங்கேயுள்ள மக்கள் தந்த செய்திகளின் அடிப்படையிலும், அவர் அடித்துக் கொல்லப்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகம் வந்ததன் காரணமாக, அந்தச் செய்திகள் வந்தவுடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அது குறித்து விசாரிக்க வேண்டும் என்றும், அதுபற்றி தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் சொல்லி, அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் சைதாப்பேட்டை கோட்டாட்சியர் மற்றும் நிர்வாக மாஜிஸ்டிரேட் அவர்களை காவலர் நிலை எண். 145-ன் கீழ் விசாரித்து, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அறிக்கை அனுப்ப வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அவர் விசாரணை செய்வதோடு மட்டுமல்லாமல், பிரேத பரிசோதனை செய்வதன் மூலமும் என்ன உண்மை வெளிப்படுகிறது என்று அறிக்கை வெளிவர வேண்டும் என்றும், அதன் மீதும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், எவ்வித ஐயப்பாட்டுக்கு இடம் இல்லாத வகையில் விசாரிக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் மக்களின் கோரிக்கை, மற்றவர்களுக்கு இருக்கும் சந்தேகம் ஆகியவைகளுக்கு இடம் இருப்பதால், இந்தச் சம்பவத்தை முன்னிட்டு மீஞ்சூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர்





இருவரையும், காவலர் ஒருவரையும் தற்காலிக வேலை நீக்கம் செய்து, வேலையை ஒழுங்காக கவனிக்கத்தவறியதற்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்த பிரேதப் பரிசோதனை அறிக்கை வந்தபிறகும், சைதாப்பேட்டை கோட்டாட்சித் தலைவர் அவர்களின் அறிக்கை வந்ததற்குப் பிறகும் தக்க நடவடிக்கைகளை கடுமையாக எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

மீஞ்சூர் பகுதியில் நிலைமை கட்டுக்கடங்கியுள்ளது. மாண்பு மிகு உறுப்பினர் இங்கே எடுத்துத் தெரிவித்த கருத்துக்களைக் கருத்தில் கொண்டு எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடம் இல்லாத வகையில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதற்காக அந்த மீஞ்சூர் நிலையத்தில் பணியாற்றிய இரண்டு உதவி ஆய்வாளர்களும், ஒரு காவலரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதை மீண்டும் தெரிவித்து, இதைப் பொறுத்தவரையில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசு உறுதியாக இருக்கிறது. எனவே, இது குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) திருப்போரூர் ஒன்றியம் கழிப்பட்டூர் கிராமத்திலுள்ள இரால் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் விளை நிலங்கள் பாதிக்கப் பெறுவது.

திரு. கெ. சொக்கலிங்கம்: தலைவர் அவர்களே, "திருப்போரூர் ஒன்றியம், முட்டுக்காடு பஞ்சாயத்து கழிப்பட்டூர் கிராமத்தில் இயங்கிவரும் ஓவர்சீஸ் மெரைன் (இரால்) தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் 25 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

ஓவர்சீஸ் மெரைன் ப்ராடக்ட்ஸ் தொழிற்சாலையிலிருந்து வெளி வரும் கழிவு நீர் எவ்வித சுத்திகரிப்புமின்றி தொழிற்சாலைக்குச் சொந்தமான நிலத்திலுள்ள செடிகளுக்குப் பாய்ச்சப்படுகிறது. ஆனால் திட கழிவுப் பொருட்களான ஓடுகள் மற்றும் தவளைக் கால்கள் மற்ற பாகங்கள் குழிகளில் புதைக்கப்படுகின்றன. இக்கழிவு நீரை பரிசோதித்ததில் அதன் தன்மை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் வரையறைக்கு உட்பட்டதாக தெரிய வருகிறது. ஆனால் திட கழிவு புதைக்கப்பட்டுள்ள குழிகளில் தேங்கியுள்ள நீரின் தன்மை வாரியம் நிர்ணயித்துள்ள வரையறைக்குட்பட்டதாக இல்லை. மேற்படி தொழிற்சாலை திட கழிவு பொருட்களை விஞ்ஞான முறையில் உரமாக்கும் முறையை கையாண்டு நீர் தேக்கத்தை தடுக்கும்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொழிற்சாலை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதலுக்காக விண்ணப்பித்துள்ளது. இவ்விண்ணப்பம் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கெ. சொக்கலிங்கம் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அவர்களுக்கு கொடுத்திருக்கிற குறிப்பின் அடிப்படையில் கழிவுநீரை செடிகளுக்குப் பாய்ச்சுகிறார்கள் என்று பதிலளித்திருக்கிறார்கள். நான் அந்த இடத்தை நேரில் பார்த்திருக்கிறேன். அந்தத் தொழிற்சாலையின் ஒருபுறம் இரால் பதனிடுவதால் ஏற்படுகின்ற கழிவுப் பொருள்களையும் ஸ்கிராப்புகளையும் வெளியே கொட்டிவிடுகிறார்கள். அதனால் சுற்றுப்புறங்களில் இருக்கின்ற கிராமங்களில் எல்லாம் துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அந்த மக்கள் பல மனுக்கள் கொடுத்த போதிலும் அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. அந்தத் தொழிற்சாலைக்கு இரால் எப்போது வரும் என்று தெரியாது. பெரும்பாலும் இரவு நேரங்களில் இரால் வருகிறது. அதனால் அங்கே பணியாற்றுகின்ற பெண்களை இரவு நேரங்களிலும் வேலைக்கு வரச்சொல்லி, அதிகமாக வேலை செய்யச் சொல்கிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கொடுக்கின்ற கூலியோ மிகவும் குறைவாக இருக்கிறது. 4 ரூபாய், 5 ரூபாய் தான் கூலி கொடுக்கிறார்கள். இப்படி குறைந்த கூலியை கொடுத்துவிட்டு, அதிகமாகக் கொடுத்ததாக கணக்கை எழுதிக்கொள்கிறார்கள். இதுகுறித்தும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** தலைவரவர்களே, அந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளியாகின்ற கழிவு நீரை அவர்கள் செடிகளுக்குப் பாய்ச்சுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதை பரிசீலனை செய்ய வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 30—1—1984 அன்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போன்று அல்லாமல் இரால் ஓடு, இதர கழிவுப் பொருட்களை குழியைத் தோண்டி, அதிலே புதைத்து வைத்திருக்கிறார்கள். அங்கே தேங்கியிருக்கின்ற தண்ணீரின் காரணமாக துர்நாற்றம் வருகிறது என்று அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அந்த நீரினால் பாதிப்பு ஏற்படுகிறதா என்பது பற்றி ஆராயப்படுகிறது. அதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் துர்நாற்றத்தைப் பொறுத்தவரையில், இன்னும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கின்ற நிலை இல்லை. காரணம் அதற்கான ஒரு சட்ட முன்வடிவு வரவேண்டியிருக்கிறது. காற்றில் மாசு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான அந்த சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்ட பின்னால்தான் துர்நாற்றத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க முடியும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே பெண்களை இரவு நேரங்களில் நெடுநேரம் வேலைக்கு வைத்துக்கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். அதை தொழிலாளர் நலத்துறை கவனிக்க வேண்டும். குறைந்த சம்பளம் கொடுக்கிறார்கள் என்பதையும் தொழிலாளர் நல இலாகாதான் கவனிக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றி தனியாக தொழிலாளர் நல அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் இதில் இருக்கிற மாசு கட்டுப்பாடு என்ற நிலையிலேதான் கவனிக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிற காரணத்தால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கெ. சொக்கலிங்கம் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இரால்ஓடு, இதர கழிவுப் பொருள்களை குழியில் புதைத்து அதற்கு 'செப்டிக் டாங்க், கட்டியிருப்பதாகக் கூடச் சொன்னார்கள். அமைச்சரவர்கள் நாளைக்கே கூட போய்ப் பார்க்கலாம். அந்த டாங்கை மூடாமல் ஒப்பனாக வைத்திருக்கிறார்கள். அதனால் அதிலிருந்து வருகின்ற துர்நாற்றம் சுற்றுப்புறக் கிராமங்களில் எல்லாம் பரவி, ஆறு மாதங்களுக்கு முன்னால் அங்கே காலரா கூட வந்திருக்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் இதிலே இருப்பதால் அவை பற்றி நடவடிக்கை எடுப்பதோடு செப்டிங் டாங்கை உடனடியாக மூடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துர்நாற்றம் வீசுவது பற்றி எடுத்துக் கூறினார்கள். துர்நாற்றத்தைப் பொறுத்தவரையில் அதைத் தடுப்பதற்கு அதுசம்பந்தப்பட்ட ஒரு சட்ட முன்வடிவினை இங்கே நிறைவேற்றிய பின்னால்தான் முடியும். அதற்கு முன்னால் துர்நாற்றம் காற்றில கலக்கின்ற தன்மையை தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட முடியாது. இருந்தாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அறிக்கை பெற்று, நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவர்கள் வெளியே கொட்டுகின்ற கழிவுப் பொருள்களை மூடிவைக்க ஆவன செய்வதற்கு, அதிகாரிகளிடம் தெரிவித்து நடவடிக்கை எடுக்க கடமைப்பட்டிருக்கிறோம். காலரா கூட அதனால் வந்தது என்று சொன்னார்கள். காலராவுக்கும் இதற்கும் சமபந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

## (ஆ) தமிழகத்தில் கோமாரி மற்றும் கால், வாய் நோயினால் கால்நடைகள் பாதிக்கப்பெறுவது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் செ. செம்மலை, வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன், என். பழனிவேல், பெ. சு. திருவேங்கடம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத்தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, ''கோமாரி மற்றும் கால் மற்றும் வாய் நோயினால் தமிழகத்தில் பல பகுதிகளில் கால்நடைகள் இறந்துவருவது குறித்த'' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.





அறிக்கை.

சேலம் மாவட்டம் திருச்செங்கோடு வட்ட பகுதியில் கோமாரி நோய் ஏற்பட்டதாக 29—1—1984 அன்று அறிக்கை பெறப்பட்டு, தக்க தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுமார் 6 கால்நடைகள் இந்நோயினால் தாக்கப்பட்டன. இறப்பு ஏதுமில்லை. இம் மாவட்டத்தில் மற்ற இடங்களில் நோய் தீவிரமாக இல்லை என்று அறியப்படுகிறது. இருப்பினும் கால்நடை இயக்குநர் நிலையைக் கூர்ந்து கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுத்து வருகிறார்.

2. '' மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டத்தில் கால்நடைகள் ' கோமாரி' நோயினால் அதிக அளவில் பாதிக்கப்பட்டு மரணம அடைவது குறித்து தகவல் ஏதும் பெறப்படவில்லை. சமீபத்தில் நிலக்கோட்டை தாலுகா விராலிப்பட்டி கிராமத்தில் கோமாரி நோய் ஏற்பட்டதாக திருமங்கலம், உதவி கால்நடை பராமரிப்பு இயக்குநரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டது. இவ்விடத்தில் 33 பசுறிகளும், 18 மாடுகளும இந் நோயினால் தாக்கப்பட்டதாக தகவல் கிடைத்துள்ளது. இறப்பு எதுவுமில்லை.'' இந்நோயைப்பற்றி தகவல் கிடைத்ததும் உடனடியாக இலாகா அதிகாரிகள் நோய் கண்ட இடத்திற்கு விரைந்து சென்று தக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

3. வடஆற்காடு, மதுரை கோவை, செங்கை போன்ற மாவட்டங்களில் ஆங்காங்கே கோமாரி நோய் ஏற்பட்டு கால்நடைத் துறை அலுவலர்களால் நோயின் தன்மை அறிந்து, அதை கட்டுப்படுத்தவும் சிகிச்சை அளிக்கவும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4. வடஆற்காடு மாவட்டம், ஆற்காடு வேலூர், குடியாத்தம் திருவண்ணாமலை, போளூர் வட்ட பகுதிகளில் அக்டோபர் 1983 நவம்பர், 1983, டிசம்பர், 1983, சனவரி 1984 மாதங்களில் 1,117 கால்நடைகள் கோமாரி நோயினால் தாக்கப்பட்டு, 287 கால்நடைகள் இறந்து விட்டதாக தகவல் கிடைத்துள்ளது. இந்நோய் பற்றி 18 10—1983 அன்று தகவல் கிடைக்கப்பெற்றதும் உடனடியாக இலாகா அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள் நோய் கண்ட இடத்திற்கு விரைந்து சென்று, நோயின் தன்மை அறிந்து அதைத் கட்டுப்படுத்தவும் சிகிச்சை அளிக்கவும் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

5. வடஆற்காடு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கோமாரி நோய் பரவாமல் தடுக்க 10,000 டோஸ்கள் கோமாரி நோய்த் தடுப்பு மருந்து ரூ. 36,000க்கு வாங்குவதற்கு சமீபத்தில் அரசு அனுமதி அளித்துள்ளது. கோமாரி நோய் பரவியுள்ள [illegible] தர மாவட்டங்களிலும் நோய் தடுப்பூசி போட்டு தடுப்பு [illegible]

உடனடியாக மேற்கொள்ளுமாறு கால்நடைப் பராமரிப்புத்துறை இயக்குநருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு அவர் செயல்புரிந்து வருகிறார்.

6. மேலும், இம்மாநிலத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் கால், வாய் நோய் தடுப்பதற்கான திட்டம் செயல்பட்டு வருகிறது. சிறுபான்மை நடுத்தர உழவர் பெருமக்களின் கால்நடைச் செல்வங்களை காக்கும் பொருட்டு, தமிழக அரசு இந்திய அரசின் ஒத்துழைப்போடு கலப்பின கால்நடைகள் அதிகமுள்ள இடங்களான கோவை, நீலகிரி மற்றும் பெரியார் மாவட்டங்களில், சிறுபான்மை உழவர்களின் கால்நடைகளுக்கு 50 சத விகிதம் மானிய விலையில் ஊசி போடப்பட்டது. பிறகு இத்திட்டம், சென்னை, செங்கை, வடஆற்காடு, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமாரி மாவட்டங்களில் விரிவாக்கப்பட்டது. பாலிவாலண்ட் தடுப்பூசி மருந்து (50 சத விகிதம்) மானியவிலையில் வழங்கப்படுகிறது. தடுப்பூசி மருந்தின் விலையில் பாதி விலை கால்நடை சொந்தக்காரர்களிடம் வசூலிக்கப்பட்டு, மறு பாதி விலையை தமிழக அரசு மற்றும் இந்திய அரசும் சரிசமமாக ஏற்று வருகிறது. நோய் பாதிக்கப்பட்ட இடங்களில் மோனோவாலண்ட் தடுப்பூசி மருந்து இலவசமாக வழங்கப்படுகிறது. அதன் முழு விலையையும் தமிழக அரசும் மற்றும் இந்திய அரசும் ஏற்கிறது.

1980–81 முதல் 1982–83 வரை கீழே குறிப்பிட்டுள்ள அளவு தடுப்பூசிமருந்து வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

| வருடம். | தொகை. | டோஸ்கள். | |
|---|---|---|---|
| | ரூ. | | |
| 1980–81 .. | 7,40,000 | 89,280 | (மோனோவாலண்ட்) |
| | | 96,040 | (பாலிவாலண்ட்) |
| 1981–82 .. | 7,40,000 | 1,06,840 | (மோனோவாலண்ட்) |
| | | 1,15,150 | (பாலிவாலண்ட்) |
| 1982–83 .. | 8,76,000 | 2,74,800 | (மோனோவாலண்ட்) |
| | | 1,64,000 | (பாலிவாலண்ட்) |

மேலும் வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின்கீழ் கால், வாய் நோய் தடுப்பு மருந்துகள் வாங்கப்பட்டு இலவசமாக தடுப்பூசிகள் பாதிக்கப்பட்ட இடங்களில் கீழே குறிப்பிட்டுள்ளபடி போடப்பட்டுள்ளன :—

| | | | | |
|---|---|---|---|---|
| 1981–82 | ரூ. | 17.35 லட்சம் | .. | 2,52,500 டோஸ்கள் |
| 1983–84 | ரூ. | 24.00 லட்சம் | .. | 6,38,280 டோஸ்கள் |



7. சாதாரணமாக தரம் உயர்த்தப்பட்ட கால்நடைகள், இளங்கன்றுகள் இந்நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டு, பால் உற்பத்தி குறைய வாய்ப்புண்டு. இளங்கன்றுகள் இறக்கவும் நேரிடலாம். இந்த நோய் மாடு, ஆடு, பன்றி போன்ற கால்நடைகளில் தோன்றும் கொடிய தொற்று நோய். இந்நோயிற்கு நுண்கிருமிகள் பலவகைப்பட்டன. ( .O. A. C. Asia I ) போன்ற பலவகை உண்டு. ஆகையால் இதற்கான நோய் தடுப்பு முறை மிகவும் சிக்கலானதும் செலவும் மிக்கதானதும் ஆகும். இந்நோய் காற்றோடு கலந்து பரவும், ஆகையினால் மிக அதிகப்படியான கால்நடைகள் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. நோய் கண்டபின், நோயின் தன்மை குறைப்பதற்கான சிகிச்சை மட்டுமே செய்ய இயலும். நோய்வருமுன் தடுப்பு சிகிச்சை செய்யப்பட வேண்டும். இதற்கான நோய் தடுப்பு மருந்து இலாகாவினால் தயாரிக்கப்படுவதில்லை. ஆகையினால், தனியார் நிறுவனத்திடமிருந்து வாங்கி உபயோகப்படுத்தப்படுகிறது. தனியார் நிறுவனங்கள் அதாவது (Hoechst, Baif Indian Veterinary Research Institute, Bangalore) போன்றவைகள் இம்மருந்தை தயாரித்து வழங்குகின்றனர், ஒரு மாட்டிற்கு உபயோகப்படுத்த ரூ. 4 ஆகும். மாட்டின் சொந்தக்காரர்கள் இம்மருந்தினை விலைக்குப் பெற்று இலாகா அதிகாரிகள் மூலம் தடுப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறு விவசாயிகள், நிலமற்றோர் போன்றவர்களின் தேவைக்காக அரசு மத்திய அரசின் உதவியுடன் பாதிவிலை, பாதி மான்யமாக நோய் தடுப்பு மருந்து வழங்கப்படுகிறது.

8. மேலும் தேசீய பால் பண்ணை வாரியத்தினால், 1983–84 ஆம் ஆண்டு முதல் 1989–90 ஆம் ஆண்டு வரை உள்ள ஏழாண்டுக் காலத்தில் இம் மாநிலத்தில் நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார் மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மவட்டங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோயற்ற மண்டலம் (Foot and Mouth Disas Fr Zone) ஒன்று ஏற்படுத்த ரூ. 2,000 இலட்சங்கள் செலவின மதிப்பீட்டில் செயல்படுத்தும் திட்டத்திற்கு மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் செலவினத்தில் தேசீயபால் பண்ணை வாரியம் ரூ. 1,800.36 இலட்சங்களும், இம்மாநில அரசு ரூ. 199.64 இலட்சங்களும் ஏற்று செலவீனம் பகிர்ந்து கொள்ளும், இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 34.00 இலட்சங்கள் மதிப்புள்ள கால்நடைகள், கோமாரி நோயினால் ஏற்படும் மரணத்தில் இருந்து காப்பாற்றப்படும் என்று கருதப்படுகிறது.

[1984 பிப்ரவரி 2

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையில் வைத்துள்ள விவர அறிக்கையில் நோய் வந்த பின் நோயின் தன்மையை குறைப்பதற்கான சிகிச்சை மட்டுமே செய்ய இயலும். நோய் தடுப்பு முறை மிகவும் சிக்கலானது. செலவு மிக்கதானது என்றும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம், தடுப்பு மருந்துகளுக்காகும் செலவு அதிகமாகும். அதை கால்நடைச் சொந்தக்காரர்கள் ஏற்றுக் கொள்வது சிக்கலாக இருக்கிறது என்பதை அந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைய நிலையில் கால்நடை உரிமையாளர்கள் அந்த மருந்துகளைக் கூட விலைக்கு வாங்கிக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் மருத்துவருடைய உதவி சரியான நேரத்தில் கிடைப்பதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட நோயினால் பாதிக்கப்பட்ட கால் நடைகளை மருத்துவமனைக்குக் கூட அழைத்துச் செல்ல அவர்களால் முடிவதில்லை. எனவே அதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சரவர்கள் தற்போது இயங்கி வருகிற மாவட்டத் தலைமையிடத்தில் உள்ள மொபைல் யூனிட் நடமாடும் மருத்துவ ஊர்தியை கிராமங்களுக்குச் சென்று, கால்நடைகளை பரிசோதிக்கக் கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்வார்களா என்பதையும், ஒன்றியங்களில் பணியாற்றும், கால்நடை மருத்துவர்களை கிராமங்களுக்குச் சென்று ஆங்காங்கே கால் நடைகளுக்கு இப்படி தொற்று நோய் வருவதைப் பரிசோதிப்பதற்கு துறையினரை அறிவுறுத்த முன் வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, இந்தத் தடுப்பு மருந்தைப் பொறுத்தவரைக்கும், வருடத்திற்கு இரண்டு முறை கொடுக்கப்படுகிறது. அதாவது ஆறு மாதத்திற்கு ஒரு முறை என்ற விதத்தில், தடுப்பு மருந்து கொடுக்கப்படுகின்றது. வியாதி வந்ததற்குப் பிறகு தான் தடுப்பு மருந்துகள் கொடுக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். அவ்வாறு இல்லை. வியாதி வருவதற்கு முன்பும் தடுப்பு மருந்து கொடுக்கப்படுகிறது. விவசாயிகள் மருந்துகளை வாங்கிக் கொடுத்தும், தற்போது மருந்து போட முடியாத வகையில் மருத்துவர்கள் இருக்கிறார்கள் என்பதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட மருத்துவர்கள் எந்த இடத்தில் வேலை செய்கிறார்கள் என்கிற விவரத்தையும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவாரேயானால், நிச்சயமாக அதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற் கொள்ளும். மேலும் நடமாடும் மருத்துவ மனையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவைகள் கிராமங்களில் செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



1984 பிப்ரவரி 22]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில், மதுரை மாவட்டம் வேடசந்தூர் பகுதியில் இப்படிப்பட்ட வியாதி இல்லை என்று அதிகாரிகள் குறிப்பிட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் உண்மை நிலையில், வேடசந்தூர் பகுதியில், வட மதுரை, வெல்லம்பட்டி, குஜிலியம் பாறை போன்ற ஊர்களில் நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகள் சமீபத்தில் 10 தினங்களுக்குள்ளே இறந்திருக்கின்றன. இப்படிப்பட்ட தடுப்பு மருந்துகளை வைப்பதற்காக அங்கே குளிர் பதன சாதனங்கள் தேவைப்படுகிறது என்று அங்கே இருக்கின்ற அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆகவே வேடசந்தூர் பகுதிக்கு அந்த நோயைத் தடுக்க, மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகளை வற்புறுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டத்தில் கால்நடைகள் ‘ கோமாரி ’ நோயினால் அதிக அளவில் பாதிக்கப்பட்டு மரணம் அடைவது குறித்து தகவல் ஏதும் பெறப்படவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அது போன்று நிலக்கோட்டை தாலுக்கா, விராலிப்பட்டி கிராமத்தில் கோமாரி நோய் ஏற்பட்டதாக திருமங்கலம், உதவி கால்நடை பராமரிப்பு இயக்குநரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் 33 பன்றிகளும், 18 மாடுகளும் இந் நோயினால் தாக்கப்பட்டதாக தகவல் கிடைத்துள்ளது. இறப்பு ஏதுமில்லை என்று இந்த விவர அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடைகள் இறந்து இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மறுபடியும் அதிகாரிகளை அனுப்பச் சொல்லி, அதனுடைய விவரத்தை அறிந்து வரச் சொல்லி, அரசு நிச்சயமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அடுத்து, இந்த தடுப்பு மருந்துகளை குளிர் பதன இயந்திரத்தில் வைப்பதற்கான ஏற்பாடுகளைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த இயந்திரங்கள் வேடசந்தூர் போன்ற இடங்களில் காணப்படுவதில்லை என்றும், அந்த மருந்துகளை வைப்பதற்காக குளிர் பதன இயந்திரங்கள் வேண்டும் என்றும் அவர்கள் கருத்து தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட மருந்துகளை நல்ல முறையில் பாதுகாப்பாக வைக்க வேண்டும். பாதுகாப்பாக வைத்து கால்நடைகள் பாதிக்கப்படுகின்ற நேரத்தில் அதைக் கொடுத்து. நல்ல முறையில் அவைகளை பராமரிக்க வேண்டும் என்ற காரணத்தால்தான் குளிர் பதன இயந்திரங்கள், ஒவ்வொரு மாவட்டவாரியாகவும், ஒவ்வொரு

தாலுக்கா வாரியாகவும் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அந்த விதத்தில் மாண்புமிகு உறுப்பினர் வேடசந்தூர் என்ற இடத்தில் கொடுக்கப்படவில்லை என்பதைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை அரசு கவனித்து, அந்த மருந்துகளை பாதுகாப்பாக வைப்பதற்கான குளிர் பதன இயந்திரங்களை வைத்த அரசு நடவடிக்கைகளை மேற் கொள்ளும்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கால்நடைகளுக்கு கோமாரி நோய் ஏற்பட்டு இன்றைய தினம் வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் 1,117 கால்நடைகள் பாதிப்புக்கு உள்ளானதாகவும், சுமார் 287 கால்நடைகள் இறந்து விட்டதாகவும், அதேபோல் மதுரை மாவட்டத்தில் 51 கால்நடைகள் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் , இங்கே சொல்லியிருக்கிறார்கள். இதற்காக நம்முடைய அரசு 36 ஆயிரம் ரூபாய் செலவு செய்து இருப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்தத் தொகை போதுமானதாக இல்லை. கால்நடைகள் என்பது பொதுவாக ஒரு தேசிய சொத்தாக இருந்து கொண்டிருக்கிறது. அதன் காரணத்தால், அதற்காக ஏற்படும் செலவுகளையும், அதனால் ஏற்படும் விளைவுகளைப் போக்குவதற்காகவும் முழுக்க முழுக்க அரசே அந்தச் செலவுகளை ஏற்றுக் கொண்டால்தான் மிகவும் நன்மையாக இருக்கும். இல்லை என்று சொன்னால் கிராமப் புறத்தில் உள்ள ஏழை எளிய மக்கள், குறிப்பாக தாழ்ந்தப்பட்ட மக்கள் வைத்திருக்கக் கூடிய மாடுகளுக்கு எல்லாம் அவர்கள் மருந்து வாங்கிக் கொடுத்து, அவைகளுக்கு சிகிச்சை அளிப்பது என்பது சரியாக இருக்காது. அதற்காக மத்திய அரசு கூட ஒரு பாதியை மானியமாக கொடுப்பதாக இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே முழுத் தொகையையும் கால் நடைகளுக்கு ஏற்படும் அந்த விளைவுகளைப் போக்குவதற்காக அரசே ஏற்று, அதைச் செயல்படுத்த வேண்டும். இதன் காரணமாக பால் உற்பத்தியும் பாதிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் நம்முடைய இன்றைய தேவையைப் பாதிக்கக்கூடிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது.

அடுத்து இந்த அறிக்கையில் இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். தேசிய பால் பண்ணை வாரியத்தினால் 1983-84 ஆம் ஆண்டு முதல் 1989-90 ஆம் ஆண்டு வரை உள்ள ஏழாண்டுக் காலத்தில் இம் மாநிலத்தில் உள்ள கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயைத் தடுப்பதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது என்றும், அந்தத் திட்டத்தின் மூலமாக இது நிறைவு செய்யப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் 7 ஆண்டுக் காலத்திற்குப் போடப்பட்டிருந்தாலும், இன்றைக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய காரியங்களை அரசு செய்வதற்காக, நிதி ஒதுக்கீடு செய்து இந்தக் காரியங்களை ஆற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





அத்தோடு, இன்றைக்கு கிராமங்களில் செல்லுகின்றபோது, கால்நடைகளைக் கவனிக்க சரியான டாக்டர்கள்..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் கேள்வியாகக் கேட்காமல், சொற்பொழிவு போல் பேசக்கூடாது. அடுத்து உறுப்பினர் திருவேங்கடம்.

***திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அளித்துள்ள விவர அறிக்கையில், வட ஆற்காடு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட கால் நடைகளின் எண்ணிக்கை 1,117 என்று சொல்லியிருக்கிறார்கள். அது சரியான புள்ளி விவரம் அல்ல. அதேபோல் 287 கால்நடைகள் இறந்திருக்கின்றன என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் புள்ளி விவரமும் சரியான புள்ளி விவரம் அல்ல. காரணம் என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் 21 தொகுதிகளிலும் உள்ள எல்லாக் கிராமங்களிலும் இந்த வியாதி பரவியிருக்கிறது. இது எல்லா எம். எல். ஏ.க்களுக்கும் தெரியும். அப்படி இருந்தும் சரியான மருந்துகள் இல்லை. அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். மருத்துவர்களைக் கேட்டால் வேப்ப எண்ணெயைத் தடவிக் கொள்ளுங்கள் என்று சொல்லுகின்ற நிலை இருக்கிறது. அப்படியானால் அந்த வேப்பெண்ணெயை அரசாங்கமே வாங்கிக் கொடுத்து இருக்கலாம் என்று நாங்கள் சொன்னோம். மேலும் கால்நடை மருத்துவமனைகளில் போதிய அதிகாரிகள் இல்லாமல், காலி இடங்கள் நிறைய இருக்கின்றன. சென்ற ஆண்டே இதைப்பற்றி நான் இந்த அரசாங்கத்திற்கு நினைவு படுத்தியிருக்கிறேன். எனவே இந்த நோயைத் தடுப்பதற்கும், குறைந்த விலையில் தகுந்த மருந்துகளைக் கொடுக்கவும், தகுந்த அதிகாரிகளைப் போடவும், அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 1,117 கால்நடைகள் கோமாரி நோயால் தாக்கப்பட்டு, அதில் 287 கால்நடைகள் மறைந்து விட்டதாக இங்கே விவர அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது தவறான தகவல் என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற விவரத்தின் அடிப்படையில் தான், மாண்புமிகு உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதில் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். வேண்டுமானால் மறுபடியும் அதிகாரிகளை அந்த இடத்திற்கு அனுப்பி, அப்படி இன்னும் அதிகமான கால்நடைகள் இறந்திருந்தால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிச்சயமாக அரசு மேற்கொள்ளும். மேலும், பல இடங்களில் மருந்துகள் தட்டுப்பாடு பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும்,

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) வரி விதிப்புத் திருத்த (காலவரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு 1984

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்புத் திருத்த (காலவரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவை" பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேறப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அறிவிப்பு.

மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்து கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு 1984 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

'1984 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1984) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.



6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப்பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1984 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக்கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1984)** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மதுரை சர்க்கரை நிறுவனத்தின் நிருவாகப் பணிகளை அரசு எடுத்துக் கொள்ளவும், மாற்றவும், அது தொடர்பான சம்பந்தப்பட்ட பணிகளை கவனிக்கவும் வகை செய்யும் சட்ட முன்வடிவில் என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விழைகின்றேன்.

பொதுவாக தொழிற்சாலைகள் அனைத்துமே நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்பது நம்முடைய முற்போக்கான கொள்கையாகும். அரசு ஒப்புக்கொண்டிருக்கிற அந்தக் கொள்கைக்கு ஏற்ப மதுரை ஷுகர் மில்ஸ்ஸை எடுப்பதை வரவேற்கிற அதே நேரத்தில், அதேபோல தனியார் துறையில் உள்ள பல்வேறு சர்க்கரை தொழிற்சாலைகளையும், அல்லது வேறு தொழிற்சாலைகளையும் எடுப்பதற்கு நாம் முன் வர வேண்டாமா என்பதையும் நான் அரசைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன்.

கடலூர் பாரி ஷுகர் மில்ஸ் என்ற நிறுவனம் நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றது. அந்த நிறுவனத்திலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளுக்காக நீண்டகாலமாக போராட்டம் நடத்துகிறார்கள். வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். 1,500 பேர் பழி வாங்கப்பட்டும், தொடர்ந்து அந்தப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அப்படிப்பட்ட ஒரு நிர்வாகத்தையும் இந்தச் சட்டத்தோடு சேர்த்தோ அல்லது தனிச் சட்டமாகக் கொண்டு வந்தோ, ஏன் அரசாங்கமே அந்தத் தொழிற்சாலையையும் எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும் நான் அரசாங்கத்தைக் கேட்பதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

---

**1984 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. ஜே. எஸ். இராசு] [1984 பிப்ரவரி 22

நம்முடைய தேசியமயக் கொள்கையை மேலும் ஒளிபெறச் செய்ய வேண்டுமானால், இதுவரை தனியார்களுக்கு கொடுத்து வந்த தொழில் உரிமங்களை அத்தோடு அப்படியே நிறுத்திவிட்டு இனிமேலும் கொடுக்கிற தொழில் உரிமங்களையாவது அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும், தனியாருக்குக் கொடுக்கக் கூடாது. ஆனால், சக்தி ஷுகர் மில்ஸ் என்ற நிறுவனத்திற்கு வேறு ஒரு புதிய சர்க்கரை ஆலையை துவக்குவதற்கான உரிமம் தரப்பட்டுள்ளதாக, அல்லது தருவதாக நாங்கள் அறிகிறோம். மதுரை சுகர் மில்லை எடுத்துக்கொள்ளும்போது ஏன் மறுபடியும் தனியார் துறைக்கு வேறு சுகர் மில்லைத் தரவேண்டுமென்று நினைக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அதுமட்டுமல்ல, மின்சாரத் துறையில் தனியார்கள் மின்சாரம் உற்பத்தி செய்து கொள்ளலாம் என்று போன ஆண்டு இங்கே அறிவிக்கப்பட்டது. ஆகவே, மின் உற்பத்தியிலிருந்து மிக முக்கியமாக விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய கரும்பு ஆலைகள் முதலியவைவற்றை தனியார்களுக்கும் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை ஒரு பக்கத்திலே வளர்த்துக்கொண்டு அதேநேரத்திலே 300 தொழிலாளர்கள் பணியாற்றக்கூடிய சுகர் மில்லை எடுத்துக்கொள்ளவில்லை. 300 தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற இந்த ஆலையை எடுக்கிற நேரத்திலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிற இதைவிட பிரச்சினைக்குரிய நிலையில் உள்ள கடலூர் சர்க்கரை ஆலையை ஏன் எடுத்துக்கொள்ளவில்லை ? அதிலே என்ன பிரச்சினை என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மதுரை சுகர் மில்லிலே கேன் குரோயர்ஸ், கரும்பு சப்ளை செய்த விவசாயிகளுக்கு அந்த நிறுவனம் ஏறத்தாழ 50 இலட்ச ரூபாய் பாக்கி தரவேண்டியிருக்கிறது. அப்படி பாக்கி தரக்கூடிய சூழ்நிலை ஏன் உண்டாகியது ? அரசு எடுத்துக் கொள்கிற அதே நேரத்திலே விவசாயிகளுக்கு அந்தத் தரக்கூடிய வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றனவா ? செய்யப்பட்டு இருந்தால் உடனடியாகத் தரச் செய்வதற்கான உறுதிமொழியை அரசு கொடுளக் வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன். மதுரை சுகர் மில்லில் 300 தொழிலாளர்கள் பெரிதும் பாதுகாக்கப்பட வேண்டும், கன்டினியுடி அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் ஏற்கெனவே சம்பளம் போன்ற பல்வேறு பிரச்சினைகள், குறைபாடுகள் உள்ள மனோநிலையில் இருக்கிறார்கள். அவர்களையும் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 பிப்ரவரி 22] [திரு. ஜே. எஸ். இராசு]

இந்தத் தொழிற்சாலையை எடுத்துக் கொள்கிற முயற்சியிலே அரசு ஈடுபடுகிறபோது புதிய தொழிற்சாலைகளையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு தொடங்கக்கூடிய அளவுக்கு தங்களுடைய கொள்கையை இனிமேலாவது மாற்றிக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கும் இந்த சட்டமுன்வடிவினை நாங்கள் வரவேற்கிறோம். வரவேற்கிறோம் என்று தெட்டத் தெளிவாகச் சொல்லிக்கொள்கின்ற அதேநேரத்திலே நாங்கள் ஒரு சில திருத்தங்களை கொடுத்து இருக்கிறோம். அவைகளைப் பற்றி பின்னாலே விளக்குகிறோம். இந்த ஆலையைப் பொறுத்தவரையில் 200-க்கும் அதிகமான தொழிலாளர்கள்—எங்களுக்குக் கிடைத்த தகவல் உண்மையாக இருக்குமானால்—பல வருடங்களாகப் பணி செய்ததற்குப் பிறகும் அவர்கள் நிரந்தரப்படுத்தப்படாமல் கேஷுவல் தொழிலாளர்களாகவே அவர்களை நிர்வாகம் வைத்து வந்ததன் விளைவாக அங்கே பல பிரச்சினைகள் ஏற்பட்டு அதன் காரணமாக 1983-84 ஆம் ஆண்டு ஆரம்பிக்க வேண்டிய உற்பத்தியை, 1983 ஆம் ஆண்டு நவம்பரிலே தொடங்கவில்லை என்ற காரணத்தினால் அந்த ஆலையை எடுக்கிற கொள்கையை உருவாக்குவதற்கும் அந்த ஆலையை அரசே எடுத்துக் கொள்வதற்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாங்கள் இதை வரவேற்கிறோம். இந்த நேரத்திலே ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

ஏன் என்றால் 200 தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய இந்த ஆலையை எடுப்பதற்கு முன் வந்த அரசு 2000 தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையை கொஞ்சம் கவனிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், 2 ஆயிரம் தொழிலாளர்கள் அதில் இருக்கிறார்கள் என்பதுமட்டும் அல்ல, பல வருடங்களாக தமிழகத்தில் ஒரு மிகப் பெரிய சர்க்கரை ஆலை என்று சொல்லக்கூடிய அளவில் விளம்பரப்படுத்தப்பட்டு அந்த பெயரால் இருக்கிறது. ஈ.ஐ.டி. பாரீ சர்க்கரை ஆலையில் அந்த நிர்வாகத்திற்கு லாபம் இல்லை என்று அவர்களுக்கு எந்தவிதமான கருத்தும் இல்லை. அப்படி அவர்களுக்கு ஒரு கேசும் இல்லை, அவர்களுக்கு அதிகமான லாபம் கிடைத்ததற்குப் பிறகும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு அங்கே இப்படிப்பட்ட பிரச்சினைகள் இன்றைக்கு

ஏற்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசு அவர்கள் சொன்னது போல் வேலை நிறுத்தம், குளோசர் போன்ற பிரச்சினைகளை விளக்குவதற்காக இந்த நேரத்தை பயன்படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை. ஏன் என்றால் சட்டத்துறை அமைச்சர் அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். அரசுக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே: 2 ஆயிரம் தொழிலாளர்கள் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்ற முயற்சியில் இன்று ஏறத்தாழ 925 தொழிலாளர்கள் எண்ணிக்கைக்கு கொண்டுவந்து அந்த நிறுவனம் எடுத்துச் கொண்டு இருக்கும் முயற்சியை நிச்சயமாக இந்த அரசு அனுமதிக்கக் கூடாது என்று இந்த நேரத்தில், வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று இந்த மதுரையில். இருக்கக்கூடிய சர்க்கரை ஆலையை தேசீய உடைமைக்கு கொண்டு வரவேண்டும் என்ற கொள்கையை உருவாக்கி இருக்கக்கூடிய அமுல்படுத்தக்கூடிய இந்த அரசு நிச்சயமாக 2 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய அந்த ஆலையை நேஷனலைஸ் செய்ய வேண்டும், அரசினுடைய உடைமைக்கு கொண்டுவந்து நல்ல முறையில் இயக்கி வைக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதுதான் தமிழகத்திற்கு இந்த அரசு செய்யக்கூடிய ஒரு மிகப் பெரிய சேவை என்று இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிச்சயமாக சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பார். தமிழக அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என்று நான் நம்புகிறேன், இந்த நேரத்தில் இந்தச் சட்டத்தில் ஏற்பட்டு இருக்கக்கூடிய ஒரு சில குறைபாடுகளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த சட்டத்தை வரவேற்கிற அதே நேரத்தில் சட்டம் நிச்சயமாக குறைபாடுகள் இல்லாமல் இருக்கவேண்டும். இந்த அரசு எண்ணிக் கொண்டு இருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய முக்கியமான பிரச்சினை அதாவது தொழிலாளர்கள் வேலைவாய்ப்பையும் அவர்களுக்கு வேலை உத்திரவாதமும் கொடுக்க வேண்டும் என்றால் அந்த முறையில் உள்ள 'லக்குனாஸ்' இருக்கக்கூடாது என்று அந்த எண்ணத்தில் நாங்கள் அதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் அவரது சொந்த ஊரான சேலத்தில் தமிழ்நாடு மெக்னைசட்டு கம்பெனியின்மீது நடவடிக்கை எடுத்ததற்கு பிறகு அதிலே ஏற்பட்டு இருக்கக்கூடிய சில பிரச்சினைகள் அந்த தொழிலாளர்களுக்கு கிராட்டியூட்டி: சென்ற கால சர்வீஸ், காம்பன்சேஷன் எல்லாம் கொடுக்கப்பட முடியாத சில பிரச்சினைகள் இன்று ஏற்பட்டு இருக்கிறது. அந்த விஷயத்தை பொறுத்தவரையில் நான் விளக்க வேண்டிய தேவை இல்லை என்று எண்ணுகிறேன். ஏன் என்றால் சட்டத்துறை அமைச்சர் அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். ஒரு அக்ரிமெண்டு ஏற்பட்டதற்கு பிறகு அதை அமுல்படுத்துவதற்கு நிர்வாகம்





தயாராக இல்லாத நிலையில் ஏற்பட்ட விளைவு அதில் எந்த அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு அரசு சில நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் போய் விட்டதன் காரணமாக அந்த தொழிலாளர்களுக்கு இன்றைக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே சட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் அதனால் தொழிலாளி பாதிக்கக் கூடிய நேரத்தில் நிச்சயமாக அதிலே வேலை செய்ய முடியாது. ஆகவே, தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமோ அந்த முறையில் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய ஒரு சில கருத்துக்கள் இதில் இருக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் கொடுத்துள்ள திருத்தத்தில் 13 செக்ஷனில்.

1-வது சப் செக்ஷனில்.

In cl:use 13 in sub-claus: (1), after th: word "there of" and befor: the word "and , add the following words ar with cant nuj af h s part r v ce

Om t sub-clause (2).

என்பது சேர்க்கப்பட வேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏன் என்றால் தொழிலாளர்கள் ஆனாலும் சரி, மற்ற அதிகாரிகள் ஆனாலும் சரி அவர்களைப் பொறுத்தவரையில் பென்ஷன், கிராட்டியூட்டி அந்த மாதிரி உரிமைகள் அவனுக்கு கிடைக்க வேண்டும என்றால் அவனுக்கு நிரந்தரமான வேலைவாய்ப்பு ஏற்பட வேண்டும் என்றால் அந்த வேலைக்கு நிரந்தரமான உத்திரவாதம் ஏற்பட வேண்டும். இன்றைக்கு தமிழகத்தில் கொண்டுவந்து இருக்கக்கூடிய சட்டப்படி 24 மாதங்களில் 480 நாட்கள் அவன் வேலை செய்து இருக்க வேண்டும். ஏற்கனவே அவன கேஷுவல் தொழிலாளியாக வைக்கப்பட்டு இருந்தவன். அந்த நிலையில் அப்பாயிண்டெட் டேயிலிருந்து சர்வீஸ் கணக்கிடப்படும் என்றால் பல ஆண்டு காலம் வேலை செய்து இருந்தும் ஒரு நிரந்தர தொழிலாளி ஆகக்கூடிய ஒரு சூழ்நிலையை அவன் இழந்து விடுகிறான். ஏன் என்றால் 24 மாதங்களில் 480 நாட்கள் வேலை பார்த்து இருக்க வேண்டும் என்ற முறையில் நடவடிக்கைகள் இன்று சில நிர்வாகத்தால். எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதை கவனத்தில் எடுத்துக்கொண்டு நிச்சயமாக இங்கே

"With continuity of his past Service,"

என்பது சேர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்னும் ஒன்றையும் சேர்க்க வேண்டும். அதிலே 2-வது உப பிரிவில் என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால் தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் அல்லது தற்போது செயலில உள்ள வேறு ஏதேனும் ஒரு சட்டத்தின் கீழ் என்ன சொல்லியிருப்பினும், சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் பணிக்கமர்த்தப்பட்ட அலுவலர் ஒருவரின் அல்லது ஏனைய ஒருவரின் பணி அரசுக்கு அல்லது தற்போது செயலிலுள்ள அல்லது புதிய அரசு நிறுவனத்திற்கு மாற்றப்படுவதால், அந்த அலுவலருக்கு அல்லது ஏனைய பணியாளருக்கு இச்சட்டத்தின் கீழ் அல்லது நிகழ்காலத்தில் செயலிலுள்ள வேறொரு சட்டத்தின் கீழ் எவ்வித இழப்பீடும் பெற உரிமையில்லை என்ற முறையில் உள்ள ஒரு கருத்து இங்கே சேர்க்கப்பட்டிருக்கிறது. அது நிச்சயமாகத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், பணியாளர்களைப் பொறுத்தவரையில் பாதிக்கும் ஒரு அம்சமாக மாறும் என்பதை நான் சட்டத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்கும், அரசின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன்.

உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் நாம் ஒரு ஆலையை எடுக்கின்ற நேரத்தில் உற்பத்தியை மட்டுமல்லாமல் அதில் வேலை செய்யும் தொழிலாளர்களும் ஒரு முக்கியமான பங்கை வகிக்கிறார்கள் என்பதை மறந்துவிட வேண்டாம். தொழிலாளர்கள் என்பவர்களும் இண்டகிரல் பார்ட் ஆப் ஆன் இண்டஸ்ட்டிரி என்பதை மறந்துவிடக்கூடாது, அப்படி மறந்துவிட்டால், கொண்டு வரப்படுகின்ற சட்டங்கள் நிச்சயமாக வெற்றி பெற வாய்ப்பு இல்லாமல் போகும் என்பது தமிழ்நாடு மேக்னசைட் தகராறுகளில் நிதர்சனமாக ஆகியிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், பணியாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்ற எண்ணத்தில் தமிழக அரசும், மத்திய அரசும் கொண்டு வந்திருக்கும் சட்டங்கள் பற்றி நமக்குத் தெரியும். தொழிலாளர்களுக்கு இன்டஸ்ட்டிரியல் டிஸ்ப்யூட் ஆக்ட் என்பது நாடறிந்த விஷயம். ஆகவே, தொழில் தகராறு சட்டத்தில் என்னதான் சொல்லப்பட்டிருந்தாலும் அல்லது மற்ற சட்டங்களிலே என்னதான் சொல்லப்பட்டிருந்தாலும், அவைகளில் என்னதான் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருந்தாலும் அவைகள் இந்த ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குப் பொருந்தாது என்று சொல்வது நிச்சயமாகத் தொழிலாளர் நலக் கொள்கை அல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஷரத்தை அல்லது இந்த செக்ஷனை எடுத்துவிட நிச்சயமாக ஒத்துக்கொள்வார்கள் என்று நான் எண்ணுகிறேன். இந்த நேரத்தில் நான் ஒரு விஷயத்தை திட்டவட்டமாகத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஒரு தொழிற்சாலையைத் தேசீய உடைமையாகக் கொண்டு வரும் நேரத்தில் என்ன பார்க்க வேண்டும்? இந்தச் சட்டத்தில் கூட செக்ஷன் 9 இல் முதலாளிகளுக்குக் காம்பன்-சேஷன் கொடுப்பதற்குப் பல ஷரத்துக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முதலாளிகளுக்குப் பல்வேறு விதங்களில் நிவாரணம் அல்லது காம்பன்சேஷன் கொடுப்பதற்கு வகை செய்து விட்டு, தொழிலாளர்களுக்குத் தொழில் தகராறு சட்டத்திலோ அல்லது மற்றச் சட்டங்களிலோ என்னதான் இருந்தாலும் அவைகள் இந்தத் தொழிலாளர்களுக்குப் பொருந்தாது என்று சொல்வது நியாயம் அல்ல. ஒரு தொழில் ஸ்தாபனத்திலே தொழிலாளர்களை நாம் மிகவும் முக்கியமான பாத்திரமாகக் கருத வேண்டும் அந்த முறையிலே இந்தச் சட்டத்தில் என்னென்ன திருத்தங்களைக் கொண்டு வர வேண்டுமோ அவைகளைக் கொண்டு வர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு தொழில் ஸ்தாபனத்தைத் தேசீய உடைமையாகக் கொண்டுவரும் நேரத்தில் அதில் வேலை செய்யும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு ஃபர்ஸ்ட் சான்ஸ் இருக்க வேண்டும் என்பது இன்று நாட்டிலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற கொள்கை. இயந்திரங்களை மட்டும் அல்ல. இயந்திரங்களில் வேலை செய்யும் மனிதனும் ஒரு முக்கியமான அம்சம், மிக முக்கியமான பாத்திரம் என்ற வகையில் இருக்க வேண்டுமென்பதை மறந்துவிடக் கூடாது.

இந்தச் சட்டத்திலே முதலாளிகளுக்கு மட்டும் காம்பன்சேஷன் என்று வகை செய்யும் நேரத்தில் அதில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் காம்பன்சேஷனுக்கு வகை செய்யப்படவில்லை என்றால் அது சரியல்ல. ஆகவே, இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தில் உள்ள 13 ஆவது கிளாசில், 2 ஆவது உப கிளாசை மாற்ற வேண்டும் அல்லது நீக்கம் செய்ய அமைச்சரவர்கள் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

[1984 பிப்ரவரி 22

(முற்பகல் 11-20)

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிர்வாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவினை நாங்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம.

ஆனால் அதேநேரத்தில் எப்படி மதுரை சர்க்கரை ஆலையில் மிஸ்மேனேஜ்மென்ட் என்ற காரணத்தால் அதனை அரசே எடுத்துக்கொள்வதற்கான ஒரு சட்டமுன்வடிவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்களோ அதேபோல் தமிழகத்தில் இருக்கக்கூடிய நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையினையும் அரசு எடுத்துக்கொள்ளவேண்டும். அங்கே சுமார் 2,000 தொழிலாளர்கள் பணிபுரியக்கூடிய நிலைமை இருக்கின்றது. அந்த ஆலை சீர்கெட்டு அதன்காரணமாக நலிந்துபோன நிலைமையில் இருக்கின்ற காரணத்தால் அதனையும் அரசாங்கம் எடுத்துக்கொள்கின்ற வகையிலே ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று திருச்சியிலே இருக்கக்கூடிய காவிரி சர்க்கரை ஆலையில் சுமார் ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். அந்த ஆலையும் நிர்வாகச் சீர்கேடு காரணமாக நலிந்துபோய் அங்குள்ள தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் கெட்டுப்போய் அந்த ஆலையையே மூடக்கூடிய ஒரு அபாயம் இருந்துகொண்டிருக்கின்ற காரணத்தால் அந்த ஆலையினையும் அரசு மேற்கொள்வதற்கான நடவடிக்கையினை எடுக்கவேண்டும் என்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவில் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு என்ற தலைப்பில் எந்த ஒரு ஆலையினையும் அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய காலத்தில் அவர்களுடைய சர்வீஸ் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அது அவ்வாறு இருக்கக்கூடாது அவர்களுக்கு கன்டினியுட்டி ஆஃப் சர்வீஸ் என்ற அடிப்படையில் அதனை மாற்றவேண்டும். ஆனால் அதே நேரத்தில் தொழிலாளர் சட்டத்தின் அடிப்படையில் உள்ள சட்டங்கள் முழுமையும் இப்போது அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய இந்த ஆலைத் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து பயன்படக்கூடிய முறையிலே இந்தச் சட்டத்திலே மாறுதல் செய்யவேண்டும்.





அத்தியாயம் 5-ன் 13வது பிரிவிலே பணியாளர்களைத் தொடர்ந்து பணியில் வைத்திருப்பது என்ற தலைப்பின் கீழ் வரக்கூடிய பிரிவிலே தொழிலாளர்களுடைய கிராஜுட்டிபோன்ற பணிப் பாதுகாப்புக்களை பொறுத்தவரையில் அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்லக்கூடாது என்று இருக்கக்கூடிய சட்டத்தை அறவே நீக்கிவிடவேண்டும்.

பக்கம் 15-ல் அந்த தொழிலாளர்கள் எந்தவித இழப்பீடும் பெற உரிமை இல்லை என்றும் அத்தகைய உரிமை கோரிக்கையை எந்த நீதிமன்றமோ எந்த நடுவர் மன்றமோ அல்லது ஏனைய அதிகார மன்றமோ விசாரிக்கக்கூடாது என்றிருக்கக்கூடிய அந்தக் கிளாஸைச் சுத்தமாக எடுத்துவிடவேண்டும். தொழிலாளர்களின் பண்டமென்டல் ரைட்ஸ் என்று சொல்லக்கூடிய அடிப்படை உரிமைக்கே விரோதமாக, அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்லக்கூடாது, ட்ரிபியூனலுக்குச் செல்லக் கூடாது. ஆர்பிட்ரேஷனுக்குச் செல்லக்கூடாது என்று ஒரு பிரிவினைக் கொண்டு வந்திருப்பது சரியல்ல. அது தொழிலாளர்களின் அடிப்படை உரிமையையே பறிக்கக்கூடிய பிரிவாகும். எனவே அந்த கிளாஸை அறவே எடுத்துவிடவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழிலாளர்களுக்கான ஈ. எஸ். ஐ., ப்ராவிடன்ட் பண்ட், கிராஜுட்டி போன்றவற்றைப் பொறுத்தவரையில் அவற்றுக்கு உரிய பாதுகாப்பு கொடுக்கின்ற வகையில், எப்படி பஞ்சாலைகள் தேசியமயமாக்கப்பட்டபோது தமிழ்நாடு பஞ்சாலைகள் கழகம் என்று ஒரு கழகம் ஏற்படுத்தப்பட்டதோ அதேபோன்ற சர்க்கரை ஆலைகளை அரசாங்கம் மேற்கொள்கின்றபோதும் ஒரு தனி கழகத்தை ஏற்படுத்தவேண்டும். அப்போதுதான் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு அடிப்படை உரிமை எப்படி கிடைக்கின்றதோ அதைப்போல இவர்களுக்கும் கிடைப்பதற்குரிய வாய்ப்பு இருக்கும்.

எனவே அவர்களுக்கு ஏற்கெனவே இருந்து வந்த ப்ராவிடன்ட் பண்ட், கிராஜுட்டி போன்றவற்றிலே இழப்பு ஏற்படக் கூடாது. பிரச்சினைகளுக்காக அதாவது அவர்கள் தொழில்களைப் பெறுவதற்காக அவர்கள் வழக்கு மன்றங்களுக்குச் செல்வதற்கான ஒரு அடிப்படையான உரிமை வழங்கப்படவேண்டும். எனவே அந்த அடிப்படை உரிமையினைப் பறிக்கின்ற வகையிலே இச்சட்டத்திலே இருக்கின்ற பிரிவை எடுத்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு எதிர்காலத்திலும், தமிழகத்திலே மூடப்பட்டிருக்கின்ற பல்வேறு பஞ்சாலைகள் உட்பட அனைத்தையும் அரசாங்கம் எடுத்துக்கொள்கின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், திருப்போரூரிலே இருக்கின்ற எஸ். ஆர். சி. மில், காளப்பட்டியில் இருக்கின்ற பத்மா மில், சிங்காநல்லூரிலே இருக்கக்கூடிய வசந்தா மில் போன்ற தமிழ்நாட்டிலே மூடி இருக்கின்ற பஞ்சாலைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்கின்ற வகையிலே ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த சட்ட முன்வடிவை வரவேற்று நான் அமர்கிறேன்.

*திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத்தை, விவசாயிகளின் சார்பிலும், என்னுடைய கட்சியின் சார்பிலும், நானும் ஒரு கரும்பு விவசாயி என்ற முறையிலும் மனப்பூர்வமாகப் பாராட்டி, குறிப்பாக முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும், நன்றியினைச் சொல்லி, இந்தச் சட்டத்தைச் சரிவர கொண்டு வர வழிவகை செய்து கொடுத்த அதிகாரிகளுக்கும் நன்றியைச் சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். முதலிலே அங்கே இருக்கக்கூடிய அதிகாரியும் தொழிலாளர்களையும் நிரந்தரமாக்க வேண்டும். அரசாங்கத்திலே தொழிலாளர்களுக்கு என்ன, என்ன உரிமைகள் இருக்கின்றனவோ, அத்தனை உரிமைகளும் அவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். அங்கே இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு மாத்திரம் அல்லாமல், இன்றைக்கு விவசாயிகளுக்கு அந்த நிறுவனம் நேரடியாக ரூ. 50 இலட்சம் கரும்பு எடுத்ததற்காகக் கொடுக்க வேண்டும், அது இன்னும் கொடுக்கப்படவில்லை. அந்த நிறுவனத்தின் மூலமாக பாங்கியிலே வாங்கிய கடன், வட்டியும், முதலுமாக ரூ. 1 கோடி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. ஆனால், ஒவ்வொரு விவசாயியும் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்து விட்டோம். அப்படித் திருப்பிக் கொடுத்த பிறகு இப்பொழுது அந்த நிறுவனமே கையாடல் செய்திருக்கிறது. ஆகவே, விவசாயிகள் கட்டிய அந்தப் பணத்திற்கும் அரசாங்கமே உத்தவாதம் கொடுத்து, அந்தப் பணத்தைக்கட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அது மாத்திரமல்ல, அதே நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், சீனியின் பேரிலே ரூ. 1 கோடி 60 லட்சம் கடன் வாங்கியிருக்கிறார்கள். இயந்திரங்களின் பேரில் ரூ. 1 கோடி வாங்கியிருக்கிறார்கள். அபிவிருத்திக்காக ரூ. 50 இலட்சம் வாங்கியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ரூ. 3 கோடியை அந்த நிறுவனம் மோசடி செய்திருக்கிறது. இப்படி மோசடி செய்த நிறுவனத்திற்கு சட்டத்தின் 9 ஆவது பிரிவின்படி ஏன் நட்டஈடு கொடுக்க



வேண்டும்? அந்த நிறுவனத்தில் உள்ள இயந்திரங்கள் ஓடவில்லை. பாய்லர் தவிர வேறு இயந்திரங்களுக்கு வால்யூவேஷன் மதிப்பே இல்லை. அப்படி இருக்க அந்த நிறுவனத்திற்கு நாம் ஈட்டுத் தொகை, இழப்புத் தொகை கொடுக்கவேண்டுமென்ற பிரிவை கம்ப்ளீட்டாக எடுத்து விட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். அங்கே இருக்கக்கூடிய மெஷின் ஒன்று கூட கிரஷிங்குக்கு அறைவைக்கு ஏற்றதாக இல்லை. அந்த மில்லை அபிவிருத்தி செய்வதற்காக ரூ. 50 இலட்சம் கடன் வாங்கியிருக்கிறார்கள். இத்தனையும் வாங்கி விவசாயிகளை ஏமாற்றி, அங்கே மிகப் பெரிய மோசடி செய்திருக்கக்கூடிய அந்த மில்லை அரசு எடுத்திருக்கிறது என்றால் நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன். எங்களைப் போன்ற சிறு விவசாயிகள் எல்லாம் கரும்பை கிரஷிங்குக்குக் கொடுக்கிறோம். ஆகவே, எங்களைப் போன்ற சிறுசிறு விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையிலே, ஏற்கனவே பிடித்தம் செய்த தொகையை உடனடியாகக் கொடுக்க அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும். நிறுவனத்தின் மூலமாக பாங்கிடம் வாங்கிய பணத்தை, பாங்கிற்குத் திருப்பிக் கொடுக்க அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் 55,000 மூட்டை சீனி இருக்கிறது. அந்தச் சீனியை நாம் விற்போமானால் கிட்டத்தட்ட ரூ. 1½ கோடி நமக்குக் கிடைக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். மேலும் 5 ஆயிரம் டன் மொலாசஸ் இருக்கும் என்று கருதுகிறேன். அவற்றையெல்லாம் விற்று விவசாயிகளுக்கு நாம் பாதுகாப்புக் கொடுப்போமானால், அதுதான் விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும். இன்றைக்கு விவசாயிகள் குதூகலமாக இருக்கிறார்கள். இன்றைக்கு அரசாங்கம் எடுத்துக் கொண்டது, பெரிய சிக்கலிலிருந்து நாங்கள் விடுபட்டோம் என்று இருக்கும் அந்த நிலையில், அந்த விவசாயிகளுக்குக் கிடைக்கவேண்டிய தொகை அவர்களுக்குக் கிடைக்க வழிவகை செய்தால் சாலச்சிறந்ததாக இருக்கும். இப்படி எடுத்துக்கொண்டதைப் பாராட்டுவதோடு அங்கே இருக்கிற கரும்பு விவசாயிகளைக் கொண்ட ஒரு குழு அமைத்துக் கொடுத்தால் அது இன்னும் சிறப்பாக அமையும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அந்த நிறுவனத்தாரால் தொழிலாளர்களுக்கு 3 மாதச் சம்பளம் பிடிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கிராச்சுவிட்டி பிடிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய இன்ஷூரன்ஸ் பணத்தையும், அத்தொழில் நிறுவனம் பிடித்தம் செய்து வைத்துக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவது அவசியம். ஆகவே, அவர்களிடமிருந்து பிடித்தம் செய்த பணத்தை அரசு 30 நாட்களுக்குள்ளாகிலும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மாதிரி எங்கெங்கெல்லாம் தமிழகத்திலே இருக்கிறதோ, அங்கெங்

கெல்லாம், குறிப்பாக நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையினை அரசு தன்னுடைய ஆட்சியின் கீழே, தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழே கொண்டு வந்து அரசே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து, விவசாயிகளுக்குஉடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்றுகூறி, முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுகாறும் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் மதுரை சர்க்கரை ஆலை நிறுவனத்தை அரசு கையகப்படுத்தியதை ஆதரித்து பேசினார்கள். அதற்காக அரசின் சார்பிலே அவர்களுக்கு நன்றியைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் இராசு அவர்கள் பேசுகிறபோது ஏன் மற்ற ஆலைகளை எல்லாம் அரசு ஏற்கவில்லை என்ற வினாவை தொடுத்தார்கள். இந்த ஆலோசனையை மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் கூட கூறினார்கள். அரசைப் பொறுத்தவரைக்கும் in p:blic inte est and in the ints of the w lfa e of the employees எந்தெந்தத் தொழிற்சாலைகளை நாட்டுடமை ஆக்கவேண்டுமோ அதற்கான சூழ்நிலைகள் உருவாகிறபோது அவற்றைநாட்டுடமையாக்கத் தயங்காது என்பதை கடந்த கால இந்த அரசினுடைய செயல்முறை எடுத்துக்காட்டும். இதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள். சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரைக்கும் அரசினுடைய கூட்டுறவுத் துறையின் மூலமாக இரண்டு ஆலைகளை நிறுவுவதற்கு ஆறாவது பினான்ஸ் கமிஷனில் அரசிற்கு அனுமதி கிடைத்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இரண்டு தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு மட்டுமே மத்திய அரசினுடைய அனுமதி அரசின் மூலம் நிறுவுவதற்கு கிடைத்திருக்கிறபோது அது போதும் என்ற நிலையில் நாம் இருப்போமேயானால் தொழிற்துறையில் முன்னேற்றம் ஏற்படாது. அதேநேரத்தில் வேலை வாய்ப்பு ' ஜெனரேஷன் ஆப் எம்ப்ளாய்மென்ட் ஆப்பர்சூனிட்டீஸ் ', வேலையில்லாமல் திண்டாடுகிற மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கும் தேவையான வாய்ப்பினை நாம் இழந்தவர்களாகி விடுவோம். அதன் காரணமாகத்தான் மத்திய அரசு எந்தக் கொள்கையை கடைப்பிடிக்கிறதோ அந்தக் கொள்கையை ஒட்டி, முடிந்த அளவிற்கு தொழிற்சாலைகள் தமிழகத்திலே வரவேண்டும் ; வேலை வாய்ப்பு பெருக வேண்டும் ; அதேநேரத்தில் மாநில அரசுக்கு வரவேண்டிய வருவாயும் பெருக வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் தனியார் துறைக்கும் உரிமம் வழங்கக்கூடிய முறையில் கோரிக்கைகள் வருகிறபோது மத்திய அரசிற்கு மாநில அரசு பரிந்துரை செய்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் எல்லா மாநிலங்களிலும் இந்த நிலை இருக்கிறது. உதாரணமாக மேற்கு வங்கத்திலே கூட தனியாருக்கு சர்க்கரை ஆலை உரிமம் பெறு





வதற்கு மாநில அரசு மத்திய அரசிற்கு பரிந்துரை செய்திருக்கிறது. அதற்கான உரிமங்கள் பெற்றிருக்கிறார்கள். அதற்கு காரணம் அரசுத் துறையில் மாநில அரசு துவங்குவதற்கு விழைகிறபோது மத்திய அரசு அந்த அளவிற்கு உதவி செய்வதில்லை, உறுதுணையாக இருப்பதும் இல்லை என்ற நிலை வருகிறபோது மத்திய அரசினுடைய கொள்கைக்கு ஏற்ப கடைபிடிக்கிறபோது தனியார்கள் தொழிலைத் துவக்கினால் மாநிலத்தினுடைய தொழிற்துறையில் முன்னேற்றம் ஏற்படும், வேலைவாய்ப்பு பெருகும், மாநிலத்தின் வருவாய் பெருகும் என்ற நிலையில், மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போல, மேற்கு வங்கத்திலே இருப்பதைப் போலத்தான் தமிழகத்திலும் கடைபிடிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது 24 மாதங்களில் 480 தினங்கள் பணியாற்றினால் அவர்கள் நிரந்தரம் ஆக்கப்பட வேண்டும். தொழிற்சாலையில் என்று சட்டம் இருக்கிறதே, இது பல இடங்களில் நடைமுறைப்படுத்துவது இல்லை என்று சுட்டிக்காட்டி, இதிலே முன்னேற்றம் வேண்டுமென்று சுட்டிக்காட்டினார்கள். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னொரு விதி இருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அறிவார்கள் என்று கருதுகிறேன். உதாரணமாக 200 தினங்கள், 300 தினங்கள் மட்டுமே பணியாற்றி அந்தப் பணியாளர் பணியிலிருந்து நீக்கப்பட்ட பிறகு அந்தத் தொழிற்சாலை வேறு ஒருவரை அந்தப் பணியில் 90 தினங்களுக்குள் அமர்த்துமேயானால் அந்தச் செயல் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை சட்ட ரீதியாக ; மாறாக 200 நாட்கள் பணியில் இருந்தவர் தொடர்ந்து பணியில் இருப்பதாக கருதப்படும் என்று புதியச் சட்டத்தை நாம் கொண்டு வந்ததைக் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இநத அரசினுடைய நோக்கம் தொழிலாளர்களுக்கு, பணியாளர்களுக்கு எந்த அளவிற்கு பாதுகாப்பைத் தரவேண்டும், தொழிற்சாலையில் தொழிலாளர்களுடைய நலனில் எவ்வளவு அக்கறையோடு இருக்கவேண்டும் என்பதில் இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை, சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது. தொடர்ந்து எடுத்து வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் பேசுகிறபோது இழப்புத் தொகையாக ஏன் கொடுக்க வேண்டுமென்று ஒரு வினாவைத் தொடுத்தார்கள். அந்த அமைப்பைப் பொறுத்த வரையிலும் தவறு செய்திருக்கிறது; ஒன்றல்ல, பல தவறுகளைச் செய்திருக்கிறது. அதற்குத் தனியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த நிறுவனத்தினரிடமிருந்து எந்தெந்த அளவிற்கு தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு பணத்தை மீட்க முடியுமோ அந்தப் பணி தனியாக நடக்கும்.

But comp nsation is a mandatory r quir m nt in accordanc with th Suprem Court Judg m nt.

இருக்கின்ற சட்டவிதியின் அடிப்படையிலும் இழப்பீட்டுத் தொகை கொடுக்க வேண்டும். இல்லையென்றால் டேக்ஓவர் பண்ணமுடியாது.

மதுரை சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையிலும் 1981-82 ஆம் ஆண்டுக்கான சட்டபூர்வ கரும்பு விலை 18.30 இலட்ச ரூபாய் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிவந்தது. அதைக் கொடுக்கத் தவறிவிட்டார்கள். அது மட்டுமல்லாமல் அரசால் பரிந்துரைக்கப்பட்ட கரும்பு விலையில் 46 இலட்சம் கொடுக்கத் தவறிவிட்டார்கள். அதோடு விவசாயிகளிடமிருந்து கரும்பு விலையில் கழிக்கப்பட்ட பயிர்க்கடன் தொகை 93 இலட்சம் முறையாக வங்கிகளுக்குச் செலுத்தாமல் அந்தப் பணத்தை அவர்கள் தவறான முறையில் பயன்படுத்தினார்கள். கரும்பு விவசாயிகளிடமிருந்து போக்குவரத்துச் செலவினங்கள் என்ற வகையில் வசூலிக்கப்பட்ட ரூ. 1.25 இலட்சத்தை லாரி உரிமையாளர்களுக்குக் கொடுக்கத் தவறிவிட்டார்கள்.

அது மட்டுமல்லாமல், கரும்புகளை காலத்தில் வெட்டி ஆலைகளுக்கு அனுப்ப வேண்டும். காலம் கடக்குமானால், நாளாக நாளாக ஒவ்வொரு நாளும் அதனுடைய ரெகவரி குறைந்து வரும். அப்படி கிட்டத்தட்ட 5,000 டன் கரும்பு முற்றிய நிலையில் பல மாதங்கள் வெட்டப்படாமல் இருந்ததால் உழவர்களுக்கு, விவசாயிகளுக்கு கிட்டத்தட்ட 50 லட்ச ரூபாய் இழப்பு ஏற்படும் நிலையைக்கூட அந்த நிறுவனத்தினர் ஏற்படுத்தி விட்டார்கள்.

அது மட்டுமல்லாமல், கொள்முதல் வரி, கரும்பு வரி, மின் கட்டண பாக்கி, பிராவிடென்ட் பண்ட் ஆகிய வகையில் ரூ. 49 லட்சம் பாக்கியுள்ளது. அதையும் அவர்கள் கட்டத் தவறிவிட்டார்கள். இதுபோன்று பல்வேறு முறைகேடுகள் இருந்த காரணத்தால், பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஊதியத்தையும் கொடுக்கதவறிவிட்டார்கள். ஆகவே, அந்தப் பணியாளர்களின் ஊதியம், சம்பளம், அவர்களின் நலனையும் நாம் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. உழவர்களின் நலனையும் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் மாநில அரசுக்கு உள்ள அதிகாரத்தை வைத்து Entry 24 of th Stat List r ad with Entry 42 of th Concurr nt List என்ற அடிப்படையில், ஏற்கனவே உச்சநீதி மன்றம் உ.பி. வழக்கு ஒன்றிலே அளித்த தீர்ப்பை ஒட்டியும், இதைத் தற்போது அரசு எடுத்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் மற்ற ஆலோசனைகளையும் அரசு கவனிக்கும் என்று கூறி இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





திரு. என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களும், மற்ற உறுப்பினர்களும் பேசும்போது நெல்லிக்குப்பம் பற்றிச்சொன்னபோது, எல்லா ஆலைகளையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. அங்கேயும் ஆயிரம் பேர்களுக்கு மேல் வேலை இழப்பு ஏற்பட்டு இருப்பதால், பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையை எடுத்ததுபோல் அதையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற விதத்தில் சொன்னார்கள். அதைப் பற்றி அரசாங்கம் கவனிக்குமா? மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் தெரிவித்த அந்த தொழிலாளர்களின் கன்டினியுட்டி ஆப் சர்வீஸ் போன்றவற்றையும் அரசாங்கம் தக்க முறையில் கவனிக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளித்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அதைத்தான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருக்கும் நல்ல ஆலோசனைகளை அரசு பரிவோடு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1984 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு(சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண்.3/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 35 வரை மற்றும் அட்டவணைகள் ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1984 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக்கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு(சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண்.3/1984) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(இ) பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், என். வி. என். சோமு ஆகியோர் அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் அத்தீர்மானத்தை மொழிவார்.

(முற்பகல் 11-40)

திரு. ப. பொன்னுரங்கம் : Sir, I move—

"That this Hous disapproves th Pachaiyappan's Trust (Taking over of Manag ment) S cond Amendment Ordinance, 1984 (Tamil Nadu Ordinance No. 17 of 1983 (promulgated by the Governor on 21st Decemb r 1983")

திரு. இரெ. இராசமாணிக்கம் : நான் அதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1984 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். *9/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

பொதுமக்களின் நலனை முன்னிட்டு அரசு பச்சையப்பன் பொறுப்புக் கழகத்தை பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) குறித்த 1981 ஆம் ஆண்டு சட்டத்தில் மூலமும் (தமிழ் நாடு சட்டம் 11/1981) மற்றும் திருத்தச் சட்டம் 1983-ன் மூலமும் மூன்றாண்டுகளுக்கு 22-12-1980 முதல் தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது. இதற்கு நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அரசு அலுவலர்கள் அடங்கிய குழு தற்போது நிர்வாகத்தை செவ்வனே நடத்தி வருகிறது. பொறுப்புக் கழகத்தை மேலும் நன்கு செம்மைப்படுத்த மேற்படி குழு பல திட்டங்களை செயல்படுத்த எண்ணியுள்ளது. ஆகவே மேற்சொன்ன கழகத்தின் நிருவாகம் அரசிடம் நிலைபெற்றிருக்கும் காலத்தை மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிப்பது அவசியமெனக் கருதப்பட்டது. அதற்கிணங்க மேலும், ஓராண்டுக் காலத்திற்கு அரசிடம் நிருவாகப் பொறுப்பு நிலை பெறச் செய்ய 1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிருவாகத்தை எடுத்துக்கொள்ளுதல்) சட்டத்தின் 3, 8-ம் பிரிவுகளைத் திருத்த வேண்டுமெனக் கருதப்பட்டது. சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதற்கான காரண-நோக்க விளக்கம் சட்ட முன்வடிவுடன் இணைக்கப்பட்ட விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

*1984 ஆம் ஆண்டு பிப்ரவரி 20-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





இப்போது நான் இந்தச் சட்ட முன்வடிவினை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுமாறும் பின்பு நிறைவேற்ற வேண்டும் என்று அவைக்குப் பரிந்துரைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ப. பொன்னுரங்கம் அவர்களுடைய தீர்மானமும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் அவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி. ஆர். தலைமையில் பணியாற்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்திலே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற இந்த மசோதாமீது என்னுடைய கருத்துக்களை எங்கள் கட்சியின் சார்பிலே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பச்சையப்பன் பொறுப்புக் கழகத்தை அரசு கொண்டிருக்கிற இந்த மசோதாவை முதல் முறையாக இந்த மன்றத்திலே வைத்த நேரத்தில் நான் இந்த மன்றத்திலே உரையாற்றினேன். பச்சையப்பன் கல்லூரிக்கு என்று ஒரு பாரம்பரியம் உண்டு. அதற்கு என்று சில கொள்கைகள் உண்டு. "தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவனுக்கொரு குணமுண்டு" என்று நாமக்கல்லார் பாடியதைப்போல, பச்சையப்பன் படிக்கட்டும் பைந்தமிழ் பேசும் என்ற பாரம்பரிய பெருமை உண்டு. அவைகளிலே நீங்கள் கை வைக்கக்கூடாது. அவைகளை நீங்கள் அழிக்கக் கூடாது என்று இந்த மாமன்றத்திலே நான் கேட்டுக் கொண்டேன்.

துணைத் தலைவரவர்களே, நீங்களும் அந்த பச்சையப்பன் பெற்றெடுத்த பிள்ளைகளிலே ஒருவர். நீங்கள் அன்றைக்கு இங்கே உட்கார்ந்து இருக்கும்போது தான் நான் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். எனக்கு தாய், தந்தை இல்லை. ஆனால் என் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் அடுத்தபடியாக உலகிலேயே நான் நேசிப்பது அந்த பச்சையப்பன் கல்லூரி நிறுவனத்தை, அந்தக் கல்லூரியை என்று எடுத்துச் சொன்னேன். அப்போது அமைச்சரவர்கள் இங்கே சொன்னார்கள். அந்த நிர்வாகத்தை அரசு எடுக்கிறது என்றால் அரசாங்கம் நிரந்தரமாக அங்கே கூடாரம் அடித்துக்கொண்டு இருக்காது. வெள்ளைக்காரர்கள் இந்தியாவுக்கு சோப்பு, சீப்பு விற்பவர்களைப்போல வந்து, கும்பேனிக்காரர்களாக வந்து, இந்தியாவைப் பிடித்துக்கொண்டதைப் போல, நிர்வாகச் சீர்திருத்தம் செய்யப் போகிறோமே தவிர, கடைசிவரையில் நாங்கள் அங்கே கூடாரம்

அடித்துவிட மாட்டோம். என்று உறுதியளித்தார்கள். போகிறவர்கள் யார் தெரியுமா? அரசாங்க அதிகாரிகள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள். கையிலே கறை இல்லாதவர்கள், மனதிலே மாசு இல்லாதவர்கள். அவர்கள் எல்லாம் புத்தர் பரம்பரையிலே வந்தவர்களைப்போல அங்கே போகிறார்கள் என்று சொன்னார்கள்.

ஆனால், நான் அமைச்சரைக் கேட்கிறேன். மூன்று ஆண்டுகள் வரையில் அவர்கள் நடத்தி முடித்திருக்கிற தர்பாரைக் கண்டு மன வேதனைப் படுகிறேன். பச்சையப்பன் கல்லூரி நிர்வாகத்திலே நல்லெண்ணங்கொண்டவர்கள் உள்ளங்களை உடைக்கின்ற வகையில் நடந்திருக்கிறார்கள். மேலும் நாசக் காரியங்கள் நடைபெற்ற பிறகும், ஓராண்டு காலம் இன்னும் தேவை என்று அவர்கள் கேட்டிருப்பதை நான் புரிந்து கொள்ள முடியவில்லை. அதைத்தான் என்னுடைய கட்சியின் சார்பிலே எதிர்க்கிறார்கள். இன்றைக்குப் பச்சையப்பன் கல்லூரி நிர்வாகம் க்ஷீண திசை அடைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், எதற்காக இந்த பச்சையப்பன் வள்ளல் இந்தக் கல்வி நிர்வாகத்தை அல்லது இந்த டிரஸ்ட் போர்டை உருவாக்கினார்களோ, என்னென்ன காரண காரியங்களை கண்டுபிடித்தார்களோ, அந்த காரணங்கள் நிறைவேறாமல் அவைகள் எல்லாம் இன்று பட்டுப் போயிருக்கிறது. நம்முடைய பச்சையப்பன் அறக் கட்டளை நிலையம் 125-ஆவது ஆண்டு விழாவிலே, மறைந்த அமரர் மு.வ. கட்டுரையிலிருந்து தெரிவிக்கிறார்கள். 1832-ஆம் ஆண்டில் பச்சையப்பன் சொத்தாக அறக்காப்பாளராக இந்து மதத்தைச் சேர்ந்த 9 பேர்களைக் கொண்ட குழுவை நீதிமன்றத்தில் நியமித்திருக்கிறார்கள். பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த சொத்துக்கள் தமிழகத்தில் மட்டுமல்ல, காசி, பனாரசிலும் விரிந்திருக்கிறது. எனவே இந்தச் சொத்துக்களை நிர்வகிக்க நீதிமன்றம் 9 பேர்களை நியமித்திருக்கிறது. பல்கலைக்கழக செனட்டிலிருந்து 2 பேர்; மாநகராட்சி மன்றத்திலிருந்து 2 பேர்; பழைய, படித்த பட்டம் பெற்ற மாணவர்கள், உங்களைப் போல் எங்களைப் போல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 3 பேர். நம்முடைய பேராசிரியர் மத்தியிலே ஒருவர். இந்த எட்டு பேரும் சேர்ந்து ஒன்பதாவது பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறது. முதலிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, அன்றைய தினம், நம்முடைய முரசொலி மாறன், என். வி. என். சோமு, கபாலி இப்படிப் பல பேர்கள் அதை நிர்வகித்து வந்தார்கள். ஆனால் அன்றைக்கு இரண்டே இரண்டு கல்லூரிகள் இருந்தன. சென்னை பச்சையப்பன் கல்லூரி, காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி. பிறகு கடலூரில் ஒரு கல்லூரி, காஞ்சிபுரத்தில் ஒரு மகளிர் கல்லூரி, கிண்டி செல்லம்மாள் கல்லூரி, கந்தசாமி நாயுடுக் கல்லூரி, இப்படி பல கல்லூரிகள் உருவாகி இருக்கிறது. நாம் வழியிலே பார்க்கிறோம். மவுண்ட் ரோடிலே ஒரு மூன்று





அடுக்கு கட்டிடம் மிக அழகாக கட்டப்பட்டிருக்கிறது. 50 இலட்சம் ரூபாய் கடன் வாங்கப்பட்டு, அந்தக் கட்டிடம் எழுப்பப்பட்டிருக்கிறது. மாதம் ஒன்றுக்கு பல இலட்சக்கணக்கான ரூபாய் வாடகை அதிலிருந்து வருகிறது. 34 இலட்சம் ரூபாய் வாடகை வருஷத்திற்கு வருகிறது பச்சையப்பன் அறக்கட்டளைக்கு. அதெல்லாம் மதிப்பிற்குரிய முரசொலி மாறன் தலைவராக இருந்த காலத்திலே. பிறகு மிசா காலம் வந்தது. பிறகு ஜஸ்டீஸ் சதாசிவம், ஐசரிவேலன் இப்படிப் பட்ட பெரியவர்கள் எல்லாம் அமர்ந்திருக்கிறார்கள். அது சரியில்லை என்று கலைத்து விட்டு, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போட்டார்கள், ஆனால் இன்றைக்கு 34 இலட்சம் ரூபாய் வாடகை வரும் அந்த கட்டிடங்களில் இந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், அரசு அலுவலர்கள், வல்லவர்கள், நல்லவர்கள், தீரர்கள், போய் உட்கார்ந்து என்ன செய்தார்கள்? தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு வாடகைக்கு விட்டார்கள். கரையான் புத்தெடுக்க, கருநாகம் குடி புகுந்ததுபோல் — யாரோ உழைத்து அமைத்த நிர்வாகத்தை, உங்களைப்போல் எங்களைப் போல் நாட்டம் கொண்டவர்கள், அதை சர்வீஸ் கமிஷனிடம் கொடுத்தார்கள். அந்த சர்வீஸ் கமிஷனிடமிருந்து ரூ. 2½ இலட்சம் பாக்கியிருக்கிறது. யாருக்கு? பச்சையப்பன் அறக்கட்டளைக்கு. அதை வசூலிக்கும் திறமை இப்போது பதவி வகிப்பவர்களுக்கு உண்டா என்று உங்களைக் கேட்க ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்ல அதற்கு நம்முடைய அமைச்சர் சொல்வார்கள் — துரைமுருகன் உங்களுக்குத் தெரியாது. பச்சையப்பன் கல்லூரியில் எவ்வளவு தொடர்பு வைத்திருக்கிறீர்கள்? அங்கே இருக்கிற ஆசிரியர்கள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து ஒரு மனு கொடுத்தார்கள்.

(முற்பகல் 11-50)

சம்பளம் கிடைக்கவில்லை என்றார்கள். இவைகளை எல்லாம் யோசித்துத்தான் நாங்கள் இவற்றைப் போட்டோம் என்று, ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும் என்றால், அதற்கான வருவாயைப் பெருக்கியிருக்க வேண்டும். ஆனால் என்ன செய்தார்கள், இந்த அரசாங்கத்திலேயிருந்து போன ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தெரியுமா? என்டோவ்மென்ட்ஃபன்ட், அதை மாற்றவே கூடாது. அதுதான் சட்டம். ஆனால் அந்த என்டோவ்மென்ட் பன்ட்டிலேயிருந்து 26 லட்ச ரூபாயை எடுத்து, ஆத்துலே போற தண்ணியை, ஐயா குடி; அப்பா குடி என்று சொல்லி, இவர்களை சம்பளம் வாங்க வைத்துவிட்டார்கள். நான் கேட்கிறேன். 26 லட்சத்தை என்டோவ்மென்ட் பன்ட்டிலேயிருந்து எடுத்துக் கொடுப்பதற்கு அரசாங்கத்தின் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், பச்சையப்பன் அறக்கட்டளைக்குத் தேவையா? தெருவிலே போகிற குப்பன், சுப்பன் கூட செய்வான் அந்த வேலையை.

[திரு. துரைமுருகன்] [1984 பிப்ரவரி 22

அதுமட்டுமல்ல, நான் கேட்கிறேன். ஒரு தமிழன் தான் உழைத்து சம்பாதித்த பணத்தை, கல்விக்காக, நாட்டு வளர்ச்சிக்காக சேர்த்து வைத்துவிட்டு ஒரு அறக்கட்டளையை உண்டாக்கியிருக்கிறார்கள். ஆனால் அவருக்கு ஒரு 'கம்மமரேசன் டே' ஒரு ஆண்டு விழா, அதுகூட இல்லை. என்றைக்கு அரசாங்க அதிகாரிகள் அந்த இடத்திலே காலெடுத்து வைத்தார்களோ, அன்றைய தின்த்திலிருந்து ஆண்டுவிழா கூட, பச்சையப்பருக்கு நினைவு கூறுகிற அந்த விழாகூட கொண்டாடப்படுவது கிடையாது. கிடையாது என்கிறபோது நம்மைப்போல் அங்கே உற்பத்தியானவர்களுக்கு, இங்கே உட்கார்ந்திருக்கிற கே.ஏ. கிருஷ்ணசாமி போன்றவர்களுக்கு, இங்கே உட்கார்ந்திருக்கிற நாவலர் போன்றவர்களுக்கு, ஒரு காலத்தில் அந்தக் கல்லூரியிலே ஏடு எடுத்து படித்தவர்களுக்கு எல்லாம் இதயம் துடிக்காதா? ஆண்டுக்கு ஒரு முறையேனும் வள்ளல் பச்சையப்பருடைய நினைவுகளைப் போற்ற வேண்டாமா ?

" கொஞ்சும் மொழி கிளியின் நிறம் பச்சையப்பா
அதன் கூட்டைச் சூழ்ந்த இலையின் நிறம் பச்சையப்பா
சேற்று வயலின் நாற்று நிறம் பச்சையப்பா
எங்கள் சேத்துப்பட்டுக் கலைக்கூடம் பச்சையப்பா
பாசி பிடித்த காசின் நிறம் பச்சையப்பா

அதைக்கொண்டு கல்விக்கூடம் வாங்கி வைத்தார் எங்கள் பச்சையப்பா

ஒன்றெல்லாம் புகழ்வோமே, அந்தப் பச்சையப்பரை ஆண்டுக்கு எரு முறை நினைவு கூறுவதற்குக்கூட முடியவில்லை. காரணம் அன்ன தெரியுமா ? இவர்களுக்கு அதனுடைய அருமை புரியாது. எருமை புரியாதது மட்டுமல்ல. இவர்களுக்கு எது வேண்டுமோ அதைச் செய்வதற்கு முற்பட்டுவிட்டார்கள்.

இதிலே ஒரு அதிகாரி. நான் அந்த அதிகாரி மீது எந்தவிதமான தனிப்பட்ட கருத்தும் கொண்டவன் அல்ல. இன்னும் சொல்லப்போனால் நல்ல கருத்தும் கூட கொண்டவன் நான். இதிலே அவருடைய மனைவியின் பெயரில் சாமி நாயக்கன் தெருவிலே, சிந்தாதிரிப் பேட்டையிலே 4 ஆயிரம் சதுர அடி இடத்தை அந்த அம்மையாருக்கு வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். யாருக்கு ? பச்சையப்பன் சொத்து நாசமாகிறது, பறிபோகிறது. நான் அதற்கு வந்து இருக்கிறேன், ஆக்கபூர்வமான வேலை செய்ய வந்திருக்கிறேன் என்று அங்கே நடனம் புரியப் போனாரே ஒரு நடராஜர், அரசாங்க அதிகாரி, அவருடைய துணைவியாருடைய பெயர், பாமாவுக்கு, 4 ஆயிரம் சதுர அடி இடத்தை 500 ரூபாய்



1984 பிப்ரவரி 22] [திரு. துரைமுருகன்]

வாடகைக்கு சிந்தாதிரிப் பேட்டையில் உள்ள சாமி நாயக்கன் தெருவிலே கொடுத்து இருக்கிறார்கள். தலைவர் அவர்களே, ஒரு சதுர அடி 1 ரூபாய் என்றால் கூட 4 ஆயிரம் ரூபாய்க்கு அங்கே போகும். ஒரு சதுர அடி எட்டணாவிற்கு விட்டால் கூட 2 ஆயிரம் ரூபாய் வரும். ஆனால் 500 ரூபாய்க்கு கொடுத்து இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல.. ராஜாத்தி அம்மையார் என்கிறவர் அந்தக் கல்வி நிறுவனத்தின் மீது பற்றுக்கொண்டு, தான் போட்டிருந்த நகைகளையெல்லாம் அங்கே கொடுத்தார்கள்., நம்முடைய அறக்கட்டளைக்கு. அவைகள் எல்லாம் இன்றைக்கு சாமி நாயக்கன் தெருவிலே வைக்கப்பட்டிருக்கிறது. பாமா விஜயம் அங்கே நடந்ததற்குப் பிறகு யாரும் போய் அந்த அம்மாவை ஏம்மா என்று கேட்கவில்லை. கதவை திறக்க முடியாது. ஆகவே, நகைகளும் போச்சு, இடமும் போச்சு, அத்தனையும் போக வைத்து விடக்கூடிய ஒரு கால கட்டத்தைச் செய்திருக்கிறார்கள். இதுதான் அந்த பச்சையப்பருடைய அறக்கட்ளையை திருத்தி, அதைப் புதுப்பித்து அல்லது செம்மைப்படுத்த இந்த அரசு எடுத்த நடவடிக்கையா என்று நான் கேட்கிறேன்.

அதுமட்டுமல்ல. பத்தரையர் தெரு, சைனா பஜாரிலே எல்லப்பன் என்பவர் ஆளும் கட்சி என்கிறார்கள். இருக்கலாம், எதிர்க்கட்சியாகவும் இருக்கலாம். அதைப்பற்றி நான் கவலைப் படவில்லை. ஆனால் 3,700 ரூபாய்க்கு அதற்கு வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். அவர் அதை சப்-லெட்டுக்கு விட்டு, கிட்டத்தட்ட பல் லட்ச ரூபாயை இன்றைக்கு எடுத்திருக்கிறார்கள். அண்ணா பிள்ளைத் தெருவிலே ஏ.எஸ்.ஆர். என்ற கம்பெனிக்கு நம்முடைய பச்சையப்பன் அறக்கட்டளையைச் சேர்ந்த இடத்தை விட்டிருக்கிறார்கள். ஆனால் வாடகை பாக்கி 1 இலட்சம் நிற்கிறது. நான் கேட்கிறேன். சீர்திருத்த வந்த இந்தச் செம்மல்கள், இந்த 1 லட்சத்தை வசூல் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தார்களா ? என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஆண்டுக்காண்டு படித்து பெருமை தரும் அளவிற்கு நல்ல மார்க்குகளை வாங்குகின்றவர்களுக்கு இந்த கம்மமரேசன் விழாவிலே, ஆண்டு விழாவிலேதான் பரிசுகள் தரப்படும். ஆனால் இதுவரையில் பரிசுகள் தரப்படவில்லை.

அதுமட்டுமல்லாமல், செங்கல்வ்ராய நாயக்கர் இன்ஸ்டிடியூட் என்று இதிலே ஒன்று. அந்த செங்கல்வராய நாய்க்கரும் பச்சையப்பரைப் போல் பெரும் பொருள் சேர்த்தவர். நான் கல்லூரியில் படிக்கிறபோது நமக்கெல்லாம் சொல்லிக் கொடுப்பார்கள் செங்கல்வராயர் குளிக்கிறபோது பன்னீரிலே குளிப்பார் என்று சொல்வார்கள். அவ்வளவு செல்வந்தர். அந்தச் செல்வந்தர்,

பிள்ளைகளுக்காக ஒரு இன்ஸ்டிடியூட் வைத்திருக்கிறார்கள். அதேபோல் இந்த பச்சையப்பன் அறக்கட்டளைக்கு பொருளைக் கொடுத்தார்கள். காஞ்சீபுரத்திலே சி.எல்.ஓ. ஃபார் சில்ரன் என்று, குழந்தைகளுக்கு ஒன்று வைத்திருக்கிறார்கள், செங்கல்வ ராய நாயக்கர் அவர்களுடைய பெயராலே. அதிலே ஏழைக் குழந்தைகளுக்கு சாப்பாடு போட்டு, தங்குவதற்கு வசதி செய்து கொடுத்து, படிப்புக்கு வசதி செய்து கொடுத்து என்று கிட்டத் தட்ட ஒரு ஹாஸ்டல் மாதிரி வைத்திருக்கிறார்கள்.

பச்சையப்பன் கல்லூரி அறக் கட்டளையை செம்மை படுத்த வந்த சீலர்கள் என்றைக்கு அடி எடுத்து வைத்தார்களோ அன்றைக்கே செங்கல்வராயருடைய இந்த குழந்தைகள் ஹோமை மூடிவிட்டார்கள். மூடி விட்ட பிறகு என்ன செய்தார்கள்? அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் செய்து கொண்டு போய் விட்டார்கள். அது மட்டும் அல்லாமல் அதனுடைய டிரஸ்ட் போர்டு என்று ஒன்று இருக்கிறதே, அதுதான் அந்த அறக்கட்டளையின் கேந்திரம். எத்தனையோ காலத்திலிருந்து காட்டன் தூரை எல்லாம் இருந்த காலத்தில், அவர்கள் எழுதி வைத்து போன சொத்துக்கள் ரிக்கார்டுகள் எல்லாம் அதில் இருக்கிறது. அந்த சொத்துக்களையெல்லாம் எடுத்து உபயோகித்த கதை, அது பெரும் தனிக் கதை.

ஆனால் அந்த ரெக்கார்டுகள் இருக்கும் டிரஸ்ட் போர்டு எங்கே இருந்தது. எனக்குத் தெரிந்தது பச்சையப்பன் கல்லூரியில் இருந்தது. பச்சையப்பன் கல்லூரிக்குள் அதிகாரிகளால் போக முடியவில்லை. அவர்களைப் பார்த்தாலே ஒரு மாதிரியாக மாணவர்கள் பேச ஆரம்பித்தார்கள். அதோ போகிறது, இதோ வருகிறது என்று அஃறிணையில் எல்லாம் பேச ஆரம்பித்தார்கள். அவர்கள் செய்த அக்கிரமங்களை எல்லாம் பார்த்து. உடனேயே பச்சையப்பன் கல்லூரி டிரஸ்ட் போர்டை எங்கே மாற்றினார்கள் என்றால், சுவாமி நாயக்கன் தெருவுக்கு மாற்றினார்கள். உடனேயே, அங்கேயிருந்து ரிக்கார்டுகள் எல்லாம் ராஜா போனால் பின்னாடியே எல்லோரும் போவார்களே அது மாதிரி பின்னாடியே ரிக்கார்டுகள் எல்லாம் வந்தது. அப்போது சில ரிக்கார்டுகள் அழிந்தது. பிறகு மறுபடியும் சுவாமிநாயக்கன் தெரு சரிப்பட்டு வரவில்லை, ஆகவே ஹேரிங்டன் ரோடுக்கு மாற்றலாம் என்றார்கள். ஹேரிங்டன் ரோடுக்கு போனபோது பாதி ரிக்கார்டுகள் அழிந்தன. அதற்குப் பிறகும் அங்கே போய் என்ன பண்ணினார்கள் என்றால், ரிக்கார்டுகள் பூராவையும் பழைய ரிக்கார்டுகள், தஸ்தாவேஜுகளையெல்லாம் மாட்டுக் கொட்டகையில் போட்டு மழையில் நனைந்து, வெய்யில் காய்ந்து செல்லரித்துப் போகும் வகையில் போட்டிருந்தார்கள்.





பச்சையப்பன் கல்லூரி வரலாற்றையே குழி தோண்டி புதைப்பதற்காகத்தான், இந்த அரசு அதிகாரிகள் வந்திருக்க முடியும் என்ற குற்றச்சாட்டை நான் சுமத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், எந்த ஒரு வருஷமும் நம்முடைய பச்சையப்பன் அறக்கட்டளையினுடைய பட்ஜெட் இருக்கிறதே அதை அட்வகேட் ஜெனரலுக்கு அனுப்ப வேண்டும். ஆனால் இது வரையில், அட்வகேட் ஜெனரலுக்கு அனுப்பவில்லை..........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும். இது பொதுக் கூட்டம் அல்ல.

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, உங்களுக்கு இதிலே இவ்வளவு ஆர்வம் இருப்பதைப் பற்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். என்ன இருந்தாலும் நீங்கள் ஓடிய மண், படித்த மண் அல்லவா அது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** புகுமுக வகுப்பிலிருந்து அங்கே படித்து வந்தவன்தான் நான்.

**திரு. துரைமுருகன் :** தங்களுக்கு இருக்கிற ஆர்வத்தையும் தைரியத்தையும் பார்க்கிறபோது, அது பச்சையப்பன் கல்லூரி மண்ணுக்கு சொந்தம் என்பது சொல்லாமலேயே விளங்கும்.

அது மட்டுமல்ல, தலைவர் அவர்களே, முருகேச நாடார் என்பவர் பெரம்பூரிலே இருக்கிறார்கள். அவர்கள் நம்முடைய பச்சையப்பன் அறக்கட்டளைக்குச் சொந்தமான 12 லட்சம் ரூபாய் சொத்தை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது வரையில் அவர்களிடமிருந்து எந்தவித வாடகையும் வசூலிக்கப் படவில்லை. என்ன செய்துக் கொண்டிருக்கிறார்கள், இந்தச் சீர்திருத்த செம்மல்கள். ஒன்றைத்தான் செய்தார்கள். மாறி மாறி அரசு அதிகாரிகளாக வந்தார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மாறினார்கள். யு. எஸ். நடராஜன் போனார், கருப்பண்ணன் வந்தார், அவர் போனார் அடுத்து நம்முடைய காசி ராஜன் வந்திருக்கிறார். நாளைக்கு போஜராஜன் வருவார். யாரோ திரும்ப திரும்ப வருவார்கள். ஆனால் நிலைமை என்ன? ஒன்றும் நடக்கவில்லை.

அதுமட்டுமல்ல, ஏ. எம். முத்து என்பவருக்கு கௌடியா மடத்திலே, மெயின் ஸ்டீரிட்டிலே — அந்த ஸ்டீரிட்டிலே ஒரு இடத்திற்கு 500 ரூ., 1,000 ரூ. வாடகை வரும். ஆனால் 18 ரூபாய்க்கு கொடுத்திருக்கிறார்கள். இப்படித்தான் இந்த அறக்கட்டளையைச் செய்திருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. துரைமுருகன்] [1984 பிப்ரவரி 22

அப்புக்குட்டி முதலியார் என்று ஒருவர். அவர் மிகவும் நல்லவர். அவர் நம்முடைய டிரஸ்ட்டுக்கு சொத்தை எழுதி வைத்தார்கள். 20 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்து. அவர் சிவலோக பதவி போய்ச சேர்ந்து விட்டார். அவருடைய மனைவி வந்தார். அந்த அம்மா என்ன சொன்னார்கள்? இது என் புருஷன் சொத்து, நான் விற்று விடுகிறேன் என்று சொல்லி, விற்று விட்டார்கள்.

அம்மா, அறக்கட்டளைக்கு கொடுத்துவிட்டார்கள் அம்மா தங்கள் கணவர். ஆகவே உங்களுக்கு விற்க உரிமை கிடையாது அம்மா, என்று உங்கள் திருவாயை திறந்து ஒரு வார்த்தையாவது அந்த அதிகாரிகள் சொன்னது உண்டா ? இல்லை. ஏன்? அவர்களுக்கு அதில் இன்டிரஸ்ட் கிடையாது. அதிலே நீங்களோ அல்லது நானோ, அல்லது இங்கேயிருக்கிற நாவலர் அவர்களோ அல்லது இங்கேயிருக்கிற வெங்கடசுப்பிரமணியம் அவர்களோ, அல்லது பச்சையப்பன் கல்லூரியிலே படித்த யாராவது அந்த இடத்திலே இருந்திருப்பார்களேயானால், அவர்களுக்கு அந்த உணர்வு இருக்கும். தம்மை மீறிய ஒரு உணர்வு, நம்முடைய கல்லூரி, நம்முடைய இன்ஸ்ட்டியூட் என்கிற உணர்வு வந்திருக்கும். அரசு அதிகாரிகளுக்கு, ஏதோ ஒரு பொத்தாம் போக்கு உணர்வு........

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நம் பணம் என்கிற உணர்வும் வந்திருக்கும்.

திரு. துரைமுருகன் : நம் பணம் என்கிற உணர்வு வந்தாலும், எங்களுடைய கல்லூரி என்கிற உணர்வு வருகிறபோது, அதை மிகவும் ஜாக்கிரதையாகச் செய்திருப்பார்கள். இல்லை என்றால் அறக்கட்டளையை எழுதிவைத்துவிட்டு செத்துவிட்டவருடைய மனைவி வந்து அவைகளை விற்றிருப்பார்களா ? ஏன் என்று கேட்காமல் அதைத் தூக்கி மனைவி கையிலே கொடுத்துவிட்டு நிற்பார்களா ? எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்யத் தவறிவிடுகிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இவையெல்லாம் விட்டுப் போய்விட்டது, மறுபடியும் சரிபடுத்தி, செம்மைப்படுத்தி, அந்த நிர்வாகத்தை சீர்திருத்தி, பச்சையப்பன் அவர்கள் என்ன நினைவு கொண்டிருந்தார்களோ, என்ன கனவைக் கண்டிருந்தார்களோ, அதை நினைவாக்கப் போகிறேன் என்று. எங்கள் ஊரிலே ஒருவர் இருந்தார். அவர் ஒரு மாதிரி. அவருக்கு ஒரு அழகான பெண் மனைவி. எங்கள் ஊரிலே இருக்கிற ஒரு வல்லவர், என்ன பண்ணியோ அந்த ஆள் மீது ஒரு பொய் கேசு போட்டு........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்றுத்தானே சொன்னேன் வெளியிலே இருப்பவர்களைப் பற்றி பேசக்கூடாது என்று........



1984 பிப்ரவரி 22]

(நண்பகல் 12–00)

திரு. துரைமுருகன்: ஒரு ஊரிலே என்று தான் சொல்கிறேன், ஒரு ஊரிலே அழகான மனைவி இருந்தாள் அவள்மீது ஒரு வல்லவன், காமுகன் அவனுக்கு ஆசை வந்தது. உடனே என்ன செய்தான், வல்லவன் அல்லவா போலீசிலே சொல்லி பொய் கேஸ் போட்டு கணவனை உள்ளே தள்ளிவிட்டான். உள்ளே தள்ளிவிட்டு உன்னை நான் காப்பாற்றுகிறேன் என்று சொல்லி அந்த காமுகன் அவளை அடைந்த மாதிரி ஏற்கெனவே. நிர்வாகத்திலே இருக்கிறவர்கள் தப்பு செய்கிறார்கள் என்று சொல்லி அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு—கதியற்ற காரிகையை காமுகன் அடைந்ததுபோல் –இந்த பச்சையப்பன் கல்லூரி அதிகாரிகளால் கொள்ளையடிக்கப்படுகிறது. நான் கேட்கிறேன் கல்வியமைச்சர் அவர்களை, இது நியாயந்தானா? நீங்கள் அந்தக் கல்லூரியில் படிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் பச்சையப்பன் கல்லூரியில் படித்த அறிஞர் அண்ணாவின் சீடர் தாங்கள் என்பதை நாம் மறந்துவிடவில்லை. நம்மை ஆளாக்கி உருவாக்கிய அண்ணன் படித்த கல்லூரி அவர் நாடகம் ஆடி காஞ்சிபுரத்திலே பச்சையப்பன் கல்லூரியைக் கட்டினார், அது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இது வரையில் ஒரு இம்ப்ரூவ்மெண்ட் உண்டா? என்ன சாதித்து இருக்கிறீர்கள்? ஒரு எம். எல். சி. உண்டா? வேறு பலவிதமான நன்மைகளை ஏற்படுத்தியது உண்டா? எதுவும் இல்லை. தங்களை நான் கேட்டுக்கொள்ளதெல்லாம்—கல்வியமைச்சர் அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன், தங்கள் மூலயாக அருள்கூர்ந்து இந்த அதிகாரிகள் ஆண்டதுபோதும், அசோகவனம் அழிந்தது போதும், வேலியில்லாத வயலில் இந்த மாடுகள் மேய்ந்தது போதும். எங்கள் பச்சையப்பர் அறக்கட்டளையைக் காப்பாற்ற அதிலே உணர்வு படைத்தவர்களிடம் விடுங்கள். இல்லாவிட்டால் யார் வந்தாலும் பரவாயில்லை, எந்தக் கட்சி வருகிறது என்றுகூட நான் கேட்கமாட்டேன். ஜனநாயகத்திலே அவரவர்களுக்கு உரிமை இருக்கிறது. தேர்தல் வையுங்கள், அந்தத் தேர்தலிலே வந்தவர்கள் அதன் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளட்டும். அதிகாரிகள் இருக்கிறவரையில் நிச்சயமாக அறக்கட்டளைகள் அழிந்தே தீரும். ஊழல் பெருகிப்போய் விடும், நீங்கள் ஊழலை ஒழிக்கப்போகிறேன், ஊரைத் திருத்தப் போகிறேன் என்று வந்து கடைசியிலே எதைச் செய்வீர்களோ ஊழலை வளர்த்து நிர்வாகத்தை அழித்து பச்சையப்பருக்கு ஒரு களங்கத்தை நீங்கள் செய்துவிட்டீர்கள் என்ற அவப்பெயர் உங்களுக்கு வரக்கூடாது என்பதற்காக நல்லெண்ணத்தோடு சொல்கிறேன். இந்த மசோதாவை வற்புறுத்தாதீர்கள் இல்லாவிட்டால் ஒரு ஆண்டு என்கிறீர்களா ? 3 மாதம் போதும். உடனடியாகத் தேர்தல் வையுங்கள். யார் வேண்டுமானாலும் வரட்டும், எனக்கு அக்கறை இல்லை. மீண்டும் நான் சொல்கிறேன். நான் அன்றைக்குச் சொன்னதையே இன்றைக்கும்

சொல்கிறேன். வார்த்தைகளுக்காக அல்ல, அல்லது பேச வேண்டும் என்பதற்காக அல்ல. சத்தியம் செய்து அண்ணாவின்மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். எனக்கு தாய்தந்தைக்கு அடுத்தபடி நான் நேசிக்கிற அந்த நிறுவனம், அதன்மீது பற்றுக்கொண்டிருக்கிறவன் நான், அதை வாழவிடுங்கள் என்று உங்கள் அத்தனை பேரையும் கைகூப்பி கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்

**திரு. ரா. கிருஷ்ணன்:** துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளுதல் சட்டமுன்வடிவை நாங்கள் ஆதரிக்கிறோம். எனக்கு முன்பாகப் பேசியமதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். தங்களுடைய உள்ளடக்கிடக்கையை இங்கே முன்வைத்தார்கள். ஏற்கெனவே இருக்கக்கூடிய பல்வேறு ஊழல்கள், அந்த ஊழல்கள் போக்கப்படவேண்டுமென்பதற்காக ஒரு நிர்வாக மாற்றம். ஆனால் தலைவலிபோய் திருகுவலி வந்ததைப்போல் பல்வேறு உதாரணங்களை அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். இப்படிப்பட்ட நிர்வாகம் அங்கே இருக்குமானால் நிச்சயமாக அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே இருக்கக்கூடிய நிர்வாக அதிகாரிகள் எடுத்திருக்கிற நடவடிக்கைகள், அதனுடைய முன்னேற்றம், இந்த நிர்வாகப் பொறுப்பை எடுத்துக்கொண்டதால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சில மாற்றங்கள் ஏற்கெனவே இதற்கு முன்பாக நடைபெற்ற பல்வேறு ஊழல்கள், திருத்தியமைக்கப்பட்டிருக்கிற பல்வேறு சாதனைகள் இவைகளையெல்லாம் கடந்த 3 ஆண்டுகளாக அங்கே நடைபெற்ற பணிகளைக் குறித்து எல்லாம் இந்த மாமன்றத்திலே ஒரு அறிக்கை வைத்திருக்கலாம், ஆனால் அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை இதுவரையில் எடுக்கப்படவில்லையே ஏன்? இனிமேலாவது அப்படிப்பட்ட ஆய்வறிக்கையை—நுணிக்கை செய்யப்பட்டு அதன்மீது ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டு அதை இந்த மாமன்றத்திலே வைக்கக்கூடிய முறையிலே அதற்குப்பின் இந்த சட்ட முன்வடிவை விவாதிப்பதற்கு ஒரு ஏற்பாடு இருக்குமானால் அது வரவேற்கத்தக்கதாக இருக்கும். இந்த நிர்வாகச் சீர்கேடுகள் பல இருந்தாலும், அதை மாற்றுவதுதான் நியாயமாகும். பச்சையப்பன் பொறுப்புக் கழகம் எந்த நோக்கத்திற்காக அந்த டிரஸ்டை ஏற்படுத்தினார்களோ எந்த நோக்கத்திற்கு அந்தக் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேற்றப்படுவது மிகவும் அவசியம். ஆனால் அதற்கு நேர்மாறாக ஒரு சில தவறுகளை, தங்களுடைய சொந்தக் காரியங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காக எடுக்கப்படுகிற நடவடிக்கைகளை நிச்சயமாக அரசு அனுமதிக்கக்கூடாது. இருக்கக்கூடிய பல்வேறு கல்வி நிறுவனங்கள் அதுவும் குறிப்பாக





தனியார் நிறுவனங்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு குறைந்த மூலதனத்தில் மிகுந்த லாபத்தை அடையக்கூடிய நிறுவனம் என்றுதான் இருக்கின்றன. பல்வேறு நிறுவனங்களை நாம் பார்க்கிறோம். மாணவர்கள் அமைதியின்மை இன்று சுட்டிக்காட்டப்படுகிறது. மாணவர்கள் மீது குற்றம் சாட்டப்படுகிறது. ஆனால் பல கல்லூரி நிறுவனங்களில் நடவடிக்கைகள் காரணமாக அதுவும் அதன் நிர்வாகிகளுடைய போட்டியின் காரணமாக அங்கே பல்வேறு குழப்பங்கள் ஏற்படுகின்றன. விடுதிகளில் குழப்பங்கள், நிர்வாகத்தில் பல்வேறு ஊழல்கள் அரசு வழங்கக்கூடிய உதவித் தொகையில் மோசடிகள் எந்தக் கணக்கும் கேட்க முடியாத ஒரு சூழ்நிலை அப்படி ஏதாவது கேட்டுவிட்டால் மாணவர்களிடையே அமைதி இல்லை என்றும் அவர்கள் கலவரம் செய்கிறார்கள் என்றும் குற்றச்சாட்டைச் சுமத்தி நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய பல்வேறு நிறுவனங்களை நாம் பார்க்கிறோம். ஆக இப்படிப்பட்ட ஒரு போக்குக்கு முற்றுப்புள்ளி வைப்பது மிக அவசியம்.

இங்கே நிருவாக சீர்கேடு இருந்தது ஆகவே அரசு மேற்கொண்டு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. என்று சொல்லப்படுகிறது. இப்படி தமிழகத்தில் பல்வேறு முறைகேடுகளை—தனியார் கல்வி நிறுவனங்கள் இப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபடுகிறார்களே அதையும் இந்த அரசு கவனிக்கவேண்டும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கு கூட சில தனியார் கல்லூரிகளில் முறையாக சம்பளம் வழங்கப்படாத நிலையில் இருக்கிறார்கள். ஏற்கனவே சில பகுதிகளில் கூட வார சம்பள ஏற்பாடுகள் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். ஆனால் அதை வெளியில் சொல்லமுடியாமல் வாய்மூடி மௌனியாக இருக்கக்கூடிய கல்லூரி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட அவல நிலையைப் போக்குவது மிக அவசியம் என்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் குறிப்பாகக் கூறுவது இந்தப் பச்சையப்பன் அறக்கட்டளையைப் பொறுத்தவரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், நிருவாகத்தினுடைய மாற்றங்கள், முறைகேடுகளைச் சீர்திருத்தம் செய்தது என்று சொல்லியிருக்கும் இப்படிப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றி ஒரு ஆய்வு அறிக்கையை உடனடியாக இந்த மன்றத்தில் வைத்து விவாதிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டு இன்று தனியார் கல்லூரிகள் பல்வேறு நிறுவனங்களில் ஊழல்கள் இருக்கின்றன, அப்படிப்பட்ட ஊழல்கள் மலிந்த நிறுவனங்களை அரசு ஏற்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டு அமைகிறேன் நன்றி, வணக்கம்.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் பொறுப்பு கழகத்தை அரசு கையகப் படுத்தி அங்கே இருக்கக்கூடிய நிர்வாக சீர்கேட்டை களைவதற் காகத்தான் எடுத்து இருக்கிறோம் என்று 1980லே ஒரு சட்டத்தை கொண்டு வந்தார்கள். இதே சட்டத்தின் மீது 3 முறைகள் பேசுகின்ற வாய்ப்பை பெற்றவன் என்ற முறையில் நான் கடந்த காலத்தில் நிர்வாக சீர்கேடுகளை எப்படி திருத்தப்படவேண்டும் என்ற கருத்தையும், திட்டங்கள் எப்படி செயல்படுத்தவேண்டும் என்ற கருத்தையும் எடுத்துச் சொன்னோம். அந்த கருத்துக் களுக்கு ஏதாவது பலன் கிடைத்து இருக்கிறதா என்பதைப் பற்றி சொல்லியிருந்தால் நாங்கள் எல்லாம் அதன் மீது கருத்துக்களை சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆனால் இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் எங்களுக்கு கொடுத்து இருக்கிற குறிப்பில் பச்சையப்பன் பொறுப்புக் கழகம் தொடர்பான காரியங்களைச் சரி செய்யவும், மேற்சொன்ன பொறுப்புக்கழகம் நிருவகித்து வந்த பல கல்வி நிறுவனங்களின் நிருவாகத்தை மேலும் சீர் படுத்தவும், மேற்சொன்ன பொறுப்புக்கழகம் செய்ய இருந்த அறக்கட்டளை சமயப்பணிகளை முறையாக மேற்கொள்ளவும் மேற்சொன்ன பொறுப்புக்கழகத்தின் நிதிநிலையை மேம்படுத்த வும் இப்பொறுப்புக்கழகத்தின் பணிகளை நிருவகித்து வந்த அரசு அலுவலர்கள் அடங்கிய நிருவாகக்குழு பல திட்டங்களைத் தீட்டியுள்ளது. ஆயினும் சட்டத் தடைகள் காரணமாகவும். திட்டங்களின் நோக்கங்களில் உள்ள சிக்கல்கள் காரணமாக வும், நிருவாகக்குழுவினர் தீட்டிய சில திட்டங்களும் நோக்கங் களும் இன்னும் எய்தப்பெறவில்லை, என்று கோடிட்டுக் காட்டி யிருக்கிறார்கள். நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து பெற இருக் கின்றவைகள் எல்லாம் எந்த நோக்கத்திற்காக நீங்கள் இவை களை எடுத்தீர்களோ அந்த நோக்கம் எய்தவில்லை என்று நீங்களே சொல்லிவிட்டீர்கள். இந்த நிதிநிலையை மேம்படுத்து வதற்காக நாங்கள் கையகப்படுத்துகிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் திரு துரைமுருகன் அவர்கள் இந்த நிறுவனத்தில் நடைபெற்ற குறைபாடுகள், நிதிநிலையில் நடைபெற்ற நிர்வாகச் சீர்கேடுகள் இவைகளைப் பற்றி எல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள்.

(பிற்பகல் 12—10)

கடந்த பல நேரங்களில் கூட நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஆகவே, இன்றைக்கும் அந்த நிலைமை சீர்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டை உங்கள் மீது சுமத்தக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தக் கல்லூரியில் நடைபெறும் பல்வேறு தவறுகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப் பட்டிருக்கிறேன்.



சென்னையிலே உள்ள பச்சையப்பன் கல்லூரிக்கு ** என்ற குற்றச்சாட்டை நாங்கள் சொல்லவில்லை - நாட்டிலே உள்ள நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. நீங்கள் சொல்லலாம், நாங்கள் ** நியமனம் செய்யவில்லை, ஏற்கனவே தேர்ந்தெடுக் கப்பட்ட பொறுப்புக் கழகம் தான் நியமனம் செய்தது என்று சொல்லலாம். அப்படிப்பட்ட ** இருந்தால் நம்முடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகும் அவர் தொடரலாமா என்றுதான் கேட்க விரும்புகிறேன். அது நிர்வாகச் சீர்கேடு இல்லையா ? அது அதிகார துஷ்பிரயோகம் அல்லவா என்ற குற்றச்சாட்டை நாங்கள் சொல்ல மாட்டோமா ? அந்த நிர்வாகச் சீர்கேட்டை நீங்கள் களைய வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** * * என்று சொல்கிறார்கள். எந்த முறையில் * * * * என்று சொன்னால் நாங்கள் பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும்.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் அரசு அதை மீறி நடக்க முடியாது. ஏதோ சொல்லியிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை விளக்கமாகச் சொன்னால் எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். நீதிமன்றம் தீர்ப்பு சொன்னதற்குப் பிறகு அதை மீறி நடக்க முடியாது. அப்படிச் செய்தால், அரசை நீதிமன்றம் கண்டிக்கும் நிலைமை வரும்.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, நீதிமன்றம் தீர்ப்பு கொடுத்திருப்பதாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீதி மன்றங்கள் தினமும் பற்பல வழக்குகளில் தீர்ப்புக் கொடுத்துக் கொண்டிருக் கின்றன. இந்தத் தீர்ப்பு சம்பந்தமான வழக்கு என்ன, தீர்ப்பு என்ன என்று விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதற்கான விவரங்களை மாண்புமிகு அமைச் சரவர்களிடத்தில் சமர்ப்பிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எப்பொழுது சமர்ப்பிக்கப் போகிறீர்கள் ? நீங்கள் இப்பொழுது சொல்லிவிட்டு ஒன்றரை மணிக்கு வெளியே போய்விடுவீர்கள் ? தனிப்பட்ட நபரைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டீர்கள். அவர் அவையிலே இல்லை.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

** பற்றிய கருத்துக்களை அவைக் குறிப்பிலே யிருந்து நீக்குகிறேன். பேசுவது என்றால் முழுமையும் தெரிந்து பேச வேண்டும். முழுமையும் தெரியாத விஷயங்களைப் பற்றிப் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது.

திரு. மு. அப்பாதுரை : அண்ணா நகரில் உள்ள கந்தசாமி நாயுடு கல்லூரி மாணவர்கள் போராடுகிறார்கள். போதுமான இட வசதி இல்லை என்பது அவர்களின் மிகப் பெரிய குற்றச் சாட்டு. அதை நிவர்த்திக்க வேண்டுமென்று நாங்கள் பலமுறை சொல்லியிருக்கிறோம். அரசுத் துறை நிர்வாகம் வந்த பிறகும் இதுவரையில் அப்படிப்பட்ட குறைபாடுகள் நீக்கப்படவில்லை.

அதைப் போல, காஞ்சீபுரம் ஆண்கள் கல்லூரியில் மாணவர்கள் விடுதி மூடப்பட்டிருக்கிறது. இதனால் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அரசு வழங்கும் மானிய தொகையைக் கூடப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது.

அதைப்போல, மகளிர் கல்லூரியில் இதுவரையில் பல்வேறு துறைகளுக்குப் போதுமான ஆசிரியர்கள், துறைத் தலைவர்கள் நியமிக்கப்படவில்லை என்ற கோரிக்கைக்காகப் போராடு கிறார்கள். நிர்வாகச் சீர்கேட்டைப் போக்குவதற்காக என்று நீங்கள் சொன்ன காரண காரியங்கள் நிறைவேறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள், பச்சையப்பன் அறக் கட்டளைக்கு எந்த அளவிற்குத் தமிழகத்திலும், நாடு பூராவிலும் சொத்துக்கள் இருக்கின்றன. எந்தெந்த வகைகளில் இருக்கின்றன என்று. அப்படிப்பட்ட கணக்குகளை இந்த மா மன்றத்தில் வைப்பதன் மூலம் அந்தச் சொத்துக்களைப் பாது காக்க முடியும். எனவே, அப்படிப்பட்ட நிலைமைகளை உரு வாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பொறுப்புக் கழகத்திற்கு அறங்காவலர்களாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மட்டும் நியமனம் செய்யாமல் ஆசிரியர் களாக இருப்பவர்களையும், அங்கே பணிபுரிகின்றவர்களையும், மாணவர்களையும் சேர்த்துக் கொண்டால் இப்படிப்பட்ட நிர் வாகச் சீர்கேட்டை போக்க முடியும் என்று கூறி அமர்கிறேன்.

* திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் அறக்கட்டளை சம்பந்தமான இந்த மசோதாவின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.





முதலிலே இதிலே நிர்வாக மாற்றம் தேவை என்று அரசு கருதியது. அவ்வாறு அரசு எடுப்பது நல்லது என்று தெரிந்து இந்த அவையிலே ஒத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் இன்று ஓராண்டுக் காலம் நீட்டிப்பு தேவை என்று சொல்லப்படுகின்றது. ஆனால் அந்த நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொண்டதற்குப் பிறகு அங்கே என்னென்ன துறைகளில் நாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்ற குறிப்புக்கள் கிடைத்தால் நாம் விளக்கமாகப் புரிந்து கொள்ள முடியும். முன்பு இருந்த நிலைமை என்ன ; இன்றைய நிலைமை என்ன ; இனி வருங்காலத்தில் என்னென்ன செய்வதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள் அங்கே இருக்கின்ற ஸ்பெஷல் அதிகாரிகள் என்று விளக்கமான முறை யிலே, இங்கே நீட்டிப்பு காலம் கேட்கின்ற நிலைமையிலே சொல்லி இருந்தால் அது மிக நன்றாக இருக்கும். இப்போதும் ஒன்றும் காலதாமதம் ஏற்பட்டு விடவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்வி சம்பந்தமான விஷயங்களில் நல்லதொரு எண்ணத் தோடு நடக்கிறார்கள் என்பதை நான் பாராட்டுகிறேன். ஆகவே இப்போது கூட அவர்கள் சொல்லலாம். என்ன நிலைமையை அங்கு கொண்டு வந்திருக்கிறோம், வருங்காலத்தில் என்ன செய் வோம் என்பதைச் சொன்னால் நன்றாக இருக்கும்.

அடுத்து டிரஸ்ட்கள் என்பனவற்றைப் பொறுத்த வரையிலும், அரசியல்வாதிகள் என்பவர்களைப் பற்றியும் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதற்காக யார் வருத்தப்பட்டாலும் பரவாயில்லை. இன்றைக்கு நாட்டிலே உள்ள நிர்வாகங்களில் இத்தனைக் கேடான காரியங்கள் நடக்கின்றன என்றால் அவற் றுக்கு நாம் தான் பொறுப்பு. அரசியல்வாதிதான் பொறுப்பு. ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்தாலும் இந்த பாவமான காரியத்தைத்தான் நாம் செய்து கொண்டிருக்கி றோம். இளையபெருமாள் உட்பட பொறுப்பு என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று சொல்லக் கடைமைப் பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட ஒரு பாவமான நிலைமை இருக்கின்ற காரணத் தால்தான் உண்மைகளை மறைக்கின்ற நிலைமைக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. இந்தப் பச்சையப்பன் டிரஸ்டிலே அதிகாரி களை நாம் நியமித்திருக்கிறோம். அந்த அதிகாரிகளுக்குத் துணை யாக அதிகார சார்பற்ற ஒருவர் இருவரை ஏன் நியமிக்கக் கூடாது ? ஒருவரே ஒரு நிர்வாகத்தைச் செய்வதை விட ஒரு வருக்கு மேற்பட்டு இருவரோ அதற்கு மேலோ இருந்தால் நன் றாக இருக்கும். அதாவது நல்ல கல்வி வல்லுநர்களாக இருப்பவர் களையோ, நீதிபதிகளாக இருப்பவர்களையோ, அல்லது சமுதாயத்திலே சமூக சேவை செய்கின்ற நல்ல மனிதர் களையோ ஏன் அங்கே நீங்கள் நியமிக்கக்கூடாது ? இப் போதும் ஒன்றும் காலம் கடந்துவிடவில்லை. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் சற்று சிந்தித்துச் செய்தால் அரசுக்கும் நல்ல பெயர் வரும் ; பச்சையப்பன் அறக்கட்டளைக்கும் நல்ல பெயரும்

அங்கே நல்ல நிலைமைகளும் உண்டாகும். எனவே உடனடியாக அங்கே உத்தியோக சார்பற்றவர்களையோ அல்லது ரிட்டையர்ட் ஆன அதிகாரிகளையோ அல்லது சமுதாய சேவை செய்பவர்களையோ,' கல்வி நிலையங்களிலே இருக்கின்ற பெரியவர்களையோ அங்கே நிர்வாகத்திலே உறுப்பினர்களாக ஆக்கினால் மிக நன்றாக இருக்கும். ஒரு நல்லெண்ணம் உருவாகும். அங்கே மாணவர்களின் அமைதியின்மை இருந்தது. இப்போது அதிலே முன்னேற்றம் கண்டிருக்கிறோம். என்பதைப் பெருமையாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அங்கேயுள்ள கட்டிடங்களைப் பொறுத்த வரையில் பராமரிப்பு மிகச் சீர்கேடான நிலைமையில் இருப்பதை நாம் உணரவேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அங்கே இருக்கின்ற அதிகாரியை மட்டும் நான் குறை கூற வில்லை. நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொண்டதற்குப் பிறகு அந்தக் கல்லூரியில் நிர்வாகத் திறமை உள்ளவர்களையோ மற்றவர்களையோ உறுப்பினர்களாக ஆக்கியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆகவே அதிகார சார்பற்றவர்களை மேற்பார்வையாளராக அங்கே நியமித்தால் அவர்கள் நிச்சயமாக நல்ல ஆலோசனைகளைச் சொல்வார்கள். அன்றாடப் பிரச்சினைகளிலே பல மாற்றங்களைச் செய்வதற்கு அவர்கள் உறுதுணையாக இருப்பார்கள்.

குறிப்பாகச் சிதம்பரத்திலே பச்சையப்பன் அறக்கட்டளையை சார்ந்த உயர்நிலைப் பள்ளி மற்றும் ஆரம்பப் பள்ளி இருக்கின்றது. அந்தப் பள்ளிகளிலே இருக்கின்ற ஆசிரியர் பெருமக்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கேயுள்ள கட்டிடங்கள் எல்லாம் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. ஆரம்ப பள்ளிக் கட்டிடம் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாகப் பிரிக்கப்பட்ட நிலையில் தான் இருக்கின்றது. அங்கே எந்த வேலையும் நடக்க வில்லை. எனவே அரசாங்கம் எடுத்துக் கொண்டதற்குப் பிறகாவது அந்த அறக்கட்டளை சார்பான பணிகளை, அதாவது தொழில் நுட்பப் பணியாக இருந்தாலும் மற்ற காரியங்கள் சம்பந்தமான பணியாக இருந்தாலும் அவற்றை உடனடியாகச் செய்ய வேண்டும். ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி அல்லது கல்லூரி சம்பந்தப்பட்ட எந்தப் பணிகளாக இருந்தாலும் அவற்றை எல்லாம் கவனித்து நல்ல முறையில் செயல்படுத்துகின்ற வகையில் ஒரு குழுவினை அமைத்து கண்காணிக்க வேண்டும்.

எனவே அந்த வகையிலே அமைத்து, இப்போது உள்ள நிலைமை என்ன? கடந்த கால நிலைமை என்ன? இனி வருங் காலத்தில் செய்யப் போகின்ற முன்னேற்றங்கள் என்ன என்ற விவரங்களை எல்லாம் தெரிவிக்க வேண்டும்.



இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்களுக்குத் தெரிந்த தகவல்களை அவர்கள் சொல்லி இருப்பார்கள். ஆனால் எனக்கு நிச்சயமாக நம்பிக்கை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் திறமையாக இவற்றை எல்லாம் அதிகாரிகள் மூலம் விசாரித்து ஒரு ரிப்போர்ட்டை இந்த மன்றத்திற்குக் கொடுக்க வேண்டும். இன்ன காரியத்தைச் செய்திருக்கிறோம். அதனால் இன்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்ற விவரத்தைத் தந்தால் அரசுக்கும் நல்ல பெயர் உண்டாகும், பச்சையப்பன் ட்ரஸ்டும் நல்ல நிலைமையிலே இருக்கிறது என்றாகும். எனவே, இனியாவது சிதம்பரத்தில் இருக்கின்ற உயர்நிலைப்பள்ளி, ஆரம்பப்பள்ளி போன்றவற்றிலே செய்ய வேண்டிய பணிகளைச் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.

(பிற்பகல் 12–20)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் அறக்கட்டளையை அரசுக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்திருக்கிற அந்த அதிகாரத்திற்கு மேலும் ஓராண்டுக் காலம் நீட்டிப்புத் தர வேண்டுமென்ற அளவில் இந்தச் சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. இதிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அரசு எடுத்துக்கொண்டதற்குப் பிறகு இந்தப் பொறுப்புக் கழகத்தை நிர்வகிப்பவர்களால் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்க வேண்டும் என்றார்கள். இப்பொழுது இங்கே சில உறுப்பினர்கள் கூறியதைப் போல, பல்வேறு தவறுகள் நடைபெற்றிருக்குமானால் அது மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்றாகும் என்கிற கருத்தினை எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் இந்தப் பொறுப்புக் கழகத்தை எடுத்துக்கொள்ள நேரிட்டதற்கான நிலைமைகள், இந்தப் பச்சையப்பன் கல்வி நிறுவனங்களை நடத்துவதில் பொறுப்புக் கழகம் சரிவர கடமையாற்றவில்லை என்கிற நிலைமைகள் உருவாக்கப்பட்டன. பொதுவாக, ஆசிரியப் பெருமக்களாலும், மற்றவர்களாலும் அந்தக் கருத்துச் சொல்லப்பட்டது. பொதுவாகவே, தனிப்பட்ட கல்லூரிகளை தனியார் கையிலே இருக்கிற கல்வி நிறுவனங்களை எல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற பொதுக் கருத்து பேசப்பட்டு வந்தாலும் அந்தப் பச்சையப்பன் கல்வி நிறுவனங்கள் பொறுப்புக் கழகத்தை எடுக்க வேண்டிய அளவு சில பிரச்னைகளாலே அது மிகவும் கூர்மையாக்கப்பட்டது. அந்த நேரத்திலே இதைத் தவிர வேறு வழியில்லையென்ற நிலைமையிலேதான் நாம் அந்த நிருவாகத்தை எடுத்தோம். அப்படி அந்த நிர்வாகத்தை எடுக்கிற நேரத்திலே ஒரு தேர்தலும் கூட நடைபெற்று சில பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதற்கு முன்னாலே இருந்தப் பொறுப்புக் குழுவிலே யார், யார் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் மிக

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 பிப்ரவரி 22

விளக்கமாகச் சொன்னார்கள். தி. மு. கழகத்திலே இருக்கிற பிரமுகர்கள் சில பேர்கள் அதிலே இருந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு தேர்தல் நடைபெற்று, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர் ஆற்காடு வீராசாமி அவர்கள் போட்டியிட்டு தோல்வியுறவும், அதே நேரத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர் ஐசரி வேலன் வெற்றிபெறவுமான நிலையிலேதான் நாங்கள் அதையும்கூட நினைத்துப் பாராமல் இந்தப் பொறுப்புக் கழகத்தை எடுத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, எங்களுடைய செல்வாக்கு அங்கு இருக்க வேண்டுமென்றோ, அல்லது எங்களுடைய கட்சியினுடைய செல்வாக்கு இருக்க வேண்டுமென்றோ, அல்லது எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்கே இருக்க வேண்டுமென்றோ, அந்த எண்ணத்தின் அடிப்படையில் நாங்கள் செயல்படவில்லையென்பதை அது எடுத்துக் காட்டும் என்று கருதுகிறேன்.

அது மட்டுமல்ல, இந்தப் பொறுப்புக் கழகத்தை எடுத்துக் கொள்ளும்போது அரசு அலுவலர்கள்தான் இருக்க வேண்டுமென்று நாங்கள் செய்தோமே, வேறு பல சந்தர்ப்பங்களிலே அதிகாரிகள் அல்லது நான் அபிஷியல் மெம்பர்ஸ் போடுகிற நிலைமையில், ஒரு நிலைமையை உருவாக்கி, அதில் கட்சிக்காரர்களைக் கொண்டு வந்து திணித்து, அந்தப் பொறுப்புக் கழகத்தை எடுத்து நடத்தாதது அரசினுடைய எண்ணத்தையும் அரசு அந்தப் பொறுப்புக் கழகம் சிறப்பாக நடைபெறவேண்டுமென்பதிலே எடுத்துக் கொண்ட அக்கறையையும் இன்னும் உறுதிப்படுத்தும் என்று நான் நம்புகிறேன். ஆகவே, பொதுவாகவே அரசுடைமையாக்க வேண்டுமென்கிற கொள்கையில் நல்ல ஆர்வமுள்ள யாராக இருந்தாலும் ஒரு தனியார் நிறுவனம், அது பொறுப்புக் கழகமாக இருந்தாலும் அல்லது தனிப்பட்டவர்களிடத்திலே இருந்தாலும், அரசினுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதை நிச்சயமாக ஆதரிப்பார்கள். ஆனால், அரசினுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிறபொழுது ஏதேனும் தவறுகள் நடைபெற்றிருக்குமானால் நிச்சயமாகக் கவனித்து அந்தத் தவறுகளைத் திருத்த முயற்சிப்பார்கள். ஆனால் அதற்கு மாறாக தி. மு. கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அல்லது திராவிட முன்னேற்றக் கழகம், இன்றைக்கு இந்தப் பொறுப்புக் கழகத்தை அரசு எடுத்துக் கொண்டதை நிச்சயமாக இந்தச் சட்ட முன்வடிவு திரும்பப் பெற்றுக்கொண்டு மறுபடியும் பொறுப்புக் கழகத்திற்கே போக வேண்டுமென்று சொல்வது அவர்களுடைய எண்ணத்தின் படி அது சரியாக இருக்கலாமே தவிர, இந்தப் பொதுவான நிலைமையை வைத்துப் பார்க்கும்போது எவ்வளவு ஆண்டுக் காலம் அது அரசினுடைய கையிலே இருக்கிறதோ அந்த அளவிற்கு



1984 பிப்ரவரி 22] [திரு. செ. அரங்கநாயகம்]

அது இந்த மன்றத்தின் கையில் இருப்பதைப் போன்ற உணர்வை நாம் பெறவேண்டும். இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வருவது என்பது நிரந்தரமாக நாம் அரசினுடைய கையிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்பதைப் போல இருந்தாலும், அரசினுடைய எண்ணம் அதுவல்ல என்பதையும் இன்றைக்கு ஓராண்டுக் காலத்திற்கு நாம் நீட்டிப்புக் கேட்பது என்பது இன்னும் ஒரு சில பிரச்னைகளைத் தீர்த்து, பிறகு நாம் தேர்தலை வைத்துக்கொள்ளலாம் என்கின்ற கருத்திலே தான் நாம் ஓராண்டுக் காலம் நீட்டிப்புக் கேட்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பச்சையப்பன் பொறுப்புக் கழகத்தை நாம் எடுக்கிறபோது பொதுவான சில குறைபாடுகளைச் சொல்ல வேண்டுமென்றால் வாடகை வசூலிப்பதில் முறைகேடுகள் இருந்தன. குறைவான வாடகையை வாங்கிக் கொண்டு இருந்தார்கள் என்கிற ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இப்போது கூட சொல்கிறார்கள். குறைவாக வாடகை வாங்கிக்கொண்டிருப்பதிலே ஒரு தவறு நடைபெறலாம். குறைவாக அவர்களிடத்திலே வாங்குவதாகச் சொல்லி விட்டு அதிகமான, வித்தியாசமான பணத்தைத் தனிப்பட்டவர்கள், அங்கே அதிகாரத்தில் இருப்பவர்கள் வாங்கிக் கொள்கிற சூழ்நிலை அதிலே ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்கு இலாபம் இருக்குமானால், வாடகைதாரர்கள் குறைவாகவே வாடகை செலுத்துவதாகச் சொல்லி, அவர்களுடைய ஒத்துழைப்பைக் கொண்டு அந்தத் தவறை செய்து கொண்டிருக்கலாம். அப்படி ஒரு குற்றம் ஏற்பட்டது. நீங்கள் அந்த ஒன்றை வைத்துக்கொண்டு நாம் இப்போது பின்னால் சொல்லவிருக்கிற நிலைமைகளை பார்ப்பீர்களானால் அரசு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் வாடகை பல சந்தர்ப்பங்களிலே உயர்த்தப்பட்டு அதனால் வருமானம் உயர்த்தப்பட்டு, கடன்கள் தீர்க்கப்பட்டு, கட்டப்படாமலிருந்த எண்டோன்மென்ட் பணத்தையெல்லாம் கட்டி, இதற்கும் பிறகு நிதி நிலைமையில் இப்போது நாம் நல்ல முன்னேற்றத்தைப் பெற்று இருக்கிறோம். அந்தச் சில குறிப்பிட்ட விவரங்களைச் சொல்கிறேன். இந்த ஒரு கருத்தைச் சொல்லி ஆதாரங்களை நான் படிக்கிறபோது இந்த மாமன்றத்திலே ஒன்று நிரூபணம் ஆகிறது. அரசு எடுத்துக் கொண்டதற்குப் பிறகு வாடகை உயர்ந்திருக்கிறது என்றால் இந்த ஆதாரத்தை நான் சொல்கிறபோது, அரசினுடைய கட்டுப்பாட்டிற்குள் வந்ததற்குப் பிறகு அந்தக் குறிப்பிடத்தக்க ஊழல் ஏற்படக்கூடிய சூழ்நிலையில் ஒரு ஊழல் தவிர்க்கப்பட்டு கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையாகிறது. அதே சந்தர்ப்பத்திலே இதற்கு முன்னாலே இருந்தவர்கள் காலத்திலே இந்த வாடகை குறித்து சம்பந்தப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக இதற்கு முன்னாலே பொறுப்பிலே இருந்தவர்கள் சரியாக நடக்கவில்லை என்கிற ஒன்றும் அதே சமயத்தில் நிரூபணம் ஆகிவிடுகிறது என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்து இதனுடைய சொத்துக்களைப் பற்றி கூறுகிறபோது இன்றைக்கு நமக்குத் தெரியாமலே கூட சொத்துக்கள் இருக்கலாம் என்ற உணர்வு இருக்கிறது. பல நிலைமைகளைப் பார்க்கிறபோது தண்டையார்பேட்டை சம்பந்தப்பட்ட குறிப்புகளை நான் படிக்கப் போகிறேன். அந்தச் சொத்து பெரிய சொத்துதான். அது கூட சமீபத்தில்தான் நம்முடைய அதிகாரிகளுடைய கவனத்திற்கு வர முடிந்து. அதிகாரிகள் இருக்கிற பைல்களை, இருக்கிற ரெக்கார்டுகளைப் பார்த்துதான் தெரிந்துகொள்ளலாம். சில பைல்களோ, ரெக்கார்டுகளோ அவர்களுடைய கவனத்திற்கு வரவில்லை என்றால் நிச்சயமாக அவர்களாலே சொத்துக்கள் இருக்கிறதா இல்லையா என்று தெரிந்துக்கொள்வதற்கு இந்தக் குறுகிய காலத்திலே ய்ப்பு ஏற்படுவதற்கில்லை. ஆனால் சென்னை நகரத்தைச் வா ந்த பொது வாழ்க்கையில் இருக்கிற நண்பர்கள் பொறுப்புக் கழகத்திலே இருக்கிறபோது அதிகாரிகளைவிட இவர்கள் ஒரு குறிப்பிட்ட விவரத்தைத் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பை பெற்றிருக்கிறார்கள். பொதுமக்களிடத்திலே நல்ல தொடர்பு கொண்டிருக்கிற காரணத்தாலும், சென்னை நகரத்திலே இருந்துகொண்டிருக்கிற காரணத்தாலும், இப்படிப்பட்ட சொத்துக்களைப் பற்றி விவரங்களைத் தெரிந்துகொள்கிற நிலையில் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய காலத்திலேகூட கவனத்திற்கு வராத ஒரு பெரிய சொத்து நம்முடைய கவனத்திற்கு வந்திருக்கிறது என்றால் நாம் அதிகாரிகளைப் பாராட்டுவதா அல்லது இதற்கு முன்னாலே இருந்தவர்களைப் பற்றி சந்தேகப்படுவதா, வருத்தம் தெரிவிப்பதா என்பதைச சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்து பச்சையப்பன் கல்லூரி என்று எடுத்துக்கொண்டால், நானும் பச்சையப்பன் கல்லூரி மாணவன், எனக்குத் தாயும், தந்தையும் பச்சையப்பன் கல்லூரிதான் என்று மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் உரிமையோடு சொல்லிக் கொண்டார்கள். இதற்காக உணர்ச்சிகரமாக வாதாடினார்கள். அந்த அளவிற்கு அந்தக் கல்லூரி மீது அக்கறை அவருக்கு இருப்பதும், ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய ஆதரவு அதற்கு இருக்கிறது என்றும் தெரிகிறபோது நான் உள்ளபடியே மனமார பாராட்டுகிறேன். ஆனால் இருக்கிற விவகாரம் என்னவென்றால் இந்தக் கட்டுப்பாட்டின்கீழ் வருவதற்கு முன்னால், பச்சையப்பன் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதிலே இருந்த தவறுகள் சொல்லி முடியாதவையாகும். அதில் எந்தவிதமான கட்டுப்பாடோ, வரையறையோ இல்லை. அந்தப் பொறுப்புக் கழகத்திலே உறுப்பினர்களாக இருப்பவர்கள் பங்கு போட்டுக்கொண்டு, நான் கேள்விப்படுவது சில பேர் அத்தனை பேரையும் வரச் சொல்லி அங்கே பணத்தை நீ இவ்வளவு கொடு, நீ இவ்வளவு கொடு



என்று சொல்லி அதை மொத்தமாக வசூலித்து சேர்த்தது போன்ற புகார்கள் எல்லாம் பேசப்பட்டு வந்திருக்கின்றன. அந்தக் கல்லூரியிலே மாணவர்களை அனுமதித்ததிலே எந்தவிதமான முறையும் பின்பற்றப்படவில்லை. எந்தவிதமான விதிகளும் பின்பற்றப்படவில்லை; தங்களுக்கு இஷ்டப்பட்டவர்களுக்கு இடங்களைத் தந்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12–30)

கல்வி நிறுவனத்தில் எந்தவகையான பாதிப்பை இது ஏற்படுத்துகிறது என்பதையும் நாம் பார்க்கவேண்டும். இன்றைக்கு அந்தக் கல்வி நிறுவனத்தில் எந்தவிதமான சிபாரிசுக்கும் இடம் இல்லாது நாம் செய்து இருக்கிறோம். செங்கல்வராயன் பாலிடெகனிக் உள்பட நாம் செய்து இருக்கிறோம். தனிப்பட்ட கல்லூரி என்று அது இருப்பதால் மேனேஜ்மென்ட் கோட்டா இருந்தாலும் அதை அரசு பயன்படுத்தவில்லை. அந்த கோட்டா சீட்டிற்கும் விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இன்றைக்கு இருக்கும் பச்சையப்பன் கல்லூரிக்கும் அன்றைக்கு இருந்த பச்சையப்பன் கல்லூரிக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்க்கவேண்டும். இதற்கு முன்னாலே இருந்த பச்சையப்பன் கல்லூரியில் அன்றாடம் கலாட்டா, ஸ்ட்ரைக் போன்றவை நடைபெறும் என்ற எண்ணம்தான் பொதுமக்கள் மனதில் ஏற்பட்டு இருந்தது. ஆனால் இன்றைக்கு நடைபெறும் பச்சையப்பன் கல்லூரி நல்ல கல்லூரி என்ற பெயரை எடுத்து இருக்கிறது என்பதை அறிந்து நான் பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் இப்போது அங்கே படித்துக்கொண்டு இருக்கவில்லை. அது சரியான முறையில் முன்னேறியிருக்கிறது. நான் இதை வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. அதிலே உள்ள உண்மையை நான் சொல்ல விரும்புகிறேன். அது என்னவென்றால், சிபாரிசுகள் அதிகமாக இருக்கும் இடத்தில் அந்த அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுகிறபோது, அங்கேயுள்ள அந்த மாணவர்கள் பொதுவாக கல்வியில் அக்கறையில்லாமல் போராட்டத்தில், அமைதியின்மையில் கருத்தைச் செலுத்துகிறார்கள். அந்த நிலைமையைத்தான் பச்சையப்பன் கல்லூரியைப் பொறுத்தவரையில் நாம் உணர வேண்டியிருக்கிறது. ஆகவே, மாணவர்களைச் சேர்க்கும் நேரத்தில் சில விதிமுறைகளைக் கறாராகப் பயன்படுத்த வேண்டும் என்ற நிலையை எடுத்து இருப்பதால், இன்றைக்கு அந்தக் கல்லூரியில் அமைதியின்மை என்பது போய், மாணவர்கள் நன்றாகப் படிக்கும் ஒரு நல்ல நிலைமையேற்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற இடங்களில் உள்ள நிலைமைகளோடு இதை ஒப்பிட்டுப் பார்த்தால்கூட ஒரு வேளை இங்கே தவறுகள் ஏதாவது நடைபெறுமானால் அந்தத் தவறுகளைத் திருத்திக்கொள்வதற்கும் இது உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 பிப்ரவரி 22

அங்கே முன்னாலே ஒரு கேட் இருந்தது. அதன் காரணமாக பல்வேறு தகராறுகள் பஸ் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்டது. அதை நாம் மூடிவிட்டு சிறிய வாயிலை நாம் வைத்துவிட்டு, வேறு வழியே மாணவர்கள் வரவேண்டும் என்று வைத்து இருக்கிறோம்.

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, கல்லூரி அமைதியாக நடைபெறுகிறது என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது அமைதியாக நடக்கக் கூடாது என்ற எண்ணம் எனக்கும் இல்லை. ஆனால் மாணவர்கள் சேர்ப்பதில் ரூல்ஸ் அன்ட் ரெகுலேஷன் வைத்து இருக்கிறோம். அதனால் பரவாயில்லை என்று சொன்னார்கள். ஒரு காலத்தில் அந்த கல்லூரியில்தான் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கொஞ்சம் பின் தங்கிய நிலையில் மார்க் எடுத்தவர்கள் அங்கே சேரமுடியும் அப்படிப்பட்ட நிலைமை அன்றைக்கு இல்லாமல் இருந்து இருந்தால், பல தாழ்த்தப்பட்ட மக்கள் மேல்கல்வி படித்து இருக்க முடியாது. அன்றைக்கு அப்படிப்பட்ட மாணவர்களுக்குப் புகலிடமாக இருந்தது அந்தப் பச்சையப்பன் கல்லூரி. அங்கேயிருக்கும் பிரின்சிபால் லோயஸ்ட் மார்க் எடுத்தவர்களுக்கு சீட் இல்லை என்று சொல்வார். ஆனால் நிர்வாகக் குழு உறுப்பினர்களின் சிபாரிசின் பேரில் சீட் கொடுப்பார்கள். எனக்குக்கூட முதலில் சீட் இல்லையென்று சொல்லி விட்டார்கள். அதற்குப் பிறகு நான் டிரஸ்டில் இருந்த திரு. நடராஜன் அவர்களைப் போய் பார்த்தேன். அவர்கள் 'ஸ்ட்ராங்கிலி ரெகமென்டெட்' என்று எழுதிக்கொடுத்தார். முதலில் கெமிஸ்டிரி கொடுத்தார்கள். நான் வேண்டாம் என்றவுடனேஷேன் எனக்கு எக்கனாமிக்ஸில் அட்மிஷன் கொடுத்தார்கள். அன்றைக்கு இருந்த புரோபேசர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூட சொல்வார்கள். மற்றவர்கள். குதிரையை குதிரையாக்கிப் பார்ப்பார்கள். ஆனால் இங்கே கழுதையைக் குதிரையாக ஆக்கிப்பார்க்கிறார்கள், என்று சொன்னார்கள். அந்த அளவிற்குக் குறைந்த அளவிற்கு மார்க் எடுத்தவர்களுக்குக் கூட அங்கே அட்மிஷன் கொடுத்து அவர்களையெல்லாம் உருவாக்கினார்கள். ஆனால் அரசாங்கம் இன்றைக்கு என்னவோ ரூல்ஸ் அன்ட் ரெகுலேஷன் என்று கொண்டு வந்து இருப்பதால், குறைந்த அளவு மார்க் வாங்கியவர்க்ள் அங்கே நுழைய முடியாது போய்விடலாம். 51 சதவீதம் மார்க் இருந்தால் போதும் எம். பி. பி. எஸ். அட்மிஷன் கேட்கலாம் என்று இருக்கிறது. அவர்களுக்கு சீட் கிடைத்து இருக்கிறது. அதற்குச் சட்டமும் இடம் கொடுக்கிறது. ஆகவே, இதிலே அமைச்சர் அவர்கள் சொல்கிற கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.



1984 பிப்ரவரி 22]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்கள் சிபாரிசின் அடிப்படையில் சேர்ந்ததாகச் சொன்னார்கள். அதிலே தவறு ஒன்றும் இல்லை. பொதுவாழ்விலே ஈடுபட்டுள்ளவர்கள் இதைத் தவிர வேறு வழியில் போகமுடியாது. அவர்களும் பணம் வாங்கியிருக்கமுடியாது. இவரும் அதைக் கொடுக்கின்ற நிலையில் இருந்து இருக்க முடியாது. ஏழை மாணவர்களுக்குத் தரப்படவேண்டும் என்ற கருத்தில் எனக்கு வேறுபாடு கிடையாது. அதிவும் பின்தங்கியவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதிலும் எனக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. இன்னும் சொல்லப் போனால் இந்த அரசு வந்ததற்குப் பின்னாலேதான் தனியார் கல்லூரிகளிலும் நாம் விகிதாசாரத்தைப் பின்பற்றவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். இதை இந்த அரசு வந்த பின்னாலேதான் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று சொல்லி வருகிறது. நாம் வந்த பிறகுதான், கடந்த கால அனுபவத்தை வைத்துப் பார்க்கும்போது சில சிறுபான்மை கல்லூரிகளும் தவறு செய்கின்றன என்பதைப் பார்த்தோம் ஆனால் ஏழை மாணவர்களைச் சேர்ப்பது என்ற பெயரால் பல தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போழுது அதைத் தவிர்க்கிறோம். விகிதாச்சாரத்தின் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் இடம் கிடைக்கிறது, பின்தங்கிய மாணவர்களுக்கும் இடம் கிடைக்கிறது.

இதிலே இன்னொன்றும் இருக்கிறது. பின்தங்கிய வகுப்பு மாணவர்களின் மார்க்கையும் கருத்தில்கொண்டு அதைப் பின்பற்ற வேண்டும் என்பது ஒரு நல்ல கொள்கைதான். காரணம் நானே ஒரு பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன். ஒரு பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவன் 400 மார்க் வாங்கி, இடம் கிடைக்காமல் இருந்து வேறு ஒரு மாணவன் 200 மார்க் வாங்கியிருந்தாலும் இடம் கிடைத்தது என்றால் நான் அதற்காக வருத்தப்பட முடியுமே தவிர சந்தோஷப்பட முடியாது. காரணம் பின்தங்கிய வகுப்பைச்சேர்ந்த ஒரு திறமையான மாணவனுக்கு இடம் கிடைக்காமல் போய்விட்டதே என்ற வருத்தம். எல்லோருக்கும் அந்த வருத்தம் இருக்க வேண்டும். பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த ஒருவர் பாதிக்கப்படக்கூடிய முறையிலே மார்க்கைப் பார்க்கக்கூடாது என்ற கொள்கை மூலம் தவறு ஏற்படும்; அதற்கு இடம் கொடுக்க கூடாது. அப்படி ஒரு பேச்சும், பிரச்சாரமும் இன்றைக்கு நடத்து கொண்டிருக்கிறது. மார்க்கைப் பார்க்காமல், தகுதியைப் பார்க்காமல் இடம் தரக்கூடாது. பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குள்ளே அதிக மார்க் பெற்றவர்களை, திறமையானவர்களைப் பார்க்க வேண்டும். இல்லை என்றால் தகுதியற்றவர்கள், திறமையற்றவர்கள் இடம் பிடித்துக்கொள்வார்கள். தகுதியையும் திறமையையும் பார்க்கவில்லை என்றால் எந்தக் காலத்திலும் இந்த நாடு உருப்படியாக வழியில்லை. ஆகவே, அதைக் கடைபிடிக்க வேண்டும்.

(திரு. செ. அரங்கநாயகம்) [1984 பிப்ரவரி 22

இங்கே நினைவு நாளைப்பற்றி ஒன்றைச் சொன்னார்கள். இந்த நிர்வாகத்தை அரசு தன்னுடைய கட்டுப்பாட்டில் எடுக்கின்ற வரையில் தனிப்பட்ட சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தப் பொறுப்புக் கழகம் இருந்தது என்பதையும் கடந்து 10 ஆண்டு, 15 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பிரமுகர்களும் இருந்தார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் நினைவில் வைத்துக்கொண்டு நான் சொல்லுகின்ற கருத்தையும் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கோள்கிறேன்.

பச்சையப்பன் அறக்கட்டளையை நிர்வாகம் செய்வது சம்பந்தமாக சென்னை உயர்நீதி மன்றம் ஏற்படுத்திய திட்டத்தின்படி. ஒவ்வொரு ஆண்டும் நினைவு நாள் கொண்டாடப்படுதல் வேண்டும். அந்த நாளில் முந்தைய கணக்கு தணிக்கை சம்பந்தப்பட்ட ஆண்டிற்கான அறிக்கை வெளியிடுதல் வேண்டும். அரசின் நிர்வாகக் குழு பணி மேற்கொண்ட சமயம், முந்தையக் குழு 1975–76 ஆண்டிற்கான கணக்குகளை மட்டுமே முடித்து தணிக்கை செய்து வைத்திருந்தது. அரசின் நிர்வாகக் குழு துரிதப்படுத்தி 1976–77ஆம் ஆண்டு முதல் 1981–82ஆம் ஆண்டு வரைக்கான கணக்குகளை முடித்து தணிக்கை செய்து வைத்துள்ளது. இவ்வருடங்களுக்கான தனி ஆண்டு அறிக்கைகளை அச்சடித்து வருகிறது. இந்த ஆறு ஆண்டுகளுக்கும் சேர்த்து நினைவு நாளை வரும் மார்ச் மாதத்தில் கொண்டாட இருக்கிறது. மேற்கண்ட வருடங்களில் படிப்பில் சிறந்து விளங்கிய மாணவ மாணவியர்களுக்கு அன்றையதினம் தங்க மெடல்களும், பரிசுகளும் வழங்கப்படும். இது அந்தக் குழுவின் சார்பிலே தரப்பட்டிருக்கக்கூடிய பதிலாகும்.

இன்னொரு முக்கியமான குற்றச்சாட்டு என்னவென்றால், ஐ. ஏ. எஸ். அதிகாரியான நடராஜன் மனைவி பெயரால் 500 ரூபாய் வாடகைக்கு ஒரு சொத்து விடப்பட்டிருக்கிறது என்பதாகும். அவர்களுடைய பெயர் திருமதி பத்மா நடராஜன். 500 ரூபாய்க்கு விடப்பட்ருக்கிறது என்பது சரி. ஆனால் எதற்காக தரப்பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் ஒருவேளை இந்த 500 ரூபாய் வாங்குவது கூட தவறு என்று தெரியக்கூடும். எதற்காக, யாருக்கு விடப்பட்டிருக்கிறது என்ற விவரங்களைச் சொல்கிறேன்.

அகில இந்திய மகளிர் சேவை நிறுவனத்தின் கீழ் இயங்கி வரும் தமிழ்நாடு மகளிர் சேவை நிறுவனத்திற்குத்தான் 500 ரூபாய் மாத வாடகைக்குத் தரப்பட்டிருக்கிறது. அகில இந்திய மகளிர் சேவை நிறுவனத்திற்கு பிரதம அமைச்சர்



1984 பிப்ரவரி 22] [திரு. செ. அரங்கநாயகம்]

திருமதி இந்திரா காந்தி அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். தமிழ்நாடு மகளிர் சேவை நிறுவனத்திற்கு திருமதி குரானா தலைவராக இருக்கிறார். இந்தச் சேவை நிறுவனத்திற்குத்தான் 500 ரூபாய் வாடகைக்குத் தந்திருக்கிறோம். தனிப்பட்ட நபருக்கு விடப்படவில்லை.

(பிற்பகல் 12–40).

தமிழ்நாடு மகளிர் சேவை நிறுவனம் 1860ஆம் ஆண்டு சொசைட்டிகள் பதிவு சட்டத்தின் கீழ் 1978-ல் 51ஆம் நம்பராக பதிவு செய்யப்பட்டதாகும். மதிப்பிற்குரிய தமிழ்நாடு சமூக நல அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் இந்த நிறுவனத்தின் ஆதரவாளராக இருக்கிறார். தற்போது செரீப் ஆக உள்ள திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் உதவி இயக்குநராகவும், மனோ பக்தவத்சலம் மற்றும் திருமதி நிர்மலா கோகரன் ஆகியோர் கௌரவச் செயலாளராகவும் பொருளாளராகவும் இருந்து வருகிறார்கள். மேற்படிக் கட்டிடத்தில் இந்த நிறுவனம் ஆடை தைக்கும் தொழில் கிளை ஒன்றை உடல் ஊனமுற்ற மகளிருக்காக நடத்தி வருகிறது. இந்தத் தையல் நிறுவனம் உடல் ஊனமுற்றோர் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது சுமார் 25 உடல் ஊனமுற்ற மகளிருக்கு வேலை கொடுக்கிறது. இந்தக் கிளைக்குத்தான் திருமதி பத்மா நடராசன் பொறுப்பாக இருக்கிறார். மேற்படி நிறுவனம் பொறுப்புக் குழு நிர்ணயித்த வாடகை 500 ரூபாயைக் குறைக்கும்படி கேட்டுக்கொண்டது. ஆனால் அந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இது எந்த வகையில் தவறு என்று தெரியவில்லை. உடல் ஊனமுற்ற பெண்களுக்கு வேலை தந்துகொண்டிருக்கிற, ஊனமுற்ற பெண்களுக்குச் சேவை செய்கிற ஒரு சேவை நிறுவனத்திற்கு 500 ரூபாய் மாத வாடகைக்கு விட்டிருக்கிறார்கள்; அவர்களும் அந்த வாடகையைத் தந்து கொண்டிருக்கிறார்கள். அதைக் குறைக்க சொல்லியும் இந்தப் பொறுப்புக் குழு கேட்கவில்லை என்று சொன்னால், இதில் என்ன ஊழல், இதிலே ஊழல் என்று சொல்வது எந்த அடிப்படையில் இருக்கிறது? இதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்படிப்பட்ட விவரங்கள் இல்லாமல், மக்கள் மத்தியிலே பிரச்சாரம் செய்வது என்பது, இப்படிப்பட்ட பெரியவர்கள் பொதுச் சேவைக்காக வருவது எல்லாம் மனதைப் புண்படுத்துவது ஆகும். அப்படிப்பட்ட தவறைச் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய திட்டங்களைப் பார்த்தால் பெண்களுக்காக என்னென்ன நல்ல காரியங்கள் செய்ய முடியுமோ அவையெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னுடைய கருத்து அவர்கள் வாடகை வாங்காமல் இருந்தால் நல்லது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிப்பட்ட முயற்சி எடுத்துக்கொண்டு, வாடகை இல்லாமல் செய்தால், இந்த நாட்டிலுள்ள தாய்மார்கள் அவரை வாழ்த்துவார்கள்.

(திரு. செ. அரங்கநாயகம்) [1984 பிப்ரவரி 22

பச்சையப்பன் அறக்கட்டளையின் கீழ் பி. கே. வித்யாசாகர முதலியார் எஸ்டேட்டைச் சேர்ந்த சென்னை பெரம்பூர் மாதவரம் நெடுஞ்சாலை நெம்பர் 117 ஆம் வீட்டில் முருகேச நாடார் என்பவர் சட்ட விரோதமாக ஆக்கிரமித்து உள்ளதாகவும், அவரை அப்புறப்படுத்த ஏற்கெனவே எடுக்கப்பட்டிருந்த சட்ட நடவடிக்கைகளை நிர்வாகக் குழு தொடராமல் விட்டுவிட்டது என்பது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும்.

மேற்படி எஸ்டேட் 5-4-1974 இல் எடுக்கப்பட்டது. அதற்கு முன்பே திரு. முருகேசன் என்பவர் மேற்படி வீட்டில் குடியிருந்திருக்கிறார். ஆனால் அவர் வாடகை ஏதும் தருவதில்லை. 16-1-1975 இல் வக்கீல் நோட்டீஸ் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தும், அவரை அப்புறப்படுத்த, முந்தைய அறங்காவல் குழு 1980 வரை தக்க நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டது. 1975 ஆம் ஆண்டிலே வக்கீல் நோட்டீஸ் தந்தும், 1980 ஆம் ஆண்டு வரை நடவடிக்கை எடுக்காமல், முந்தைய அறங்காவல் குழு எப்படி தடுக்கப்பட்டது? எப்படி அவர்களால் தடுக்கப்பட்டார்கள் என்பதுதான் நமக்குத் தெரியாமல் இருக்கிறது.

மேற்படி நபருக்கு சட்டபூர்வ தாக்கீதுகள் 1-6-1981 6-6-1981 மற்றும் 1-6-1982 ஆகிய தேதிகளில் அனுப்பப்பட்டுள்ளன.

இதிலே இன்னொன்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். வாடகைதாரர் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறதே அது இப்படிப்பட்ட சிலருக்குப் பயன்படுகின்ற அளவிலே இருக்கிறது.

1982 மார்ச் மாதத்தில் திரு. முருகேசன் அவர்கள் அறக்கட்டளையின் அனுமதியின்றி ஓர் ஓடு கட்டிடம் எழுப்பினார். 7-4-1982 இல் இதைப்பற்றி சென்னை மாநகர் ஆணையர் அவர்களுக்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க முறையிடப்பட்டுள்ளது. மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே நாம் அவர்களை விட்டுவிடவில்லை.

இன்னொன்று கௌடியாமடம் சாலையிலுள்ள கட்டிடம் ஒன்றைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே வாடகை எப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்கிறார்கள்.



1984 பிப்ரவரி 22] [திரு. செ. அரங்கநாயகம்]

| வாடகைதாரர் பெயர். | அனுபவத்தில் உள்ள விஸ்திரணம். | பழைய வாடகை. | புதிய வாடகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ச. அடி. | ரூ. | ரூ. |
| எஸ். எம். கமலக்கண்ணன் (வாடகைதாரர் பெயர் மாற்றம்). | 208 | 55 | 240 |
| கே. எஸ். மணி .. .. | 206 | 50 | 205 |
| எம். கிருஷ்ணன் .. .. | 64 | 32 | 60 |
| எ. ஷண்முகம் .. .. .. | 39 | 23 | 35 |
| சி. அய்யநார்சாமி (வாடகைதாரர் பெயர் மாற்றம்). | 164 | 50 | 150 |
| ஆர். சுந்தரவடிவேலு நாயகர் .. | 212 | 22 | 280 |

திரு. எம். ஏ. முத்து என்பவருக்கு ரூ. 18 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அவர் ரூ. 50 ஆக கொடுக்க சம்மதித்த நேரத்தில், பச்சையப்பன் அறக்கட்டளை ரூ. 18 கொடுத்தால் போதும் என்று பழைய வாடகையை நிர்ணயித்து இருந்தது. இந்தக் குழு பொறுப்பேற்ற பிறகு ரூ. 165 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவர் அதையும் தராமல் முயற்சி எடுக்கிற காரணத்தால் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக அப்புக்குட்டி முதலியார் உயில். அந்த உயிலில் சொத்தின் மதிப்பு உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆயலூர் முத்தைய முதலித் தெரு, 12 ஆம் நம்பர் வீடு, மற்றும் 10, வரத ஐயர் தெரு, சென்னை 1 ஆகிய இரு வீடுகளை, தன் மகள் எல்லம்மாளுக்கும், மற்றொரு வீட்டை (36, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளத் தெரு, சென்னை-1) தன் மனைவியின் சகோதரியின் மகள் இலக்குமிபாய் என்பவருக்கும் எழுதி வைத்திருக்கிறார். மேற்கூறிய

இருவரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் அனுபவிக்கலாம் என்றும் தங்களுக்குப் பிறகு அவர்கள் ஆண், பெண் சந்ததிகள், சமமாக அனுபவிக்கலாம் என்றும், அவர்களுக்கு சந்ததிகள் இல்லாமற்போனால் அவர்கள் ஜீவிய காலத்திற்குப் பிறகு சொத்துக்கள் பச்சையப்பன் அற நிலையத்திற்குச் சேர வேண்டியது என்பவைகள் உயிலின் நிபந்தனைகளாகும். இதிலே ஒரு பிரச்சினை, அவர்களுக்கு சந்ததி இல்லை என்றால்தான் பச்சையப்பன் அறக் கட்டளைக்கு அந்தச் சொத்து சேரும். ஆகவே சந்ததிகள் இருந்தால் சேராது. சந்ததிகள் என்பது 20 வயதிலேயும் குழந்தை பிறக்கலாம். 25 வயதிலேயும் பிறக்கலாம். இப்போது சில சமயம் 50, 55 வயதிலேகூட பிறந்து விடுகிறது. ஆகவே எதை வைத்துக் கொண்டு, எப்படி இந்தப் பிரச்சினையை அணுகுவது என்பதைத்தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திருமதி இலக்குமிபாய் திருமணமாகி குழந்தைகள் பெற்று இருக்கிறார். அந்த அம்மாளுக்கு கிடைத்த வீட்டை சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு திரு. ஏ. டி. வெங்கடேசன் என்ற நபருக்கு விற்று விட்டதாகத் தெரிய வருகிறது. திருமதி எல்லம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட இரு வீடுகளில், நம்பர் 12, ஆயலூர் முத்தைய முதலி தெரு வீட்டை 15-12-1965 ஆம் நாளிலேயே திருமதி எல்லம்மாள் விற்று விட்டார். அதாவது இந்தப் பொறுப்புக் குழு வருவதற்கு அதிக நாட்களுக்கு முன்னதாகவே திருமதி எல்லம்மாள் விற்று விட்டார்கள். அதாவது மேலே குறிப்பிட்ட உயிலின் தகவல் இக் குழுவிற்கு கிடைக்கும் முன்பே விற்கப்பட்டது. அதுதான் நாம் கவனிக்க வேண்டிய ஒன்று. இப்படி எல்லாம் இருக்கிறது என்கிற விவரம் நமக்குக் கிடைப்பதற்கு முன்பே அந்தச் சொத்துக்கள் விற்கப்பட்டு இருக்கின்றன.

உயிலின் தகவல் பச்சையப்பன் அற நிலையத்திற்கு 21-5-1976 இல் தான் தெரிய வந்திருக்கிறது. மிஞ்சியுள்ள ஒரு வீடு அதாவது நம்பர் 10 (புதிய எண் 8) வரதையர் தெரு, விற்கப்படாமல் பழைய நிலையிலேயே இன்னும் இருக்கிறது. அது இன்னும் விற்கப்படவில்லை. திருமதி எல்லம்மாள் அவர்கள் மேற்படி 10 வரதையர் தெரு வீட்டை அனுபவித்து வருகிறார். மேற்படி வீடு அந்த அம்மாள் காலத்திற்குப் பிறகுதான் பச்சையப்பன் அற நிலையத்திற்குச் சேரும் என்பதுதான் இப்போது இருக்கிற நிலைமை ஆகும்.

ஆகவே 1962 இல் மேற்படி எல்லம்மாள் தான் வீட்டை விற்கப் போகிறார், என வதந்தி கிடைத்தபோது, ஆங்கிலம் மற்றும் தமிழ் தினசரி பத்திரிகைகளில் ஓர் விளம்பரம் நிர்வாகக் குழுவினரால் பிரசுரம் செய்யப்பட்டு இருக்கிறது. பழைய நிர்வாகக் குழு. இதன்படி எல்லம்மாளுக்கு வீட்டை விற்க உரிமையில்லை அதனை வாங்கினால் செல்லாது என பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டு இருக்கிறது.





அடுத்து, இன்னொன்று, திரு. எல்லப்பன் என்பவரைப் பற்றிச் சொன்னார்கள். பச்சையப்பன் அற நிலையத்தைச் சார்ந்த சென்னை பத்திரியன் தெரு, 12 ஆம் எண் கட்டிடத்தை ஆளும கட்சியைச் சேர்நத அங்கத்தினர் திரு. கே. எல்லப்பன் என்பவர் ஆக்கிரமித்துள்ளதாகவும, அதனால் அறக் கட்டளைக்கு ரூ. 2 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் இதைப்பற்றி 9-6-1983 இல் தினசரியில் விளம்பரப்படுத்திய பிறகும், அறக் கட்டளையின் நிர்வாகக் குழு திரு. எல்லப்பனை வெளியேற்ற நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என புகார் இருக்கிறது.

மேற்படி கட்டிடத்தை ஸ்ரீஇராஜ இராஜேஸ்வரி கம்பைன்ஸ் அண்டு பிரிண்டர்சின் உரிமையாளர் திரு. ராஜவேலு என்பவருக்கு 9-2-1972 முதல் வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. பழைய குழுவினரால் 9-2-1972 இல் வாடகைக்கு தந்திருக்கிறார்கள். முந்தைய அறங்காவலர் குழு 1-2-1978 முதல் அந்தக் கட்டிடத்திற்கு மாத வாடகை 450 ரூபாயாக நிர்ணயித்திருக்கிறார்கள். மறுபடியும் 1-1-1979 முதல் வாடகை ரூ. 600 ஆக நிர்ணயித்தபோது வாடகைதாரர் அதிகப்படியான வாடகை கொடுக்க மறுத்து வந்திருக்கிறார்.

தற்போதைய நிர்வாகக் குழு பொறுப்பு ஏற்ற பிறகு வாடகையை மாற்றி அமைக்க 17-8-1981 அன்று வாடகைதாரரை அழைத்து விசாரித்தபோது வாடகைதாரர் நிலுவையிலிருந்த வாடகை பாக்கியை செலுத்த இரண்டு மாதம் அவகாசம் பெற்றுச் சென்றவர், நிலுவை வாடகையையும் செலுத்தவில்லை, வாடகை மாற்றல் விசாரணைக்கும வரவில்லை.

மேற்கொண்டு விசாரித்ததில், திரு. ராஜவேலு மற்ற இரு நபர்களோடு, திரு. என். பாலன், திரு. துரைசாமி, சேர்ந்து கூட்டாக அச்சுத் தொழில் நடத்தியதாகவும், புதியதாகச்சேர்ந்த பங்குதாரர்கள் அச்சு இயந்திரங்களை எடுத்துச் சென்று விட்டதாகவும் தெரிய வந்தது. 31-5-1983 வரை மேற்படி வாடகைதாரர் ரூ. 10,950-ஐ நிலுவையில் வைத்திருநதார். புதிய பங்குதாரர்களை 17-6-1983 அன்று அழைத்து விசாரணை செய்யப்பட்டது. விசாரணையில் ஏற்பட்ட உடன்படிக்கையின் வாடகைதாரர் பழைய பாக்கி ரூபாய் 10,950 செலுத்தி விட்டு புதிய வாடகையை நிர்ணயித்துக் கொள்ள ஒப்புக் கொண் அதன்படி பழைய வாடகை பாக்கி முழுவதும் பெறப்பட்டுவிட்டது. புதிய வாடகையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 பிப்ரவரி 22

இந்நிலையில் திரு. எல்லப்பன் அவர்கள் கட்டிடத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளார் என்பது தவறாகும். திரு. எல்லப்பன் என்பவர் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி கம்பைன்ஸ் அண்டு பிரிண்டர்ஸ் பங்குதாரர்களில் ஒருவரான திரு. என் பாலன் என்பவருக்கு உறவினராவார் என்பது தான் இதிலே தெரிந்துக் கொள்ள வேண்டிய ஒன்றே தவிர, அவர் பெயரிலே இல்லை. ஆகவே அந்தக் கட்டிடம் சம்பந்தமாக குழு எடுத்துக் கொண்ட முயற்சியிலே 10 ஆயிரம் ரூபாய் வசூல் ஆகியிருக்கிறது. மேற் கொண்டு அந்த வாடகையை உயர்த்துவதற்கு நடவடிக்கையை எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

இப்படி பல்வேறு சொத்துக்களைப் பற்றி நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஏதேனும் சொத்துக்கள் இருக்குமா என்பதைப் பற்றியும் கவனத்தோடு பார்த்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே இந்தப் பொறுப்புக் குழுவிற்கு பதிலாக அரசினுடைய குழு, அரசு குழு வந்ததற்குப் பிறகு இப்படி பல முன்னேற்றங்களை நாம் செய்திருக்கிறோம். ஆனால் இவைகளைப் பற்றி தவறான கருத்துக்களை நாம் வெளியே சொல்வதன் மூலம் அரசு எடுத்திருக்கிற நடவடிக்கையினாலே ஏற்படக்கூடிய பயன் பாதிக்கப்படக் கூடாது என்பது தான் என்னுடைய வேண்டுகோளாகும். இப்படி நல்ல முறையிலே ஒரு நல்ல எண்ணத்தோடு அதிகாரிகள் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள்.

(பிற்பகல் 12—50)

இதிலே இருக்கின்ற குறைகளை எடுத்துச் சொல்லக்கூடாது என்ற நிலைமையிலே நானும் இல்லை. அரசும் இல்லை. அதிகாரிகளும் இல்லை. நீங்கள் குற்றச்சாட்டுக்களையோ, புகார்களைகளையோ சொன்னால், அதை விசாரித்து உள்ளபடியே அந்த குறைபாடுகளை தீர்ப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்ற உறுதியை இந்த அவையிலே இப்போது தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எங்களுக்கு எந்த விதமான வேறு எண்ணமும் கிடையாது என்பதையும் இங்கே தெளிவாகச் சொல்லிக் கொள்ள விழைகிறேன். இங்கே வாடகை வருமானம் உயர்ந்திருக்கிறது. மாணவர்களுடைய படிப்பிலும், பயிலுகின்ற நிலைமையிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், அரசு வகுத்திருக்கும் விகிதாசார அடிப்படையில் மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்ற விதிக்கு, மாறாக, ஒரு கல்லூரி தலைவர் நடந்துக் கொண்ட போது, அந்தக் கல்லூரித் தலைவர் மீது நடவடிக்கையையும் எடுத்திருக்கிறோம். அந்த அளவுக்கு சிபாரிசு உள்ளே புகாமல் நாம் பார்த்துக் கொண்டு வருகிறோம். இவையெல்லாம் வைத்து பார்க்கிறபோது, இதற்கு முன்னாலே இருந்ததை விட, அரசினுடைய கட்டுப்பாட்டுக்கு கீழே வந்த பிறகு நல்லபடியாகத்தான் இது மாறியிருக்கிறது என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.......



1984 பிப்ரவரி 22]

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, விகிதாச்சாரப்படி மாணவர்களைப் போடுவது என்கிற வார்த்தைகளை அமைச்சர் அவர்கள் திருப்பி திருப்பிச் சொல்லி வருகிறார்கள். நாங்கள் அதை வரவேற்கிறோம். ஆனால், பிரைவேட் காலேஜ்களில் ஸ்டூடண்ட்ஸ்ஸை சேர்ப்பதிலே மட்டும் விகிதாச்சாரத்தை கடைப்பிடிக்கின்ற கல்லூரிகள், டீச்சர்ஸ் அப்பாயின்ட்மென்டிலே அந்த விகிதாச்சாரத்தைக் கடைப் பிடிக்கிறார்களா ? பச்சையப்பன் காலேஜை விட்டு விட்டு பார்த்தாலும், வைஷ்ணவா காலேஜ், விவேகானந்தா காலேஜ் போன்ற கல்லூரிகளில் எல்லாம் இந்த விகிதாச்சார முறைப்படி அரிசனங்களை எடுக்கிறார்களா ? பச்சையப்பாவிலே ஒரே ஒருவர் மட்டும் இருக்கிறார், ஆனால், மற்றப் பெரிய காலேஜ்களில் எல்லாம் இப்படி எடுக்கிறார்களா ? எனவே, மாணவர்களைச் சேர்ப்பதில் எப்படி இந்த பிரதிநிதித்துவ அடிப்படையை வைத்து எடுக்கிறார்களோ, அதேபோல பிரைவேட் கல்லூரிகளில் ஆசிரியர்களை நியமிப்பதில், இந்த விகிதாச்சார முறை பின்பற்றப் படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்களை எடுப்பதிலும் அந்த விதி முறைகளை பின்பற்ற வேண்டும் என்று தான் சொல்லியிருக்கிறோம். எங்காவது அப்படித் தவறியிருக்கிறார்கள் என்றால் விசாரிக்கலாம். பச்சையப்பன் கல்லூரியில் ஒருவர் தானே இருக்கிறார் என்ற கேள்வியை அவர் கேட்க கூடாது. கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களோ, காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களோ கேட்கலாம். ஏனெனில், அந்த நிர்வாகத்தில் 10, 15 ஆண்டுகள் இருந்துவிட்டு, அந்த நிர்வாகத்தில் இருக்கிற பெரிய குறைபாட்டை அவரே எடுத்துச் சொல்வது என்பது....

திரு. துரைமுருகன் : திராவிட முன்னேற்றக் கழகம் 1975 வரைதான் இருந்தது. அதற்குப்பிறகு நான் சொன்ன மாதிரி மாபெரும் மனிதர்கள் ஜஸ்டிஸ் சதாசிவம், ஐஸரி வேலன் போன்றவர்கள் வந்தார்கள். அவர்களையெல்லாம் கூட விட்டு விடலாம். சீர்திருத்தச் செம்மல்கள் அரசாங்க அதிகாரிகள் போனார்களே இவர்கள் எடுத்த நடவடிக்கை என்ன ?

I am not asking particularly for Pachaiyappas. In the whole of Madras . . .

எத்தனையோ காலேஜ்கள் இருக்கின்றன சென்னையிலே. வைஷ்ணவா காலேஜ் இல்லையா, விவகானந்தா காலேஜ் இல்லையா ? அவைகளிலே ஆசிரியர்களை, பேராசிரியர்களை நியமிப்பதில், இந்த விகிதாச்சாரம் கடைபிடிக்கப்படுகிறதா என்று நான் கேட்கிறேன். இதை நான் உங்களை யெல்லாம் குற்றஞ்சாட்டிச் சொல்லவில்லை, பதிலுக்கு எங்களை குற்றஞ்சாட்டி நீங்கள்

சொல்வதற்கு பொதுப்படையாகக் கேட்கிறேன். மாணவர்களை சேர்ப்பதிலே எப்படி இந்த பிரதிநிதித்துவம் நிச்சயமாக கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்கிறீர்களோ, அப்படியே, பேராசிரியர்கள் அப்பாய்ன்ட்மெண்டிலேயும், நடைமுறைப்படுத்தி கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்கிறேனே தவிர, வேறு அல்ல.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அந்தக் கருத்திலே எந்தவிதமான வித்தியாசமும் கிடையாது அப்படித்தான் எடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். எடுக்காமல் எங்காவது இருந்தால் அது தவறு என்றும் சொல்கிறோம். அடுத்து, இங்கே பச்சையப்பன் கல்லூரியைப் பொறுத்தவரையில், என்ன நடைபெற்று இருக்கிறது என்றால், பொறுப்புக் குழு இருந்த நேரத்தில் போஸ்ட்களே இல்லாமல், அவர்கள் பாட்டுக்கு சிபாரிசின் பேரில் 10, 15 பேர்களை பணியில் சேர்த்துவிட்டிருக்கிறார்கள். இந்த அரசுக்கட்டுப்பாட்டின் கீழ் வந்த பிறகு, அதைக் கண்டுபிடித்து, அந்த 10, 15 பேர்களை வேலை நீக்கம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதிலும், அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு பதவி தர வேண்டும் என்பதற்காக, அவர்களாகவே, பதவிகளை ஏற்படுத்தி செய்து தந்திருக்கிறார்கள். அப்படி 10, 12 பேர்களையும் நீக்கியிருக்கிறோம்.

அதைப்போலவே, அரசு அல்லாத ஊழியர்களிலும் தங்களுக்கு வேண்டியவர்களை சேர்க்க வேண்டும் என்பதற்காக, எந்தவிதமான முறையும் இல்லாமல் சேர்த்திருக்கிற அந்தக் குறைபாட்டைச் செய்திருக்கிறார்கள். அந்த நேரங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் சமூகத்தில் இருந்து, வேண்டியவர்கள் என்ற முறையிலாவது சேர்க்கப்பட்டிருந்தால், அதைக்கூட தனியாக எடுத்து விதிவிலக்கு தந்து வாய்ப்பைத் தந்திருக்கலாம். இன்னும் சொல்லப்போனால், இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான், பல்கலைக் கழகத்திலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு வாய்ப்பு தரவேண்டும், என்று சொல்லி, முயற்சி எடுத்துக்கொண்ட பிறகுதான், பல்கலைக் கழகத்திலே தாழ்த்தப்பட்டவர்கள் பேராசிரியர்களாக வரக்கூடிய வாய்ப்பு வந்தது. ஏன் பல்கலைக் கழக துணை வேந்தரையே, தாழ்த்தப்பட்டவர்களில் இருந்து வரக் கூடிய வாய்ப்பையும் நாம் பெற்றிருக்கிறோம். ஆகவே, அந்த விகிதாச்சாரத்தைப் பொறுத்தமட்டில் அரசு மிகவும் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இந்த பச்சையப்பன் அறக்கட்டளையை அரசு எடுத்துக் கொண்டதற்குப் பிறகு இருந்த குறைபாடுகள் நீக்கப்படுகின்றன. இருந்த நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது. சில அதிகாரிகள் மீது புகார்கள் சொல்வதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்பதையும் அவை உண்மைக்குப் புறம்பானவை



என்பதையும் நான் சில விவரங்களைச் சொல்லியதிலிருந்து இந்த மன்றம் தெரிந்திருக்கும். ஆகவே, அந்த அடிப்படையில் ஒரு ஆண்டுக்காலம் அது அரசினுடைய கட்டுப்பாட்டில் இருப்பதற்கு இந்த சட்டமுன்வடிவை ஏகமனதாக ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். சிதம்பரத்திலே ஹைஸ்கூல், எலிமெண்டரி ஸ்கூல், செகண்டரி ஸ்கூல் எடுத்து 1970—லிருந்து கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறதே, அவற்றை உடனடியாக எடுத்துச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது வருமானம் வந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால் அவர்கள் நிச்சயமாகச் செய்வார்கள்.

**திரு. ப. நெடுமாறன் :** பச்சையப்பன் அறக்கட்டளை சட்டத்தைத் திருத்தும்போது டிரஸ்ட் போர்டில் ஆசிரியர்களை பிரதிநிதிகள் இருக்கின்ற முறையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பச்சையப்பன் அறக்கட்டளை சிறப்பாக நடைபெறவேண்டுமானால் எப்படிப்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதையும் அவர்களுக்கு எப்படிப்பட்டவர்கள ஓட்டுப் போடவேண்டுமென்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தப்பானவர்கள் வரக்கூடிய முறையிலே ஓட்டுப் போடுகிறவர்கள் செய்துவிடக்கூடாது என்ற முறையில் அப்படி வாக்காளர்கள் அமைந்துவிடுவார்களானால் நல்லவர்கள் வரமுடியாத நிலைமை இருக்குமானால் அதையும்கூட தவிர்ப்பதற்கு அரசு முயற்சி செய்யும்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது உண்மைக்கு மாறான தகவலைச் சொல்வதாகச் சொல்கிறார்கள். அந்த நிர்வாகம் அதிகாரிகளின் கைக்கு வந்தபிறகு அட்மிஷனிலே தவறு நடக்கிறது. என்னால் இன்ஸ்டன்ஸ் சொல்ல முடியும். டெக்னிக்கல் இன்ஸ்டிட்யூட் போன்ற இடங்களில் சென்னையிலே அட்மிஷனுக்கு ரேட் பேசப்படுகிறது. இந்த நிலையில் அதிகாரிகளிடம் அதைக் கொண்டுவரவேண்டுமென்று சொல்கிற இந்தச் சட்டத்திற்கு என்னுடைய டிஸ் அப்ருவலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்): பேரவை முன்னுள்ள கேள்வி :

"1984 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 9/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன், "1984 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1984) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) தொலைக்காட்சியில் வீடியோ கேசட் ரெக்காடர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப் படுத்துதல்) சட்டமுன்வடிவு 1984.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1984-ஐ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முன்மொழிவார்.

திரு. அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

N point of order in this. This is a Legislative business which is independent of the High Court.



திரு. அ. ரகுமான்கான் : நான் என்ன சொல்கிறேன் என்று சொன்ன பிறகு தீர்ப்பைக் கொடுங்கள். ஏனென்றால் மூவ் பண்ணிவிட்டால் இது அவையின் புராப்பர்ட்டி ஆகிவிடுகிறது. தயவுசெய்து சொல்வதைக் கேட்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

மாண்புமிகு பேரவைத துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் டெலிவிஷன் திரைகளில் சினிமாப் படம் காட்டப்படுவதை முறைப்படுத்துகின்ற ஒரு மசோதாவை இங்கே கொண்டுவந்து நிறைவேற்ற இருக்கிறார்கள். இன்றைக்கு அந்தச் சட்டத்தினுடைய முக்கியமான பிரிவுக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதி சத்தியதேவ் அவர்களால் அதற்கு தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. அந்தத் தடையை நீக்கக்கோரி அரசாங்கத்தின் சார்பாக மனு செய்யப்படவில்லை. இரண்டாவது அந்தப் பகுதியை எடுத்து விடுகிறோம் என்ற அறிவிப்பும் இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அதை இங்கே விவாதிப்பதற்கு உரிமை உண்டா என்பதை தாங்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இங்கே அரசாங்கம் கொண்டு வரக்கூடிய எந்த ஆர்டினன்ஸ் மீதும் நீதிமன்றத்திற்கு போகலாம். நீதிமன்றத்தின் தீர்ப்பு அதற்கு எதிராக இருந்தாலும் கூட நாம் இங்கே விவாதித்து பாஸ் செய்யலாம்.

Legislative business is independent. This is suprem . Nobody can int rfere and nobody is above this Body.

மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் திரைப்படங்கள் காட்டுதல் சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

---

** 1984-ஆம் ஆண்டு பிப்ரவரி 20-ஆம் தேசிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(திரு. என். எஸ். வி. சித்தன்) [1984 பிப்ரவரி 22

இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இந்தச் சட்ட முன்வடிவு இப்போது முன்மொழியப் பெற்று மாமன்றத்தினுடைய ஆய்வில் இருந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் எத்தனையோ முக்கியமான பிரச்சினைகளுக்கிடையே இந்த நேரத்தில் இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. நான் கேட்க விரும்புகிறேன், இந்த மாதிரியான சட்ட முன்வடிவு ஒரு மசோதா இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலாவது இருக்கிறதா ? அல்லது மக்கள் ஆட்சி ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு எந்த தேசத்திலாவது இந்த மாதிரி சட்டம் கொண்டுவரப்பட்டு அதன்மூலமாக நாம் விரும்பிய பயன்கள் வந்து இருக்கின்றனவா என்ற விவரத்தை நான் முதற்கண் கேட்க விரும்புகிறேன். நம்முடைய அரசு சினிமாத் தொழிலுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று விரும்புகிறது. ஆனால், அதே நேரத்தில் அரசுக்கு கிடைக்கின்ற கேளிக்கை வரி குறைந்து விடுகிறது என்பதால் இந்த மாமன்றத்தில் இரு வேறு கருத்துக்கள் நிச்சயமாக இருக்கமுடியாது. ஆனால், இன்றைக்கு பொதுவாகவே டி.வி. மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருக்கிறது. டி.வி. வருகின்ற நேரத்தில் சினிமாவுக்கான வருமானம் போய்விடும் என்று முன்னால் ஒரு கருத்து சொல்லப்பட்டது. ஆனால், இன்றைக்கு அதே நேரத்தில் சினிமாவின் வருமானம் குறையாத நிலையில் மக்கள் டி.வி. மூலமாக தாங்கள் விரும்புகின்ற காட்சிகளை பல்வேறு காட்சிகளை பார்த்து பொழுதை போக்குகின்ற நிலை வந்து இருக்கின்றது. ஆனால், நாங்கள் மெத்த கவலைப்படுவது எல்லாம் இந்த சட்ட முன்வடிவின் நலன் அரசாங்கம் எதிர்பார்க்கின்ற வருவாய் வருமா அல்லது அரசு எதிர்பார்க்கின்ற சினிமாவுக்கு பாதுகாப்பு கொடுத்துவிட முடியுமா என்பதுதான் எங்களுக்கு ஐயமாக இருக்கிறது. அதற்கு இவ்வளவு விரிவான சட்ட முன்வடிவு தேவையா என்று முதலில் கேட்க விரும்புகிறேன்.

வீடியோ என்பது பொதுவாக தமிழகத்திலே மட்டுமல்லாமல், பரவலாக உலகம் முழுவதும் செல்வாக்கு பெற்ற பொழுதுபோக்கு அம்சமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் வீடியோவைப் பற்றி இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவது, ஏற்கெனவே காவல் துறைக்குக் கொடுத்திருக்கின்ற அதிகாரங்களை இன்னும் அதிகமாக்கி, அதன் மூலம் மக்களுக்குத் தொல்லைகள், கஷ்டங்கள் வருமோ என்று நான் அஞ்சுகிறேன்.



1984 பிப்ரவரி 22] [திரு. என். எஸ். வி. சித்தன்]

இதில் உள்ள பல்வேறு அம்சங்களையும், பிரிவுகளையும் பார்த்தால் இலஞ்ச ஊழலுக்கு வழி வகுப்பதாகவும், காவலர்களுக்கு அதிகாரத்தை இன்னும் அதிகமாகக் கொடுக்கின்ற கூரான ஆயுதமாகவும் அமையும் விதத்திலும் இருக்கின்றது. இதனால் காவலர்கள் மக்களுக்கு தொல்லை கொடுக்கும் நிலைமை வருமோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

இதிலேகூட பிரிவுவாரியாக எடுத்துக் கொள்வோமேயானால், 3. (1) (பி) என்ற பிரிவைப் பார்த்தால், '' எந்த ஒரு நபராலும் எந்த நேரத்திலும் வீடியோ கேசட் ரிக்கார்டர் (காணொலிச் சுருள் பேழை) மூலம் தொலைக் காட்சியில் திரைப்படம் காட்டுவதைத் தவிர வேறு தொழில் எதுவும் செய்யக் கூடாது '' என்று வந்திருக்கிறது.

அதைப் போலவே, 4. (1) பிரிவில். ''இச் சட்டத்தில் வேறு வகையில் ஏற்பாடு செய்திருந்தாலன்றி மற்றப்படி, இச்சட்டத்தின் கீழும் அதற்கிணங்கவும் உரிமம் வழங்கப்பட்டிருந்தாலன்றி மற்றபடி, எவரும் வீடியோ அகம் (காணொலிக் களஞ்சியம்,) நடத்தலாகாது'' என்று இருக்கிறது.

அதைப் போலவே, வீடியோ அகம் ஒவ்வொன்றுக்கும் உரிமம் பெற வேண்டுமென்று விளக்கம் கூறப்பட்டிருக்கிறது.

6-வது பிரிவில், உரிமம் வழங்கும் அதிகாரியின் அதிகாரம் தொடர்பான வரையறைகள் என்பதுபற்றிக் கூறும்பொழுது பொதுவாக பொதுமக்களின் நலன் பாதிக்கப்படும் என்று கருதினால் அனுமதி மறுக்கலாம் என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் வேக்-ஆன உட்பிரிவாகும். இதன் மூலம் எவரும் எந்தக் காரணத்தைக் காட்டியும் உரிமம் வழங்க மறுக்கலாம் என்பது இந்த உட்பிரிவின் மூலம் தெரிகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எனவே, இதில் உள்ள பல்வேறு உட்பிரிவுகளைப் பார்க்கின்ற நேரத்தில் ஏதோ வீடியோ காட்டுவதற்கான வரையறைகள் மாதிரி இந்த விதிகள் தெரியவில்லை. ஏதோ சினிமாவிற்கோ அல்லது பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுகின்ற இடங்களுக்கோ விதிக்கப்படும் விதிமுறைகளைப் போல இருக்கின்றன. அவ்வாறு கொடுத்து, இவ்வளவு அதிகாரங்கள் இதில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இசைவுக் கடிதம் என்று இருக்கின்ற 9-வது பிரிவில் உட்பிரிவு 1(பி) யில் ''குடும்ப உறுப்பினர்களுக்குத் திரைப்படம் போட்டுக் காட்ட அனுமதிக்கப்பட்டவருமான ஒவ்வொருவரும், தான் காட்டும் ஒவ்வொரு திரைப்படத்தைக் பொறுத்தமட்டில், அதனைக் காட்டுவதற்கு, 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டத்தின்

17-ஆம் பிரிவின்படி (மத்தியச் சட்டம் 14/1967) திரைப்படப் பதிப்புரிமையில் முதல் சொந்தக்காரரிடமிருந்து அந்தப் பதிப்புரிமை மேற்படிச் சட்டத்தின் 18-ஆம் பிரிவின்படி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தால் அந்தப் பதிப்புரிமை ஒப்படை பெற்ற இசைவுக் கடிதத்தை இது சார்பாக அரசால் அதிகாரம் பெற்ற அதிகாரி கேட்கும்போது காட்ட வேண்டும்'' என்று சொல்கிறது.

இந்த உட்பிரிவுதான், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் சுட்டிக் காட்டியதைப் போன்று, நீதி மன்றத்தில் இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

இப்படிப்பட்ட உட்பிரிவைப் போடுவது தனி மனித உரிமைகளை மீறுவது ஆகாதா? உரிமையைப் பறிப்பதாக ஆகாதா? இந்தக் காரணத்தைக் காட்டி காவல்துறை அதிகாரிகள் தொல்லைபடுத்த வழிவகுக்காதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இன்னொரு உட்பிரிவின்படி, வாரண்ட் இல்லாமலேயே கைது செய்யலாம் என்று இருப்பதாக நான் அறிகிறேன். இப்படிப்பட்ட பல்வேறு பிரிவுகள் வீடியோ கேசட் சம்பந்தமான இந்தச் சட்ட முன்வடிவில் வந்திருக்கின்றன. நான் உங்கள் மூலமாக அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10).

பொதுவாக வீடியோ மூலமாக பால் உணர்ச்சிகளைத் தூண்டுகின்ற அல்லது சென்சார் செய்யப்படாத படங்களைக் காட்டுவதைத் தடுப்பதற்காக இது கொண்டுவரப்படுகின்றது என்றால் ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்திலேயே அதற்கான விதிமுறைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஏதோ வருவாய் வரவில்லை என்ற ஒரு காரணத்தைக் காட்டி இதனைக் கொண்டுவருவது என்பது பொது மக்களுக்குத் தொல்லை விளைவிக்கக் கூடியதாகும். எனவே அப்படிப்பட்ட ஒரு சட்டமுன்வடிவு தேவையில்லை. வேண்டுமானால் சுருக்கமாக ஒரு சட்ட முன்வடிவைக் கொடுக்கலாம். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தின் தற்காலிகத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சென்னை போன்ற பெரிய நகரங்களில் வீடியோ கேஸட் ரிக்கார்டர் மூலமும், தொலைக் காட்சி மூலமும் சினிமா படங்களைப் பார்த்து மக்கள் மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.



ஆனால் அரசாங்கத்திற்குச் சில தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதாவது அப்படிப் போடுகின்றவர்கள் எந்த விதமான லைசன்சும் இல்லாமல், போடுகிறார்கள்; தணிக்கை செய்யப்படாத படங்களைப் போடுகிறார்கள்; இன்னும் சொல்லப் போனால் மிகவும் ஆபாசமானவை என்று சொல்லப்படுகின்ற ப்ளு பிலிம் படங்கள்கூட காட்டப்படுகின்ற நிலைமைகள் இன்றைக்கு இருக்கின்றன; எனவே அதை ஒழுங்குபடுத்த வேண்டும். இந்தப் படங்களைத் திரையிடுவதற்கு சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும்; வீடியோ கேசட் லைப்ரரி என்று வைக்கப்பட்டிருக்கின்ற லைப்ரரி மூலமாக திரையிடுவதற்கென்று பல வீடியோ கேசட்டுகளை அவர்கள் வாடகைக்கு கொடுக்கக் கூடிய அமைப்புக்கள் இருக்கின்றன. அதுவும் லைசன்ஸ் இல்லாமல் நடைபெறுகின்றன; அவை தவறான வழிமுறைகளுக்கு இடம் கொடுக்கும்: அடுத்து சினிமாத் துறையின் மூலம் அரசாங்திற்கு வரவேண்டிய பணம் வராமல் போய் நஷ்டம் ஏற்படுகின்றது இவற்றுக்கெல்லாம் லைசன்ஸ் வாங்குகின்ற முறை இல்லாததன் காரணத்தால் அந்தக் கட்டணத்தின் மூலம் அரசாங்கத்திற்கு வருகின்ற வருமானம் வராமல் இருக்கின்றது; இப்படி அரசாங்கம் ஆற அமரச் சிந்தித்து இவற்றை எல்லாம் முறைப்படுத்துகின்ற வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாக காரண காரிய விளக்கத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது.

இதிலே நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். பொது இடங்களில் படம் காட்டுபவர்கள் லைசன்ஸ் இல்லாமல் காட்டக் கூடாது; அதிகாரிகளிடத்திலே லைசன்ஸ் பெற்றுத்தான் படங்களைக் காட்ட வேண்டும்; அப்படிக் காட்டுகின்ற படங்களும் சர்ட்டிபைட் படங்களாக அதாவது அனுமதிக்கப்பட்ட படங்களாக இருக்க வேண்டும்; அதைப் போலவே வீடியோ கேசட் லைப்ரரி என்பதை நடத்துவதற்கும் அனுமதி வேண்டும் என்றெல்லாம் கூறி இதன்படி செய்யாவிட்டால் என்ன தண்டனை என்றால் ஒரு வருடம் ஜெயில்; ஒரு ஆயிரம் ரூபாய் அபராதம்; காட்டப்படுகின்ற படம் அனுமதிக்கப்பட்ட படமாக இல்லை என்றால் மூன்று மாதம் ஜெயில்; இதுபோன்ற திட்டங்களையும், சட்டங்களையும் கொண்டுவந்துவிட்டு கடைசியாக என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டால் இந்தச் சட்டத்தின்படி அரசாங்கம் விரும்பினால் யாருக்கு வேண்டுமானாலும் விதிவிலக்கு வழங்கலாம் என்று கூறினால் அதற்கு என்ன அர்த்தம்? அதாவது அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் விரும்பினால் அல்லது சர்க்காரிலே இருப்பவர்கள் விரும்பினால் லைசன்ஸ் இல்லாமலேயே பொது இடங்களில் சினிமா படம் காட்டலாம்; வீடியோ கேஸட் லைப்ரரியை லைசன்ஸ் பெறாமல் நடத்தலாம்; சர்ட்டிபைட் படமாக இல்லாததை அதாவது ப்ளூஃபிலிமைக்கூட ஆளும் கட்சியினைச் சேர்ந்தவர்கள் விரும்பினால் காட்டுவதற்கு அனுமதி கொடுக்கலாம் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

[திரு. அ. ரகுமான்கான்] [1984 பிப்ரவரி 22

அதாவது இவ்வளவு தண்டனை என்றெல்லாம் ஊருக்குச் சொல்லிவிட்டு, அதனை மக்களுக்குச் சொல்லிவிட்டு, ஆனால் நாங்கள் விரும்பினால் யாருக்கு வேண்டுமானாலும் விதிவிலக்கு கொடுக்கலாம் என்று ஒரு ஷரத்து கொண்டுவந்திருக்கிறீர்களே; நான் கேட்கிறேன், இது ஏமாற்றுகின்ற காரியம் இல்லையா? இது டிஸ்கிரிமினேஷன் இல்லையா? அதாவது உங்கள் கட்சிக்காரர்கள் விரும்பினால்—நான் உங்கள் கட்சிக்காரர்கள் ப்ளு பிலிம் போடுவதாகச் சொல்லவில்லை, விரும்பினால்—அவர்களுக்கு அதற்கு அனுமதி கொடுக்கலாம என்ற வகையிலே அவர்களைக் காப்பற்ற இது உதவாதா? லைசன்ஸ் வாங்காமலே வீடியோ கேசட் லைப்ரரி நடத்துகின்றவர்களை, ஏமாற்றுகின்றவர்களைக் காப்பற்றறுவதற்கு இந்த ஷரத்து பயன்படாதா? பொது இடங்களில் லைசன்ஸ் இல்லாமல் படம் போடுகின்றவர்களைக் காப்பாற்ற இந்த ஷரத்து பயன்படாதா? ஆகவே விதிவிலக்கு அதிகாரத்தை அரசாங்கம் விரும்பினால் தரலாம் என்றால் என்ன அர்த்தம்? அதிலே உள்ள ரகசியம் என்ன? அதிலே என்ன விசேஷம் இருக்கின்றது? இது யாரை மிரட்ட? படங்கள் போடுகின்ற பட முதலாளிகளை மிரட்டவா? அல்லது படங்களை வைத்து வியாபாரம் செய்கின்றவர்களை மிரட்டவா? அல்லது வேறுவிதமான பலன்களைப் பெறுவதற்காகவா? இந்த ஷரத்து சரிதானா? எனவே இப்படிப்பட்ட எண்ணத்தோடு இந்த சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்ற வகையிலே கொண்டுவந்திருக்கிறீர்களோ என்று எண்ணுகின்றபோது சந்தேகமாக இருக்கின்றது.

அடுத்து, இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்குச் சொல்கிறார்கள், படம் போடுபவர்கள் இந்த வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம்—டெலிவிஷன் மூலம் திரைப்படம் போடுபவர்கள் என்ன செய்ய வேண்டுமாம். முதலிலே யார் அந்தப் படத்தினுடைய சொந்தக்காரரோ, யார் ஓனரோ, யார் ப்ரடியூசரோ, அவரிடத்திலே அந்த காப்பிரைட் வாங்க வேண்டுமாம். சென்ட்ரல் ஆக்ட் காப்பிரைட்டை அந்தப் படத்திற்கு முதல் சொந்தக்காரர் யாரோ, அவரிட மிருந்து வாங்க வேண்டுமாம். சரி, ஒத்துக்கொள்கிறேன். இப்பொழுது இந்த அமைப்பின் மூலம் இங்கிலீஷ் படம் போடு கிறோம். இங்கிலீஷ் படத்திற்கு யாரிடத்திலே போய் அந்த கன்செண்ட் லெட்டர் வாங்குவது, காப்பிரைட் லெட்டர் எங் கிருந்து வாங்குவார்கள். தயவுசெய்து அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆங்கிலப் படத்திற்குப் ப்ரடியூசர் யார்? ஓனர் யார்? அவரிடத் திலேயிருந்து எப்படி காப்பிரைட் வாங்குவது? எப்படி கன் செண்ட் லெட்டர் பெறுவது என்பதற்கு அமைச்சர் விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1984 பிப்ரவரி 22] [திரு. அ. ரகுமான்கான்]

அதைப் போலவே, இன்றைக்குப் படத்தைத் தயார் செய்பவர்கள் காப்பிரைட்டை டிஸ்ட்ரிபியூட்டர்களிடம் கொடுக்கிறார்கள். அவர்களிடத்திலே இருந்து இன்றைக்கு அந்த உரிமையைப் படம் போடுபவர்கள் வாங்க வேண்டுமென்று சொன்னால் நடைமுறையிலே எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னொன்று. டெலிவிஷனிலே நல்ல கதையம்சம் சில நேரங்களிலே நாடகமாகக் காட்டப்படுகிறது. அப்படி நாடகமாகக் காட்டப்படுகிறபொழுது, இந்தியாவின் பிரஜை தன்னுடைய விருப்பத்திற்குத் தகுந்தபடி அல்லது வீடியோ கேசட்டிலே ரெக்கார்ட் செய்தபடி போட்டுப் பார்த்து மகிழ விரும்புகிறார். அப்படியானால் அந்த காப்பிரைட்டை எங்கே போய் வாங்குவது? ஆகவே, இந்த நடைமுறையால் சிக்கல் எவ்வளவு ஏற்படும், எவ்வளவு சிரமம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னொன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன், இதிலே அரசாங்கம் விரும்பினால் அரசாங்கம் சட்டம் போட்டால் இன்ன படம்தான் காட்ட வேண்டும், இன்ன படம் காட்டக் கூடாது என்று உத்தரவு போடுகின்ற அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறதாம். அப்படியானால் தங்களுக்குப் பிடித்தம் இல்லாதவர்களைப் பழிவாங்குவதற்கு, வீடியோ கேசட் ரெக்கார்டர் மூலம், டெலிவிஷனிலே இந்தப் படம் காட்டக் கூடாது என்று உத்தரவு போட முடியும். இதன் மூலமாக, எவ்வளவு பேர்களுக்குப் பாதகம் ஏற்படும்? நீங்கள் படம் எடுக்கிற பட முதலாளிகளை எல்லாம் உங்கள் கைக்குள்ளே கொண்டு வருவதற்கான ஏற்பாடுதானே இது. நீங்கள் விரும்பினால் படம் பார்க்க அனுமதிப்பீர்கள். நீங்கள் 'பிரீச் ஆப் பப்ளிக்பீஸ்'—அமைதிக்குப் பங்கம் விளைவிக்கிறது என்று அமைச்சர் கருதினால் உடனே படம் போடக் கூடாது. அமைதிக்குச் சௌகரியமாக இருக்கிறது என்று சொன்னால் சர்க்கார் அனுமதிக்கலாம் என்ற அந்த அதிகாரம் இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இது சரியல்ல என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னொன்றையும் இங்கே சொல்ல விரும்புகிறேன், லைசன்ஸ் தரும் அதிகாரத்தை யாரிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். மெட்ராசிலே போலீஸ் கமிஷனர், மாவட்டத்திலே மாவட்ட கலெக்டர்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம். அதிலே நான் பகிரங்கமாகச் சொல்கிறேன், மிகப்பெரிய ஊழலுக்கு இதிலே சாத்தியக் கூறுகள் உண்டு. என்ன காரணம் என்பதை நான் சொல்கிறேன். லைசன்ஸ் எந்த கூட்டங்களில் மறுக்கலாம் என்ற ஒரு பிரிவு இருக்கிறது. அதிலே என்ன சொல்கிறீர்கள் என்றால், மக்களுடைய நன்மையைக் கருதி இந்த மாதிரி வீடியே

லைப்ரரி வைப்பதற்கு உங்களுக்கு அனுமதி இல்லை, பொது இடங்களில் சினிமா காட்ட அனுமதி இல்லை என்று பொது மக்கள் நன்மையைக் கருதி உத்தரவிடலாம். இப்படிக் கூட போலீஸ் கமிஷனர் சொல்லலாம். மாவட்ட கலெக்டர் சொல்லலாம். காரணம் கேட்க முடியாது. ஒரே வரியில் 'இன் த இன்டரஸ்ட் ஆப் த பப்ளிக்' என்று சொல்லலாம். லைசென்ஸ் பெறுவதிலே எவ்வளவு சிக்கல் இருக்கிறது? அதைப் போலவே, பிரிவியஸ் எக்ஸ்பீரியன்ஸ் ஆப் த அப்ளிகேன்ட். ஒருவர் மனு செய்கிறார் என்றால், அவருடைய கடந்த கால அனுபவம் என்ன என்று கேட்பாராம். அந்த அனுபவத்தை அறிவாராம். ரிஷி மூலம், நதி மூலம் கேட்பாராம். அதைச் சொல்லியதற்குப் பிறகுதான் திருப்தி அடைந்ததற்குப் பிறகு, மாவட்டக் கலெக்டரோ, போலீஸ் கமிஷனரோ, என்ன செய்வாராம்? இந்த லைசென்சைக் கொடுப்பாராம். அது மட்டுமல்ல.

'conduct of the applicant, payment of tax due to Government'

அதோடு நிறுத்துகிறார்கள். இந்த வீடியோ காசட் லைப்ரரி வைப்பதற்கும்,

(பிற்பகல் 1-20)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்**: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே விவாதத்திலே ஈடுபடுகிற உறுப்பினர்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டும், நம்முடைய அவையின் நேரத்தைக் கருதியும் ஒரு விளக்கத்தைச் சொல்லி விடுகிறேன். இந்த சட்ட முன் வடிவிலே இருக்கிற அத்தனை பிரிவுகளும் இப்போது நாட்டிலே இருக்கிற, அமல்படுத்தப்படுகிற 'சினிமாட்டாகிராப் ரெகுலேஷன் ஆக்ட்' என்று சொல்லப்படுகிற, திரைப்படக் கொட்டகைகளை நடத்துவதற்காக நாம் இன்றைக்கு வைத்துக் கொண்டிருக்கிற அந்த சட்டப் பிரிவுகள் தான் அப்படியே இதிலே இருக்கின்றன. ஆகவே தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழைய குப்பையைக் கிளறுவது போல 30 ஆண்டுகாலமாக அமலில் இருக்கிற சட்டத்தைப்பற்றி இங்கே ஆராய்ந்துக் கொண்டிருக்கத் தேவையில்லை. அந்தச் சட்டத்தை அப்படியே இந்த 'வீடியோ கேசட் ரெக்கார்டர்' என்பதற்கு தமிழக அரசு, இந்த சட்டமன்றம், இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றுவதன் மூலம் இந்தியாவிற்கே வழி காட்டப் போகிறது. ஆகவே இப்போது இருக்கிற திரைப்படம் ஒழுங்குப்படுத்துதல் சட்டம் என்கிற அந்தப் பிரிவுகள்தான் இதிலே இருக்கின்றன என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். வருகிற ஐயப்பாடுகளை இதை நிறைவேற்றுகிற போது ஏதாவது இடையூறு ஏற்படுமா, தனியாருக்கு தொல்லைகள் வருமா என்கிற அந்த உணர்வோடு, சமுதாய உணர்வோடு, கருத்துக்களைச் சொன்னால் விவாதத்திற்கும் வசதியாக இருக்கும் நேரமும் மிஞ்சும்.





**திரு. அ. ரகுமான்கான்**: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டத்திலே இருக்கிற ஷரத்துக்களைச் சுட்டிக்காட்டி அவை இந்த விவாதத்திலே அச்சத்தை விளைவிக்கக்கூடியவைகளாக இருக்கின்றன அதனால் அகற்றப்பட வேண்டுமென்று சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் இது ஏற்கெனவே உள்ள சட்டத்தின் அடிப்படையில்தான் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார். குதிரையை மிரட்டினால் மூன்று மாதம் ஜெயில் என்று வெள்ளைக்காரன் சட்டம். அந்தச் சட்டம் கொண்டு வரக் கூடாது என்று நான் சொன்னால், அது வெள்ளைக்காரன் சட்டம், ஆகவே கொண்டு வருகிறோம் என்று நீங்கள் வாதாட மாட்டீர்கள் என்று நம்புகிறேன். சட்டம் என்பது மக்களுடைய நன்மையைக் கருதிக் கொண்டு வரப்படுவது; அது திருத்தத்திற்கு உட்பட்டது. சட்டம் கைப்படாத ரோஜா அல்ல. அரசியல் சட்டமே பலமுறை திருத்தத்திற்கு உள்ளாகி இருக்கிறது. எனவே கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவின் அடிப்படையியில் தான் சொகிறேன். வீடியோ கேசட் லைப்ரரி நடத்துவதற்கு, பொது இடங்களில் திரைப்படம் போடுவதற்கு படம் காட்டுவதற்கு லைசன்ஸ் வாங்குவதற்கு என்னசொல்கிறார்கள் என்று சொன்னால், அரசாங்கத்திற்கு எந்த வரி பாக்கியும் நிற்கக் கூடாதாம். மனுதாரர் அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளில் சரியாக, கறாராக நடந்துக் கொண்டிருக்க வேண்டுமாம். அதிலே சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் மீண்டும் தெரிவிக்க விரும்புகிறேன். இது இப்போது திரையரங்குகள் நடத்திக் கொண்டிருக்கிற, அந்தச் சட்டத்திலே இருக்கிற அத்தனை பிரிவுகளும் இதில் இருக்கின்றன. வீடியோ பைரசி என்பது திருட்டுத்தனமாக வீடியோ காட்டுதல்; அது இப்போது கொள்ளை நோய் போல பரவிக் கொண்டிருக்கிறது. சமீபத்திலே கூட பத்திரிக்கையிலே வந்திருக்கிறது. இங்கிலாந்து நாட்டில் இதனை கடுமையாகக் கண்ணுற்று இதற்கு ஒரு சட்டம் செய்ய வேண்டுமென்று முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் இருக்கிற அத்தனை மாநிலங்களிலும் இந்தப் பிரச்சினை பூதாகாரமாக எழுந்திருக்கிறது. மத்திய பிரதேசத்தில் இதற்காக அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டு, சிலபேர் அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, உச்ச நீதிமன்றம் அதைத் தள்ளுபடி செய்திருக்கிறது. அவசரச் சட்டம் செல்லுபடி ஆகியிருக்கிறது. இது இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. திரையரங்குகள் என்கிற அந்த அமைப்பிற்கு எந்தெந்த சட்ட விதிகள் இருக்கின்றனவோ, சட்டப் பிரிவுகள் இருக்கின்றனவோ அந்த அடிப்படையிலேதான் இதை நாம் கொண்டு வந்திருக்கிறோம். இதை ஒரு திரையரங்கு நடத்துகிற இடமாகக் குறிப்பிட்டு இருக்கிறோம். இவ்வளவு காலமாக இந்தியா முழுவதிலும் இதை எந்தச் சட்டத்திற்குள்ளே கொண்டு வருவது என்று தெரியாமல்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1984 பிப்ரவரி 22

தவித்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே மிகப் பெரிய, கடுமையான இந்த நிகழ்ச்சிகள் நாட்டிலே தொத்து நோய் போல பரவிக் கொண்டிருந்தன. மாண்புமிகு உறுப்பினர் தனியாக ஒரு திருத்தம கொண்டு வந்து, இன்றைக்கு நடைமுறையிலே இருக்கிற இந்த 'சினிமாட்டோகிராப் ரெகுலேஷன் ஆக்ட்டை' திருத்துவதற்கு — வேண்டுமானால் வேறு சட்டம் கொண்டு வந்து இந்த அவையின் நேரத்தை எடுத்துக் கொண்டு விவாதிக்கலாம். ஆகவே இப்போது இதிலே ஒவ்வொரு பிரிவாக எடுத்துக் கொண்டு நேரத்தை வீணாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபடி பார்த்தால் சினிமாக் கொட்டகைகளுக்கு என்ன விதிகள் பொருந்துமோ அவை இவைகளுக்கும் பொருந்தும் என்பதுபோல் தெரிகிறது. அப்படியானால் ஆயிரக்கணக்கான சினிமா தியேட்டர்களை இது உருவாக்கும் என்பது போல் தெரிகிறது. அப்படியானால் அதிலே நாம் சொல்லவேண்டிய பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. ஆகவே இதனாலே ஏற்படும் விளைவுகளைப் பற்றியும் நாம் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் கொண்டு வருவதன் காரணமாக என்ன விளைவு ஏற்படும் என்று திரு. சித்தன் அவர்கள் தெரிவித்தார்கள். அதைப்போலவே, திரு. ரகுமான்கான் அவர்களும் தெரிவித்தால் அந்த விளைவுகளைச் சமாளிக்க அரசாங்கம் என்ன முன் ஏற்பாடுகளை, நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது என்பதை நான் பதில் தரும்போது சொல்லமுடியும். அப்படியில்லாமல், இருக்கின்ற விதிமுறைகளில் அரசாங்கத்திற்கு எக்சம்ஷன் இருக்கிற விதியை எடுத்துக்கொண்டு இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுமானால் அதனால் எக்சம்ஷன் கொடுத்துவிடுவார்கள் என்று சொல்வது சரியல்ல. எக்சம்ஷன் விதி என்பது எந்த அரசு சட்டம் கொண்டு வந்தாலும் இருக்கும். அது திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் ஆட்சியாக இருந்தாலும் சரி சட்டங்கள் நிறைவேற்றப்படுகிறபோது அரசாங்கத்திற்கு விதிவிலக்கு அதிகாரம் கொடுத்துதான் சட்டங்கள் நிறைவேற்றப்படும். விதிவிலக்கு உண்டு என்று சொல்கிறபோதே இல்லை என்பதும் வந்துவிடுகிறது. ஆகவே தேவையில்லாமல் காலையில் இருந்து அதையே திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள் இந்த விவாதத்தை காலையில் இருந்து நாள் பூராவும் வைத்துக்கொள்ள நான் தயார். இப்போது மணி 1.26 ஆகிறது. ஆகவே, காலத்தை அனுசரித்தும், நாட்டின் நிலைமைகளை அனுசரித்தும், இந்தச் சட்டத்தின் மீது தேவையான ஆலோசனைகளை மட்டும் தெரிவித்து, சபைக்கும், நாட்டுக்கும் பயன் அளிக்கும் வகையில் அவர் கருத்துக்கள் அமையவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1984 பிப்ரவரி 22]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவைமுன்னுள்ள சட்டத்தைப்பற்றி மட்டும் பேச வேண்டும். எனக்குத் தெரிந்த விளக்கத்தை நான் இந்தச் சபைக்கு அறிவிக்கிறேன். வீடியோ படங்கள் வீட்டிலே போட்டு நாம் பார்ப்பதில் தவறு இல்லை. ஆனால், அதற்கே 10 பேரை அழைத்து, அவர்களிடமிருந்து கட்டணம் அல்லது பணம் வசூலித்தால் அது தவறு.

**திரு என். சங்கரய்யா :** இந்தச் சட்டத்தில் உள்ள ஷரத்துக்களைப் பார்த்தால் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளும் அன்சர்ட்டிபடு என்று ஆகிறது. அது தான் இந்த மசோதாவின் வாசகங்களில் இருந்து தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒருவர் வீட்டில் தனக்கு மட்டும் என்று தனிப்பட்ட முறையில் போட்டுக்கொள்வதைப் பற்றி தவறு இல்லை. ஆனால் வீட்டிற்குள்ளேயே 10 பேரை பணம் பெற்று அனுமதித்து காட்டினால் அது தவறு.

**திரு. துரைமுருகன் :** இப்படிப்பட்ட விதிமுறைகள் இருக்குமானால் தனிப்பட்ட வீடுகளில் கூட திடீரென்று போலீஸ் நுழைந்து சோதனை இடுவதற்கு வழிவகை செய்கிறது. அப்படியானால் சில பிடிக்காதவர்கள் வீட்டில் போலீஸ் நுழைந்து நடவடிக்கை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வீட்டில் கட்டணம் வசூலிக்காமல் போட்டுப் பார்ப்பதில் தவறு இல்லை. காசுவாங்கிக் கொண்டு 10 பேரை அனுமதித்தால் தான் தவறு.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்கிற யோசனை மசோதாவுக்குமுற்றிலும் மாறுபட்டதாக வருகிறது. அமைச்சர் அவர்கள் சொல்கிற கருத்துக்கும் எதிரான கருத்தாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒருவர் எடுத்த படத்தை அவருடைய அனுமதியில்லாமல் போட்டுப்பார்ப்பது சரியல்ல. ஒருவர் எழுதிய புத்தகத்தை அப்படியே ஜெராக்ஸ் பண்ணினால் அது எப்படி தவறோ அதேபோல்தான் இதுவும். (குறுக்கீடு) வீட்டிலே கூட காசு வாங்காமல், பப்ளிக் யாரையும் அனுமதிக்காமல் பார்க்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் தந்திருக்கிற இந்தச் சட்டத்தின் சரத்துக்களைப்பற்றி பேசும் போது ஏற்கெனவே உள்ள சினிமாட்டோகிராப் ஆக்ட்படியும் ஏற்கனவே உள்ள சென்ட்ரல் காப்பிரைட் சட்டத்தின அடிப் படையிலேயும்தான் கொண்டுவந்திருக்கிறோம்; ஆகவே, இதை விமர்சிக்க வேண்டாமென்று சொன்னார்கள். துணைத் தலைவர வர்களே, உங்கள் மூலமாக அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். யார் கொண்டு வந்திருந் தாலும், எந்த நடைமுறையில் இருந்தாலும் அரசாங்கம் மூலச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவருவதின் நோக்கம் என்ன? மூலச் சட்டத்தில் குறைபாடு இருக்கிறது. தவறு இருக்கிறது என்பதினால்தானே திருத்தம் கொண்டுவருகிறார்கள். அந்த அடிப்படையிலேதான் நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன்.

(பிற்பகல் 1—30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ரகுமான் கான் அவர்கள் நாளை தொடர்ந்து பேசுவார்கள். பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

[பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது]

(பிற்பகல் 4-00)

பிற்பகல் 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

**(உ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984.**

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."





தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** இச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

8. ஒழுங்குப் பிரச்சினை.

**சட்ட முன்வடிவுகளின் படிவங்களை உறுப்பினர்களுக்கு முன் கூட்டியே அளித்தல்.**

**திரு. ரா. உமாநாத் :** ஒரு ஸீரியஸ் பாயின்ட் ஆப் ஆர்டர். பில்களை எல்லாம் இன்ட்ரொட்யூஸ் செய்வதற்கு முன்னால் அவற்றை சர்குலேட் செய்யவேண்டும் என்பது ஸ்டாச்சூட்டரி நெஸஸிட்டி, அப்படி சர்குலேட் பண்ணியதாகத் தெரியவில்லை. எப்போது பண்ணப்பட்டது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டேபிளில் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இப்போது இருக்கிறது. இதை முன்னால் ஏன் சர்குலேட் செய்யவில்லை ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுடைய அட்வான்டேஜ்க்காகச் செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். அப்படி என்ன அவசரம்? நாளைக்கே செய் திருக்கலாமே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதில் ஒன்றும் முறைகேடு இல்லை.

**திரு. ரா. உமாநாத் :** மத்தியானம் டேபிளில் வைத்துவிட்டு உடனே இப்போது இன்ட்ரொட்யூஸ் செய்தால் என்ன அர்த்தம்? சட்டப்படி முன்கூட்டியே சர்குலேட் செய்யவேண்டியது ஸ்டாச்சூட்டரி ரிக்வயர்மென்ட்.

**திரு. என். எஸ். வி சித்தன் :** டேபிளில் வைத்து விட்டால் போதுமா, பில்லை நாங்கள் படித்துவிட்டுத்தானே பேசவேண்டும்.

Thiru R. Umanath: B fore introducing we must know what you are going to introduce. At least one day before it must be circulated. That is our understanding.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் தெரிவித்ததைப்போல் ஒருநாளைக்கு முன்னால் வைப்பதுதான் முறை. எதிர்பாராத நிலை ஏற்படும்போது இரண்டு நாட்கள்தான் சட்டசபைக் கூட்டம் இருப்பதால் அதற்குள்ளே அதை விவாதிக்கவேண்டுமென்கிற காரணத்தால் முன்கூட்டியே வைத்துவிட்டு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது. நாளை இந்த பில்லை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும்போது உங்கள் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. இன்று முன்கூட்டியே வைத்துவிட்டு உடனடியாக அறிமுகப்படுத்தியிருக்கிறோம். அதற்குக் காரணம் நாளைக்குள் சட்டமுன்வடிவுகளை எடுத்துக்கொண்டு முடித்துவிடவேண்டுமென்ற அவசர நிலைதான் இது எப்போதும் தொடரும் என்ற நிலைமை கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் ஒரு நாளைக்கு முன்னலே சுற்றுக்கு, சர்குலேட் செய்யக்கூடிய அத்தகைய நிலை கடைப்பிடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இனி எல்லா விவகாரத்திலும் நடைமுறையை மீறாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

## 9. அரசினர் தீர்மானம்.

### வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கை விவாதம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" பேரவையில் 20—2—1984 ஆம் தேதியன்று வைக்கப்பெற்ற 'வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கை* விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் ".

* 278-303-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.



**திரு. அன்பில் தர்மலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால், இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற வறட்சி, வெள்ளச் சேதம் ஆகியவை பற்றிய வெள்ளை அறிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வெள்ளை அறிக்கை என்று சொன்னாலே, அது என்ன என்பது குறித்து ஒரு காலத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே நான் கேட்டேன். 1958 ஆம் ஆண்டு இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பஞ்சாயத்து யூனியன் பற்றி ஒரு வெள்ளை அறிக்கையை வைத்திருந்தார்கள். திரும்பப் போகும்போது அண்ணா அவர்கள் என்னிடத்திலே கொடுத்து இதிலே என்ன இருக்கிறது என்று பார் என்று சொன்னார்கள் நான் அண்ணா அவர்களிடத்திலே கேட்டேன். வெள்ளை அறிக்கை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே, ஆனால் எல்லாம் கறுப்பாக இருக்கிறதே என்று கேட்டேன். அண்ணா அவர்கள் சொன்னார்கள்—நீ அடிக்கடி கூட்டத்திலே சொல்வாயே, கள்ளம் இல்லா வெள்ளைஉள்ளம் நல்ல உள்ளம் என்று அதுபோல உள்ளதை உள்ளபடியே சொல்வது தான் வெள்ளை அறிக்கை என்று சொன்னார். குற்றங்குறைகளைச் சொல்வது உண்டு, செய்தவைகளைச் சொல்வதுண்டு. செய்த தவறுகளைச் சுட்டிக் காட்டுவதும் உண்டு—பிளைனாக—ஆகையால் உண்மையான அறிக்கையாக இருக்க வேண்டுமென்பதற்குத்தான் வெள்ளை அறிக்கை என்று பெயர். ஆனால் இன்றைய அறிக்கையைப் பார்க்கும் பொழுது, வெள்ளை அறிக்கையா அல்லது கறுப்பு அறிக்கையா ? அது, பிளாக்கா அல்லது ஒயிட்டா என்று தெரியவில்லை. காரணம், இங்கே செலவழிக்கப்படுகின்ற தொகையைப் பார்க்கிறபோது, செலவுகள் கணக்கிலே சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அதனால் ஏற்படுகின்ற பலனைப் பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிடவில்லை என்று கருதுகிறேன். உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்ல வேண்டும் என்றால், வறட்சி நிவாரணத்தில், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலம் புதிய துளைக் கிணறுகளை அமைத்தல் என்ற தலைப்பின்கீழ் வடிகால் வாரியத்தின் மூலமாக ரூ. 45,79,00,000 செலவழிக்கப்பட்டிருக்கின்றது. இது எந்தெந்த மாவட்டத்தில் எங்கெங்கே செலவழிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் இல்லை. அது மட்டுமல்லாமல், செலவழிக்கப்பட்டிருப்பதைக் கணக்கிலே பார்க்கிறபோது, கிராமங்களில் ஒரு பழமொழி சொல்வார்கள் — எண்ணெய் செலவழிந்ததே தவிர, பிள்ளை பிழைக்கவில்லை என்று—அதுபோல நகரத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள் — ஆபரேஷன் சக்சஸ், பேஷண்ட் கொலேப்ஸ்டு—அதுமாதிரிதான் இருக்கிறதே தவிர, செலவழிக்கப்பட்டது யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குச் சேரவில்லை என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது போல பல்வேறு குறைகளைச் சொல்லியிருந்தாலும், நான் ஒரு சிலவற்றை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே மத்திய

அரசிடமிருந்து கேட்கப்பட்ட தொகை எவ்வளவு? நமக்கு வந்து சேர்ந்தது எவ்வளவு என்ற கணக்கைப் பார்க்கும்போது, நாம் கேட்டிருக்கிறதே கொஞ்சம் என்பது என்னுடைய கருத்து. ஆனால் அதைவிடக் குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள என்பதை எண்ணும்போது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேற்று சொன்னதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஆடற மாட்டை ஆடிக் கறக்கணும், பாடற மாட்டை பாடிக் கறக்கணும் என்று சொன்னார். இன்னும் ஒன்றிருக்கிறது—அடிக்கிற மாட்டை அடித்துக் கறக்கணும் என்ற பழமொழி இருக்கிறது. ஆகையால் இன்னும் கொடுக்க வேண்டுமென்று கேட்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 4-10)

அதைப்போலவே வறட்சி நிவாரணத்திற்காக நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திலேயிருந்து அந்தப் பணிகளை எல்லாம் அவர்கள் பல நாட்கள் தங்கியிருந்து கவனித்து இருக்கிறார்கள். அவருடைய அறிக்கையைப் பார்க்கிறபோது உண்மையிலேயே அவர் மனசாட்சிப்படிதான் இதைச் செய்திருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இருக்க முடியாது. ஒருவேளை முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல 1980 ஆம் ஆண்டு அமைச்சரவை கலைக்கப்பட்டபோது, அவர்கள் ஊர்வலம் வந்தபோது அடிக்கப்பட்டு, மீண்டும் அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் இந்த இலாக்காவினர் எழுதிக் கொடுத்ததைத்தான் நான் படிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்று அவர்கள் சொன்னதைப் போல், இவர்களும் எழுதிக் கொடுத்ததைப் படித்திருக்கிறார்கள்போல் தெரிகிறது. உதாரணத்திற்கு ஒன்று இந்த அறிக்கையிலிருந்து சொல்லுகிறேன். 'எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்கள் எல்லாம் நிவாரண இல்லங்களுக்கு அழைத்துச் சென்ற நேரத்தில் அவர்கள் என்னிடத்தில் ஒரு குறையும் சொல்லவில்லை ; அதாவது , பாதிக்கப்பட்ட மக்களை நிவாரண இல்லங்களுக்கு உடனடியாக அழைத்துச் சென்று அவர்களுக்கு உணவு வழங்க மாநில அரசு எடுத்த நடவடிக்கைகளை பாராட்டினார். என்னைச் சந்தித்த மக்கள் எல்லோரும் மாநில அரசு வழங்கிய நிவாரண உதவிகள் திருப்திகரமாக இருக்கிறது என்று மகிழ்ச்சிகரமாக தெரிவித்தார்கள். யாரிடமிருந்தும் என்னிடம் ஒரு புகார் கூட சொல்லப்படவில்லை' என்று கூறியிருக்கிறார்கள். நான் உங்கள் மூலமாக அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். 25—1—1984, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை, முரசொலியோ அல்லது எதிரொலியோ அல்லது தினகரனோ அல்ல, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏன் முரசொலியைத் தாழ்த்திக் கொள்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.





**திரு. அன்பில் தர்மலிங்கம்:** முரசொலியிலே வந்திருக்கிறது என்றால் நம்பமாட்டீர்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே வந்திருக்கிறது என்றால் அதிலே எழுதியிருக்கிறது என்று சொன்னால் ஏற்றுக்கொள்வீர்கள். அதற்காகத்தான் சொன்னேனே தவிர, முரசொலிக்கு விளம்பரம் தேடிக்கொள்வதற்காக அல்ல.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போதுகூட, நான் உணர்ச்சி வசப்படாமல் அமைதியாகப் பேசுவேன் என்று என்னிடத்திலே சொன்னார்கள். அப்படிச் சொல்கிறபோது, நான் குறுக்கிடுவதாலே அவர்கள் மீண்டும் உணர்ச்சி வசப்படக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு மட்டுமல்ல. எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அவையிலே நான் சொல்லியிருக்கிறேன். செய்தித் தாள்களிலே வருவது எல்லாம் பொய் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அதேநேரத்தில் செய்தித் தாள்களில் வருகிறது எல்லாம் ஆதாரமானது என்றும் எடுத்துக்கொள்ள முடியாது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் இதை நீங்கள் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பது,தான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அடுத்து நான் சொல்வது செய்தித் தாள்களில் வருவதை மட்டும் வைத்து இந்த சட்டமன்றத்தை நடத்த முடியாது. நாம் எல்லாம் மக்களாலே தேர்ந்தெடுக்கப்படுகிறோம் மக்களுடைய ஆதரவு இருக்கிறது. நமக்கு ஒரு இயக்கம் இருக்கிறது. அதற்கு கிளைக் கழகம் இருக்கிறது. எனவே மக்களுக்காக இங்கே சொல்கிறபோது, நீங்கள் சரியான ஆதாரங்களை உண்மையாகத் திரட்டி, நியாயமான முறையில் சொன்னால், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். அப்போதுதான் நீங்கள் சமுதாயத்தை உண்மையாக கவனிப்பதாக எடுத்துக்கொள்ள முடியும். அதற்காக கவலைப்படுவதாக இருக்கும்.

**திரு. அன்பில் தர்மலிங்கம்:** துணைத் தலைவர் அவர்களே, இடையிலே அவர்கள் பேசுவதாலே எனக்கு ஓய்வு கிடைக்கிறது. நன்றி. பத்திரிகையிலே வருவது உண்மை என்று நான் சொல்லவில்லை. நேற்று முதல் அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். நாங்கள் ஆட்சியிலேயிருந்து கலைக்கப்பட்டு, ஊர்வலம் சென்றபோது அடிக்கப்பட்டோம், பிறகு ஆட்சிக்கு வந்தபோது அதிகாரிகள் எழுதிக்கொடுத்ததை படித்தோம் என்று சொன்னார்கள். என்னுடைய எண்ணம் எல்லாம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதிகாரிகள் எழுதிக் கொடுத்ததை வைத்திருக்கிறார்கள். அவராக எழுதி வைத்தது அல்ல. எனவே அதை நம்ப வேண்டும் என்றால், இதை எப்படி நான் நம்புவது? எனவே தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, காரியங்களைச் சொல்கிறபோது, உதாரணங்களைத் தேடி அலையத் தேவையில்லை. உதாரணங்களை எப்போது தேடி அலைய வேண்டும் என்றால், அதைச் சொல்கிறபோது, விளக்கமாகச் சொல்கிறபோது, அதைக் கேட்பவர்களுக்கோ, அல்லது சொல்பவர்களுக்கோ புரியாதபோது உதாரணங்களைத் தேடி அலைகிறோம். இல்லாவிட்டால் நம்முடைய வாதங்களில் பலவீனம் ஏற்படுகிறபோது உதாரணங்களைத் தேடி அலைகிறோம்.

**திரு. அன்பில் தர்மலிங்கம் :** ஒன்றுமே இல்லை என்று சொல்லிவிட்டார்கள், ஒரு மனுகூட வரவில்லை என்று. இப்போது மனு வந்திருக்கிறது என்று நான் சொல்கிறேன். இதிலே ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படிருக்கிறதா என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர, உதாரணத்திற்குத் தேடி அலைய வேண்டியதில்லை.. கைப்புண்ணுக்கு கண்ணாடியா வேண்டும் ? வேண்டியதில்லை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பல கிராமங்களில் கிடைக்கின்ற செய்தி, கடந்த மாதத்தில் குடிசை இழந்தவர்ளுடைய குடும்பங்களுக்கு உதவித் தொகை வினியோகிப்பதில் லஞ்சமும், முறைகேடுகளும் பரந்த அளவில் நடைபெற்று இருக்கின்றன. அந்தப் பத்திரிகை செய்தியில், இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸினுடைய பத்திரிகைச் செய்தியாளர்; தனி நிருபர் கடந்த ஒரு வார காலமாகச் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல கிராமங்களை சுற்றிப் பார்த்த வகையில், உள்ளூர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும், முன்னணியினரும் பண உதவி வினியோகப் பொறுப்பை தாங்களே எடுத்துக் கொண்டிருப்பதை நேரிலேயே பார்த்திருக்கிறார்கள்.

பணம் வினியோகிப்பதில் மாத்திரம் அல்ல, புடவை, வேட்டி போன்றவைகளை வினியோகிப்பதிலும், ஆளும் கட்சிக் காரர்களின் தலையீடு நன்றாகத் தெரிந்தது. உண்மையிலேயே வீடுகளை இழந்தவர்களுக்கு முழு உதவித் தொகை மறுக்கப்பட்டது. பல கிராமங்களில் ஒர வஞ்சனை காட்டப்பட்டிருக்கிறது. சோதனை செய்த வகையில் மழையினால் ஓரளவு பாதிக்கப்பட்ட குடிசைவாசிகளுக்கு, அவர்களுடைய குடும்பங்களுக்குக் கூட, பொங்கல் பரிசையும் சேர்த்து ரூ. 210 உதவித்தொகை தரப்பட்டிருக்கையில், முழுவதும் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு பொங்கல் பரிசையும் சேர்த்து 60 ரூபாய் தரப்பட்டிருப்பது நன்றாகத் தெரிந்தது. பல இடங்களில் பாதிக்கப்பட்ட பகுதியில் ஒரு வீட்டுக்குகூட பண உதவி செய்ததாக இருக்கிறது. மன்னார்குடி அருகிலே கண்டமங்கலம் கிராமத்திலே ஒரே வீட்டில் உள்ள 5 பேர்களுக்கு ஒவ்வொரு



வருக்கும் ரூ. 210 வீதம் பண உதவி தரப்பட்டுள்ளது. இந்தக்கட்சி ஆட்கள் மாவட்ட ஆட்சி அலுவலக அதிகாரிகளிடம், தங்களால் அடையாளம் காட்டப்படுபவர்களுக்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அதன் விளைவாக பல கிராமங்களில் உண்மையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகை கிடைக்காமல் இருக்கிறது.

அது மாத்திரம் அல்ல. மாவட்டத்தில் உள்ள தாசில்தார் அலுவலங்களிலேயும், வருவாய்த் துறை அலுவலங்களிலேயும் ஆயிரக்கணக்கான மனுக்கள் உதவித் தொகை வேண்டி தரப்பட்டன. பரிசீலனைக்காக காத்துக்கிடக்கின்றன. ஆளும் கட்சிக்காரர்களிடையேகூட, வருவாய்த் துறை அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்களைச் சேர்ந்தவர்களின் குழுவினருக்கும், அறநிலையத்துறை அமைச்சர் ஆர். எம். வி. அவர்களைச் சேர்ந்த குழுவினருக்கும் இடையே போட்டா போட்டி நடைபெறுகிற நிலை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இம்மாதிரியாக ஒரு செய்தித்தாள் எழுதினால், அந்தச் செய்தித் தாளை நாம் எப்படி எண்ண வேண்டும் என்று புரியாமல் அதுவும் நீண்ட காலமாக பெரியாரிடமிருந்து, அறிஞர் அண்ணா அவர்களிடமிருந்து, பண்பாட்டைத் தெரிந்துக் கொண்ட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இப்படிச் சொன்னால் வேறு என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

அது மட்டும் அல்ல. செய்தித் தாளில் வருவதை அப்படியே படிப்பது சரியல்ல. நீங்கள் அப்படியே அதை நம்புகிறீர்களா என்பதையும், அதை ஒப்புக் கொள்கிறீர்களா என்பதையும் தெரிவிக்க வேண்டும். செய்தித் தாளில் வருவது பூராவும் உண்மையாக இருக்கமுடியாது என்று முன்கூட்டியே சொல்லியிருக்கிறேன். அந்தச் செய்தித் தாளில் வந்ததை ஏற்கனவே இங்கே படித்துக் காட்டியிருக்கிறார்கள். அப்போது நான் இந்த அவையிலேயே சொல்லியிருக்கிறேன். அந்தச் செய்தித் தாளில் வந்தது உண்மைக்கு மாறானது என்று சொல்லியிருக்கிறேன். மீண்டும் அதையே சொல்கிறேன். ஆகவே அதையே மீண்டும் படித்துச் சொல்வதில் உங்கள் பொன்னான நேரத்தை ஏன் வீணாக்குகிறீர்கள் என்று சொல்கிறேன்.

**திரு. அன்பில் தர்மலிங்கம் :** மறுப்புத் தெரிவித்ததை நான் பார்க்கவில்லை. மறுப்புச் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. நேற்றைக்கு இது பற்றி இரண்டு கேள்விகள் கேட்டார்கள். அதில் நீங்கள் இது பற்றி பதில் சொல்லி, அது பத்திரிக்கையில் வந்திருக்கும்.................

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: என்ன செய்வது என்றே புரியவில்லை எனக்கு. எங்களுடைய கட்சியில் பிரிவு இப்பதாகச் சொன்னார்கள். ஒரு ஜனநாயக இயக்கத்தில் அமைச்சர்களிடத்தில் அல்லது கட்சிக்குள்ளே மாறுபட்ட கருத்துக்கள் இருப்பது இயற்கை. இல்லை என்று சொல்லவில்லை. அதைப் பெரிதுபடுத்தி செய்தித் தாளில் வேண்டுமென்றே எழுதுவார்கள். அதை வைத்துக் கொண்டு தர்க்கம் செய்வதில் உபயோகமில்லை. சட்டசபையில் இப்போது பேசப்படும் பிரச்சினைக்கும் அதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது. சபைக்குத் தேவையானது வறட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம். அதிலே என்ன இருக்கிறது என்பதைச் சொல்லுங்கள். கட்சிக்குள்ளே இருப்பவர்களில் ஒவ்வொருவருக்கும் சில நேரங்களில் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பது இயற்கை. அதுதான் வளர்ந்து வருகிற ஜனநாயக நாகரிகம்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: மாறுபட்ட கருத்துக்கள் இல்லை அல்லது இருக்கிறது என்பது பற்றி நான் சொல்லவில்லை. அதன் காரணமாக மற்றவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்றுதான் நான் சொல்கிறேனே தவிர வேறு அல்ல. உங்களிடையே எத்தனையோ கட்சி இருந்துவிட்டுப் போகட்டும் எனக்குக் கவலை இல்லை. ஆனால், உங்கள் இரண்டு பேருக்கும் இடையே சண்டை நடப்பதால் பாதிக்கப்படுபவர்கள் மக்கள். அதனால்தான் சொல்கிறேன்.

(பிற்பகல் 4-20)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: எங்கே சண்டை போட்டுக் கொண்டார்கள். எங்கே மக்கள் அதனால் பாதிக்கப்பட்டார்கள். நீங்கள் விவாதத்தை எங்கேயோ இழுத்துக் கொண்டு செல்கிறீர்கள். போகாத ஊருக்கு வழிக் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு இந்த அறிக்கையிலே தேவை என்ன என்பதை முதலிலேயே சொல்லுங்கள். மன்னார்குடியிலே சொன்னீர்கள், 5 இடங்கள் என்று. இங்கே சொல்லி இருக்கிறேன். உங்களுக்கு அக்கறை இருந்தால் உங்கள் கட்சிக்காரர்கள் மூலம் மன்னார்குடிக்குச் சென்று அது எல்லாம் உண்மையா என்று கேட்பது நியாயமாக இருக்கும். மன்னார்குடிக்கு நீங்கள் செல்லாவிட்டாலும் உங்களுடைய நண்பர்கள் மன்னார்குடியிலே இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக வீட்டு நம்பரை வாங்கலாம், தெருப் பெயரை வாங்கலாம், பெயரை வாங்கலாம். பேப்பரில் வந்ததைப்பற்றி அதைவைத்துப் பேசுகின்ற சட்டமன்றமாக இது ஆகக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.



திரு. அன்பில் தர்மலிங்கம்: அமைச்சர் அவர்கள் முதலிலே சொன்ன மாதிரி பெரியாரிடமும் அண்ணாவிடமும் பயின்றது மாத்திரமல்ல, அவரும் நானும் ஒன்றாக இருந்தோம். பல காரியங்களில் அவரைப்பற்றி எனக்குத் தெரியும். அவருக்கு அது எல்லாம் தெரியாது. தெரிந்தாலும் தெரிந்தவர் மாதிரி நடந்து கொள்வதில்லை. அகவே அதனால் என்ன ஆயிற்று என்று சொல்கிறேன். உள்ளூர் அகில இந்தியா அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நபர்களால் செய்யப்படும் பெரும்பாலான லஞ்சத்தை அன்னியில் வருவாய்த் துறை அதிகாரிகளின் அதிகார துஷ்பிரயோகம் பல இடங்களில் நடைபெற்றதாக பல செய்திகள் கிடைக்கின்றன. ஆளுங்கட்சிக்காரர்களின் இந்தப் போக்குபற்றி பல புகார்கள் வந்திருக்கின்றன. சில நேரங்களிலே நேர்மையான தாசில்தார் எப்போது தனக்கு மாறுதல் உத்திரவு வருமோ என்ற அச்சத்தில் இருக்கிறார்கள். இதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை சபைக்குச் சொல்லவேண்டும். மன்னார்குடியிலே பணியாற்றும் ஒரு இளைஞர், உதவி கலெக்டர் திரு. ராமையா என்பவர் பண உதவி செய்வதில் ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வற்புறுத்தியதால் கடுமையான நடவடிக்கைக்கு ஆளாகி அவருடைய வீடு கல்லால் அடிக்கப்படுகிற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டது. இல்லையென்று சொல்லமுடியுமா? அதைப்பற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா? ஒரு ஆர். டி. ஓ. வுக்கே இந்த நிலை என்றால் சாதாரண ஆளுக்கு எப்படி இருக்கும்.

அதேபோன்று வெள்ள நிவாரணப் பணிகள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொகுதியாகிய வேதாரண்யத்தில் முகப்பாடு என்ற கிராமத்திலும் நாகப்பட்டினம் தொகுதியில் திருக்குவளை என்ற கிராமத்திலும் ஒரே அளவுக்குப் பாதிப்பு இருந்தபோதிலும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொகுதியில் உள்ள முகப்பாடு கிராமத்திலே உள்ளவர்களுக்கு 210 ரூபாயும் திருக்குவளை கிராமத்திலே 60 ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டிருப்பது பற்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம் வருவாய்த்துறை அமைச்சரை குறை சொல்ல வேண்டுமென்பதற்காக அல்ல. அந்தக் குறைகளைக் கண்டு பிடிக்கவேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். குற்றச்சாட்டு அல்ல. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தொகுதியாகிய நன்னிலம் பெருமளவுக்கு உதவி வழங்கப்பட்ட தொகுதியாகும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தொகுதியாகிய திருவாரூர் கவனிக்கப்படாத தொகுதியாக இருக்கிறது. திருமருகல், திருச்சான் காட்டான்குடி, இடையாக்குடி போன்ற ஊர்களில் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. மன்னார்குடி வருவாய்க் கோட்டத்திற்குட்பட்ட மாளிகைகாடு.

அணைக்காடு, சித்தமல்லி, பேட்டை, கமட்டிகடல், கண்ட மங்கலம் ஆகிய ஊர்களிலே நடந்த ஓரவஞ்சனை குறித்தும் லஞ்ச ஊழல் குறித்தும் ஏராளமான புகார்கள் குவிந்த வண்ணம் உள்ளன. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் புகாரே வரவில்லை என்று சொல்லியிருக்கிற காரணத்தினாலே நான் இதைச்-சொன்னேனே தவிர வேறு ஒன்றுமில்லை. 9-வது பக்கத்தில் இருக்கிறது.

அதைப்போல் பலவற்றைச் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன். அண்மையிலே பெய்த மழையின் காரணமாக பாதிக்கப்பட்டிருக் கின்ற நிலைபற்றி அரசாங்கத்திடமிருந்து ஒரு உத்திரவு வந்தது. ஏற்கனவே நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு தீர்மா னத்திலே பேசுகின்றபோது இனி எந்த வேலையும் ஆபரிலே கொடுக்க முடியாது. டெண்டரிலே கொடுக்க முடியும் என்று சொன்னார்கள், உத்தரவும் போட்டார்கள். ஆனால் என்ன ஆயிற்று? நான் மற்றப் பகுதிகளைப் பற்றிச் சொல்வதைவிட திருச்சி மாவட்டத்தைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருப்பதால் சொல்கிறேன். திருச்சி மாவட்டத்திலே முதல் அமைச்சர் உத் திரவு வந்தது என்று சொல்லி ஆணையராக இருந்த திரு ஹரிபாஸ்கர் அவர்களிடத்திலேயும் மாவட்ட ஆட்சித் தலைவ ரிடத்திலேயும் நீங்கள் டெண்டர் வைத்துச் செய்ய வேண்டு மென்றால் ரொம்ப காலதாமதம் ஆகும் உடனடியாகக் கவனிக்கவேண்டுமென்று சொன்னபோது முதலமைச்சர் உத்தரவு இருக்கிறது. டெண்டர் வைத்துதான் செய்யப்படும் என்று சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியனுக்கு எப்படி செய்யப் போகிறீர்கள் என்று கேட்டதற்கு அதுபற்றி யோசிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இங்கே இருக்கிற டிவிஷனல் இஞ்சினியர் அவர் வெள்ளத்திற்கும் பொறுப்பாளி, அவரைத் தான் என் அருமை மாண்புமிகு உறுப்பினர் சௌந்தரராஜன் அடித்தார் என்று சொல்லி வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. அடித்தாரா? அடிக்கவில்லையா? அது வேறு விஷயம். ஆனால் அவர் அந்த உத்திரவு வருவதற்கு முன்கூட்டியே முதலமைச்ச ரிடமிருந்து உத்திரவு வந்திருக்கிறது என்று சொன்னார்கள்.

அதைப் போலவே நான் பிப்ரவரி மாதம் 1, 2-ஆம் தேதிகளில் கேட்டபோது பொறியியல் துறையில் இருப்பவர்கள் இன்றைக்கு கூட டெலக்ஸ் செய்தி வந்து இருக்கிறது யாருக்கும் கொடுக்க மாட்டோம் என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். 1983-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ஆம் தேதிக்கு முன்னாலேயே அதற்கு முதல் தேதியிட்டே 11 வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விவரம் தேவை என்றால் அவர்களுக்கு தனியாக கொடுக்கிறேன். குறிப்பாக என்னுடைய தொகுதியில் என்னுடைய பஞ்சாயத்து யூனியன் லால்குடி பஞ்சாயத்து யூனியனிலும் புள்ளம்பாடி பஞ்சா யத்து யூனியன் இரண்டிலும் சேதம் ஏற்பட்டது. திருச்சி மாவட் டத்திலே அதிகமான சேதம் புள்ளம்பாடி ஏரியாவில் சின்னகுளம்,





நத்தமாகுளம் என்ற கிராமங்கள் பூராவிலும் விளைப் பொருட்கள்
அத்தனையும் பாழாகிவிட்டன. ஊருக்குள் தண்ணீர் வந்து
விட்டது. நம்முடைய வருவாய்த்துறை ஆணையர் திரு.
ஹரிபாஸ்கர் அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும்
சென்று பார்த்தார்கள். அப்போது என்னுடைய உடல் நலம்
சரியில்லாததால் நான் மருத்துவ மனையில் இருந்து அவர்களிடத்
தில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எப்படியும்
உடனடியாக அதற்கு நிவாரணம் வழங்குங்கள் . அங்கு இருப்
பவர்கள் பெரும்பாலும் சாதாரண ஏழை எளிய மக்கள், தாழ்த்
தப்பட்ட மக்கள். உடனடியாக அவர்களுக்கு உதவுங்கள் என்று
அவர்களிடத்தில் சொன்னேன். அவர்களும் கவனிப்பதாகச்
சொன்னார்கள். ஆனால் இன்றுவரையில் எந்த வேலையும்
கொடுக்கவில்லை. பெருவழித் துறையைச் சேர்ந்த சாலைகள்
11 பேருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் அங்கு இருக்கிற
டிவிஷனல் இன்ஜினியரை கேட்ட போது அவர் என்னிடம்
பேச மறுத்துவிட்டார். அதைப்பற்றிக் கவலை இல்லை: ஆனால்
ஒரு அமைச்சர் கொடுக்கச் சொல்லி அங்கே இருக்கின்ற 2
பேருக்கு வேலை கொடுத்ததாகத் தகவல் தெரிந்தது. அந்த
அமைச்சர் பெயரை சொல்ல விரும்பவில்லை. அவர் கேட்டால்
தனியாகச் சொல்கிறேன். அவர் 2 பேருக்கு வேலை கொடுத்து
விட்டு, அவர் 7 பேருக்கு கொடுத்து இருக்கிறார். பழனி
சவுண்டர் என்று ஒருவர் இருக்கிறார் அவருடைய சொந்தக்காரர்
அவர் மூலமாக செல்லப்பா இன்னும் யார் யார் பெயரையோ
சொன்னார்கள். அந்தப் பெயர்களை வேண்டுமானால் தருகி
றேன். டெண்டர் கொடுக்காமல் பெருவழித் துறையில் என்ன
வேலை செய்தார்கள் தெரியுமா? வெள்ள உடைப்பு ஏற்பட்டதை
அடைக்கவில்லை. வெள்ளத்ததினால், பாதிக்கப்பட்ட சாலை
களை பழுதுபார்க்கவில்லை. சாலைகளின் இரண்டு பக்கத்
திலும் செம்மண் கொட்டி இருக்கிறார்கள். அதை நிரவவில்லை.
இப்போது பொழிந்த மழையில் அவை அடித்துக்கொண்டு
போய்விட்டது. நிறுத்தி வைத்துவிட்டு எப்படி வசூல் செய்வது
என்று தகராறு ஏற்பட்டிருக்கிறது. அதேபோல் என்னுடைய
தொகுதியில் பலயிடங்களில் கவனிக்காமல் வேலைகள் இன்னும்
செய்யப்படால் இருக்கிறது. ஆனால் வேலைகளை முடித்ததாக
உங்கள் அறிக்கையிலே இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்
சம்பந்தப்பட்ட வேலைகளை பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்
படைக்கவில்லை. வறட்சிப் பணிகளில் ஏற்பட்ட அந்தக்
குறைபாடுகள் எல்லாவற்றையும் நான் ஏற்கனவே சொல்லி
யிருக்கிறேன். இப்போது பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டு
இல்லை. பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டுக்குப் பதிலாக இப்
போது கிராம சேவக்குகள் தான் இருக்கிறார்கள். கிராம
சேவக்குகள் நினைத்தால் எதை வேண்டுமானாலும் செய்யலாம்.

[திரு. அன்பில் தர்மலிங்கம்] [1984 பிப்ரவரி 22

என். எம். ஆர்-ல் வந்த கோளாறு காரணமாகத் தான் நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த போது இந்த மாநக ராட்சியை கலைத்தேன். மறுபடியும் அந்த என். எம். ஆர். வேலை கிராமம் பூராவும் பரவி கிராம மக்க ள பொய்யன் ஆக்கி பொய் கணக்கு எழுதவைத்து கையெழுத்து வாங்குவது இன்றும் நடந்துகொண்டிருக்கிறது. அதனால் வந்த பயன் வேலை நடைபெற்றது என்று சொன்னாலும் அதை நம்பமுடியவில்லை. அதைப் போலவே பல வேலைகள் நடத்தப்படாமல் இருக்கின் றன.

இப்போது சென்னையில் கூட பொழிந்த மழையின் காரண மாக 19-ஆம் தேதி நம்முடைய அமைச்சர்கள் எல்லோரும் போய் பார்த்து வந்து இருக்கிறார்கள். உண்மையிலேயே பார்க்கவேண்டியதுதான். அது நம்முடைய கடமையும் கூட. ஆனால் நேற்றைய தினம் 20-ஆம் தேதி கட்சியினுடைய துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சில் மனோகரன் அவர்களும், டாக்டர் கலாநிதி, எம். பி. அவர்களும், நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் பாலன் அவர்களும் எங்களுடைய கட்சி ம்மாவட்ட செய லாளர் டி. ஆர். பாலுவும் மற்றும் அந்தப் பகுதியில் இருக்கின்ற நண்பர்களும் எல்லாம் சேர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஆறுதல் தெரிவிப்பதற்கு சென்ற போது, பெரம்பூர், பூங்காநகர், சேப்பாக்கம், எழும்பூர், அண்ணாநகர். மற்றும் பல பகுதிகளில் அம்மக்களை விசாரித்தபோது, ஒருவேளை சாப்பாடு கொடுத்தார்கள், அதற்குப் பிறகு இன்னமும் யாரும் சாப்பாடு போடவில்லை என்று குறை சொல்லியிருக்கி றார்கள்.

(பிற்பகல் 4-30)

அதைப் போலவே, சிலருக்கு உணவே கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். இது உண்மை யிலேயே வருத்தமாகத்தான் இருக்கிறது. அமைச்சர்கள் பார்வையிடுவது விளம்பரத்திற்காக என்று நான் சொல்ல மாட்டேன். உண்மையிலேயே அனுதாபத்தோடு அமைச்சர்கள் கவனித்திருந்தாலும், பிறகு என்ன நடந்தது என்று கவனிக்க ஃபாலோ அப் ஆக்ஷன் வேண்டாமா என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர, வேறல்ல.

நேற்றுகூட இங்கே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது என்பதைப் போல இருக்கிறது. நாற்றம் அடிக்கிறது நகரசபை. இன்னும் பல இடங்களில் சாக்கடைகள் அப்படியே இருக்கின்றன. ஒருவேளை அவருடைய கார் நிற்காமல் வந்துவிட்டதோ என்னவோ தெரியவில்லை.



1984 பிப்ரவரி 22]

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் பேசுகின்றபொழுது இங்கே வெள்ளப் பகுதி களை அவர்களுடைய துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சில் மனோகரன் அவர்கள் சுற்றிப் பார்த்ததாகவும், அந்தப் பகுதி மக்கள் குறைகளைச் சொன்னதாகவும் சொன்னார்கள். ஆனால் நேற்று மாலைப் பத்திரிகையில் வந்த செய்தி, அப்படி அவர்கள் சுற்றுப்பயணம் செய்யும் பொழுது மக்கள் அவர்க ளிடம், இவ்வளவு நாட்கள் கழித்து வந்திருக்கிறீர்களே என்று வெறுத்துக் கூறியதாகப் போட்டிருக்கிறதே, இதில் எது உண்மை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவைகளெல்லாம் வெளியிலே கூட்டம் போட்டுப் பேசிக் கொள்ள வேண்டிய விஷயங்கள்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : பள்ளத்தில் இருப்பவர்களை மேட்டுக்குக் கொண்டு வருவதற்கான திட்டம் என்று சொல்லி இருக்கிறீர்கள். வீடு கட்டிக் கொடுப்பது என்றால் எப்பொழுது கட்டிக் கொடுக்கப் போகிறீர்கள் என்று தெரியவில்லை.

இந்த அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். பிறருடைய நிலத்தை எடுத்து அது நஞ்சையாக இருந்தாலும் எடுக்கலாம்-வீடு கட்டிக்கொடுக்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. அதன் காரணமாக நகரங்களில் விலை கூடிக் கொண்டிருக்கிறது. நிலங் களை விலை பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களில் இருந்த ஏழை எளிய குடிசை வாழ் மக்களைப் போலீஸ் துணை யோடு எங்கள் பக்கத்திலுள்ளவர்களைக் கொண்டு வெளியேற்று கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இதை நான் நிரு பிக்கத் தயாராக இருக்கிறேன். தஞ்சை மாவட்டத்திலேயிருந்து 500 ஆட்களைக் கொண்டு வந்து ஒரே நாளில் குடிசைகளைப் பிரித்து, அவர்கள் ஐயோ ஐயோ என்று கத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆயிரம் ரூபாயையோ இரண்டாயிரம் ரூபாயையோ கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் தெருவிலே நிற்கிறார்கள். ரங்கோன் நகர் என்ற இடத்தில் 30, 35 வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களை அடித்து விரட்டி, ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என்று கொடுத்து விட்டு அவர்களிடத்தில் எழுதி வாங்கிவிட்டார்கள். இதை வேண்டு மென்றால் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அவர்கள் வாங்கியபோது 24,000 ரூபாய்க இருந்த அந்த நிலம், பிறகு 40,000 ரூபாய்க்கு இன்னொருவருக்குப் பேசப்பட்டு, இப் பொழுது ஒரு கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. அப்படிப் பாதிக்கப்பட்ட 30, 39 பேர்கள் கோர்ட்டுக்கு போய், வேறு வழியே இல்லை, நாங்கள் இப்படியே இருப்போம்

என்று சொன்னதால், கோர்ட் ஸ்டே கொடுத்து, இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் திரு. கே.ஏ.கே. அவர்களின் தொகுதியில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அவரிடத்தில் சென்று முறையீடு செய்திருக்கிறார்கள். ஆனால் * * * * * ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, இடையே குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். * * * * * என்று அதை மட்டும் நீக்கிவிடுவது நல்லது.

திரு. அன்பில் தர்மலிங்கம் : நான் யார் பெயரையும் சொல்லவில்லை. ஜனங்கள் சொல்லிக் கொள்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அரசியல் சட்டத்திலே, * * என்று கிடையாது, எல்லோரும் அமைச்சர்கள்தான். எனவே, * * என்பது பற்றிக் கூறியவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. அன்பில் தர்மலிங்கம் : நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்னதை எல்லாம் குறையாக எடுத்துக்கொள்ளாமல் உடனடியாக ஆவன செய்யவேண்டும். அவருக்கு ஓய்வு இருந்தால் அவர் தஞ்சாவூர் பகுதிக்கு வந்தால் நானே நிலைமைகளைக் காட்டுகிறேன். வேலை செய்யவேண்டிய இடங்களைப் பொறுத்தவரையில் பணிகள் பூர்த்தியாகாத பல இடங்களைக் காட்டுகிறேன். அதற்காக அவரிடமே நான் கேட்டேன். முந்தாநாள், 19ஆம் தேதி வருகிறேன் என்று சொன்னார்கள் ; வாருங்கள். அந்த இடத்தைக் காட்டுகிறேன். எத்தனை நாட்கள் தான் அந்த நிலைமையைப் பொறுத்துக்கொள்வது ?

அடுத்து தை மாதத்திலே மழையே பெய்யாது என்று கூறுகிறார்கள். இப்போது பெய்தது. என்னுடைய தாத்தா ஒருவர் இருக்கிறார். அவருக்கு வயது 85. அவரிடம் கேட்டேன். உங்கள் காலத்திலே எப்போதாவது இவ்வாறு தை மாதத்திலே மழை பெய்திருக்கின்றதா என்று கேட்டேன். அவர் சொன்னார், தை மாதத்திலே மழை பெய்து பார்த்ததே இல்லை என்று. 1909ஆம் வருஷத்திலே தான் அவ்வாறு பெய்ததாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு 1924ஆம்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





ஆண்டு வெள்ளம் வந்தது என்றும் சொன்னார்கள். ஆகவே இப்போது மழை பெய்திருக்கின்றதே, எனவே உலகத்திற்கு அழிவு காலம் வந்துவிட்டதா என்னவோ தெரியவில்லையே என்று சொன்னார்கள். அது வேறு பிரச்சினை. ஆக அவ்வளவு பெரிய மழை பெய்ததற்குப் பிறகும் இன்னும் அந்த வேலைகள் கவனிக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒரு இன்ஜினியர்தான். ஆகவே அவர்களுக்குச் சொல்லத் தேவையில்லை. டெண்டர் போன்றவற்றை போடவேண்டும் என்று இருந்தாலும்கூட அவற்றிலே விதி விலக்குகளும் உண்டு. ஆகவே அப்படியாவது அதைச் செய்திருக்கலாம். அப்படியும் செய்யவில்லை. இன்னும் அந்த வேலைகள் துவக்கப்படவில்லை. ஆனால் துவக்கப்பட்டு செலவழிக்கப்பட்டதாகக் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதை எல்லாம் கவனிக்க வேண்டும்.

அடுத்து இப்போது பாதிக்கப்பட்ட பகுதிகளை எல்லாம் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவித்தால் அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் போன்றோர்க்கு கொஞ்சம் மானியம் கிடைக்கும், கடன் கிடைக்கும். வெள்ள நிவாரணம் கொடுப்பார்கள். ஆகவே திருச்சி, தஞ்சை போன்ற முழுவதும் பாதிக்கப்பட்ட பகுதிகள் அத்தனையையும் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

*திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நாட்டிலே ஏற்பட்டிருக்கிற வறட்சி நிவாரண நிலை பற்றியும், வெள்ளம் ஏற்பட்ட இடங்களில் செய்யப்பட்ட பணிகள் பற்றியும் இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற இந்த வெள்ளை அறிக்கையின் மீது ஆளும் கட்சியின் தரப்பிலே என்னுடைய கருத்துக்களை இங்கே முன்வைக்க நான் ஆசைப்படுக்றேன்.

எனக்கு முன்னாலே இங்கே உரை நிகழ்த்திய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், எங்கள் மரியாதைக்குரிய முன்னாள் அமைச்சருமான அருமை அண்ணன் திரு. அன்பிலார் அவர்கள் இந்த அரசின் சார்பிலே செய்யப்பட்ட நிவாரணப் பணிகளைப் பற்றி கோடிட்டுக் காண்பிக்கவில்லை என்ற குற்றச்சாட்டையும், வெள்ளச் சேதங்கள் ஏற்பட்ட போது செய்யப்பட்ட பணிகளைப் பொறுத்தவரையில் எதை எதை முடித்திருக்கிறோம் என்ற விவரத்தைத் தரவில்லை என்ற குற்றச்சாட்டையும், ஆங்காங்கே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் முன்னிலையிலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய நிவாரண நிதிகளை வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டையும் மக்களுக்கு அளிக்கப்படுகின்ற பணிகளைப் பொறுத்த வரையில் அதாவது உடைப்பு

கள் ஏற்பட்ட இடங்களில் செய்யவேண்டிய பணிகளைப் பொறுத்தவரையில் டெண்டர் மூலமாகத்தான் செய்யவேண்டும் என்ற உத்தரவாதத்தை அளித்ததற்குப் பிறகும் அது அந்த வகையில் அளிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் இங்கே தெரிவித்தார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

நான் திருச்சி மாவட்டத்தின் சார்பில் திருவரம்பூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் திருச்சி மாவட்டத்திலே ஏற்பட்ட வறட்சி நிலைகளைப் பற்றியும் அங்கே ஏற்பட்ட வெள்ளச் சேதத்தால் மக்கள் அவதிப்பட்ட நிலைமை பற்றியும் இந்த அவையிலே சொல்லி என்னுடைய மரியாதைக்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு சில கருத்துக்களை நான் கோடிட்டுக் காண்பித்து என்னுடைய உரையை நான் முடிக்கலாம் என்று கருதுகிறேன். 1981ஆம் ஆண்டிலேயிருந்து, 1982ஆம் ஆண்டு, 1983ஆம் ஆண்டு அதாவது 11ஆவது மாதம் வரையில் நாட்டிலே வறட்சிப் பணிகள் எப்படி நடைபெற்றன என்பது பற்றி இங்கே இந்த வெள்ளை அறிக்கையில் தெளிவாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மிகக் குறுகிய காலத்திலே அளித்திருக்கிறார்கள் என்பதை இங்கே நான் கோடிட்டு காட்ட ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 4-40)

ஒவ்வொரு வாரியத்தின் மூலமாகவும், ஒவ்வொரு துறையின் மூலமாகவும் இன்ன, இன்ன வகைக்கு இவ்வளவு வேலைகள் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அதற்காக எத்தனை இலட்சம் ரூபாய் செலவழித்திருக்கிறோம் என்றும் ஒட்டுமொத்தமான கணக்குகளை இங்கே விவரமாக வைத்திருக்கிறார்கள். அதையெல்லாம் பார்த்துவிட்டு இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் குறை கூறுகின்ற முகத்தான் பல குறைகளை எடுத்துச் சொல்லி இருப்பதற்காக உள்ளபடியே நான் மிக்க வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வறட்சிப் பணியில், புரட்சித் தலைவரின் பொன்னான இந்த அரசு கிராமப் புறங்களாக இருந்தாலும், நகர்ப் புறங்களாக இருந்தாலும், எந்த இடமாக இருந்தாலும், குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாது குடங்களையும் குவளைகளையும் தூக்கிக் கொண்டு தாய்மார்கள் எத்தனையோ பர்லாங்குகளுக்கு நடந்து, அப்பால் சென்று, குடிதண்ணீர் கொண்டு வந்ததை மாமன்றத்திலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் நன்றாகப் பார்த்தோம். நாம் பார்த்துவிட்டு இந்த





அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையிலேயே, நாட்டிலே வறட்சி அதிகமாகிவிட்டது. அதனாலே மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், ஓரிரண்டு ஆண்டுகள் அல்ல, தொடர்ந்து இரண்டு மூன்று ஆண்டுகள் வறட்சி அதிகமாகிவிட்ட காரணத்தால், குளத்திலே தண்ணீர் இல்லை, ஏரியிலே தண்ணீர் இல்லை; ஆக குடிப்பதற்கே தண்ணீர் இல்லை என்ற குறையை எடுத்து வைத்ததன் காரணத்தாலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், உடனடியாக வறட்சி நிவாரணப் பணியை, அங்கே போர்க்கால அடிப்படையில் செய்யவேண்டுமென்று உத்தரவைத் தந்தார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்த அடிப்படையிலே நாட்டிலே ஒவ்வொரு கிராமத்திலேயும் நகரத்திலேயும் ஆழ்குழாய்க் கிணறுகளை ஆங்காங்கே உடனடியாக அமைத்து, ஒரு வாரத்திற்குள் அல்லது 15 தினங்களுக்குள்ளாக, அல்லது அதிகமாகப் போனால், 1 மாதத்திற்குள்ளாக, அமைத்து பாதுகாக்கப்பட்டக் குடிநீர் வசதியை அளித்து, தமிழ்நாட்டிலேயே குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றித் தந்த ஒரு ஒப்பற்ற அரசு நான் இன்றைய அரசு என்பதைப் புரட்சித் தலைவர் அரசு என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அன்றைக்கு ஒரு குடத்தைத் தூக்கிக் கொண்டு பல கிலோ மீட்டர் தூரம் சென்ற தாய்மார்கள் ஆழ்குழாய்க் கிணறு மூலம் தண்ணீர் பெற்று அதற்காகப் பாராட்டு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இன்றைக்குப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

குறிப்பாக, பொன்மலை நகராட்சியில், கடந்த காலத்தில் ஓரிடத்திலாவது ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்குத் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டதா என்பதை மாண்புமிகு அமைச்சராக இருந்த திரு. அன்பில் அவர்கள் சொல்லட்டும். அந்தத் தொகுதியைப் பற்றி அவருக்கு நன்றாகவே தெரியும். புரட்சித் தலைவர் அரசு தான் வறட்சிப் பகுதிகளான பொன்மலை, அலிகான்குளம் பகுதிகளில் 20 H.P. ஹார்ஸ் பவர் மோட்டாரை வைத்து ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து தண்ணீரை எடுத்து, 2½ பர்லாங்குக்கு மேலே, இன்னும் சொல்ல வேண்டுமானால் 2 கிலோமீட்டருக்கு மேலே, குழாய்களைப் போட்டு, உயர்ந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தண்ணீர் வழங்கி இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், சுந்தரராஜ் நகர், சுப்பிரமணியபுரம், அங்கேயிருக்கிற போலீஸ் ரிசர்வ் காலனி போன்ற பகுதிகளுக்குத் தண்ணீர் விநியோகிக்கப்பட்ட செயல்கள் வறட்சி நிவாரணப் பணியிலே செய்து முடிக்கப்பட்டது என்பதை மிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்

அதேபோல பொன்மலை நகராட்சியில் கொட்டப்பட்டி என்ற பகுதியில் 20 H.P. ஹார்ஸ் பவர் மோட்டாரைப் பொருத்தி அங்கே இருந்து பொன்மலைக்கு எடுத்துச் சென்று மலைமேல் உள்ள நீர்த்தேக்கத் தொட்டியிலே ஏற்றி, அந்தப் பகுதியிலே தெருத்தெருவாகத் தண்ணீர் சப்ளை கொடுத்திருக்கிறார்கள். அதுவும் இந்த ஆட்சி வறட்சி நிவாரணப் பணியில் செய்து முடித்த வேலை என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். சிற்றூராக இருந்தாலும் சரி, பேரூராக இருந்தாலும் சரி, 100-க்கு மேற்பட்ட குழாய்களை அமைத்து, அந்த மக்களுக்கு இந்தத் துயர் நீக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்று திருவரம்பூர் தொகுதியில் மட்டும் 120 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டது என்றால் திருச்சி மாநகரத்தில் ஒவ்வொரு பகுதியிலும், தெரு தெருவாக பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத்தை இந்த அரசு தான், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தான் செவ்வனே செய்து முடித்திருக்கிறது என்பதை நான் ஆதாரப்பூர்வமாக இங்கே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து இந்த நிலைமையிலிருந்து மாறி தமிழகம் ஒரு நல்ல நிலைமைக்கு வருகிறபோது 83 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் தேதி ஒரு மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டது. பெரும் மழையினால் திருச்சி மாவட்டமும், தஞ்சை மாவட்டமும் பாதிப்பிற்குள்ளாயின. ஒரு பக்கத்திலே தண்ணீர் இல்லையென்று குறை தீர்க்கிற பணியிலே அரசு ஈடுபட்டு, நல்ல முறையிலே திட்டங்களை நிறைவேற்றிய போது தான் இதுபோன்று மழை பெய்து திருச்சி மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்திலும் பாதிப்பு ஏற்பட்டது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இந்தப் பாதிப்பைக் கேள்விபட்ட உடனே மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக தஞ்சைக்கு வந்து அந்தப்பக்கத்திலே இருக்கிற மக்களை சந்தித்து, குறைகளை கேட்டு, அதிகாரிகளையும், அமைச்சர்களையும் அழைத்து உடனடியாக நிவாரணப் பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்று ஆணித்தரமாக கட்டளை இட்டார்கள், நாம் சுதந்திரம் பெற்றதற்கு பிறகு எத்தனையோ வறட்சிகளையும், வெள்ளத்தையும் சந்தித்து இருக்கிறோம். ஆனால் அந்தக் காலத்திலே எவ்வளவு வேலைகள் நடந்திருக்கின்றன என்பதையும், இப்போது இந்த குறுகிய காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு எவ்வளவு வேலைகளை செவ்வனே செய்து முடித்திருக்கிறது என்பதையும் தயவுசெய்து கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். அப்படி பார்ப்பீர்களானால் எது போர்க்கால நடவடிக்கை என்பதை தெளிவாக நீங்கள் புரிந்து கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திருவரம்பூர் தொகுதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்தார்கள். அவர்களோடு மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்களும், மாண்புமிகு சௌந்திரராஜன் அவர்களும், மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் வந்தார்கள். இன்னும் பல அமைச்சர்களும் அங்கே வருகை தந்து பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்தித்து, வீதி வீதியாகச் சென்று அவர்களுடைய கோரிக்கையைக் கேட்டு அந்த மக்களுக்கு என்னென்ன நிவாரணங்களை அளிக்க வேண்டுமோ அத்தனை நிவாரணங்களையும் உடனடியாக செய்து கொடுத்தார்கள். வீட்டிற்கு 200 ரூபாய், ஐந்து கிலோ அரிசி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய பண்டங்கள் முதலியவற்றை உரிய காலத்திலே அந்த மக்களுக்கு கொடுக்க வேண்டுமென்று ஆணை இட்டார்கள். அரசு தரப்பிலேயிருந்து தலைமைச் செயலாளர் அவர்கள் வந்திருந்தார்கள். இன்னும் கமிஷனர் போன்றவர்களும் வருகை தந்து இந்தப்பணிகளை நேரடியாக பார்த்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எஸ். ஐ. டி. கல்லூரியில் அமர்ந்து 2½ மணி நேரம் தாய்மார்களைச் சந்தித்து அவர்களுடைய குறைகளை நேரடியாக கேட்டார்கள். உங்களுக்கு மேடானப் பகுதியில் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு இந்த அரசு பல நிவாரண நடவடிக்கைகளை எடுக்கும் என்று அவர்களிடத்தில் சொன்னார்கள். அந்த அடிப்படையில் நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே தாழ்வான பகுதியில் இருக்கிற மக்களுக்கு மேட்டுப் பகுதியில் வீடுகளைக் கட்டுவதற்கு உரிய திட்டங்களை இந்த அரசு எடுக்கும் என்ற உத்தரவாதத்தை தமிழகத்தின் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்தத் திட்டங்கள் நிச்சயமாக நிறைவேறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அறுவடைக்கு காத்திருந்த விவசாயிகள் வெள்ளத்தின் காரணமாக பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டதால் உரிய காலத்தில் அறுவடை செய்ய முடியாமல் அவதியுற்றார்கள். இதன் காரணமாக நெல்லின் நிறம் மாறி வியாபாரிகள் அதை வாங்க மறுக்கிற சூழ்நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் அரசே அந்த நெல்லை குவிண்டால் ஒன்றுக்கு 128 ரூபாய் கொடுத்து கொள்முதல் செய்ய வேண்டுமென்று உத்தரவு அளிக்கப்பட்டு விவசாயிகள் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்,

(பிற்பகல் 4–50)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன் :) ஒவ்வொரு உறுப்பினருக்கும் பத்து நிமிடம் நேரம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுக்கப்பட்டுள்ள நேரத்தில் தங்கள் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தின் கிழக்கே திருவரம்பூர் பகுதி மிகவும் பாதிக்கப்பட்ட பகுதியாகும். அந்த இடத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும் வந்து பார்வையிட்டார்கள். மதிப்பிற்குரிய மத்திய பாதுகாப்பு அமைச்சர் மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்களும் வந்து பார்வையிட்டார்கள். அந்தப் பகுதி எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளது என்பது அவர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள விவசாயிகளுக்கு, வெள்ளம் மண்ணை அள்ளிவந்து மேடாக்கி விட்ட பகுதிகளில் நிவாரண நடவடிக்கைகளை எடுத்து, அவற்றைச் சீர்படுத்துவதற்கு விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அது குறித்து இங்கே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலும் சொல்லப்பட்டு இருக்கிறது. சிறு விவசாயிகளுக்கு இந்தப் பணிகளை இலவசமாக அரசு மானியத்திலும், மத்திய தர விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம், 50 சதவீதம் கடன் என்ற வகையிலும் அந்தப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. அதற்காக நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதற்காக அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தில், மொத்தம் 4,559 சாலைகள் இந்த வெள்ளத்தால் பழுதடைந்து இருக்கின்றன. ஆறுகளில் ஏற்பட்டு இருக்கும் உடைப்புகள் 1,299. குளங்களில் ஏற்பட்டு இருக்கும் உடைப்புகள் 1,152. இவைகளையெல்லாம் அவசரமாகவும், அவசியமாகவும் மிகவும் குறுகிய காலத்தில் செப்பனிட்டு, அந்த விவசாயிகளுக்கு பயன் உள்ள வகையில் பாசன வசதியைச் செய்து கொடுத்ததற்காக இந்த அரசுக்கும் அதிகாரிகளுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் சொல்வேன், என்னுடைய திருச்சி மாவட்டம் பெருங்கட்டூர் பகுதியிலும் மிகவும் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. அதைப்போலவே, திப்பதூர் பகுதியிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அங்கெல்லாம் நிவாரணப் பணிகளை நல்ல முறையில் செய்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





ஆண்டிமடம் தொகுதியில் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர் பெருமக்களும் அதிகாரிகளும் சுற்றிப்பார்த்து நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுத்தார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டிமடம் தொகுதியில் செய்து முடிக்கப்பட்ட வறட்சி நிவாரணப் பணிகளுக்கான பணம் இன்னும் வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அந்தப் பணத்தை உடனடியாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதற்காகச் சொல்கிறேன். இந்த வெள்ள நிவாரணப் பணிக்கு எவ்வளவு செலவாயிற்று என்ற கணக்குத் தரப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த வெள்ள நிவாரணப் பணிகள் இன்னும் முழுமையாக முடிவுறவில்லை. ஒரு சில இடங்களில் முடிந்து இருக்கின்றன. ஒரு சில இடங்களில் இன்னும் முடியவில்லை. முடிந்த அளவிற்கு ஒட்டுமொத்தமாகக் கணக்குக் கொடுத்து இருக்கிறார்கள். இப்போது கொடுக்கப்பட்டுள்ள கணக்குதான் மொத்தமாக வெள்ள நிவாரணப் பணிக்கு இந்த அரசு செய்த செலவு என்று சொல்லிவிட்டால், நாம் மத்திய அரசிடம் கேட்டு இருக்கும் தொகை நிச்சயமாக நமக்குத் தேவையில்லை என்று சொன்னதற்கு ஒப்பாகும். அந்தப் பணத்தைப் பெறுவதற்கு நாம் தவறினால் நாம் முழுமையான அளவிற்கு அந்தப் பணிகளைச் செய்ய முடியாது என்பதைச் சுட்டிக்காட்டி, பணியைச் செய்ததற்குப் பாராட்டுத் தெரிவிக்க நீங்கள் தவறினாலும், மக்களுக்கு வேண்டிய வசதியை இந்த அரசு செய்து கொடுத்து இருக்கிறது. இந்த அரசு மக்களுக்கு செய்த நல்ல பணிகளுக்கு அந்த மக்கள் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறார்கள். அரசு செய்து இருக்கும் சாதனைகளை நீங்கள் மறந்தாலும், பாராட்டாவிட்டாலும், மக்கள் இதை மறக்க மாட்டார்கள், அவர்கள் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள் என்பதைச் சொல்லி, வாய்ப்பு தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எல். இளையபெருமாள் : மாற்றுத் தலைவரவர்களே, இந்த வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கையின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் ஒருசி கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நாட்டில் எற்பட்ட வறட்சிக்காக நாம் 1,428.0 இலட்சம் ரூபாய் செலவழித்திருக்கிறோம். இந்த வறட்சி நிவாரணப் பணிகளிலே நல்ல முறையிலே அதிகாரிகள் செயல்பட்டார்கள் என்பதில் கருத்து வேற்றுமை இல்லை. ஆனால் செய்ய வேண்டிய காலத்திலே சில இடங்களில் செய்யப்படவில்லை, கொடுக்க வேண்டிய இடங்களுக்கு ஒழுங்காக கொடுக்கப்

படவில்லை. சில இடங்களிலே தவறுகள் நடைபெற்றிருக்கின்
றன. அரசாங்கத்திற்கு நான் அதுபற்றி கடிதம் தெரிவித்தி
ருக்கிறேன். குறிப்பாக திருச்சி, தென்னாற்காடு, வடாற்காடு
மாவட்டங்களில் காண்ட்ராக்ட் முறையை வைத்துக்கொண்டு,
அந்த காண்ட்ராக்டர்கள் அதிகாரிகளைப் பார்ப்பதற்கு முன்
னால் தங்களாகவே பேசி வைத்துக்கொண்டு, நீ கேட்பது
நான் வாங்குவது என்ற முறையிலே இருந்து, நியாயமான
முறையிலே செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யாமல் இருந்
திருக்கிறார்கள். அதிகாரிகள் சொல்வதைக் கேட்காமல் அலட்
சியப்படுத்தியிருக்கிறார்கள். சில இடங்களிலே அதிகாரிகளை
மிரட்டியும் காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இதற்கு
எல்லாம் காரணம் அரசியல்வாதிகள்தான் என்பதிலே எனக்கு
சிறிதும் ஐயப்பாடு இல்லை. ஆளும் கட்சியாக இருந்தாலும்,
எதிர்க்கட்சியாக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும்
இப்படிப்பட்ட நிலைமை வரும்போது அமைச்சரவர்கள்
பகிரங்கமாக விசாரணை செய்து, அதிகாரிகளுக்கு தாக்கீது
செய்தாலொழிய அதிகாரிகள் தங்கள் இஷ்டப்படி செயல்
படவோ, நேர்மையாக நடவடிக்கை எடுக்கவோ முடியாது.
தங்கள் சக்தியால் அவர்கள் ஒன்றும் செய்ய முடியாமல்
மௌனமாக இருக்கிறார்கள், அமைதியாக இருக்கிறார்கள்.
ஆகையால் நிவாரணப் பணி சரியாக நடக்கவில்லை.

நான் குறிப்பிட்ட இந்த மூன்று மாவட்டங்கள் பற்றியும்
அமைச்சர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறேன். இந்த
வெள்ளை அறிக்கையை எடுத்துக் கொண்டால் ஒரு பக்கம்
வறட்சி, அதைத் தொடர்ந்து வெள்ளம். அதனால் ஏற்பட்ட
பாதிப்பு ஏராளம். இலட்சக்கணக்கான ஏக்கர் நிலம் பாதிக்கப்
பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான விவசாயிகள் அவதிப்பட்
டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு இந்த
சர்க்கார் மத்திய சர்க்காரிடம் சொல்லிச் செய்தாலும் சரி,
தன்னுடைய முயற்சியில் செய்தாலும் சரி, அவர்கள் பெற்றுள்ள
கடன்களை எல்லாம் முழுமையாக ரத்து செய்ய வேண்டும்.
அதற்கு அரசாங்கம் நல்ல முறையிலே ஒரு குழுவை அமைத்து,
ஆலோசனை சொல்லி, மத்திய சர்க்காரை நேரிலே அணுகி
சொல்லியாவது முழுமையான அளவுக்கு முடிவு காணவில்லை
என்றால் நிச்சயமாக இந்த வறட்சி காரணமாகவும் வெள்ளம்
காரணமாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் இன்னும் ஐந்
தாண்டுகள் ஆனாலும் எழுந்து நிற்க முடியாது, அவர்களை பாது
காக்க முடியாது என்ற தன்மையை இந்த சபையிலே நான் தெரி
விக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கு ரிசர்வ் பாங்கு தடையாக இருக்கிறது அல்லது மத்திய
அரசு தான் இதற்குப் பொறுப்பு என்று சொல்லி உங்களுடைய
பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் நீங்கள் நடவடிக்கை எடுக்க
வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் எங்கள் கட்சித்
தலைவரிடம் சொல்லி, மத்திய அரசுக்கு தகுந்த முறையிலே





எடுத்துச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் நீங்கள் ஏதோ சொன்னோம், ஏதோ எழுதினோம் என்று இருந்து விடாமல் டெல்லிக்குப் போய், உட்கார்ந்து, விளக்கி தேவையான நிதியைப் பெற முயற்சி செய்ய வேண்டும். அது அல்லாமல் தபால் அனுப்பினோம், தந்தி கொடுத்தோம். என்று சொல்லி, கோர்ட்டிலே வக்கீல் அட்ஜர்ன்மென்ட் வாங்கப்போவதைப் போல போகக் கூடாது என்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த வெள்ளை அறிக்கையில் 12-வது பக்கத்திலே சிறு விவசாயிகளுக்கு 25 சதவீதம் மானியம், குறு விவசாயிகளுக்கு 33-1/3 சதவீதம் மானியம், கடன் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது 25 சதவீதமாக இருந்தாலும் சரி, 33 சதவீதமாக இருந்தாலும் சரி, நம்முடைய அதிகாரிகளை விட்டு தீர்க்கமாக விசாரணை செய்து, உண்மையிலே பாதிக்கப்பட்டவர் யார், பாதிக்கப்படாதவர் யார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். பாதிக்கப்பட்டவர் யார் என்று பார்த்து, தகுதி படைத்தவராக இருந்தால் அவருக்கு முழு அளவில் நிவாரணம் அளிக்க வேண்டும்; முழு அளவில் கடனை ரத்து செய்ய வேண்டும்.

குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் சிதம்பரம் தாலுகா, காட்டுமன்னார் தாலுகாக்களில் கடன் பெற்றவர்களால் ஒன்றும் செய்ய முடியாது, அவர்களால் திருப்பிச் செலுத்தவே முடியாது. அந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஈட்டிக்காரன் கடனை விட நம்முடைய கடன் பொல்லாதது. ஈட்டிக்காரன் அதட்டிவிட்டு போய் விடுவான். அரசாங்கக் கடன் அல்லது கூட்டுறவுக் கடன் என்றால், கடன், வட்டி, அதற்கு அபராத வட்டி, அதற்கு மேல் மூன்று மடங்கு தீர்வை என்று இப்படிப் போட்டு கஷ்டப்படுத்துகிறார்கள். அதை அவர்களால், பாதிக்கப்பட்ட அந்த விவசாயிகளால் கட்ட முடியாது, வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் இருப்பது மட்டுமல்ல, அவர்கள் தங்களிடம் இருந்ததையும் இழந்து விட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை தீர்க்கமாக அறிந்து கொள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரி அளவில் ஒருவரை நியமித்து, அரசியல்வாதிகளுக்கு அங்கே இடம் கொடுக்காமல், நேர்மையான முறையில் அவர் விசாரித்து, சிறு விவசாயிகள், மார்ஜினல் ஃபார்மர்ஸ் என்று சொல்லக் கூடியவர்களுக்கு நியாயமான உதவிகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அரசியல் வாதிகள் இடம் பெற்றால் எதிர் கருத்து, ஜனநாயகத்திற்கு முரணான கருத்து, கட்சி கருத்து என்று விவாதிக்கப்பட்டு, உண்மையைக் கண்டறிய முடியாமல் போய்விடும்,

[திரு. எல். இளையபெருமாள்] [1984 பிப்ரவரி 22

(பிற்பகல் 5-00)

இந்தத் தடவை நிச்சயமாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், தாசில்தார்கள் மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்தார்கள். அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பத்மநாபன், ஹரிபாஸ்கர், தங்கராஜ் இவர்களெல்லாம் இங்கே சென்னையில் இருந்தாலும், வெளியே இருந்தாலும், நல்ல முறையில் ஈடுபட்டார்கள். அது போல தாசில்தார்களும் ஈடுபட்டார்கள். ஆனால் ஒரு சில இடங்களில் இந்த தவறுகள் இருக்குமேயானால், அவைகளை திருத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக காட்டுமன்னார்குடி, நந்திமங்கலம், ராஜன் வாய்க்கால், பழைய கொள்ளிடம் போன்ற கிராமங்களுக்கு யாரும் செல்ல முடியவில்லை. அங்கே சுற்றித் தண்ணீர் வளைத்துக் கொண்டிருக்கிறது. மூன்று பக்கமும் தண்ணீர். ஹெலிகாப்டர் மூலமாகப் போனவர்கள் கூட உணவைக் கொடுக்க முடியவில்லை. காரணம் அவ்வளவு தண்ணீரால் பாதிக்கப்பட்டிருக்கிறது. கிராமத்து மக்களுக்கு இந்த ரூ. 200 கொடுக்காமல் இருப்பதும், அவர்களுக்குச் செய்ய வேண்டியதை செய்யாமல் இருப்பது போன்ற பாவச் செயலை அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்திருக்கிறார்கள். இதைப் பற்றி கலெக்டரிடம் சொல்லியிருக்கிறேன். நேரில் பார்த்து வந்தேன். ஏதோ தங்கள் வீட்டுப் பணத்தைக் கொடுப்பது போல் அதிகாரிகள் செய்கிறார்கள். அங்கே அவதியிலுள்ள மக்கள், படியாத மக்கள் ஏதோ வருத்தமான வார்த்தைகளை அறிவற்ற நிலையில் கோபத்தினாலே உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அதைக் காரணம் காட்டி, அங்கேயெல்லாம் ஒன்றுமில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஒரு சில கிராமங்களில் வீடுகளே விழவில்லை. அவர்கள் அத்தனை பேருக்கும் கொடுத்திருக்கிறார்கள். ஏழைகளான பாதிக்கப்பட்டவர்களுக்கு, கொடுக்கப்பட வேண்டிய உதவி கொடுக்கப்படவில்லை. ஒரு சில இடங்களில் தான் அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்திருக்கிறார்கள். அதைப் போலவே, காட்டுமன்னார்குடி, வீராண்டிபுரத்திற்காக 12 மூட்டை அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அரிசியை கிராம அதிகாரியும், ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் கொடுக்கவில்லை. ஆளும் கட்சியோ, எதிர்க் கட்சியோ அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால் 25 நாட்கள் வரை அவர் வீட்டில் இருப்பதை நான் தாசில்தாரிடம் சொன்னேன். கடைசியில் 11 மூட்டைகளைக் கைப்பற்றினார்கள். சப்ளை ஆபிசர் என்ன நடவடிக்கை எடுத்தார் ? இப்படி அதிகாரிகள் செய்யத் தவறுவார்களேயானால், அல்லது அரசியல் காரணம் காட்டி, தப்பினால், எப்படி இந்தக் குற்றங்களைச் செய்பவர்களை, தவறு செய்பவர்களை, நீங்கள் வருங்காலத்தில் திருத்த முடியும் ?



1984 பிப்ரவரி 22] [திரு. எல். இளையபெருமாள்]

அது போலவே, இன்னொரு பகுதியில் சொல்லியிருக்கிறார்கள். 18 சதவீதம் முதல் 25 சதவீதம் வரை, இந்த நெல்லை வாங்குவதற்கு, விவசாய மக்களுக்கு ஈரப் பதத்தைப் பொருத்துக் கொண்டு வாங்கிக் கொள்ளுங்கள் என்ற அரசாங்க உத்தரவு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. முக்கியமாக நான் விவசாயி என்ற முறையிலே சொல்கிறேன். நான் சுற்றிப் பார்த்ததாலும் சொல்கிறேன், அவர்கள் 45 சதவீதம், 30 சதவீதம் என்று கேட்கிறார்களே, நீங்கள் சொல்லியபடி, 18 சதவீதம், 25 சதவீதம் என்று வைத்துக் கொள்ளவில்லை.

அது மட்டுமல்ல, பசிக்காக வைத்திருந்த நெல்லைக் கூட வாங்க முடியாமல் இருக்கிறார்கள். தஞ்சைப் பகுதியில் சீர்காழி, தென் ஆர்க்காட்டில், சிதம்பரம், காட்டுமன்னார்குடி ஆகிய இடங்களில் அதிகாரிகள் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் செய்திருக்கிறார்கள். நான் அவர்களைக் குற்றம் சொல்லவில்லை. நீங்கள் கண்டிக்க வேண்டுமென்பதற்காகத் தான் சொல்கிறேன்.

இந்தியப் பிரதமர் ரூ: 5 கோடி கொடுத்திருக்கிறார்கள். மாநிலத்திலும் அதிகமாக செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சேர வேண்டியவர்களுக்கு அது சேரவில்லை என்பது தான் வருத்தம். ஷெட்யூல்டு காஸ்ட் சேர்மன் திருமதி மரகதம் சந்திரசேகரன் சென்னை நகரைப் பார்த்தார். ஒரு சில மக்களுக்கு ஒரு வேளை, இரண்டு வேளை உணவு அளிக்கப்பட்டது. சில மக்களுக்கு ஒரு வேளை கூட உணவு கொடுக்கப்படவில்லை. நான் ரெவின்யூ அமைச்சரிடமும், முதலமைச்சரிடமும், சொன்னேன். சொன்னதற்குப் பிறகு ஒரு நாள் கிடைத்தது. பிறகு கிடைக்கவில்லை. குடிசை மக்களுக்கு ரூ. 200-ம் கொடுக்கப்படவில்லை. மேலும் நான் இதிலே சொல்வது, கால் நடைகள் ஆயிரக் கணக்கில் உயிரிழந்து போய் இருக்கின்றன. ஒரு வீட்டிலே எல்லா கால் நடைகளும் போயிருக்குமானால், குறைந்த பட்சம் இரண்டு மாடுகள் கிடைப்பதற்கு கடனாகவோ, இலவசமாகவோ, எப்படி அரசாங்கத்திற்கு வசதி இருக்கிறதோ, அந்த அளவிலே கொடுக்க வேண்டும். முழு மாடுகளும் இழந்தவர்களுக்கு இரண்டு காளை மாடுகளை கொடுக்க நீங்கள் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

கிட்டத்தட்ட 30 ஏரிகள் இன்றைக்கு உடைபட்டிருக்கின்றன. அவைகளில் 2 ஏரிகள்தான் சீர் செய்யப்பட்டிருக்கின்றன.

கடைசியாக நான் ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். தென் ஆர்க்காடு, திருச்சி, மற்றும் தஞ்சை மாவட்டங்களுக்குப் பாசன வசதி அளிக்கக் கூடிய வகையில், லோயர் அணைக்கட்டு, காவிரியிலிருந்து கொள்ளிடம் பகுதி வரை வருகிறது. கடந்த 100 ஆண்டுக் காலமாக இயற்கையின் கொடுமையின் காரணமாக

திடீர் திடீர் என்று மழை பெய்து, அந்தத் தண்ணீர் எல்லாம் வீணாகச் சென்று வங்காள விரிகுடாக் கடலிலே சென்று கலக்கிறது. இப்படி பெரும் மழையின் காரணமாக ஏரிகள் ஆங்காங்கே உடைத்துக் கொள்கின்றன. திருச்சி மாவட்டத்தில் கருப்பூர் என்ற இடத்தில் அடிக்கடி இப்படி ஏற்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் அங்கே பொன்னேரி என்று ஒரு ஏரி இருக்கிறது. 3 ஏக்கர் நீளமுள்ள ஏரி அது. அது தற்போது மண் மேடிட்டு போயிருக்கிறது. மராமத்து வேலைகள் நின்று விட்டன. பஞ்சாயத்து வேலைகள் ஸ்தம்பித்து விட்டன. 10 ஆண்டுக் காலமாக. அதே போல் தென் ஆர்க்காடு மாவட்டத்திலே வீராணம் என்ற ஏரி, பெருமாள் என்ற ஏரியிருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்தில் தூர் எடுத்தது. இன்று வரையில் தூர் எடுக்கவில்லை. அவைகளை ஆழப்படுத்தினால் வங்காள விரிகுடாக் கடலிலே செல்லுகின்ற நீரைத் தேக்கி ஒரு புதிய கனாலை உண்டாக்கி, பொன்னேரியிலே நீரைத் தேக்கி பொன்னேரி—வீராணம், வீராணம் டு பெருமாள் ஏரி என்று வருமானால் 3 ஜில்லாவுக்கும் நன்மை பயக்கும்.

அதே போல் சென்னை நகரை எடுத்துக் கொண்டால், கிட்டத்தட்ட 100 மைல் தூரத்திற்கு சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி பாதிக்கப்பட்ட சாலைகளை நாம் உடனடியாகச் சீர்திருத்தம் செய்து முடிக்க வேண்டும். சென்னை நகரைப் பொறுத்த வரையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, ஒரு வார காலத்திற்காவது அவர்கள் தங்குவதற்கு நாம் இடம் கொடுக்க வேண்டும். அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் இருந்தாலும் கொடுக்கலாம். எனவே அந்த மக்களுக்கு தங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. த. வீராசாமி :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, வறட்சி மற்றும் வெள்ள நிவாரண அறிக்கை மீது நான் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். நான் 1981–82, 1982–83, மற்றும் 1983–84 ஆகிய ஆண்டுகளில் தமிழகம் கொடிய வறட்சிக்கு ஆட்பட்டு, அந்த வறட்சியைப் போக்குகின்ற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், பல்வேறு ஆக்கப்பணிகளைச் செய்து வருகிற நேரத்தில், 30–9–83 அன்று எல்லா வறட்சிப் பணிகளும் முடிகின்ற தருவாயில் என்றுமே தமிழகம் கண்டிராத அளவிற்கு ஒரு பெரிய வெள்ளம் ஏற்பட்டு, இன்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக, தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் தென் ஆர்க்காடு போன்ற மாவட்டங்கள் கொடுமையான அளவிற்கு ஆட்பட்டு இன்று அங்கே வாழ்கின்ற மக்கள் பாதிக்கப்பட்டு பல்வேறு சிரமங்களுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதை



நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஓர் ஆண்டுக் காலமாக மழை பெய்தால் எவ்வளவு பெய்யுமோ, அவ்வளவையும் 2, 3 தினங்களில் பெய்து, 21–12–83 முதல் 24–12.83 வரைக்குள், பெய்து, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, தென் ஆர்க்காடு போன்ற மாவட்டங்கள் பெரிய அளவிற்கு பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட சிரமமான நேரத்தில் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தனக்கே உரிய அந்த பெரிய உள்ளத்தின் அடிப்படையில் இந்த நாட்டு மக்களைக் காப்பாற்றுவதற்காக எப்படி கடந்த காலத்தில் வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கை இன்னல்களுக்கு தமிழகம் ஆட்பட்டபோது, அதை எதிர்த்து சமாளித்தாரோ, மக்களைக் காப்பாற்றினார்களோ, அதைப்போலவே, அவர்கள் 26–12–83 முதல் 29–12–83 வரை தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் தங்கியிருந்து பல்வேறு பகுதிகளை பார்வையிட்டு, அதிகாரிகளை அழைத்து கலந்துபேசி, தேவையான ஆணைகளையிட்டு, வெள்ள நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக நான் தஞ்சை மாவட்டத்தின் சார்பாக அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் 21–12–83 அன்று சென்னையிலிருந்து புறப்பட்டு, 12–1–84 வரை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தங்கியிருந்து அங்கே பல்வேறு அதிகாரிகளுடன் கலந்து பேசி பல்வேறு நிவாரண வேலைகளைச் செய்ததற்காக நான் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, பல்வேறு அமைச்சர் பெருமக்கள், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் எம். ஆர். கோவேந்தன் போன்றவர்கள், மாண்புமிகு அமைச்சர், எஸ். ஆர். இராதா, மாண்புமிகு அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன், மாண்புமிகு அமைச்சர் கலைமணி, மாண்புமிகு அன்றைய தொழில் அமைச்சரும், இன்றைய கூட்டுறவுத் துறை அமைச்சருமான மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை துறை அமைச்சர் போன்ற பல்வேறு அமைச்சர் பெருமக்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் ஆணைக்கிணங்க தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளைப் பிரித்து அங்கே வெள்ள நிவாரணப் பணிகளுக்காக பல்வேறு அதிகாரிகளை அழைத்து, நிவாரண நடவடிக்கைகள் சீரும் சிறப்புமாக நடைபெற ஆவன செய்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. த. வீராசாமி] [1984 பிப்ரவரி 22

(பிற்பகல் 5-10)

அந்த வகையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அன்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் தருகிற வகையில் அவரே அங்கே தங்கியிருந்து, இன்னும் சொல்லப்போனால், தமிழகத்தினுடைய, தலைமைச் செயலகமே தஞ்சாவூரிலே இயங்குகிறதோ என்று மக்கள் எண்ணுகிற வகையில் தமிழகத்தினுடைய பல்வேறு உயர் மட்ட அதிகாரிகளை அங்கே தங்கச் செய்து, தஞ்சை மாவட்டத்தின் நிவாரண வேலைகளை கவனித்து வந்தார்கள் என்று இந்த நேரத்திலே கூறி, அப்படிப்பட்ட இந்த அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியை தஞ்சை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் டிசம்பர் மாதத்தில் வழக்கமாக 168 மில்லி மீட்டர் மழை பெய்யும். ஆனால் இந்த ஆண்டு வழக்கத்திற்கு மாறாக 651 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறது. அதற்கும் மேலாக, திருச்சியிலே பெய்த 286 மில்லி மீட்டர் மழையும், புதுக்கோட்டையிலே பெய்த 268 மில்லி மீட்டர் மழையும் இன்று தஞ்சை மாவட்டத்தை நோக்கி ஓடிவந்து, பல்வேறு ஆறுகளையும், பல்வேறு ஏரிகளையும், குளங்களையும் சாலைகளையும் உடைப்பு எடுத்துக் கொண்டு ஓடுவதைப் பார்க்கிறபோது, தஞ்சை மாவட்டமே நீரில் மூழ்கி தடுமாறுகின்ற நிலைமைக்கு ஆளாகி இருக்கிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட நிலையில்தான் எங்களுடைய தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த மாவட்டத்தினுடைய மக்களின் துயரை துடைக்கின்ற வகையில் இன்று வெள்ள அறிக்கையை தயாரித்து வைத்து, மைய அரசுக்கு 128 கோடி ரூபாய் வேண்டும் என்று கோரி, அங்கேயும் அறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள்.

அத்தோடு பல்வேறு பணிகளில் ஈடுபட்டு அங்கே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள, பத்து லட்சத்திற்கு மேலாக உள்ள மக்களுக்கு 1,658 நிவாரண முகாம்களை ஏற்படுத்தி வெள்ளப்பெருக்கால் வீடுகள் மூழ்கி பாதிக்கப்பட்ட மக்களை அங்கேயிருந்து அப்புறப்படுத்தி அழைத்துச் சென்று, அந்த முகாம்களில் சேர்த்து உணவு அளித்து காப்பாற்றியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்கிறேன். கால்நடைகளுக்கு இலவச ஊசிகள் போடப்பட்டிருக்கின்றன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, நிவாரண முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்ட மக்களுக்கு அங்கே மருத்துவ வசதியும் அளிக்கப்பட்டிருக்கிறது. தடுப்பு ஊசிகளும் போடப்பட்டிருக்கின்றன. இப்படியெல்லாம் பல வகைகளில் நிவாரணப் பணிகளை புரட்சித் தலைவர் அவர்களின் அரசு மேற்கொண்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



1984 பிப்ரவரி 22] [திரு. த. வீராசாமி]

அப்படி வெள்ளம் வருகிற அந்த நேரத்தில் டிசம்பர் திங்களில் தஞ்சை மாவட்டத்தில் 10 லட்சம் ஏக்கர் சம்பா பயிர்கள் பயிரிடப்பட்டிருக்கின்றன. அதிலே 8 லட்சம் ஏக்கர் சம்பா பயிர்கள் பூத்துக் குலுங்கி அறுவடைக்கு தயாராகிக் கொண்டிருந்த நேரம். ஆனால் அந்த 8 லட்சம் ஏக்கர் சம்பா பயிர்களும், தண்ணீரிலே மூழ்கி ஒரு வாரம், பத்துநாள் தண்ணீருக்குள்ளேயே இருந்ததன் காரணமாக பாதிக்கும் மேற்பட்ட பயிர்கள் அழிந்தன. அப்படி அறுவடைக்கு தயாராக இருந்த கதிர் அழிந்ததால், தென்னகத்தின் நெற்களஞ்சியம் என்று சொல்லப்பட்ட தஞ்சை மாவட்டம், இன்று உணவுக்கு எங்கே போவோம் என்று ஏங்குகிற நிலைமை உருவாகியிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே மெத்தப் பணிவன்போடு கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், 5-1-1984 அன்று தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வந்து, என்னுடைய தொகுதியில் நடாமங்கலம் பகுதிக்குச் சென்று அங்கே வயலில் நீரினால் மூழ்கியது போக மீதி இருந்த நெல்லை, வெள்ளம் வடிந்தவுடன், விவசாயிகள் அறுவடை செய்து சாலையில் போட்டு அடித்துக் கொண்டிருந்த நேரத்தில், அவர்களுடன் கலந்துரையாடினார்கள். அப்போது அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்து மக்கள் மிகவும் நெஞ்சுரம் படைத்தவர்கள். அவர்களால்தான் இப்படிப்பட்ட சூழ்நிலையிலும், கேட்கின்ற கேள்விகளுக்கு சிரித்துக் கொண்டே பதில் சொல்லமுடியும் என்று என்னிடத்திலே சொன்னார்கள். அப்படி தஞ்சை மாவட்டத்து மக்கள் நெஞ்சுரம் படைத்தவர்களாக இருந்த போதிலும் கூட, இந்த ஆண்டு சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக, வெள்ளம் ஏற்பட்டு மிகவும் சேதமடைந்து நிலைகுலைந்து போயிருக்கிறார்கள், என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், உடைப்பின் காரணமாக மணல் மேடிட்டு இருந்த வயல்களிலிருந்து அந்த மணலை அப்புறப் படுத்துவதற்கான நிலைமையை உருவாக்கி, சிறிய விவசாயிகளுக்கு இ[illegible]சமாகவும், பெரிய விவசாயிகளுக்கு 50 [illegible]காடு மா[illegible]யம் அளிப்பதில் ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் செலவிடப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

என்பதை வரவேற்கிறேன். ஆனால் இன்று தஞ்சை மாவட்டத்தில் பெரிய விவசாயியாக இருந்தாலும் கூட, வெள்ளத்தின் காரணமாக அவர் இப்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருக்கிறார். எங்கள் தஞ்சை மாவட்டத்திற்கே பொருளாதார சீர்கேடு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று வித்தியாசம் பாராது, எல்லோருக்கும் இலவசமாக இந்த மண்மேட்டிருக்கும் இடங்களில் உள்ள மணலை அப்புறப் படுத்தக் கூடிய அளவுக்கு நிலைமையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. மரியாதைக்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எதிர் கட்சித்தலைவர் திரு. அன்பில் தருமலிங்கம் அவர்கள் இன்று தஞ்சை மாவட்டத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் நிவாரணப் பணியிலே ஊழல்கள் புரிந்திருப்பதாக குறிப் பிட்டார்கள். உள்ளபடியே நான் மிகவும் வேதனை அடை கிறேன். அவர்கள் உண்மைக்கு மாறாக இங்கே நிலைமைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் உள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அங்கே வண்டுகளை போல சுறுசுறுப்பாக ஓடியாடி பணியாற்றி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உறுதுணையாக இருந்து காப்பாற்றியிருக்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ள வேண்டியவர்கள் இன்று பல குறைகளை கண்டு கொண்டிருக்கிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது தொகுதியிலே சித்தமல்லியில், அரசு ஆணைப்படி சோறு வழங்கப்படும் என்று அதிகாரிகள் சொன்ன நேரத்தில், அங்கே உள்ள முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லப்படும் ஒருவர், சோறு வேண்டாம், அரிசி வேண்டும், மூட்டையாக கொடுங்கள், நாங்கள் பகிர்ந்து கொடுக்கிறோம் என்று சொன்னதை நான் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்களுக்கு எடுத்துச்சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. என்னுடைய தொகுதியில், நீடாமங்கலம் என்ற ஒன்றியத்தில், பூவனூர் என்ற கிராமத்தில், பொது உடைமைக் கட்சியைச் சார்ந்தவர்கள், நான் வெள்ள நிவாரண பணிகளை பார்க்க சென்ற நேரத்தில் குண்டானிலே அரிசி போட்டு சோறு ஆக்கி கொடுக்க வேண்டாம். குண்டான் குண் டானாக அரிசியை அப்படியே கொடுங்கள், நாங்கள் பகிர்ந்து கொடுக்கிறோம் என்று சொன்னதை கூற கடமைப்பட்டிருக் கிறேன். ஆனால், அதையெல்லாம் மறைத்துவிட்டு அவர்கள் அங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தவறு செய்துவிட்டார்கள் என்று நோட்டீஸ் அடித்து விளம்பரப் படுத்தினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மக்களுக்கு துன்பங்கள், துயரங்கள் வருகின்ற நேரத்தில் உதவி செய்ய முற்படுபவர்களை இப்படி குறை சொன்னால், நாட்டிலே நல்லவர்கள் எதற்கும் முன்வர மாட்டார்கள் என்பதை அன்பில் தர்மலிங்கம் அவர்களுக்கு கூறிக்கொள்கிறேன்.

வெள்ளத்தை தடுப்பதற்கு தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்களையும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

புயல், வெள்ளத்தால் பெண்ணாற்றின் நீரின் அளவு இது வரையில் 10,000 கியூசக்ஸ் வந்திருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு 30,000 மேற்பட்ட கன அடி தண்ணீர் வந்த காரணமாக பல உடைப்புகள் ஏற்பட்டு இருக்கிறது என்பதை கூறிக்கொள் கிறேன். அதற்கு மேலாக ஆற்றின் கரைகள் பலவீனமாக இருக் கின்ற காரணத்தால், ஆறுகள் மண்மேடிட்டு தங்கி இருப்பதனால் பல இடங்களில் உடைப்புகள் வந்து கரைபுரண்டு ஓடுகின்ற நிலைமை இருக்கிறது. அதையெல்லாம் அப்புறப்படுத்த வேண்டும். முறையாக தண்ணீர்விட்டாலும் கூட ஆற்றங்கரை கால்வாய் உடைகின்ற நிலைமை இருக்கிறது. அவற்றையெல்லாம் அனுமதிக்கக் கூடாது.

ஒன்றைச்சொல்லி, அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று தமிழகத்தில் இருக்கின்ற ஏரிகள், குளங்கள், அத்தனையையும், சென்ற ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டும், ஏற்பட்ட வறட்சி யை போக்குவதற்கு, ஆழப்படுத்தியதன் காரணமாக வெள்ளத் தின் கொடுமை 25 சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் அதே நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற ஆறுகள், ஏரிகள் அத்தனையையும், ஆழப் படுத்தி, அகலப்படுத்தி, வடிகால் வாய்க்கால்களை புதியதாக ஏற்படுத்தி, பழைய வாய்க்கால்களில் மணல் மேடுகளை அப்புறப் படுத்துவதன் மூலமாக ஆழப்படுத்தி இந்த அரசு தருமானால், வருங்காலத்தில் இப்படிப்பட்ட வெள்ளம் வருமானால், அது நிச்சயமாக இந்த அளவுக்கு மக்களை பாதிக்காது என்று கூறிக் கொள்கிறேன்.

எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், அவரது அமைச்சரவையில் உள்ள பல்வேறு அமைச்சர் பெருமக்க ளையும், தஞ்சை மாவட்டத்து மக்கள் இன்று தங்களுடைய

கிராமப் பொருளாதார நிலையில் நிலை குலைந்து, சீர்குலைந்து இருக்கின்ற அந்தச் சூழ்நிலையில் இதற்கு நல்ல ஆக்கப் பணிகளை செய்து எங்கள் மாவட்டத்து மக்களைக் காப்பாற்ற வேண்டு மென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு எம். செல்லமுத்து : பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, 1983 டிசம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தையும், வறட்சி யைப் பற்றியும், இந்த வெள்ளை அறிக்கையில் பல்வேறு விவரங் களை கொடுத்து இருக்கிறீர்கள். இந்த வறட்சி வந்ததற்கு பின்னால், உடனேயே வெள்ளம் வந்ததால், மக்கள், மிகப் பெரிய துன்பங்களாலும், துயரங்களாலும் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கின்ற போது, அரசு, இயந்திரம் என்பது மிக சுறுசுறுப் பாக இயங்கியதாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் சொல்லிக்கொள்வதெல்லாம், இயற்கையின் சீற்றங்கள் வருகின்ற போது அரசு உதவிகள் எப்படியெல்லாம் செய்யவேண்டும் என்று ஏற்கனவே பல உத்தரவுகள் இருந்தாலும், இந்த வெள்ளம் வந்த உடனேயே அரசு அதிகாரிகள் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஆனால், நாங்கள் எல்லாம், அரசுக்கும், ஆட்சி யாளர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் தந்தி கொடுத்த பிறகுதான் எங்களுடைய தலைவர், தோழர் உமா நாத் அவர்கள் பத்திரிகைகளுக்கும், வானொலிக்கும் செய்திக் குறிப்புகள் எல்லாம் கொடுத்த பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரு. உமாநாத் சொன்னது போல் பாதிக்கவில்லை என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பிறகு தஞ்சாவூர் மாவட்டத்தினுடைய நிலைமை மிக மோசமாகப்

(பிற்பகல் 5-20)

போகவே, நம்முடைய முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் களும், அதிகாரிகளும் தஞ்சை மாவட்டத்திற்கு வந்தபிறகுதான் வெள்ள நிவாரணப் பணி ஓரளவுக்குத் துரிதப்படுத்தப்பட்டது. என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். வறட்சி, வெள்ளம் இவைகளைப்பற்றிப் பல்வேறு புள்ளி விவரங்களை இங்கே தந்திருக்கிறார்கள். குடிசைகள் பாதிப்பு பற்றியும், கால்நடைகள் பாதிப்பு பற்றியும், கிராமங் களில் ஏற்பட்ட சேதம் பற்றியும், பயிர்ச்சேதம் பற்றியும் பல் வேறு விவரங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். இப்படி பல்வேறு விவரங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். என்றா லும் அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருந்தாலும்,





பணம் செலவழிக்கப்பட்டிருந்தாலும், வறட்சி நிவாரணப் பணி
யிலும் சரி, வெள்ள நிவாரணப் பணியிலும் சரி, அரசாங்க
இயந்திரம் என்பது எந்த விதத்திலும், ஊழல் இல்லாமல் முறை
கேடுகள் இல்லாமல் நடந்தது என்று சொல்லமுடியாது. பாதிக்கப்
பட்ட மக்களுக்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தா
லும், குறிப்பாக இன்றைய தினம் அமைச்சர்களும், ஆளுந்தரப்
பிலே பேசக்கூடியவர்களும் ஏதோ முறைகேடுகளே நடக்கவில்லை
என்ற விவரத்தைச் சொல்கிறார்கள். வருவாய்த்துறை அமைச்சர்
அவர்களுக்கு வேண்டுமானால் முறைகேடுகள் இல்லாமல் பார
பட்சமில்லாமல் செய்யவேண்டுமென்று நல்ல உள்ளம் இருந்தா
லும், தஞ்சை மாவட்டத்திலே, திருச்சி, தென் ஆற்காடு
மாவட்டங்களிலே, பல்வேறு இடங்களிலே, வெள்ள நிவாரணப்
பணிகளிலே பல்வேறு முறைகேடுகள் நடந்திருக்கின்றன. குறிப்
பாக அரிசி வழங்குவதிலிருந்து, உடைப்புகளை அடைப்பதிலிருந்து
சாலைகளைப் பழுதுபார்ப்பதிலிருந்து, குடிசைகளுக்கு நிவா
ரணம் வழங்குவதிலிருந்து, பல்வேறு முறைகேடுகள் நடந்திருக்
கின்றன என்பதைச் சொல்லாமல் இருக்கமுடியாது.

இந்த வெள்ளை அறிக்கையிலே பல்வேறு விவரங்களைச்
சொல்லி அதற்கான பணம் செலவிடப்பட்டிருந்தாலும், தமிழகத்
திலே ஏற்பட்ட கடும் வறட்சி, அதற்குப் பின்னாலே ஏற்பட்ட
வெள்ளம் கிராமப்புறங்களிலே விவசாயப் பொருளாதாரமே சீர்
கெட்டுப் போகின்ற நிலைமையிலே, மக்கள் துயர துன்பத்திற்கு
ஆளாகியிருக்கிற நிலையில், இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற
நிவாரணம் எல்லாம் ஏதோ யானைப் பசிக்கு சோளப்பொறி
போல்தான் இருக்கிறது. எனவே மத்திய அரசும், மாநில அரசும்
தஞ்சை மாவட்டம் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் பாதிக்கப்
பட்டிருக்கிற விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும்
அவர்களைச் சார்ந்த பொதுமக்களும் பாதுகாக்கப்படக் கூடிய
முறையிலே, விரைவிலே நடவடிக்கை எடுத்து நிவாரணம் அளிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே வெள்ளத்தினால்
எவ்வளவு ஏக்கர் பாதிப்பு ஏற்பட்டது என்பதையெல்லாம் குறிப்
பிட்டிருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் அதனால் பாதிக்கப்பட்
டிருக்கிறபோது அவர்கள் ஏற்கனவே கடனை வாங்கி விவசாயம்
செய்து அது வெள்ளத்தால் வீணாக்கப்பட்டு அடித்துக் கொண்டு
போகப்பட்ட காரணத்தினாலே அவர்கள் தத்தளித்துக் கொண்டி
டிருக்கின்ற இந்த வேளையில் அடுத்த வேளை சாப்பாட்டிற்கு
என்ன செய்வது என்று தெரியாத நிலையில் பாதிக்கப்பட்டிருக்
கிற விவசாயிகளுக்கு, ஒவ்வொரு ஏக்கருக்கும் 2,500 ரூபாய்
நிவாரணம் அளித்தால்தான் அவர்கள் வாழ்வதற்கும் அவர்களைப்
பாதுகாக்கின்ற நடவடிக்கையை எடுத்ததாகவும் இருக்கும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குத்தகை விவசாயி
களைப் பொறுத்தவரையில் குத்தகை நிலம் பாதிக்கப்பட்டிருக்
கிறது. வெள்ளத்தால் அழிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையில்

பழைய பாக்கிகளையும் இந்த ஆண்டு குத்தகையையும் உடனடியாக ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவு பயிர்க்கடன் முழுவதையும் உடனடியாக ரத்து செய்ய வேண்டும். நிலவரி, அதன்மீது விதிக்கப்படக்கூடிய சர்-சார்ஜ் ஆகியவற்றை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகள் கணக்கு எடுக்கிறபோது 50 சதவீதம் என்றால் வரியில்லை என்று சொல்கிறார்கள். வேறுவிதமாகக் கணக்கு எடுத்து வரியை வசூலிப்பது என்ற முறையில் அதிகாரிகள் கணக்கெடுத்துக் கொண்டு வருகிறார்கள். எனவே, நிலவரி முழுவதையும் ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஓட்டுவீடு, கூரை வீடு என்று பாகுபாடு காட்டி நிவாரணம் வழங்கப்படுகிறது. ஓட்டு வீடும் பாதிக்கப்பட்டிருக்கிறது, கூரை வீடும் பாதிக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட எல்லா வீடுகளுக்கும் மண் சுவர் வைத்த ஓட்டு வீடுகளுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் 500 ரூபாய் வீதம் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு அதாவது அரசாங்கமே கட்டிக் கொடுத்து இருக்கக்கூடிய வீடுகள் பழுதாகின. குறிப்பாக வெண்மணியில்-1969 ஆம் வருடம் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் எல்லாம் மழையினால் கரைந்து போய் இருக்கிறது. அரசாங்கமே கட்டிக்கொடுத்த வீடுகள் என்று சொல்லி அவர்களுக்கு நிவாரணம் இல்லை என்று சொல்கிறார்கள். இப்படி பல்வேறு இடங்களில் அரசு கட்டிக் கொடுத்து இருக்கக்கூடிய வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு நிவாரணம் இல்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதோடு அந்த பழுதுபட்ட வீடுகளையும் உடனடியாக புதுப்பித்து கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உயிர் இழந்த குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாய் நிவாரணம் அளிக்கப்படுகிறது. உயிர் இழந்த குடும்பங்களுக்கு குறைந்தது 10 ஆயிரம் ரூபாயாவது அவர்களுக்கு நிவாரணமாக அளிக்க வேண்டும். கால்நடைகளை இழந்துவிட்டவர்களுக்கு கால்நடைகளை அரசே வாங்கி வழங்க வேண்டும்.

அதேபோல் ஊராட்சிஒன்றியங்கள், ஊராட்சிகள், நகராட்சிகள் இவைகளுக்கு எல்லாம் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் போடப்பட்ட சாலைகள் முழுவதும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக கிழக்கு தஞ்சை மாவட்டத்தில் வல்லத்தில் இருக்கக்கூடிய மண்ணை அங்கே கொண்டுவந்து போட்டார்கள். பின்னால் வரலாறு காணாத வெள்ளத்தில் அவைகள் எல்லாம் அடித்துச் செல்லப்படுகிறது. இவைகளை முழுவதுமாக அமைப்பதற்கு





உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். எல்லா குடிநீர் தொட்டிகளும் பம்புகளும் இந்த வெள்ளத்தினால் பாழாகியிருக்கிறது. அவைகளை எல்லாம் சீர் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். பள்ளிக் கட்டிடங்கள், சத்துணவுக் கூடங்கள் இவைகள் எல்லாம் இடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை பழுது பார்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

பள்ளத்தில் வாழ்கின்ற ஆதி திராவிட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பள்ளத்தில் இருப்பவர்களுக்கு மேடான இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் அதை அங்கு ஒன்றும் செய்வதாக தெரியவில்லை. அவர்களுக்கு எல்லாம் மேடான இடத்தில் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். தஞ்சை மாவட்டத்திலும் மற்ற மாவட்டங்களிலும் ஆறுகள், வாய்க்கால்கள், வடிகால்கள், ஏரிகள், குளங்கள் இவைகளின் கரைகள் எல்லாம் இடிந்து வீணாகியிருக்கக்கூடிய சூழ்நிலையில், அவைகளை எல்லாம் உடனடியாக அந்தக் குளங்களை, ஆறுகளை ஆழப்படுத்தியும், வாய்க்கால்களை அகலப்படுத்தியும் கரையை உயர்த்தியும் அவைகளில் எல்லாம் வாகனங்கள் போகக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட தூரத்திலே வாய்க்கால் தலைப்புகள் இருக்கின்ற காரணத்தினாலும், வறட்சி வந்த நேரத்திலும், வெள்ளம் வந்த நேரத்திலும் மிகப்பெரிய பாதிப்புகள் ஏற்படுகின்றன. அவைகளை எல்லாம் மாற்றி அமைத்து அருகாமையில் இருக்கக்கூடிய வகையில் தலைப்புகளை அமைத்துத் தரவேண்டும், அதேபோல் பாய்கால் வடிகால் ஒரே வாய்க்காலில் இருக்கிற காரணத்தினால் பாய்வதும், வடிவதும் மிகப் பெரிய சிக்கலை உருவாக்குகிறது. அவைகளை எல்லாம் சீர் செய்து சைபன்கள் அமைத்துத் தர வேண்டும்.

நெல்லுக்கு, வறட்சிக்கு நிவாரணத் தொகையாக 35 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதை அறுவடை முடிகின்ற வரையிலும் நீடித்துத் தரவேண்டும். அதேபோல் வறட்சி வெள்ள நிவாரண வேலைகளை காண்டிராக்ட்டுக்கு விடாமல் விவசாயதொழிலாளர்கள்அங்கேஇருக்கக்கூடிய உள்ளூர்மக்களைக்கொண்டு அந்தவறட்சி நிவாரணப் பணிகளைச் செய்து அவர்களுக்கு குறைந்த பட்சம் 10 ரூபாய் சம்பளம் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் வெள்ளை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். பாரபட்சம் காட்டாமல் எல்லோருக்கும் நிவாரணம் அளித்ததாக சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சருக்கு வேண்டுமானால் அந்த நல்ல எண்ணம் இருக்கலாம். ஆனால் நடந்ததை நான் சொல்லுகிறபோது மிக வேதனையாக இருக்கிறது. நாகப்பட்டினத்தில் இருக்கக்கூடிய திருக்குவளையும், வேதா

[திரு. எம். செல்லமுத்து] [1984 பிப்ரவரி 22

ரண்யம் தொகுதியில் உள்ள குலப்பாடும் ஒரே ஏரியா. ஆனால் குலப்பாடியில் 200 ரூபாயும், 10 ரூபாயும் கொடுக்கப்பட்டு இருக்கி றது. திருக்குவளைக்கு கொடுக்கவில்லை. திருக்குவளைககு கீழ் இருக்கக்கூடிய வாழக்கரை கிராமத்திற்கு 7 வீடுகளைத் தவிர பாக்கி இருக்கக்கூடிய வீடுகளுக்கு கொடுக்கவில்லை. அதேபோல் உத்தமசோழபுரம், நன்னிலம் தொகுதியில் இருக்கிறது. வங்காள மாவடியும், கோனூர் வடகரையும் திருவாரூர் தொகுதியில் இருக்கி றது. இங்கே எல்லாம் பாகுபாடு காட்டப்பட்டு இருக்கிறது. அது மட்டும் அல்ல. ஊருக்கு ஊர் பாகுபாடு காட்டப்பட்டிருக்கி றது. குறிப்பாக புதூர் என்ற கிராமத்தில் அமைச்சரிடமே முறையீடு செய்தார்கள். புதூர் கிராமத்திற்கு 50 ரூபாய் என்று சொன்னார்கள். பக்கத்தில் இருக்கிற உத்திரங்குடி கிராமத்திற்கு 200 ரூபாய் என்று கொடுத்தார்கள். இப்படி ஏறக்குறைய முறை கேடுகள் தெருவுக்கு தெரு, வீட்டுக்கு வீடு நடநது இருக்கின்றன. அதிகாரிகள் இஷ்டப்படி அவர்கள் மனப்போக்குப் படி நடந்து கொண்டிருக்கிறார்கள். எனவே தஞ்சை மாவட்டத்தில் அப்படி செய்ததன் காரணமாகத்தான் அவர்கள் முறைகேடுகள் பற்றி ஆயிரக்கணக்கான மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். குறிப்பாக நாகப்பட்டினத்தில் 7 ஆயிரத்திற்கு அதிகமான மனுக்களும், திரு வாரூர் தாலுக்கா தாசில்தார் அலுவலகத்திற்கு 12 ஆயிரத்திற் கும் அதிகமான மனுக்களும், குடவாசல் தாலுக்காவில் 7 ஆயிரம் மனுக்களும் குவிந்து இருக்கின்றன.

(பிற்பகல் 5-30)

அதேபோல, தஞ்சை மாவட்டம், தென்னார்க்காடு மாவட் டம், திருச்சி மாவட்டம் போன்ற பல மாவட்டங்களில் இந்த அரசு அதிகாரிகள் செய்த முறைகேடுகள் குறித்து அங்கே மனுக்க ளாகக் குவிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய திராவிட முன் னேற்றக் கழகத் தலைவரவர்கள் குறிப்பிட்டதைப் போல சில யிடங்களில் சில பேரங்கள் பேசப்பட்டு, அந்தப் பேரங்கள் ஒத்து வந்தயிடங்களில் முழு நிவாரணமும் கிடைக்கிறது; அப்படி ஒத்து வராத இடங்களில் நிவாரணம் மறுக்கப்பட்டிருக்கிறது, என்பது தான் உண்மை. இப்படி முறைகேடுகள் என்பது நிரந்தரமாக இல்லா விட்டாலும் ஆங்காங்கே பல்வேறு இடங்களில் முறைகேடு கள் நடந்திருக்கிறன. ஆகவே, இந்த முறைகேடுகளையெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு அமைச்சர்களும், அதிகாரிகளும் உரிய நடவடிக்கைகளை எடுத்து பாதிக்கப்பட்ட அத்தனை பேர்களு டைய மனுக்களையும் பரிசீலித்து நிவாரணம் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளம், வறட்சி என்று மாறி மாறி பாதித்த காரணத்தால் விவசாயப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. மத்தியப் பேரரசு ஐந்து கோடி ரூபாய் கொடுத்திருப்பது என்பதும், நாம், கோடி ரூபாய் கேட்டிருப்பதும் போதுமானவை அல்ல. பாதிக் விவசாய மக்களுக்கும், கால்நடைகளை இழந்த மக்க



1984 பிப்ரவரி 22] [திரு எம். செல்லமுத்து]

ளுக்கும், வீடுகளை இழந்த மக்களுக்கும், இன்னும் பல்வேறு நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு அரசாங்கம் ஒதுக்கியிருப்ப தும், மத்தியப் பேரரசு கொடுத்திருப்பதும் போதுமானவை அல்ல, இவைகளை அதிகமாகக் கேட்டு நல்லமுறையில் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் தஞ்சை மாவட் டம் பெரிய பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறது. நிவாரணப் பணி களுக்காக தஞ்சை மாவட்டத்திற்கு இதுவரையில் அரசு ஒதுக்கிய பணம் விரயமாக்கப்பட்டு இருக்கிறது. ஒதுக்கப்பட்ட பணத்திற்கு பணிகள் முறையாக நடந்திருந்தால் இவ்வளவு பாதிப்பு ஏற்பட்டி ருக்காது. வெட்டாற்றில்தான் இன்றைக்கு மிகப் பெரிய சேதம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆறுதான் மிகப் பெரிய சேதத்தை இன்றைக்கு உருவாக்கியிருக்கிறது. ஆனால் அதற்கு ஒதுக்கப் பட்ட பணத்தை முறையாக அந்தத் துறைகள் செய்திருந்தால், அந்தக் காண்ட்ராக்டர்களை ஒழுங்குபடுத்துகின்ற வேலையைச் சரியாகச் செய்திருந்தால் நிச்சயமாக அந்த ஆறுகளின் கரைகள் உயர்த்தப்பட்டிருக்கும், கரைகள் வலுப்படுத்தப்பட்டிருக்கும், வடிகால்கள் சரியாகச் செய்யப்பட்டிருக்கும். அவைகளைச் செய் யாத காரணத்தால்தான் இவ்வளவு பெரிய பாதிப்பு ஏற்பட்டி ருக்கிறது.

குடி மராமத்து வேலைகள் பத்து பதினெட்டு ஆண்டுகளாக நடைபெறவில்லை. அதன் காரணமாக வடிகால்கள் தூர்ந்தும், வாய்க்கால்கள் தூர்ந்தும், தண்ணீரே வடிய முடியாத நிலை உண்டாக்கப்பட்டிருக்கிறது. எனவே, குடி மராமத்து வேலைகளை சீராகச் செய்ய வேண்டுமென்றும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு, பேசு வதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவரவர்களே, வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் பற்றிப் பேச வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த உங்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மூன்றாண்டுக் காலமாக ஏற்பட்ட வறட்சி நிலைமைகளின்போது இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியனவாகும். குறிப் பாக மத்திய அரசும் நேரடியாக வந்து, வறட்சிக் காலங்களிலே மக்களுக்குவேண்டிய காரியங்களைச் செய்திருப்பதைப் பாராட்டி மகிழ்ச்யைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய வறட்சி நிவாரணப் பணிகள் மிகவும் சிறப்பாகவும், நேர்மையாக வும், நாணயமாகவும் நடந்திருக்கின்றன.

வறட்சிப் பணிகளை ஏற்படுத்தியபொழுது சென்னை போன்ற
நகரங்களிலேயும், கிராமங்களிலேயும் குடிநீர் வசதியாக இருந்த
தாலும், சாலை வசதியாக இருந்தாலும் நல்லமுறையில் செய்து
கிராமங்களில் உள்ள குளங்குட்டைகளைச் சீர்படுத்தி, செம்மைப்
படுத்தி, தூர் எடுத்து ஆழப்படுத்திய வகையில் வறட்சி நிவாரணப்
பணிகள் கிராமமக்கள் பாராட்டும் வகையில் நடந்திருக்கிறது.
ஆனால் எதிர்பாராத நிலையில் நம்முடைய மாநிலத்தில் மழை
வந்தது. ஆனால் அதே நேரத்தில் வறட்சி நிவாரண நேரத்தில்
ஏழை மக்களுக்கு வேட்டி, சேலை வழங்க வேண்டுமென்று மாண்பு
மிகு தமிழக முதல்வரவர்கள் ஆணையிட்டார்கள். நிலமற்ற ஏழை
மக்களுக்கு வேட்டி, சேலை வாங்க வேண்டுமென்று ஆணை
யிட்டார்கள். அந்த அடிப்படையில் தமிழகத்தில் உள்ள ஏழை
எளிய மக்களுக்கு வேட்டி, சேலை வழங்கியிருந்தாலும் முழுமை
யாக வழங்கப்பட்டு விட்டதா என்றால், சிலயிடங்களில் வழங்கப்
பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, விடுபட்டுப் போன அந்த
ஏழை எளிய மக்களுக்கு, அந்த நிலமற்ற மக்களுக்கு உடனடியாக
வேட்டி, சேலை வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில்
மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் வறட்சி நிவாரண வேலைகளைச் செய்கின்ற
போது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் குளம், குட்டை
களைத் தூர் எடுக்கும் பணிகளும், ஆழப்படுத்துகின்ற பணி
களும் நடந்தன. செம்மையாக அந்த வேலைகள் நடந்திருக்
கின்றன. வறட்சியான நேரங்களில் அந்தந்த கிராமங்களில்
உள்ளவர்கள் அருகிலே உள்ள குளம், குட்டைகளை ஆழப்
படுத்தி இருக்கிறார்கள். அவ்வாறு கஷ்டமான நேரத்திலே
ஆழப்படுத்தி செம்மைப்படுத்தி இருக்கிறார்கள். அதே நேரத்
திலே வெள்ளம் வந்த போதும் செம்மையான பணிகள் செய்யப்
பட்டிருக்கின்றன. ஆக அந்தப் பகுதிகளிலும் வேலைகள்,
நிவாரண வேலைகள் நல்ல முறையிலே நடந்திருக்கின்றன.
அப்படி செய்யப்பட்ட வேலைகளைப் பொறுத்தவரையில்,
வறட்சி நிவாரணத்தின் கீழ் நடைபெற்றிருக்கின்ற வேலைகளைப்
பொறுத்த வரையில், இன்னமும் பணம் வழங்கப்படவில்லை.
ஒவ்வொரு கிராமத்திலும் குளங்களை ஆழப்படுத்தியவர்களுக்கு
உரிய நேரத்தில் அவர்கள் பணம் பெறவில்லை. வறட்சி போய்
இப்போது வெள்ள நிவாரணப் பணியினைத் துவங்கி இருக்கி
றோம். ஆகவே இந்த நிலைமையினை அனுசரித்து உரிய
தொகை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தென்
ஆற்காடு மாவட்டத்திலே இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்
றது. எனவே அந்தப் பகுதியிலே வறட்சி நிவாரணப் பணியின்
கீழ் செய்யப்பட்ட பணிகளுக்குரிய தொகையினைக் கொடுப்
பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய
வேண்டும்.



அடுத்து வறட்சி நிவாரணப் பணிக்காக நாம் மத்திய அரசிடம்
கேட்டது 217.73 கோடி ரூபாய். ஆனால் மத்திய அரசு மூன்றில்
ஒரு பங்கைத் தான் வறட்சி நிவாரணப் பணிக்காகத் தந்திருக்
கிறார்கள். அதாவது அவர்கள் அனுமதித்தது 63.72 கோடி
ரூபாய் தான். வேளாண்மைத் துறையில் இடுபொருட்களுக்காக
4.64 கோடி ரூபாய் அனுமதித்தார்கள். ஆக மொத்தம் அவர்
கள் அனுமதித்தது 77.54 கோடி ரூபாய் தான். எனவே நாம்
கேட்டதில் மூன்றில் ஒரு பங்கைத்தான் அவர்கள் அனுமதித்தார்
கள். அவ்வாறு கொடுக்கப்பட்ட தொகையில் அதிகமாக நாம்
செலவழித்திருக்கிறோம்.

அடுத்து இந்த வறட்சியான நேரத்தில் வேலைகள் நல்ல
முறையிலே நடந்திருக்கின்றன. எதிர்க்கட்சியிலே இருப்பவர்
கள் கூட குறிப்பிட்டு ஒரு குற்றச்சாட்டினைச் சொல்ல முடிய
வில்லை. அந்த அளவுக்கு தமிழக முதல்வர் அவர்களும், இந்தத்
துறையினை ஏற்றிருக்கின்ற நம்முடைய ரெவின்யூ அமைச்சர்
அவர்களும் காரியங்களை ஆற்றி இருக்கிறார்கள். அவர்கள்
அவ்வப்போது சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே ஆலோசனை
சொன்னார்கள். அதாவது உங்களுடைய இடங்களிலே நடை
பெறுகின்ற வேலைகளை நீங்களே கண்காணிக்க வேண்டும் என்ற
அடிப்படையில் எடுத்துச் சொன்னார்கள். அதன் காரணத்தால்
தான் வறட்சி நிவாரண வேலை இவ்வளவு செம்மையாக நடந்து
இருக்கின்றது.

எங்களுடைய தென் ஆற்காடு மாவட்டத்திலே 1865 ஆம்
ஆண்டு வள்ளலார் அவர்கள் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை
ஏற்படுத்தினார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் சத்துணவுத் திட்டத்தினை ஏற்படுத்துவதற்கு முன்
பாகவே வடலூர் வள்ளலார் அவர்கள் 1867 ஆம் ஆண்டிலே
தர்மசாலைகளைத் துவங்கினார்கள். அங்கே வருகின்ற ஏழை
எளியவர்களுக்கு உணவு அளிக்கின்ற வகையிலே 1867 ஆம்
ஆண்டு அதைத் துவங்கினார்கள். அதற்குப் பிறகு ஞானசபையை
1872 ஆம் ஆண்டு துவங்கினார்கள். ஞானசபை துவக்கி
யதற்குப் பிறகு அவர்கள் பல சீர்திருத்த கருத்துக்களை
யும், முன்னேற்றமான கருத்துக்களையும் ஏற்றத்தாழ்வு உள்ள
சமுதாயத்தை அகற்றவேண்டும் என்ற அடிப்படையிலும்
அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். ஏற்றத் தாழ்வு
களை ஒழிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இவ்வளவை
யும் சொல்லிப் பார்த்துவிட்டு கடைசியாகச் சொன்னார்கள்
''கடை விரித்தேன், கொள்வார் இல்லை, கட்டிக் கொண்டேன்''
என்றார்கள். அதன் பிறகு 30-1-1874 அன்று அவர்கள் சித்தி
பெற்று விட்டார்கள். அவர்களுடைய எண்ணத்தை நிறை
வேற்றுகின்ற வகையிலே நமது வள்ளல் பெருமான் தமிழக
முதல்வர் அவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தைப் பிரித்து,
அதிலே புதிதாக வள்ளலார் மாவட்டம் என்ற பெயரினை இட்டு

இருக்கிறார்கள். அதற்காக இதய தெய்வம் தமிழக முதல்வர்
அவர்களுக்கும், அந்தத் துறையினை ஏற்றிருக்கின்ற வருவாய்த்
துறை அமைச்சர் அவர்களுக்கும் அந்த மாவட்டத்தின் மக்களின்
சார்பாகவும், வடலூார் வள்ளலார் தோற்றுவித்த சமரச சுத்த
சன்மார்க்க சங்கத்தின் சார்பாகவும் நன்றியையும், வணக்கத்தை
யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-40)

அதற்குப் பின்னால், தென் ஆற்காடு மாவட்டத்தில் நாம்
கடந்த 3 ஆண்டுகளாக வறட்சியைச் சந்தித்தோம். கடந்த
டிசம்பர் மாதத்தில் சொல்ல முடியாத அளவிற்கு மழை பெய்தது.
அது மட்டுமல்லாமல், பிப்ரவரியிலும் மழை பெய்தது. இந்த
நிலைமையைத் தமிழக முதல்வர் அவர்கள் நேரடியாக விமானம்
மூலம் சென்று பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்த்து, அங்கே
உரிய அதிகாரிகளை எல்லாம் அழைத்து, உடனடியாக, பாதிக்கப்
பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று சொன்னார்
கள். அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர்களை எல்லாம்
அழைத்து ஒவ்வொரு மாவட்டமாக பாதிக்கப்பட்ட இடங்
களுக்குச் சென்று நடவடிக்கை எடுங்கள் என்று கூறி, அவர்களும்
ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று நடவடிக்கை எடுத்தார்கள்.
அந்த வகையில் தென் ஆற்காடு மாவட்டத்திற்கு நம்முடைய
மின் துறை அமைச்சர் அவர்களும், மீன் துறை அமைச்சர்
அவர்களும் வந்து பாதிக்கப்பட்டிருக்கிற இடங்களைப் பார்த்தார்
கள். பார்த்து விட்டு அரசாங்க அதிகாரிகளை எல்லாம் அழைத்து
பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க
வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அந்த அடிப்படையில்,
நல்ல முறையில் மாவட்டங்களில் நிவாரண வேலைகள் நடை
பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதற்குப் பிறகு வெள்ள நிவாரணத்திற்காக மத்திய அரசு
ரூ. 128 கோடி தர வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம்
கேட்டிருக்கிறது. அவர்கள் வழங்கியது இன்றைக்கு ரூ. 15
கோடி தான். வெள்ள நிவாரணத்திற்காக மத்திய அரசு வழங்கி
யது ரூ. 15 கோடிதான். ஆனால் நாம் 128 கோடி கேட்டிருக்கி
றோம். இந்த நிலைமையை மாற்றுவதற்கு நம்முடைய வரு
வாய்த்துறை அமைச்சர், உறவுக்குக் கை கொடுப்போம், உரி
மைக்குக் குரல் கொடுப்போம் என்ற வகையில் மத்திய அரசிடம்
அந்தத் தொகையினை பெற்றாக வேண்டும். பாதிக்கப்பட்ட
விவசாயிகளுக்கு, ஏழை, எளிய மக்களுக்கு உடனடியாக
நிவாரணம் கொடுக்க அந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.





அடுத்து என்னுடைய தென் ஆற்காடு மாவட்டத்தைப் பற்றி
ஒரு புள்ளி விவரம் கொடுத்துள்ளார்கள். அங்கு சிறு பாலங்கள்
உடைந்தது 15 ; பள்ளிக் கட்டிடங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டது
13 ; சம்பா பயிர் பாதிப்பு 8,905 ஏக்கர் நிலங்கள் ; தாளடி
பயிர் பாதிப்பு 1,995 ஏக்கர் ; நவரைப் பயிர் பாதிப்பு 7,265
ஏக்கர் ; மற்றும் பயிர்கள் சிறிதளவு பாதிப்பு 5,830 ஏக்கர்
நிலங்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள். கடலைப் பயிர் விளைந்
துள்ள 7,650 ஏக்கர் நிலம் தண்ணீரில் மூழ்கியுள்ளது என்று
புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இங்கே கொடுத்
திருக்கிற கணக்கு உண்மையான கணக்கில்லை என்பதை நான்
வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.
எங்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் டிசம்பர் மாதத்திலேயே
மணிலா பயிரிட்டார்கள். அங்கே பெய்த மழையினால், வேர்க்
கடலை முழுவதும் அழிந்துபோய் விட்டது. இரண்டாவது
தடவையாக வேர்க்கடலைப் பயிர் செய்தார்கள். கிட்டத்தட்ட
10,000 ஏக்கர் வேர்கடலை மாத்திரம், இரண்டாம் போகம்
மூழ்கிப் போயிருக்கிறது. ஆகவே, அதிகாரிகள் எப்படி அந்தக்
கணக்கைத் தந்திருக்கிறார்கள் என்பதை எங்களால் புரிந்து
கொள்ள முடியவில்லை. ஆகவே, அந்த நிலைமையில் வெள்ளச்
சேதம் எங்கள் மாவட்டத்தில், குறிஞ்சிப்பாடி தொகுதியில்
கடலூார் தாலுகாவில் தான் அதிகம். அது பற்றி மாவட்ட
ஆட்சித் தலைவரிடம் சொல்லி இது வரையிலும் அங்கே போது
மான நிவாரணம் அளிக்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் உரிய நிவாரணம் வழங்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அங்கே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு
உரிய நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். அவர்களுக்கு நில
வரியைத் தள்ளித் தர வேண்டும். அப்படி இல்லையென்றால்,
வாங்கியிருக்கிற கூட்டுறவுக் கடனை, தவணை முறையில் திருப்பி
வாங்கவாவது ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்தபடியாக
பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மருந்துகளையும் விதைகளை
யும் 50 சதவீத மானியத்தில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டும். உடனடியாக நிவாரணமாக, நில வரியை அவர்
களுக்கு ரத்து செய்ய வேண்டுமென்பதைத் தெரிவித்து, இந்த
வாய்ப்பளித்தமைக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்
துக்கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற வறட்சி மற்றும் வெள்ள
நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கை மீது இந்திய கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை கூற விரும்புகிறேன்.

வறட்சிப் பணிக்காக நம்முடைய மாநிலத்தில் 114.28 கோடி ரூபாய் சென்ற ஆண்டு செலவிடப்பட்டிருக்கிறது. இதிலே மத்திய அரசாங்கம் நமக்கு கொடுத்திருப்பது 77.54 கோடி ரூபாய், ஆகவே வறட்சிப் பணிகளை முழுமையாக நம்முடைய மாநிலத்தில் நடத்த வேண்டுமென்று மாநில அரசு நினைத்தாலும் அதற்கு இடையூறாக மத்திய அரசினுடைய கொள்கைகள் இருக்கின்றன என்பதை இதன்மூலம் நாம் தெளிவாக புரிந்துகொள்ள முடியும். ஆகவே வறட்சிப்பணிகளை நம்முடைய மாநிலத்தில் நிறைவேற்றுவதற்கு அரசு ஓரளவிற்கு நடவடிக்கைகளை எடுத்தாலும் அவை முழுமையாக நிறைவேற்றப்படாத நிலையில் தான் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்த நிலையில் வறட்சி முடிந்து சென்ற டிசம்பர் மாதத்தில் இருந்து பெய்த பெரும் மழையின் காரணமாக வெள்ளம் ஏற்பட்டு அதன் விளைவாக ஏற்பட்டிருக்கிற சேதம் காரணமாக தமிழகத்திலே விவசாயப் பொருளாதாரமே பாதிக்கப்பட்டிருக்கிறது ; இந்த நிலையிலும் அதைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கிற இன்றைக்கும் இராமநாதபுரம் மாவட்டத்திலும் வைகை ஆற்றின் மூலமாக பாசனம் பெறக்கூடிய ஒரு லட்சம் ஏக்கர் நிலங்கள் தண்ணீர் இல்லாமல் விவசாயம் பாதித்து, அந்த விவசாயிகள் விளைச்சலை எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். வைகை நீர்த்தேக்கத்தில் 60 அடி தண்ணீர் இருந்தாலும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிவகெங்கை, திருப்பத்தூர் தாலுக்காக்களில் அதன்மூலமாக பாசனம் பெறுவதற்கான வகையில் கால்வாய்களில் நீர்விடப்படவில்லை. நம்முடைய விவசாயப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்திலே அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகளுக்கு உதவிசெய்கிற முறையிலே பாசனத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வறட்சியின் காரணமாக நம்முடைய தமிழகத்தின் உணவு உற்பத்தி 100 கோடிக்கும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற மதிப்பீடு ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து டிசம்பர் மாதம் ஏற்பட்ட கடுமையான மழையின் விளைவாக இன்றையதினம் தமிழகத்தில் வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்கிறது, தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்கள் இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் தஞ்சை மாவட்டம் மிகவும் கடுமையான அளவிலே பாதிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சையின் விவசாயமே அழிந்து நிற்கிறது. அந்த மாவட்ட விவசாயிகள் தங்களுடைய பொருளாதாரத்தை சீர் செய்து கொள்வதற்கு, தங்களுடைய விவசாயத்தை பழையபடி நல்லமுறையிலே கொண்டு வருவதற்கு இன்னும் பத்து ஆண்டுகள் ஆகுமென்று அனைத்து விவசாயிகளும் சொல்கிறார்கள் இந்த நிலை அங்கே உருவாகி இருக்கிறது. 5,893 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 10 லட்சம் மக்கள் நிவாரண முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய அறிக்கையின்படியே தானிய இழப்பு 102 கோடியாக



இருக்கும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதை
முறையாக கணக்கிட்டால் அது 300 கோடிக்கும் மேல் இருக்கும்
என்று விவசாயிகள் தரப்பிலே சொல்லப்படுகிறது. இந்த அள
விற்கு கடுமையான சேதம் ஏற்பட்டிருக்கிறது. மற்றச் சேதங்
களைப் பற்றி நான் குறிப்பிட விரும்பவில்லை. சாலைகள்,
குளங்கள் மற்றும் கால்நடைகளுக்கு ஏற்பட்டிருக்கிற சேதம்
மிகப் பெரிய அளவில் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தின்
வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு மிகவும் கடுமையாக இன்
றையதினம் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட
விரும்புகிறேன். வயல்கள் மண் மேடிட்டு சாகுபடி செய்ய முடி
யாத நிலையில் இருக்கின்றன. பயிர்கள் அழிந்து விட்டன. அறு
வடைக்கு தயாராக இருந்த நெல் அறுவடை செய்ய முடியாத
நிலைமை ஏற்பட்டது. விவசாயிகள் வாங்கிய கடனை அடைக்க
முடியாத நெருக்கடி நிலைமையில் இருக்கிறார்கள். புதியதாக
விவசாயம் செய்வதற்கு வழிவகை இல்லாத நிலைமையில் அவர்கள்
ஏங்கி நிற்கிறார்கள்.

(பிற்பகல் 5–50)

ஆகவே இந்த நிலைமைகள் தஞ்சை மாவட்டத்திலும், திருச்சி
மாவட்டத்தில் ஒரு பகுதியிலும், தென்னாற்காடு மாவட்டத்
திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும் விவசாயப் பொருளா
தாரத்தை மிகவும் பாதித்து இருப்பதால், அதனால் ஏற்பட்டு
இருக்கும் சீரழிவிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக
தமிழக அரசு உருப்படியான சரியான நடவடிக்கைகளை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே ஏற்பட்டு இருக்கும் மனித இழப்புகளைப் பற்றிச்
சொல்லியிருக்கிறார்கள். 110 பேர் உயிரிழந்து இருக்கிறார்கள்
என்று சொல்லப்பட்டு இருக்கிறது. பல பகுதிகளில் எடுத்துக்
கொண்டால் பல நாட்கள், ஏறத்தாழ 6 நாட்கள் வரையில்
அங்கேயிருக்கும் விவசாயிகள் உணவு இன்றி, உடுத்திய துணியுடன்,
தங்கள் உடைமைகளை இழந்து, வீடுகளை இழந்து, அவர்கள்
நிர்கதியாக நிற்கின்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்
கள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு
நிவாரணம் அளிக்க வேண்டியது நம்முடைய கடமையாகும்.

தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் பகுதியில் உள்ள உப்
பளங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. கோடிக் கணக்
கான பெறுமானமுள்ள உப்பு பாதிக்கப்பட்டு இருக்கின்றது.
ஆயிரக்கணக்கான உப்பளத் தொழிலாளர்கள் வேலையின்றி தவிக்
கிறார்கள். தங்களுடைய வாழ்க்கையை நடத்தமுடியாமல் கஷ்
டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். தூத்துக்குடியிலும் இம்

மாதிரியான நிலை ஏற்பட்டு இருக்கிறது. இம்மாதிரி இருக்கின்றது என்பதை நான் குறிப்பிடுகின்ற நேரத்தில், தமிழக அரசும் அதிகாரிகளும் இந்த நிலை ஏற்படுவதைத் தவிர்க்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்த்து, ஓரளவிற்கு அந்த வகையில் நடவடிக்கைகளை எடுத்து இருந்தால், இந்த பாதிப்பு குறைந்து இருக்கும். அந்த நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பு அரசுக்கும், அதிகாரிகளுக்கும் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, இந்த நடவடிக்கைகளை அவர்கள் காலாகாலத்தில் எடுக்கவில்லை என்கிற புகார் பரவலாக இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக பொதுப் பணித்துறை அதிகாரிகள் வெள்ளத் தடுப்பு சம்பந்தமாக எந்தவிதமான தடுப்பு நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அவர்கள் தங்களுடைய பொறுப்பிலிருந்து முழுமையாகத் தவறியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு பல்வேறு இடங்களில் இருந்து வருகிறது. இது சம்பந்தமாக பல்வேறு இடங்களில் இருந்து பல்வேறு மனுக்கள் மூலம் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகள் பல்வேறு செய்தித்தாள்களிலும் விவரமாக எழுதப்பட்டு இருப்பதால், நான் அதைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்பவில்லை.

குறிப்பாக மழைக் காலங்களில் குளங்களில் இருந்து பெருக்கெடுத்து வரக்கூடிய தண்ணீர் காவிரி மற்றும் பல இடங்களுக்கும் சென்று தஞ்சை மாவட்டத்தில் போய் அடைந்து அதன் காரணமாக இம்மாதிரியான நிலை ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இன்றையதினம் தமிழகத்தில் இருக்கும் குளங்களை ஆழப்படுத்துவதற்கு உருப்படியான நடவடிக்கை எடுத்து இருந்தால், குளங்கள் ஆழப்படுத்தப்பட்டு இருந்தால் மேடிட்டுள்ள குளங்களில் தூர் எடுக்கப்பட்டு இருந்தால், அவற்றில் நல்ல முறையில் தண்ணீர் தேங்கியிருக்கும். பல ஆண்டுகாலமாக அந்தப் பணிகள் பொதுப் பணித்துறையினரால் திட்டமிடப்பட்டு செய்யப்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதைப்போலவே இன்றைக்கு கால்வாய்கள் எல்லாம் மண் மேடிட்டுக் கிடக்கின்றன. அவற்றை தூர் எடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் வரக்கூடிய தண்ணீர் முறையாக கட்டுப்படுத்தப்பட்டு சேரவேண்டிய இடத்திற்கு செல்ல வேண்டிய இடத்திற்கு செல்லும் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.





தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் வடிவாய்க் கால்களைப் பழுது பார்ப்பதற்கு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிடவிரும்புகிறேன். குறிப்பாக காவிரியில் கலக்கக்கூடிய 9 வாய்க்கால்களை சீரமைப்பதற்கு உருப்படியான நடவடிக்கைகள், அவற்றைச் செப்பனிடுவதற்கு உருப்படியான நடவடிக்கைகள் பல ஆண்டுகாலமாக எடுக்கப்படாமல் இருக்கின்றன. 1921ஆம் ஆண்டு காவிரி கமிட்டி என்ற கமிட்டி போடப்பட்டு அது சில ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறது. அந்த நல்ல ஆலோசனைகள் இன்று வரையில் நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேமாதிரி சோழகன்பட்டு வாரியினால் திருச்சி, புதுக்கோட்டை சாலையில் பாதிப்பு ஏற்படுகிறது. அந்த வாரி திருச்சி புதுக்கோட்டை சாலையைக் குறுக்கிட்டு, அதன் மூலம் வரக்கூடிய வெள்ளம் கல்லணைக்கு கீழே சென்று சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதைச் சீர் செய்கின்ற திட்டம், அதாவது சோழகன்பட்டி வாரித் திட்டம் இன்னும் அமுல்செய்யப்படவில்லை; அதை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி மதுரங்கத்து வாரித் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை. (மணியடிக்கப்பட்டது) அதேமாதிரி தஞ்சை மாவட்டத்தில் ஏ-பிரிவு. வாய்க்கால், பி-பிரிவு வாய்க்கால், சி-பிரிவு வாய்க்கால் என்று மூன்று பிரிவுகளாக வாய்க்கால்களைப் பிரித்திருக்கிறார்கள். அங்கே பல ஆண்டுகாலமாக குடிமராமத்து செய்யப்படாததால் அனைத்து வாய்க்கால்களும் தூர்ந்து போயிருக்கின்றன. நம்முடைய வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரி திரு. டி. வி. அந்தோணி அவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு, இம்மாதிரியானத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திருச்சி மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் வெள்ளம் திருச்சி நகருக்கு நேரடியாக வருகிறது. அதைத் தடுப்பதற்கு வழிவகைக் காணவேண்டும். கோரையாறில் ஒவ்வொரு ஆண்டும் கரை உடைப்பு ஏற்படுகிறது. அதனால் தில்லை நகர், உறையூர், பகுதிக்குள் தண்ணீர் வந்து வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது என்பது அதிகாரிகளுக்குத் தெரியும். இருந்தபோதிலும் கோரையாற்றின் கரையை சீர்செய்து, வலுப்படுத்தி, செப்பனிட இந்த அரசிடம் திட்டம் ஒன்றும் இல்லையா என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போன்று குளித்தலை, திருச்சி தாலுக்காக்களில் வடிகால்கள் சரியான முறையில் இல்லை. குளித்தலை பகுதியில் வடிவாரி, காட்டுவாரி, உப்பத்துவாரி, பனையூர்வாரி ஆகியவற்றின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் வெள்ளப்பெருக்கினால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் அழிகிறது. நிலம் அழிவது மட்டு

மல்லாமல் அங்கே இருக்கிற மக்களுடைய வீடுகளையும் உடை
மைகளையும் கூட அழித்து சேதப்படுத்துகின்றன. எதிர்காலத்தி
லாவது இம்மாதிரியான சேதங்கள் ஏற்படாமல் தடுக்க தகுந்த
நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அதற்
குத் தகுந்த திட்டங்களைத் தீட்ட வேண்டும். வெள்ளம் வந்து
சேதம் ஏற்பட்ட பின்னால் 200 ரூபாய் உதவித் தொகை கொடுக்
கிறார்கள். சோறு கொடுக்கிறார்கள். இந்த சேதங்கள் ஏற்
படாமல் காலாகாலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை
எடுக்க வேண்டும். உடனடியாக அதற்கானத் திட்டங்களைத்
தீட்டி, எதிர் காலத்திலே சேதங்களை தடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ள நிவாரணத்திற்கு நம்முடைய அரசாங்கம் 128 கோடி
ரூபாய் கோரி இருக்கிறது. மத்திய அரசு இதுவரையில் 15
கோடி ரூபாய் அனுமதித்திருக்கிறது. வெள்ளம் என்றாலும் சரி,
வறட்சி என்றாலும் சரி, அதற்கான நிவாரணப் பணிகளைச்
செய்வதற்கு ஒவ்வொரு தடவையும் நம்முடைய அரசாங்கம்
மத்திய அரசாங்கத்தைக் கேட்டு போராட வேண்டியிருக்கிறது.
சமீபத்தில் தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டிலே கூட
ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். வெள்ளம்,
வறட்சி ஏற்பட்டால் அதனால் ஏற்பட்ட சேதத்தை சரி செய்வதற்கு
மத்திய அரசு 75 சதவிதம் தொகையை மானியமாக மாநிலங்
களுக்கு கொடுத்து உதவ வேண்டுமென்று அந்தத் தீர்மானத்திலே
கோரப்பட்டிருக்கிறது. அது நிறைவேற்றப்படவில்லை. அதற்
காக போராட வேண்டியிருக்கிறது; அந்தப் போராட்டத்திற்கு
மக்களைத் திரட்ட வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

அடுத்தபடியாக, வெள்ள நிவாரணம் சம்பந்தமாக எடுக்கப்
பட்ட நிவாரண நடவடிக்கைகளில் ஏற்பட்டிருக்கிற பல்வேறு
குறைபாடுகளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிவாரணப் பணி
கள் முறையாக நடைபெற்றிருக்கின்றன என்று இங்கே ஆளும்
கட்சி உறுப்பினர் பலர் பேசியிருக்கிறார்கள். நான் சில விவரங்
களை இந்த மன்றத்தின் மூலமாக அமைச்சரவர்களின் கவனத்
திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நம்முடைய அமைச்சர் கோவேந்தன் அவர்கள் வெள்ள நிவா
ரண நடவடிக்கைகளில் குறைபாடு ஏற்பட்டிருக்கிறது. நடவடிக்கை
எடுக்கிறோம் என்று கூட பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள்.
திருத்துறைப்பூண்டித் தாலுகாவில் திருத்துறைப்பூண்டியில் நிவா
ரணத்திற்காகக் கொடுக்கப்பட்ட 60 மூட்டை அரிசி எடுத்துச்
செல்லப்பட்டது கையும் களவுமாக பிடிக்கப்பட்டிருக்கிறது என்
பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது சம்பந்தமாக
ரெவின்யூ இன்ஸ்பெக்டர், கிராமசேவக் போன்றவர்கள்
சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள்.



அதேமாதிரியாக, திருத்துறைப்பூண்டி தாசில்தார் நிவாரணம் சம்பந்தமாக எடுத்த நடவடிக்கை சரியில்லை, முறைகேடு செய்தார் என்று ஆளும் கட்சியினரே சுட்டிக்காட்டி, அவர் முறையாகச் செயல்படவில்லை என்ற காரணத்தால் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

(பா ல 6-00)

மற்றுமோர் விவரத்தை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். சீர்காழியில் இருக்கக்கூடிய வட்டாட்சியர் அவர்களுக்கு-வெள்ளநிவாரணமாக வீடுகள் இழந்தவர்களுக்கு, அய்யாசாமிபிள்ளை, கணபதி, துரைசாமி, சிவ பாக்கியம் போன்ற 13 நபர்களுக்கு, ரூ. 210 கொடுக்கவேண்டுமென்று குறிப்பிட்ட அந்த பணத்தை, அவர்களிடத்திலே ரூ. 100 கொடுத்துவிடவும் என்று ஒரு கடிதத்தை கூடுதல் வட்டாட்சியர் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ராஜதுரை, வட்டச் செயலாளர் அவர்கள் எழுதியிருக்கிறார். ஆக இந்தமாதிரியான செயல்கள் விசாரிக்கப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், வெள்ளத்தால் உடமைகளை இழந்த முருகையா தேவர் வாங்கிய கடனை திரும்பச் செலுத்தவில்லை என்று பிச்சகோட்டகம் விவசாயக் கூட்டுறவுச் சங்கம் 29—12—1983 அன்று பதிவு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். வீடு இழந்து, நிலத்தை இழந்து, சாகுபடி இழந்து, நிர்க்கதியாக இருக்கக் கூடிய இம்மாதிரி விவசாயிகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை குறிப்பிடவிரும்புகிறேன்.

இன்றையதினம் அரசாங்கம் கொடுக்கும் நஷ்ட ஈடு என்பதைச் சொல்லும் நேரத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்குக் கொடுக்கப்படும் ரூ. 1,000 போதாது. அதை ரூ. 10,000 ஆகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை இழப்புகளுக்கும் முழுமையாக நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று கேட்கிக்கொள்கிறேன்.

ஐ.ஆர். டீ.பி-ல் லோன் வாங்கியவர்களுக்கு இன்ஷூரன்ஸ் தொகை வாங்கிக் கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லப்பட்டது. அதை முழுமையாக கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிரிழந்த விவசாயிகளுக்கு ரூ. 2,000-ஐ நஷ்ட ஈடாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மறு சாகுபடிக்கு விதை, பூச்சி மருந்து போன்றவைகளுக்காக மான்யம்

[திரு. இரா. கருப்பையா] [1984 பிப்ரவரி 22

கொடுக்கவேண்டும். மேடிட்ட இடங்களை அரசு செப்பனிட
வேண்டும் என்றும், தூர்ந்து போன கிணறுகளை கூட்டுறவுச்
சங்கங்கள் மூலம் தூரை. எடுப்பதற்கான நடவடிக்கைகளில்
ஈடுபடவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பயிர்க்கடனை ரத்து செய்யவேண்டும். நிலவரியை ரத்து
செய்யவேண்டும். நீர்ப்பாசன வசதிகளைச் செய்துதரவேண்டும்.
சாகுபடிக்காக பயிர்க் கடன் வழங்கவேண்டும்.
பாக்கியை ரத்து செய்யவேண்டும். என்பதோடு, இன்னும் பல
இடங்களில் முழுமையான நிவாரணம் கிடைக்கவில்லை என்
றும் தெரிவித்துக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்திலும் ,
திருச்சி மாவட்டத்திலும், குறிப்பாக உடையார் பாளையம்,
தங்கச்சிமடம், நத்தம் போன்ற இடங்களில் நிவாரணம் கிடைக்க
வில்லை. வீடு இழந்தவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை
என்ற புகார் வந்திருக்கிறது. காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்
பினர் தஙகவேல் அவர்கள் ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை
நடத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஜெயங்கொண்டான்,
உடையார் பாளையம் ஆகிய இடங்களில் நிவாரணம் அளிக்கப்
படவில்லை. தஞ்சை மாவட்டத்தில் திருவையாறு, கோவிலடி
நெசவாளர்கள் முழுமையாக, தங்களுடைய கருவிகளைக்
கூட இழந்திருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டு மானியமாகவும்,
கடனாகவும் நெசவாளர்களுக்கு கருவிகள் கொடுக்கப்பட்டன.
ஆக 77 பேர்கள், விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை
என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் வறட்சி நிவா
ரணப்பணிகள் முடிந்தாலும், இன்றைய தினத்தில் வெள்ள நிவா
ரணப் பணிகளையும் தொடர்ந்து பாதுகாக்க வேண்டிய நிலைமை
ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பணியில் தமிழகத்தில் விவசாயப்
பொருளாதாரத்திற்கு சீரழிவு ஏற்பட்டாலும், அதனைப் பாது
காக்க உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று
கேட்டுக்கொண்டு, வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி கூறி அமர்
கிறேன்.

*திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவையின்
மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த்துறை
அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வெள்ளை
அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்கு
சந்தர்ப்பம் அளித்ததற்காக என்னுடைய நன்றியை முதற்கண்
தெரிவித்துக்கொள்கிறேன்.

வட நாட்டில் வறட்சி ஏற்பட்டாலும், புயல், வெள்ளத்தால்
பல பகுதிகளில் அழிவு ஏற்பட்டாலும், அதை ஒரு சவாலாக
ஏற்றுக்கொண்டு, நிவாரணப்பணிகளை துரிதப்படுத்தி, நாட்டு
மக்கள் போற்றுகின்ற நல்ல முறையில் நிவாரணப்பணிகளைச்
செய்துவருகிற புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசை
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1984 பிப்ரவரி 22] [திரு. கா. கோபாலகிருஷ்ணன்]

தமிழ்நாட்டிலே எந்த மூலையிலே புயல் அடித்தாலும், எந்த
மூலையிலே வறட்சி ஏற்பட்டாலும், அது முதலிலே தாக்குவது
கொடைக்கானல் தாலுக்கா, என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்
காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட அந்தப்
பகுதியிலே, கொடைக்கானல் தாலுக்காவிலே, 2, 3, மாதங்க
ளாக தொடர்ந்து மழை பெய்த காரணத்தால் அங்கு மஞ்சி
என்ற புகைமூட்டம் சூழ்ந்துகொண்ட காரணத்தால் அங்கு
முக்கியமான விளைபொருள்களான உருளைக்கிழங்கு மற்றும்
வெள்ளைப்பூண்டு ஆகியவைகளை மகசூல் எடுக்க முடியவில்லை.
அவ்வளவும் பூமியிலே அமிழ்ந்து போய்விட்டன. மீதி இருந்த
கொஞ்சநஞ்ச மகசூலும், பெரும் மழை காரணமாக, ரோடுகல்
எல்லாம் பாழாகி, அதன் காரணமாக எடுத்துச் செல்ல முடியாமல்
லாரிகள், மிகவும் கஷ்டப்பட்டன. இதன் காரணமாக அவைகள்
இன்றைக்கு அதிக அளவிலே அழிந்து போய்விட்டன. தற்போது
அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் விதை கிழங்குகளுக்கும்,
விதைப் பூண்டுகளுக்கும் மிகவும் சிரமப்படுகிறார்கள். எங்கு
போய் பெறுவது என்று ஏக்கத்திலே இருக்கிறார்கள். எனவே
பாதிக்கப்பட்ட அந்த விவசாயிகளுக்கு விதைக் கிழங்குகள், விதைப்
பூண்டுகள் மானிய விலையிலே வழங்க நம்முடைய அரசு ஆவன
செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்தப்
பகுதியிலே வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு
கிஸ்தியை வஜா செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அந்தப் பகுதியில் உள்ள விவசாய மக்கள் இந்தப்
பெரு மழையின் காரணமாக பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்படு
கிறார்கள். ஏற்கனவே அவர்களுக்கு கடன் இருக்கிறது. அதை
2. 3 ஆண்டுகளுக்காவது தள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். கொடைக்கானலிலிருந்து பூம்பாறை வரை
ஏற்கனவே தார் ரோடு போடப்பட்டிருக்கிறது. தற்போது பெய்த
பெரு மழையின் காரணமாக அந்தத் தார் ரோடு முழுவதும்
அழிந்து விட்டது. அது தவிர, பூண்டி கவிஞ்சி, கிளாவரை
ஆகிய பகுதிகளிலே மண் ரோடு தான் இருந்தது. லேசாக மழை
பெய்தாலும் அந்தப் பகுதியிலே லாரிகள் செல்ல முடியாது. இப்
போது பெய்த பெருமழை காரணத்தால் அங்குள்ள விவசாயிகள்
தங்களுடைய விளை பொருட்களை எடுத்துச் செல்ல முடியாமலும்
தங்களுக்கு வேண்டிய சாமான்களை கொண்டுவர முடியாமலும்
மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அப்படி பாதிக்கப்பட்ட அந்த
மக்களைக் காப்பாற்றும் வகையில் ஒரு போர்க்கால நடவடிக்கை
யாக கொடைக்கானலிலிருந்து கிளாவரை தார்ரோடு வசதிகளை
செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மலை அடிவாரத்திலே, பெரியகுளம் பகுதியிலே இருக்க
கூடிய விவசாய மக்கள் இந்த மழையின் காரணமாக தங்களுடைய
நெல் மணிகளை அறுத்து வீட்டுக்குக் கொண்டு செல்ல முடியாமல்,
வயல்களில் மழை நீர் தேங்கி இருக்கக்கூடிய காரணத்தால், தங்க

ளுடைய நெல் மணிகளை அறுத்து செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட அந்த மலைப் பகுதி விவசாய மக்களுக்கும் தரைப் பகுதி விவசாயிகளுக்கும் உடனடியாக நிவாரண வசதிகளை செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்மலைப்பகுதியிலே காப்பி, வாழை போன்ற இந்த இரண்டு மாசூல்களை அவர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள் தற் போது பெய்த பெருமழை காரணத்தால் அவர்களுடைய விவசாயப் பொருள்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. காப்பி செடியி லிருந்து கீழே விழுந்த விதைகள் இந்த மழையின் காரணமாக அதன் அடியிலேயே முளைத்து வரக்கூடிய நிலைமையிருக்கிறது. எனவே மேல் மலைப் பகுதியில் உள்ள மக்களுக்கும், கீழ்ப்பகுதி யிலே உள்ள அந்த விவசாய மக்களுக்கும் வரி வஜா செய்தும், அவர்களுடைய கடன்களை 1, அல்லது 2 ஆண்டுக்காலத்திற்கு தள்ளி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த மழை காரணத்தால், கலிஞ்சி, பூண்டி கிளாவரை போன்ற இடங்களில் வெள்ளம் ஏற்பட்டு தண்ணீர் அடித்துச் செல் லுகிறது. ஆனால் வறட்சி ஏற்படக்கூடிய காலத்திலே அவர் களுக்கு குடிக்கக்கூட தண்ணீர் கிடைக்காத நிலைமை ஏற்பட்டி ருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையைப் போக்க நல்ல மழை பெய்கின்ற காலத்திலே தண்ணீரை தேக்கி வைக்கக் கூடிய முறை யிலே, பூண்டி, கிளாவரை கலிஞ்சி போன்ற கிராமங்களில் குளங் களை அமைத்து கொடுத்தால் அவர்கள் மழை காலங்களில் பெய்யக் கூடிய தண்ணீரை தேக்கி வைத்துக்கொண்டு, தங்களுக்கு தேவை யான குடிநீருக்கும் விவசாயத்திற்கும் பயன்படுத்திக்கொள்வார்கள் என்பதை நான் மெத்த பணிவோடு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அந்தப் பகுதிகளிலே அவர் களுக்கு குளங்களை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6.10)

இப்போது நம்முடைய அரசு ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு ரேஷன் ஷாப் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த கடுமை யான மழைக் காலத்தில் அதைக் கொஞ்சம் தளர்த்த வேண்டும். கொடைக்கானல் மலையிலே 3 கிராமங்கள் சேர்த்து ஒரு ஊரிலே ரேஷன் ஷாப் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்தி லிருந்தும் 7 மைல் 8 மைல் நடந்து சென்றுதான் ரேஷன் பண்டங் களை அத்தியாவசியப் பண்டங்களை வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது.



எனவே, கொடைக்கானல் மலைப்பகுதியை ஒரு ஸ்பெஷல் கேஸாக எடுத்து, ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திற்கும் ஒரு ரேஷன் ஷாப் என்று இருப்பதை மாற்றி, ஒவ்வொரு கிராமத் திற்கும் ஒரு ரேஷன் ஷாப் என்ற முறையில் ஏற்படுத்தி தர வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன் நன்றி, வணக்கம்.

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, வறட்சி, வெள்ளம் பற்றிய வெள்ளை அறிக்கையினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதன்மீது பேசுவதற்கு ஒரு வாய்ப் பினை எனக்கு ஏற்படுத்திக்கொடுத்தமைக்காக நான் சார்ந்திருக்கிற இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய நன்றி யையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மழை வந்து, வெள்ளம் ஏற்பட்டு, இன்றைக்கு ஓரளவிற்கு மழை இல்லை என்ற நிலைமையிலேதான் நாம் இதை பேசி கொண்டிருக்கிறோம். ஆனாலும், மழை இத்துடன் நிற்காது, மீண்டும் வரும், அது அதிகமாக வரும் என்கிற நிலைமையில், தமிழகம் இன்னும் தப்பிக்கவில்லை என்கிற அபாய நிலைமை இருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்துக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலைமையில் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், பருவ மழை தவறி ஒரேயடியாக தமிழகம் கடந்த 3 ஆண்டு காலமாக வறட்சியினாலே தகித்துக் கொண்டு இருந்தது. அந்த வறட்சியை ஓரளவிற்கு சரி கட்டி நிமிர்கிற நேரத்திலேதான், அதிகமாக மழை பெய்து, வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி, அத்த னையையும் பாழ்படுத்தி இருக்கிறது என்கிற சூழ்நிலையை பார்க் கிறோம்.

அதிலும் குறிப்பாக சொல்ல வேண்டும் என்று சொன்னால், இந்த வெள்ள நிவாரணப் பணிகளாலும் சரி, வறட்சி நிவாரணப் பணிகளாலும் சரி, மைய அரசும் மாநில அரசும் ஒன்று சேர்ந்து, " உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு " என்னும் திருக்குறளுக்கு ஒப்ப, மிகத் துரிதமாக தங்க ளுடைய பணிகளை இந்த நாட்டு மக்களுக்கு ஆற்றியிருக்கிறார் கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் அதே நேரத்திலே நம்முடைய தன்னிறைவுத் திட்டத் தின் மூலமாக நாம் பல நல்ல பணிகளைச் செய்திருந்தோம். அப்படிச் செய்த அந்த நல்ல பணிகள் அத்தனையும் இந்த வெள் ளத்தால் பாழ்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் இந்த வெள்ளை அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது. உண்மையிலேயே தன்னி றைவுத் திட்டம் மிகச் சிறப்பான திட்டம்தான். வரவேற்கக்

கூடிய திட்டம்தான்; பாராட்டக் கூடிய திட்டம்தான். ஆனாலும், அதிலே ஏற்பட்ட சில உடைசல்கள் காரணமாக. அந்த திட்டங்களை நிறைவேற்றுவதிலே ஏற்பட்ட குறைபாட்டின் காரணமாக, நாம் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் தவித்தோம் என்பதை மறுக்க முடியாது. மறைக்கவும் முடியாது.

தமிழகத்தின் முதல்வர் அவர்கள், இந்த மாமன்றத்திலே அறிவிக்கிறபோது, தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக, குடிப்பதற்கு தண்ணீர் இல்லை என்ற பிரச்னை தமிழகத்திற்கு ஏற்படாது இருக்க வேண்டும் என்கிற நிலைமையிலே வேகமாக அறிவிக்கப்பட்டு, நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், தன்னிறைவுத் திட்டம் நடைபெற்று முடிவுற்ற பகுதியிலேயும் கூட வறட்சி நேரத்திலே தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்பட்டோம் என்று சொன்னால் லாரிகளின் மூலமாக தண்ணீர் கொண்டு வரப்பட்டு, வினியோகம் செய்யப்பட்டது என்று சொன்னால், அது இந்த திட்டத்தினுடைய முழு வெற்றியாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் இப்போது அதே நேரத்திலே மழை அதிகமாகப் பெய்து, இருக்கின்ற நீரையும் சேர்த்து வீணாக்கிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் மழை நீரை தேக்கி வைக்க ஓர் ஏக்கருக்கு ஒரு கசிவு நீர் குட்டையை அமைக்க வேண்டும். அப்படி கசிவு நீர்க் குட்டை அமைக்கப்பட்டால்தான் வெளியேறுகிற மழை நீரை வீணாக்காமல் அப்படியே தேக்கி வைக்கப் பயன்படும் என்பதை கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அமைச்சர் அவர்கள் இந்த வெள்ளை அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். நாங்கள் பாரபட்சம் அற்ற முறையிலே பணியாற்றியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய நல்ல மனதைப் பாராட்டுகிறேன். அவர்களுக்கு பாரபட்சம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அந்தப் பணிகளில் பாரபட்சம் இல்லை என்று சொன்னால் அதை முழுவதுமாக ஒத்துக்கொள்ள முடியாது. உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துக் கொண்டால், வேட்டி சேலைகள் வினியோகிப்பதை எடுத்துக் கொண்டால், அதில் பாரபட்சமே இல்லை என்பதை நிச்சயமாக ஒப்புக்கொள்ள முடியாது. வறுமை கோட்டிற்கு கீழே இருப்பவர்களுக்குக்குத்தான் அவைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் அதுவும் இல்லை என்று என்னால் ஆணித்தரமாக கூற முடியும். வறுமை கோட்டிற்கு கீழே இருப்பவர்களுக்கு அல்ல பல ஏக்கருக்கு சொந்தக்காரர்களாக இருப்பவர்களுக்கெல்லாம் வேட்டி சேலைகள் கொடுக்கப்பட்டது என்பதை நான் நிச்சயமாக கூற முடியும்.





அதேபோல் இன்றைக்கு சென்னை நகரில்....

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அரசு வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குத்தான் வேட்டி, சேலைகள் கொடுக்கவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறது. அதைத்தான் அரசு அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டும். நிறைவேற்றி இருப்பார்கள். அங்கே அப்படி நிறைவேற்றாமல் இருந்தால் நிச்சயமாக அந்தப்பெயரை எழுதிக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இங்கே கம்யூனிஸ்ட் கட்சிகளுடைய தலைவர்கள் பேசுகிறபோது, தவறு செய்த அதிகாரிகளை ''நீங்கள் வேலை நீக்கம் செய்திருக்கிறீர்கள்'' என்று சொன்னார்கள். தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. என்று அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். அதைப் போல அமைச்சர் கோவேந்தன் அவர்கள் தவறு சில இடங்களிலே நடந்து இருக்கின்றது. நாங்கள் கண்டிக்கிறோம் என்று சொன்னார்கள். தவறுசெய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் மூடி மறைப்பதற்கு இந்த அரசு தயாராக இல்லை என்பது அமைச்சருடைய விளக்கமும், இங்கே நாங்கள் தவறு செய்தவர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறோம் என்பதும் எடுத்துக்காட்டாக இருக்கின்றன. ஆகவே நீங்கள் எங்களுக்கு உதவிகரமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது எங்களுக்கு எழுதிக் கொடுத்தால் அல்லது நேரில் சொன்னால் நல்லது என்று அடிக்கடி இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது நான் அமைச்சர் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த ஒன்றைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தில் காட்டுமன்னார்குடி தாலுக்காவில் 1 லட்சத்திற்கு மேற்பட்ட சொத்து உடையவர், 5 கார்டுகளைக் காண்பித்து 1 கார்டுக்கு 5 கிலோ அரிசி விதம் 25 கிலோ அரிசி வாங்கியுள்ளார். இதைப் பற்றி தாசில்தாரிடம் சொன்னேன். அதைப் போலவே 1 லட்சம் மதிப்புடைய சொத்துள்ளவர் தன்னுடைய கார்டைக் காண்பித்து வேட்டி, சேலை வாங்கியதைக் கண்டுபிடித்து, கொடுத்தோம். அதைப்பற்றி அமைச்சருக்கு கடிதம் எழுதினோம். அக்கடிதம் அமைச்சருக்கு கிடைத்ததா இல்லையா என்பது தெரியாது. நாங்கள் எழுதுகின்ற கடிதங்களின் நகல் எங்களிடம் இருக்காது என்றோ, எழுதியதை நாங்கள் மறந்து விடுவோம் என்றோ நினைக்க வேண்டாம். எழுதியிருக்கிறோம் இனிமேலாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, திரு. இளையபெருமாள் அவர்கள் சொல்கிறபோது உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது. 'எரிந்த வீட்டில் பிடுங்கியது ஆதாயம்' என்று சொல்வார்கள். பலபேர் சங்கடப் பட்டுக் கொண்டிருக்கும்போது, இலட்சக்கணக்கில் சொத்துள்ள வர்கள் இதிலே பங்கெடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டிக்க வேண்டும். ஆனால் அப்படிப் பங்கெடுத்துக் கொண்டவர்களைத் தண்டிப்பதற்கு சட்டம் இல்லை. ஆனால் நிச்சயமாக கொடுத் தவர்கள் தண்டிக்கப்படலாம். அவர்கள் பெயர்களை கொடுங் கள் என்று நான் வேண்டுகிறேன்.

திருமதி டி. யசோதா : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையில் சமீபத்தில் டிசம்பர் மாதத்தில் மழை பெய்தது. அந்த மழை பெய்ததின் காரணமாக ஒரு சில இடங்களில் வீடுகள் இடிந்து போயின. நான்கூட சில இடங்களுக்குச் சென்று பார்வையிட்டேன். அப்படிப் பார்வையிட்ட பிறகு பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி எழுதி, உரிய வருவாய்த்துறை அதிகாரிகளிடம் எடுத்துச்சொல்லி யும், இதுவரை அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களிடத்திலே அதிகாரிகள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், உங்களுடைய இரண்டொரு வீடுகளுக்கு மட்டும் நாங்கள் வரவேண்டுமா? ஒரு பகுதியிலே பல வீடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டால் நாங்கள் வரமுடியும் என்கிறார்கள். பாதிப்பு ஏற்படுவது ஒருவருக்காக இருந்தாலும், ஓராயிரம் பேருக்கு பாதிப்பு ஏற்பட்டாலும், அத்தனை பேருக்கும் நாம் நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டியது நமது தலையாய கடமை.

இன்னும் கூட நான் சொல்லவேண்டுமென்று சொன்னால் சென்னையில் இன்றைக்கு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர் கள் புளியந்தோப்பு. வ. உ. சி. நகர், திரு. வி.க. நகர், சாஸ்திரி நகர், பொன்னையன் தெரு, மேட்டுப்பாளையம், சோவிந்த புரம், அருந்ததியார் நகர், லக்கமா நகர், சுவாமிதாஸ்புரம், சேத்துப்பட்டு, என். எஸ். கே. நகர் ஆகிய பகுதிகளில் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே அதிகமான வீடுகள் இடிந்து விழுந்து இருக்கின்றன. என். எஸ். கே. நகரில் வீடு இடிந்து 3 குழந்தை கள் மரணம் அடைந்திருக்கின்றனர். சேத்துப்பட்டில் வீடு இடிந்து ஒரு குழந்தை இறந்திருக்கின்றது. அப்படிப்பட்ட இடங்களில், சேத்துப்பட்டிற்கு நிவாரணம் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால், மேலே குறிப்பிட்ட என். எஸ். கே. நகர், திரு வி.க. நகர், சாஸ்திரி நகர், பொன்னையன் தெரு, ஆகிய பகுதிகளைப் பார்வையிடச் சென்றபோது . . .





அகில இந்திய தாழ்த்தப்பட்டவர்கள் கமிஷனின் தலைவி திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்களும் நானும் சென்றோம் — அங் கிருக்கும் மக்கள் 'எங்களுக்கு இதுவரையில் எந்தவிதமான நிவாரணமும் வந்து சேரவில்லை' என்று அழுதுகொண்டு சொன்னார்கள்.

(மாலை 6—20)

அது மட்டுமல்ல, ஒரு குடும்பத்திற்கு 4 துண்டு ரொட்டிகளைக் கொடுத்தால் அது போதுமானதாக . இருக்குமா என்பதையும் உண்மையிலேயே அவர்களுடைய பசியை அது போக்கக்கூடிய தாக இருக்குமா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட முறையில் நிவாரணம் இருக்குமானால் முழுமை யான நிவாரணமாக அது இருக்குமா என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே வீராணம் ஏரி, பொன்னேரி, பெருமாள் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி, திண்டிவனம் ஏரி நிரம்பி வழிந்தன என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் அப்போது வீணாகிற அந்த நீரை நம்மால் சேமித்து வைக்கமுடியவில்லை. வறட்சி காலத்திலே அந்த ஏரிகளை நாம் அதிகமான அளவுக்கு ஆழப் படுத்தியிருப்போமானால் நீரைச் சேமித்து வைத்து நீர்ச் சேதத்தைத் தடுத்திருக்க முடியும்.

இந்த அறிக்கையிலே சென்னை நகரத்திலே 150 கிலோ மீட்டர் சாலை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டி ருக்கிறது. 183 நீர்ப்பாசன நிலையங்கள் பாதிக்கப்பட்டிருக் கின்றன என்றும், 1,110 பள்ளிக் கூடங்கள் பாதிக்கப்பட்டிருக் கின்றன என்றும், 611 பாலங்கள் சேதம் அடைந்திருக்கின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் முழுமை யடைந்துவிட்டனவா அல்லது பாதியிலே இருக்கின்றனவா அல்லது துவக்கக் கட்டத்திலே இருக்கின்றனவா அல்லது துவக்கப்படாமலே இருக்கின்றனவா என்பதையெல்லாம் முழுமை யாகக் கொடுத்திருந்தால் விவரங்களைத் தெரிந்து கொள்ள முடி யும். 2,850 தண்ணீர்த் தொட்டிகள் வறட்சிக் காலத்திலே பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. இரண்டு மாதங்களுக்கு முன்னாலே வட்டச் செயலாளர்களும் அரசியல் கட்சிக்காரர்களும் பொது மக்களும் புடைசூழ்ந்து அந்தத் தொட்டிகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரம். இன்றைக்கு அவைகள் எல்லாம் அனாதை கள்போல் தனித்து நின்றுகொண்டு இருக்கின்றன. இப்போது பெய்த மழையின் காரணமாக அவைகள் துருப்பிடித்து பாழாகக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தத் தண்ணீர்த் தொட்டிகளையெல்லாம் நன்றாக பெயின்ட் அடித்து பாதுகாப் பாக வைத்து இருந்தால் பின்னாலே பயன்படுத்திக்கொள்ள

முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். செங்கற்பட்டு
மாவட்டம் பாதிக்கப்பட்ட நேரத்திலே நிவாரணம் முழுமையான
அளவுக்கு, பாரபட்சமற்ற அளவுக்கு இருக்கும் என்று அமைச்சர்
அவர்கள் கூறியதை ஏற்றுக்கொள்கிறோம். அந்த வகையில்
முழுமையான வகையில் நிவாரணம் எதிர்பார்க்கிறோம் என்
பதைக் கூறி வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி முடிக்கிறேன்.
வணக்கம்.

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, இந்த
மாமன்றத்திலே தமிழ்நாட்டிலே வெள்ளத்தினாலே ஏற்பட்
டிருக்கிற சேதத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய
போது என்ன என்ன நிவாரண நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்
என்பதைப் பற்றிப் பேசினார்கள். ஆனால் அத்தனை பேர்களும்
வெள்ள நிவாரண நடவடிக்கை வேண்டுமென்று கேட்கிற நேரத்
திலே கன்னியாகுமரி மாவட்டத்திலே மட்டும் மழையில்லாமல்
இருக்கிற நிலைமையைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டி
ருக்கிறேன். ஒரு பக்கத்திலே நம்முடைய உறுப்பினர்கள் அத்
தனை பேர்களும் வெள்ள நிவாரண நடவடிக்கை தேவை என்று
சொல்லுகிறார்கள், அதே நேரத்திலே தமிழ்நாட்டிலே இருக்
கின்ற குமரி மாவட்டத்திலே வறட்சி நிவாரண நடவடிக்கை
களை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிற சூழ்
நிலை இருந்து கொண்டு இருக்கிறது. தமிழ்நாட்டிலே ஒரு
பக்கத்திலே வெள்ள நிவாரணமும், மறு பக்கத்திலே வறட்சி
நிவாரணமும் இரண்டு நடவடிக்கைகளும் போர்க்கால நடவடிக்கை
யாக இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை தெரி
விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குமரி மாவட்டத்திலே கழிந்த
2 ஆண்டுக் காலத்திலே மழையில்லாத சூழ்நிலையில் 3 போக
நெல் பயிர்கள் தண்ணீர் இல்லாமல் கருகி விடக்கூடிய நிலை
ஏற்பட்டது. இப்போதும் இந்த நேரத்திலே கூட குமரி மாவட்
டத்திலே உள்ள அணைகளிலே போதிய தண்ணீர் இல்லாத கார
ணத்தினால் 10 நாட்களுக்கு தண்ணீர் விட்டால் 7 நாட்களுக்கு
விட முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அங்கே
தண்ணீர் பிரச்சினை தீவிரமாக இருந்து கொண்டு இருக்கிறது.
குடிநீர்ப் பிரச்சினையை அங்கே கவனிக்க வேண்டிய சூழ்நிலை
யில் அரசு இருக்கிறது. அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்
பிட்ட காரணங்கள் பற்றி இந்த வெள்ள அறிக்கையிலே 5 பக்கத்
திலே அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.
கன்னியாகுமரி மாவட்டத்திலே போதுமான மழை இல்லாமல்
இருப்பதாகவும் அங்கே குடிநீர் பிரச்சினையை சமாளிக்க நிதி
அனுமதிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்
கொண்டுள்ளார் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வறட்சி
நிவாரண நடவடிக்கை என்ற முறையிலே மிகத் தீவிரமாக நட
வடிக்கை வேண்டுமென்று பலமுறைகள் அரசுக்கு எடுத்துச் சொல்
லியிருக்கிறோம். குடிநீர் பிரச்சினையைப் போக்குகின்ற முறை
யிலே தீவிரமாகச் செயல்படுகின்ற முறையிலே மேற்கொண்டு





நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சிக்
காக ஒதுக்கப்பட்ட பணம் 30—9—1983 க்குப் பிறகு மேற்
கொள்ளக்கூடாது, அந்தக் காலத்திற்குப் பின்னால் அந்தப் பணி
நடைபெறக்கூடாது என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆகவே
1983 ஆம் ஆண்டு 9 ஆம் மாதத்தோடு முடிக்கப்பட்ட அந்தப்
பணிகள் நிச்சயமாக தொடரப் படவேண்டும் என்பதை குமரி
மாவட்ட மக்கள் சார்பாக இந்த நேரத்தில் இந்த மாமன்றத்தில்
கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, குமரி மாவட்டம் முழுவதும் வறட்சி மாவட்ட
மாக இந்த அரசு அறிவிக்க வேண்டும். அங்கே வறட்சி நிவாரண
நடவடிக்கைகளை வெகு விரைவாக நீங்கள் எடுக்கவேண்டும்.
அது மட்டும் அல்ல, அங்கே தேவையான கிராமங்களில் இருக்
கின்ற குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு கூடுதலாக நிதி ஒதுக்க
வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். வறட்சி
நிவாரண நடவடிக்கையாக தமிழ்நாடு பூராவும் மேற்கொண்ட
போது குமரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டத் தொகை சுமார்
1 கோடி ஆகும். அதற்கு நான் அந்த மாவட்ட மக்கள் சார்பாக
நன்றியைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஒரு கோடி
ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் போதுமானதாக
இல்லை. ஆகவே மேற்கொண்டு அங்கே வறட்சி நிவாரண நட
வடிக்கைகளை மேற்கொள்ள குறைந்தது இரண்டு கோடி
ரூபாயாவது குமரி மாவட்டத்திற்கு இந்த அரசு ஒதுக்கித் தர
வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை அரசு அறிவித்து
இருக்கிறது. பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை விவசாயிகள் தாங்கள்
விரும்புகின்றபோது இப்போது அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட
நிலையில் இருக்கிறது. இதனால் தமிழ்நாட்டில் பலயிடங்களில்
விவசாயிகள் உண்மையில் பாதிக்கப்பட்ட நேரத்திலும் கூட அந்த
பயிர் இன்சூரன்ஸ் மூலமாக அவர்களுக்கு உரிய நிவாரணம் கொடு
க்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அரசு யாருடைய
பெயரில் நிலம் இருக்கிறதோ அவரிடமிருந்து அந்த பயிர் இன்
சூரன்ஸ் கட்டணத்தை கட்டாயமாக அமுல்படுத்துகின்ற வகையில்
பயிர் இன்சூரன்ஸ் கட்டணத்தை கட்டாயமாக வசூலிப்பதற்கு
அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி
கட்டாயமாக அமுல்படுத்துகின்ற போது வறட்சி ஏற்படுகின்ற
நேரத்தில் அவர்களுக்கு உதவுகின்ற ஒரு சூழ்நிலை நமக்கு ஏற்
படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு செய்த உதவிகளுக்கு நாங்கள் எங்கள் மாவட்ட
மக்கள் சார்பில் இந்த நேரத்தில் நன்றியை தெரிவித்துக் கொண்டு
குமரி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும்
என்ற வேண்டுகோளை விடுத்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. க. பாலன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைக்கப்பட்டு இருக்கிற வெள்ளை அறிக்கை, வறட்சி மற்றும் வெள்ள நிவாரண அறிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வெள்ளை அறிக்கையில் கடந்த 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக ஏறக்குறைய 110 பேர்கள் உயிர் இழந்தார்கள் என்றும், 16,300 கால்நடைகள் உயிர் இழந்தன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்ல பாதைகள் 310 கிலோ மீட்டர் தூரமுள்ள அரசு சாலைகள் முழுமையாகவும், 503 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலைகள் பகுதியாகவும் 7,000 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலைகள் ஓரளவும் சென்னை மாவட்டத்துனுடைய மாநகராட்சியின் சாலைகள் 153 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் இதற்காக சென்னை மாநகராட்சிக்கு 2 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்ல, வெள்ளத்தினால் சேதம் அடைந்த ஒவ்வொரு குடிசைக்கும் முழுமையாகச் சேதம் அடைந்த குடிசைக்கு 200 ரூபாயும், பகுதியாக சேதம் அடைந்த குடிசைக்கு 50 ரூபாயும் மற்றும் 5 கிலோ அரிசியும், 1 லிட்டர் மண்ணெண்ணெய்யும், வேஷ்டி, சேலையும் கொடுத்ததாக தெரிவித்து இருக்கிறார்கள். அப்போது வெள்ள நிவாரணமாக இந்த அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டி நம்முடைய மத்திய அமைச்சர் அவர்கள் சென்னையில் வந்து பார்த்தபோது இந்த நடவடிக்கைகளை பாராட்டியதாகவும் அப்படிப்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டு கேட்டபோது அவர்கள் எல்லாம் எந்தவிதமான குறைபாடுகளும் இல்லை என்று சொன்னதாகவும், இந்த அரசு எங்களுக்கு உதவி செய்ததாகவும் சொல்லிப் பாராட்டியிருக்கிறார்கள் என்று இந்த வெள்ளை அறிக்கையில் தெரிவித்து இருக்கிறார்கள். 1983 டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் சென்னையில் தண்ணீர் தேங்கியிருக்கின்ற பகுதிகளாக பெரம்பூர், புளியந்தோப்பு பகுதிகளாகும் என்று அந்த நேரத்திலே தெரிவித்திருக்கிறேன். என்ன காரண காரியங்கள் என்று நான் விளக்கியிருக்கிறேன்.

(இரவு 6-30)

ஓட்டேரி நல்லா என்ற ஒரு கால்வாய் இருக்கிறது. அது நீண்ட காலமாக இருப்பதால் இப்படி அடிக்கடி வெள்ளம் ஏற்படும் நேரத்தில், மழை நீர் சேர்ந்து அந்தக் கால்வாய் முழுவதும் மூடப்பட்டிருக்கிறது. மண் அடைக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், மாநகராட்சியால் கண்காணிக்கப்பட்டு கட்டப்பட்டு வருகின்ற மழை நீர் வடிகால் கால்வய்ா மண் மூடப்பட்டு





இயங்காத நிலையில் இப்படிச் சென்னையில் மழைத் தண்ணீர் தேங்கி, அதனால் குடிசைப் பகுதிகளில் வெள்ளம் ஏற்படுகிறது. அவைகளை மாநகராட்சி தூர் எடுக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அப்பொழுது கேட்டுக் கொண்டேன். ஆனால் இதுவரையில் அதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அண்மையில் பெய்த மழையின் காரணமாக இன்னும் அதிகமான மக்களுக்கு துன்பம் ஏற்பட்டிருக்கிறது.

இப்பொழுது பெய்த மழையால், மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் சொன்னதைப் போல, பெரம்பூர் பகுதியில் நான்கைந்து அடி தண்ணீர் வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் பார்வையிட்டதாக இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் எங்கள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் போன்றவர்கள் சுற்றிப் பார்த்தபொழுது அந்த மக்கள் தெரிவித்திருக்கிறார்கள், நாங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பள்ளிகளில் இருக்கிறோம், எஙகளுக்கு ஒரு வேளை உணவுதான் கொடுத்தார்கள், பிறகு கொடுக்கவில்லை என்றும் முறையிட்டிருக்கிறார்கள்.

1983 டிசம்பர் மாதத்தில் மத்திய அமைச்சர் வந்த நேரத்தில் மக்கள் குறை சொல்லவில்லை என்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்பொழுது பெய்த மழை வெள்ளத்தில் மக்களைச் சந்தித்த பொழுது அந்த மக்கள் என்ன சொன்னார்கள் என்று தெரிவிக்கவில்லை.

அதுமட்டுமல்லாமல், டிசம்பர் மாதத்தில் ஆயிரம் ரூபாய் செத்தவர்களுக்குத் கொடுத்ததாகத் தெரிவித்தார்கள். பேசின் பிரிட்ஜ் பகுதியில் பி.பி. அம்மன் கோவில் தெருவில் ஒரு வீடு இடிந்து ஒரு சிறுவன் உயிரிழந்து இருக்கிறான். அந்தக் குடும்பத்திற்குப் பணம் கொடுக்கவில்லை; பெரம்பூர் பகுதியில் குடிசை விழுந்து ஒரு சிறுவன் உயிரிழந்து இருக்கிறான். அவன் குடும்பத்திற்கும் பணம் கொடுக்கவில்லை. ஆனால் அறிக்கையிலே ஆயிரம் ரூபாய் கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சென்னை மாநகராட்சிக்கு பழுது அடைந்த சாலைகளைச் சீர் செய்வதற்காக இரண்டு கோடி ரூபாய் தரப்பட்டு அவைகளைச் சரிபார்க்கின்ற நேரத்தில் ஏராளமான மழை பெய்ததால் சென்னை மாநகராச் சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன என்பதைப் பற்றி இந்த அரசு ஆராய வேண்டும்.

[திரு. க. பாலன்] [1984 பிப்ரவரி 22

வெள்ளம் ஏற்பட்டதால் குடிசைகள் இருக்கும் பகுதிகளில் சேறாகி மக்கள் நடமாட முடியாத அளவிற்கு எல்லாச் சாலைகளும் இருந்துகொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் துரிதமாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குப்பைகள் அப்படி அப்படியே தேங்கிக் கிடக்கின்றன. குப்பைகள் கோபுரங்களாக ஆகியிருக்கின்றன. போர்க்கால நடவடிக்கை போல் எடுப்பதாகச் சொன்னீர்கள் அப்படி எடுத்தால் தான் முடியும். ஏனென்றால் காலரா நோய் வரும் நிலைமை இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், விளக்குகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. இரவிலே இருள் சூழ்ந்து இருக்கிறது. இன்றைக்கு வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும் பொழுது, கள்வர்கள் தங்களிடம் இருக்கின்ற பொருட்களை எடுத்துக் கொண்டு விடுவார்களோ என்ற பயம் இருக்கிறது. அதையும் அரசு கவனித்தாக வேண்டும்.

பெய்த மழையால் தண்ணீர் தேங்கியிருக்கிறது. அதிலும், உதயசூரியன் நகர், எம். எம். கார்டன், என். எஸ். கே. நகர், கக்கன் நகர், பெரியார் நகர், காமராஜ் நகர், பாரதி நகர், மேட்டுப்பாளையம் போன்ற இப்படிப்பட்ட இடங்களில் வெள்ளத் தண்ணீர் இன்னும் இருக்கிறது. மெஷின் வைத்து பம்பு மூலம் அந்தத் தண்ணீரை அகற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது 200 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்திற்காக என்று, பலருக்கு அதைக் குறைவாகத்தான் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். நான் நம்முடைய கலெக்டர் அவர்களைப் பார்த்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுக்கவேண்டும் என்று கேட்டபோது, அதாவது திரு. கலாநிதி, எம். பி.-யும் நானும் கேட்டபோது அதிகாரிகளை அனுப்பி வைத்து நிவாரணம் கொடுத்திருக்கிறார்கள். எவ்வளவு தெரியுமா? 50 ரூபாய். அதாவது ஒரு குடிசையிலே நான்கு மண் சுவர் இருக்கின்றது என்றால் அவற்றிலே ஒரு சுவர் விழுந்தால் 50 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் மற்ற மூன்று சுவர்களைப் பொறுத்தவரையில் தண்ணீரிலே ஊறிப்போய் இருந்து இரண்டு மூன்று நாட்களிலே விழுந்துவிடுகின்றது. எனவே இந்த 200 ரூபாய் என்பதை எல்லா வீடுகளுக்கும், அதாவது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள் அனைத்திற்கும் அதாவது ஒரு மண் சுவர் விழுந்திருந்தால் கூட கொடுப்பதற்குரிய வகையிலே ஏற்பாடு செய்யவேண்டும்.



1984 பிப்ரவரி 22] [திரு. க. பாலன்]

அடுத்து நீண்ட நாட்களாக சென்னையில் குடிநீர் பற்றாக்
குறை இருந்து வந்ததன் காரணத்தால் எங்களுடைய அரசு
காலத்திலும், உங்களுடைய அரசு காலத்திலும் கிணறுகளை
ஏற்படுத்தினார்கள். ஆனால் தற்போது வெள்ளம் வந்ததன்
காரணத்தால் அந்தக் கிணறுகள் எல்லாம் மிகவும் அசுத்தமாக
ஆகிவிட்டது. ஆகவே அந்த அசுத்தத் தண்ணீரை எல்லாம்
அப்புறப்படுத்திவிட்டு மக்கள் நன்கு பயன்படுத்தக்கூடிய முறை
யிலே இந்த அரசு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் கழிவு
நீரை, குப்பையை அகற்றுகின்ற வேலையினைப் பொறுத்த
வரையில் கார்ப்பரேஷன் பகுதியிலே மட்டும்தான் செய்கிறார்கள்.
ஆனால் என்னுடைய தொகுதியிலே குடிசைமாற்று வாரியத்
திற்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதி
யிலே சுகாதார வசதி மிகவும் மோசமாக இருக்கின்றது. அங்கே
குப்பைகளை அகற்றுவதில்லை. அவை அப்படியே கிடக்கின்றன.
சாக்கடைத் தண்ணீர் வேறு ஓடுகின்றது. எனவே அந்தப் பகுதி
களை எல்லாம் நம்முடைய மாண்புமிகு ஆதிதிராவிட நல
அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு அவற்றைச் சுத்தப்படுத்து
வதற்குரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். வெள்ளம் வந்து
தண்ணீர் வற்றிவிட்டதற்குப் பிறகும் ஆங்காங்கே சாக்கடைத்
தண்ணீர் ஓடுகின்றது. ஆகவே இந்த குடிநீர் வடிகால் வாரியத்
துறையினை நான் மிகவும் மோசமான துறை என்று சொல்
கிறேன். எவ்வளவு சொன்னாலும் அந்தத் துறை மக்களின்
நலனிலே அக்கறை இல்லாமல் இருக்கின்றது. குடிசைப் பகுதி
யாக இருந்தாலும், அல்லது மற்ற பகுதிகளாக இருந்
தாலும் அங்கெல்லாம் அசுத்தத் தண்ணீரெல்லாம்
வெளியே வந்துகொண்டிருக்கின்றது. அது கவனிக்கப்பட
வில்லை. மேலும் சில இடங்களைப் பொறுத்த வரையில்
மேன்ஹோல் கிணற்றில் இருந்து வாருகின்ற மண்ணை நடுரோட்டி
லேயே போட்டு விட்டுப் போய்விடுகிறார்கள். அதனால் பேருந்
துகள் அதன் மீது ஓடி பரப்புவதால் துர்நாற்றம் ஏற்படுகின்றது.
ஆகவே குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் அவர்களும்,
அமைச்சர் அவர்களும் இந்த நிலைமைகளைப் போக்குகின்ற
வகையில் பணிகளைச் செய்து முடிக்கவேண்டும் என்று
கேட்டுக்கொண்டு நான் சொன்ன கருத்துக்களை நன்கு ஆராய்ந்து
காரியங்களைச் செய்து மக்களுக்கு நன்மை செய்யவேண்டும்
என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. பெ. திருமாறன் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால்
கொண்டுவரப்பட்ட வறட்சி, வெள்ள நிவாரண அறிக்கையின்
மீது பேச வாய்ப்பளித்தமைக்காக எனது நன்றியினை உரித்
தாக்கிக் கொள்கிறேன்.

[திரு பெ. திருமாறன்] [1984 பிப்ரவரி 22

கடந்த பல மாதங்களாக தமிழகத்தில், குறிப்பாக, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் வரலாறு காணாத வகையிலே மழை பெய்து அந்தப் பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. விவசாயிகள் மிகவும் அதனால் துன்பப்படக்கூடிய நிலைமையில் மாண்புமிகு தமிழகத்தின் புரட்சித் தலைவர் அவர்கள் மழை பெய்தவுடன் அந்த குறுகிய நேரத்திலேயே எல்லா பகுதிகளுக்கும் சென்று அதாவது தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற நான்கு பகுதிகளிலும் நான்கு நாட்களாக ஹெலிகாப்டர் விமானத்தின் மூலமாகவும், கார் மூலமாகவும், அந்த பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப்பார்த்து அந்த மக்களுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்ய வேண்டிய வகையில் பணிகளை முடுக்கி விட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்ல பயனைச் செய்தார்கள்.

அந்த வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்குச் செல்லும்போது கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. உமாநாத் மற்றும் திருவாரூர் சட்ட மன்ற உறுப்பினர் திரு. செல்லமுத்து ஆகியோரை அழைத்துக்கொண்டு போய், தஞ்சை மாவட்டத்திலே பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தன் காரிலேயே கூட்டிக்கொண்டுபோய் பார்வையிட்டார்கள்.

(இரவு 6-40)

பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன, என்ன குறைகள் இருக்கின்றன என்பதை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சொல்லா விட்டாலும், எதிர்க் கட்சிச் சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்ல வேண்டும், அந்தக் குறைகளைச் சொல்ல வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு புரட்சித் தலைவர் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களை அழைத்துச் சென்று பல பகுதிகளைப் பார்வையிட்டு அந்தக் குறைகளைக் கேட்டறிந்து பல திட்டங்களை நிறைவேற்றும் அளவுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசால் போடப்பட்டிருக்கக்கூடிய திட்டங்களை, தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய அமைச்சர்—மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டம் பூராவும் சுற்றுப் பயணம் செய்து, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு எந்த, எந்த வகையிலே எந்த, எந்தத் திட்டங்களைச் செயல்படுத்தலாமோ அந்தந்த வகையிலே நன்மைகளை அளித்தார்கள். அதேபோல மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கோமதி சீனிவாசன் அவர்கள் மாவட்டம் பூராவும் சுற்றுப் பயணம் செய்து, பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு, தேவையான உதவிகளுக்காக நல்ல உத்தரவுகளை இட்டார்கள். அதேபோல பிற்படுத்தப்பட்ட அமைச்சர் திரு. எம். ஆர். கோவேந்தன் அவர்களும் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்கள். அதே



1984 பிப்ரவரி 22] [திரு. பெ. திருமாறன்]

மாதிரி வீட்டு வசதி வாரிய அமைச்சர் திரு. எஸ். ஆர். இராதா அவர்களும் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு முன்னாள் தொழில் அமைச்சரும் இந்நாள் கைத்தறி அமைச்சருமான திரு. திருநாவுக்கரசு அவர்கள் புதுக்கோட்டை மாவட்டம் பூராவும் சுற்றுப் பயணம் செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் அழைத்துச் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளான கரம்பக்குடி, ஆலங்குடி, மணல்மேடு, அறந்தாங்கி, மீமிசல் ஆகிய கடலோரப் பகுதிகளைப் பார்வையிட்டு, மீனவர்களைப் பார்த்து, பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்து, அவர்களுக்கு ஆறுதலைக் கூறி, அவர்களுக்கு வேண்டிய நன்மையைச் செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்து, அவர்களுக்கு உதவி வழங்கி, இன்னின்ன திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள்.

அதற்கு முன்பாக, கடந்த ஆண்டிலே வறட்சி ஏற்பட்டது. இதற்கு முன்பு தமிழக ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் எந்த அளவு நிவாரணப் பணி செய்துள்ளார்கள் என்பது மக்களுக்குத் தெரியும். ஆனால், சென்ற ஆண்டு—நான் ஏற்கனவே கவர்னர் உரையிலே பேசும் போது குறிப்பிட்டேன். வறட்சியினால் தாக்கப்பட்டதால், விவசாயிகளுக்கு ரூ. 200 கோடிக்கு மேல் தள்ளுபடி செய்தார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். அதற்கு முன்பாக இருந்த காங்கிரஸ் அரசாங்கமாக இருந்தாலும் சரி, அவர்களுக்குப் பின்னால் வந்த தி.மு.க. அரசாங்கமாக இருந்தாலும் சரி, விவசாயிகளைப் பற்றிப் பேசினார்களே தவிர, எந்த சௌகரியமும் செய்யவில்லை. ரூ. 200 கோடிக்கு மேல் விவசாயக் கடன்களை ரத்து செய்தது புரட்சித் தலைவர் அரசு. சாதாரண சிறு விவசாயிகளுக்குத் தனியாரிடமிருந்து பட்ட கடன்களிலிருந்து நிவாரணம் அளிக்க, சட்டம் கொண்டுவந்து தனியார் கடன்களிலிருந்து விடுவிக்க வைத்தார், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்.

தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க இந்த அரசு முன்னுரிமை கொடுத்து பல்வேறு பகுதிகளுக்குக் குடிநீர் பைப்புகளைப் போட்டது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், வறட்சியைப் போக்க தமிழக முதல்வர் அவர்கள் எந்த, எந்த வகையிலே வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்தார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான். வறட்சியினால் இவ்வளவு உணவு நெருக்கடி ஏற்பட்டும், சத்துணவுக்குப் போடுகிற அரிசியை நிறுத்தாமல், அதனை விநியோகித்து, 65 இலட்சம் குழந்தைகளுக்கும் உணவை வழங்கி, அரிசி விலையையும் கட்டுப்படுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணம் அளித்துள்ளார்கள். அதே போல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க, தமிழக முதலமைச்சர் மத்திய அரசிடம் கேட்டிருக்கக் கூடிய பல கோடி ரூபாய்களைப் பெற்று, விவசாயிகளுக்கு என்ன, என்ன

சலுகைகளைத் தர முடியுமோ, அவற்றைத் தர புரட்சித் தலைவர் தக்க வழிவகை செய்வார் என்று கருதுகிறேன். காரணம், திருமதி யசோதா அம்மையார் அவர்கள் சொல்லும்போது பாரபட்சம் காட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். தன்னிறைவுத் திட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எதிர்க்கட்சி உறுப்பினர் உள்ள தொகுதி என்று பார்க்காமல், ஒரு தொகுதிக்கு ரூ. 1 கோடி என்று ஒதுக்கினார்கள். ஒரு ஆண்டிலே ஒரு தொகுதியிலே ரூ. 1 கோடி செலவு செய்யப்பட்டு, திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. பழைய சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்கும், ரூ. 1 கோடியை ஒரு தொகுதியிலே யாராவது பெற முடியுமா? இந்த அரசுதான் ஒரு கோடி ரூபாயை ஒரு தொகுதிக்கு கொடுத்தது. இரண்டு, மூன்று யூனியன்கள் இருக்கலாம். ஒரு கோடி ரூபாய் கொடுத்து பள்ளிக்கூடம், பாலவசதிகளைச் செய்துக் கொடுத்தது. ரெகுலர் வேலையைத் தவிர இந்தப் பணிகள் செய்யப்பட்டன. ஆகவே பெருமையோடு சொல்வேன் ஒரு கோடி ரூபாயைத் கொடுத்தது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தான். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், இரண்டு மாதங்கள், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒரு கூட்டத்தைப் போட்டு யூனியனில் இருக்கிற கிளார்க்குகள், கிராம சேவக்குகளை அழைத்துப் பேசலாம். வேண்டுமென்றால் பி.டி.ஓ.-வைக் கூட அழைக்கலாம். சட்டமன்ற உறுப்பினர்கள் யாராவது இத்தகைய கூட்டம் கூட்டியிருக்கிறார்களா? சட்டமன்ற உறுப்பினர்கள் அழைத்தால் அத்தனை அலுவலர்களும் வருவார்கள். பால வேலையா, பள்ளிக்கூடமா, விளக்கு எரியவில்லையா அந்தந்த வேலைகளைச் சொன்னால் அவர்கள் செய்வார்கள். நான் அதைச் செய்திருக்கிறேன். அடுத்த கூட்டம் கூட்டுவதற்கும் முன்னால் அந்த வேலைகளை முடித்து விடலாம். தேர்தல் இல்லை என்பதால் சட்டமன்ற உறுப்பினர்களே இத்தகைய கூட்டத்தைக் கூட்டலாம் என்று சொல்கிறேன். கடந்த மாதம் நான் கூட்டியிருக்கிறேன். அந்த வகையிலே தொகுதிக் குறைகளை நீக்கலாம். இந்த அரசு எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்று பார்ப்பதில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. * * *

* * *

திரு. எஸ். ஆண்டித்தேவர் : * * * * * * என்று கூறுகிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே * * * என்பதை வேண்டுமானாலும் நீக்கி விடலாம்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது நீக்கப்படுகிறது.

திரு. எல். இளையபெருமாள் : வளர்ச்சி மன்றக் கூட்டம் சென்னையில் நடப்பதே இல்லை. மேலும் ஊராட்சி ஒன்றியத்தில் கூட்டம் கூட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தந்த மானியத்திலே அதைப்பற்றி எல்லாம் பேசலாம்.

திரு. ஜே. எஸ். இராசு : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமாறன் அவர்கள் பேசுகிற போது தவறான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். எந்தெந்தப் பகுதிகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * * * என்று உறுப்பினர்கள் சொன்னது, நான் சொன்னது அனைத்தும் சேர்த்து நீக்கப்படுகின்றன.

(இரவு 6-50)

திரு. பெ. திருமாறன் : புதுக்கோட்டை மாவட்டத்தில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அந்தக் கூட்டத்திற்கு பல சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றி. போகாமல் இருப்பவர்கள் நிச்சயமாகப் போக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, தமிழக அரசு புரட்சித் தலைவர் அரசு இந்த வறட்சியை எந்த அளவிற்குத் திறமையாகச் சந்தித்ததோ, அதைப் போலவே, இந்த வெள்ள நிவாரணப் பணியையும் நல்லமுறையில் செய்துள்ளது என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

ஏழை மக்கள், கிராம மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக இந்த அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. கிராமங்களில் உள்ள மக்களிடத்திலே இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ள காரணத்தால் தான் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்கிற கருத்து கொண்டிருக்கிற காரணத்தால் தான், மற்ற அரசுகள் நகரங்களை முன்னேற்ற வேண்டும் என்று திட்டங்களைப் போட்டது போல் அல்லாமல், கிராமங்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக கிராமங்களுக்கான

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திட்டங்களைப் போட்டு நிறைவேற்றி வருகிறார்கள். புரட்சித்
தலைவரின் இந்தத் திட்டங்கள் மூலம் கிராமங்கள் இன்றைக்கு
முன்னேற்றம் அடைந்து வருகின்றன. கிராம மக்கள் புரட்சித்
தலைவருக்கு நன்றி கூறி, இந்த அரசுக்கு ஆதரவாக உதவியாக
இருந்து வருகிறார்கள் என்பதைக் கூறிக் கொண்டு, என் உரையை
முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, திரு.
ஆண்டித் தேவர் பேசுவார். அன்றைக்கு திரு. தனுக்கோடித்
தேவர் அவர்களை திரு. தனுக்கோடி என்று அழைத்தேன். தங்
களை எப்படி அழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** துணைத் தலைவர் அவர்களுக்கு
ஏன் இந்தத் தடுமாற்றம் வந்தது என்று தெரியவில்லை. என்னை
ஆண்டித்தேவர் என்று தான் அழைக்க வேண்டும். திரு. தனுக்
கோடித் தேவர் அவர்களையும், தனுக்கோடித் தேவர் என்றே
அழைக்க வேண்டும். இதை நான் அழுத்தம் திருத்தமாக இந்த
அவையில் சொல்ல விரும்புகிறேன். இனிமேல் இந்தத் தடு
மாற்றம் இருக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படியானால்
நாம் ஜாதியை ஒழிக்க முடியாது.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால்
இந்த அவைமுன் வைக்கப்பட்டு இருக்கும் வெள்ள நிவாரண
வெள்ளை அறிக்கை மீது அகில இந்திய பார்வார்ட் பிளாக் சார்
பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருது
கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்
கின்ற குறிப்பிலே 1981-முதல் 1984 வரையில் தமிழக அரசு
வறட்சிப்பணிக்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளைத் தெளி
வாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். பல்வேறு சந்தர்ப்பங்
களில் வறட்சியைப்பற்றி இந்த மன்றத்தில் விவாதிக்க சந்தர்ப்பம்
இருந்த போதிலும், கடைசியாக அவர்கள் கொடுத்து இருக்கின்ற
இந்த அறிக்கையில் மத்திய அரசு தமிழக அரசுக்கு கோரிக்கை
வைத்துள்ளது. கோரிய தொகை வறட்சி நிவாரணப் பணிக்கு
அளிக்கவில்லை என்பதைப் பார்க்கிறேன். 116 கோடி ரூபாய்க்கு
மேல் தமிழக அரசு செலவு செய்து இருக்கிறது. கேட்ட
தொகையில் 75 கோடி ரூபாய் மத்திய அரசு கொடுத்திருக்கிறது
என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு வரையில் கூட தமிழக
அரசு மத்திய அரசிடம் கோரிய தொகை கொடுக்கப்படவில்லை.
அப்படியிருந்தும் கேட்ட தொகையை அவர்கள் கொடுக்க வேண்
டும் என்று வலியுறுத்தி இந்த அரசு சொல்லவில்லை. இங்கே
அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையில் என்ன சொல்லப்





பட்டு இருக்கிறது என்றால், மத்திய அரசு பரிவோடு இதைச்
செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லுகிறபோது
மாண்புமிகு தங்கராசு அவர்கள் ஆளும் கட்சித் தரப்பிலிருந்து
சொன்னார்களே, உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக்
கை கொடுப்போம் என்று, அதையே நான் இங்கே வலியுறுத்திக்
கூற விரும்புகிறேன். உங்கள் தரப்பிலேயே அதைச் சொல்லி
யிருக்கிறார்கள். எங்கள் இயக்கமும் இந்த மன்றத்தின் மூலம்
தெரிவிக்க விரும்புவது, தமிழக அரசு மத்திய அரசிடம் அந்தத்
தொகையை வலியுறுத்திப் பெற வேண்டும் என்பதாகும். அதிலே
இந்த அரசு முனைப்புடன் இருக்க வேண்டும் என்பதையும் நான்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வறட்சி நிவாரணப் பணியைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால்
பல்வேறு தவறுகள் ஆங்காங்கு நடைபெற்று இருக்கின்றன.
அதுவும் குடிநீர் வடிகால் வாரியம் செய்ததை என்னால் குறிப்
பிட்டுச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அவர்கள் பாராட்டப்
பட வேண்டும் : ஏனென்றால் இந்தக் குடிநீர் பற்றாக்குறையைப்
போக்குவதற்காக ஆங்காங்கு குழாய்க் கிணறுகள் போடப்பட்டன.
அதை கிராமங்களில் எப்படி போட்டார்கள் என்றால் கிராமத்தில்
இருந்து இரண்டு பர்லாங்கு தூரத்திற்கு அப்பால் போட்டு இருக்
கிறார்கள். அங்கேதான் தண்ணீர் இருக்கிறது என்று போட்டு
இருப்பதாகச் சொல்கிறார்கள்.

கிராமப்புற பெண்கள் எல்லாம் பகலிலே வேலை செய்து
விட்டு, இரவு வேளையிலே அந்தக் குழாய்க்குச் செல்ல வேண்டு
மென்றால் அங்கே விளக்கு வசதி இருக்காது. அப்படி பல்வேறு
இடங்களில் செய்திருக்கிறார்கள். சில இடங்களிலே 150
அடிக்கு குழாய் போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால்
அங்கே 50 அடிக்குத்தான் குழாய் உள்ளே இருக்கிறது. இது
பற்றி நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் கேட்
டிருக்கிறேன், நேரடியாகவும் சொல்லியிருக்கிறேன்.

பல்வேறு இடங்களில் குழாய் போடப்பட்டிருக்கிறது, ஆனால்
அவை பயன்படவில்லை ; மூடி வைத்திருக்கிறார்கள். காரணம்
என்னவென்று கேட்டால் மேல்நிலை தண்ணீர்த் தொட்டி கட்ட
வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்குத் திட்டம்
இருக்கிறதா என்று கேட்டால் இல்லை என்ற பதில் தான்
வருகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவ
ரவர்களே, பல்வேறு இடங்களிலே தவறு நடந்ததாகச் சொன்
னார்கள். பல்வேறு இடங்களில் தவறு நடந்திருந்தால் குறைந்
தது சில இடங்களையாவது, ஊரையும் பெயரையும் சொன்னால்
தகுந்த நடவடிக்கை எடுக்கலாம். அவர்கள் சொல்வதைக் குறை
கூற வேண்டும் என்பதற்காக நான் கேட்கவில்லை. தவறு

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1984 பிப்ரவரி 22

நடந்து கொண்டே போனால், அதை நாம் விட்டு கொண்டே
போனால், மேலும் மேலும் தவறு நடந்து கொண்டே
ஆகவே, பல்வேறு இடங்களில் தவறு நடை பெற்றிருந்தாலும், ஒரு
சில இடங்களையாவது குறிப்பிட்டுச் சொன்னால் அதைத்
தடுத்து, நடவடிக்கை எடுத்து, அதற்கு யார் யார் காரணமாக
இருக்கிறார்களோ அவர்கள் தண்டிக்கப்பட்டால் மறுமுறை தவறு
செய்யமாட்டார்கள், மற்றவர்களும் தவறு செய்யாமல் காப்
பாற்றப்படுவார்கள்;

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க துணைத்
தலைவர் அவர்களே, திரு. ஆண்டித்தேவர் அவர்கள் குடிநீர்
வடிகால் வாரியம் கிராமங்களுக்கு அப்பால் வெகு தொலைவில்
குழாய்க்கிணறுகளைப் போடுவதால் பெண்கள் போய் தண்ணீர்
எடுக்க வசதி இல்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு
அமைச்சரவர்கள் ஒன்றிரண்டு இடங்களையாவது பெயரைச்
குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று
சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் திருமங்கலம்
ஊராட்சி ஒன்றியத்தில் பொன்னமங்கலம் பகுதியில் வீரப்பட்டி
என்ற ஊருக்குள் குழாய் போடாமல் சுடுகாட்டுக்குள்ளே
குழாய் போட்டிருப்பதால் அங்கே போய் தண்ணீர் எடுப்பதற்கு
அச்சப்படுகிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சுடுகாட்டுக்
கும் தண்ணீர் தேவை என்பதால் அங்கேயும் போட்டிருப்பார்
கள் (சிரிப்பு) என்று கருதுகிறேன். திரு. சித்தன் அவர்கள்
சொன்னமாதிரி, ஆண்டித்தேவர் அவர்களும் ஒன்றிரண்டு
ஊர்களைச் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சுடுகாட்டுக்கு தண்ணீர்
என்று சொல்கிறார்கள். நான் சுடுகாட்டுக்கு பாதையே
வேண்டாமென்று எங்கள் ஊரில் சொல்லியிருக்கிறேன். சுடு
காட்டிற்கு பாதையே அமைத்துத் தரமாட்டேன் என்று
சொல்லிவிட்டேன். நாம் ஏன் அவர்களை சுடுகாட்டுக்கு
அனுப்பவேண்டும் என்பதால் அப்படிச் சொன்னேன்.

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவரவர்களே,
சுடுகாட்டுக்கு ரோடு போட்டுத் தரமாட்டேன் என்று
சொன்னதாகச் சொன்னீர்கள். நீங்கள் எந்த நோக்கத்தோடு
சொன்னீர்கள் என்று தெரியவில்லை. எப்படி இருந்தாலும்
நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு, நம்முடைய தன்னிறைவுத்
திட்டம் வந்தும் பின்தங்கிய மக்கள், மலைவாழ் மக்கள்,
ஆதிதிராவிட மக்களுக்கு சுடுகாட்டுக்குச் செல்ல பாதை
இல்லை. நீங்கள் சொல்வதைக் கேட்டால் அவர்களே
சொல்லி விட்டார்கள், இனிமேல் பாதை தேவையில்லை
என்று விட்டுவிடுவார்கள்.



1984 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சுடுகாட்டுக்கு
நாம் ஏன் மக்களை அனுப்ப வேண்டும்? சுடுகாட்டுக்கு
அனுப்பினார்கள் என்ற பெயர் நமக்கு வேண்டாம் என்பதால்
அப்படிச் சொன்னேன், அதனால் வேலை ஒன்றும் பாதித்து
விடாது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு அமைச்சரவர்
கள் ஊர் பேரைச் சொல்லச் சொன்னார்கள். நம்முடைய
ஆளும் கட்சி உறுப்பினர் முத்தையா அவர்களுடைய தொகுதி
யில் சேடப்பட்டியில் ஒரு இடத்தில் ஊரிலிருந்து இரண்டு
பர்லாங் தூரத்தில் ஒரு குழாய் போட்டிருக்கிறார்கள்.

அதைப்போன்று என்னுடைய தொகுதியில் கணவாய்ப்
பட்டி என்ற கிராமத்தில் சுமார் 25,000 ரூபாய் செலவில்
ஒரு குழாய் போட்டு அதை மூடி வைத்திருக்கிறார்கள்.
அதுபற்றி நான் மாவட்ட வளர்ச்சி மன்றக்கூட்டத்திலும்
தெரிவித்தேன். அதைப்போன்று கல்லாற்றுப்பட்டியில் ஒரு
குழாய் போட்டு மூடி வைத்திருக்கிறார்கள். இப்படி 15,
20 இடங்களில் குழாய் போட்டு, அவை இயங்காமல்
இருக்கின்றன. அரசுப் பணம் இந்த வகையில் வீணாக்கப்
பட்டிருக்கிறது........................

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலை
வரவர்களே, இரண்டு இடங்களைச் சொன்னார்கள், நன்றி.
மற்ற இடங்களின் பெயரைச் சொல்ல முடியாவிட்டாலும் எழுதிக்
கொடுங்கள். நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.
சில இடங்களில் தவறு நடக்கும்போது நடவடிக்கை எடுக்கப்
பட்டால் வேறு இடங்களில் அத்தகைய தவறு நடக்காமல்
தடுக்க முடியும்.

(இரவு 7-00)

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்
களுக்கு பல்வேறு கட்டங்களிலே சொல்லியும் நடக்காததால்,
இதைச் சொல்கிறேன். அரசால் ஒதுக்கப்படும் நிதியில் 80
சதவீதம் ரோடாகவோ, குழாயாகவோ, கிணறாகவோ
போனால், அது பெரும் சாதனையை நடத்தியவர்கள் என்று
கருதுகிறேன். காரணம் என்னவென்று சொன்னால், காண்ட்
ராக்ட் முறை— இதில் 80 சதவீதம் மக்களுக்குப் போய்ச்சேராத
நிலை இருக்கிறது. இது மாநில அரசும், மத்திய அரசும்
ஏற்றுக்கொண்டிருக்கிற நிலை. ஆனால் கான்ராக்ட்
விடாமலே, வறட்சியில் ஜனங்களுக்கு நேரடியாக வேலை

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1984 பிப்ரவரி 22

கொடுக்கவேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு விவசாய
அமைச்சரும், நானும் நேரடியாகச் சென்றபோது
காட்டினோம். கூலியாக குழந்தைகளுக்கு சுட்டிக்
ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு, நாம் இரண்டு ரூபாய்.
பணத்தையும் காண்ட்ராக்டுகள் கொடுக்கிற அரிசியையும்,
வெளியிலே விற்று விடுகிறார்கள் வாங்கிக்கொண்டு விலைக்கு
என்பதைப் பார்க்கிறோம்.

அதுபோல பொதுப்பணித்துறை மூலமாக
கிணறுகளை வெட்டினார்கள். ஓப்பன் கண்மாய்களில்
பயன்படுகிறது என்று தெரியவில்லை. வெல்-அது எதற்குப்
இல்லை. குடிநீர் எடுப்பதற்கு அதற்குப் பாய்ச்சல் நிலம்
என்று சொன்னால், ஊருக்குப் பக்கத்தில் இருக்கிறதா
மட்டும் 4 கிணறுகள் இல்லை. என்னுடைய தொகுதியில்
பட்டிருக்கின்றன. அதுபோன்று குளங்களிலே வெட்டப்
இல்லாத அளவிற்கு எவ்வளவு பணம் செலவு செய்தும், பலன்
யமைக்க வேண்டுமென்ற வெட்டப்பட்டிருக்கிறது. அதை மாற்றி
உணர்வோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:
யிடையே எழுந்து மதிப்பதை நான் இடை
நான் இவைகள் நன்றாக தவறாக கருதக்கூடாது.
தான் சொல்கிறேன். நடக்கவேண்டுமென்பதற்காகத்
இடங்களிலும், 234 வறட்சிப் பணிகள் நடக்கும் எல்லா
கிறோம். அதுமட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களைப் போட்டிருக்
போது நீங்கள் உடனே, சட்டமன்றத்திலே நாம் பேசும்
ஆட்சித்தலைவரிடம் தவறு நடந்தால் மாவட்ட
கிறேன். அப்படியும் சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்
சொல்லுங்கள் என்று நீக்கப்படாவிட்டால், என்னிடத்தில்
கூறுவதற்குக் காரணம்—இப்படி சொல்லி ஒரு வருஷமாகிறது. நான்
கூட, தவறு நடந்துவிட்டதே, உறுப்பினர்களைப் போட்டும்
வீணாகிவிட்டதே என்ற வருத்தத்துடன் பொதுமக்களின் பணம்
சொல்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: உண்மையிலேயே அமைச்சரின்
உணர்வைப் பாராட்டுகிறேன். உங்கள்
துணையாக இருக்கிறோம். உணர்வுக்கு உறு
சொல்கிறார்கள். எழுதிக் கொடுக்கவேண்டுமென்று
கேள்வியாகக் நான் இப்போது ஒன்றைச் சொல்கிறேன்.
ஒரு வேலை; கேட்டிருக்கிறோம். தண்ணிறைவுத் திட்டத்தில்
இருக்கிறது. ஒரு ரோடு இராமநாதபுரம் மாவட்டத்தில்
திருநெல்வேலி ஒன்றியத்தில் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது.
போடுவதற்காகப் மாவட்டத்தில் 3 கிலோ மீட்டர் ரோடு
ஒன்றியங்களிலும் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு
அறிக்கையில் இருக்கிறது—ஆடிட் அப்ஜெக்ஷனிலே—தணிக்கை
இன்ஜீனியர்கள், அதிகாரிகள் மீது நடவடிக்கை தவறு செய்த
மென்று சொல்லி இரண்டு ஆண்டுகளுக்கு எடுக்க வேண்டு
போன்று, அரசு எந்த நடவடிக்கை மேலாகிறது. அது
கட்டங்களில் தவறு எடுத்தாலும், பல்வேறு
மக்களுக்கு அது சரியாகப் ஏற்படுகிறது என்று சொன்னால்,
போய்ச்சேராது.



1984 பிப்ரவரி 22] [திரு. எஸ் ஆண்டித்தேவர்]

இப்போது தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தெளி
வாகச் சொன்னார்கள். என்ன சொன்னாலும், நான் உங
களைக் கேட்க ஆசைப்படுகிறேன்—பல இலட்சக்கணக்கான
ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்
களும், தமிழக அரசும் ஒத்துக்கொண்டிருக்கிறது. நாம்
கேட்ட தொகையில் 15 கோடி ரூபாய் தான் கொடுத்திருக்
கிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்த அறிக்கையிலே
நாம் பார்க்கிறபோது, 128 கோடி ரூபாய் தேவை என்று
எழுதப்பட்டிருக்கிறதே தவிர, பயிரிழந்த விவசாயிகளுக்கு,
அரசு என்ன கொடுக்கப்போகிறது என்று தெளிவாக
இல்லை. ரூ. 200-ம், சோற்றுப் பொட்டலமும் கொடுத்தால்
அவர்களைக் காப்பாற்ற முடியாது. இப்போது மழையிலே
அரசு முனைப்பாக ஈடுபட்டு, 11 அமைச்சர்கள் வெள்ளத்தை
பார்வையிட்டார்கள் என்பதைப் பார்த்து பாராட்டுகிறேன்.
ஆனால் கிராமப்பகுதியிலே மக்களைக் காப்பாற்ற இந்த
அரசு முனைப்பாக இல்லை. என்னுடைய தொகுதியைப்
பொறுத்தவரைக்கும் ஒரு அமைச்சரும் பார்வையிடவில்லை
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னு
டைய தொகுதியில் உசிலம்பட்டி வைகைப்பாசனத்தில்
இருக்கிறது. அவ்வளவும் அழிந்துவிட்டது. அவ்வளவு பயிர்
களும் நீர் பரப்பில் இருக்கிறது. அதை எடுத்து மேலே
போட்டால், காய வைக்க இடம் இல்லை. அந்த விவசாயி
கள் ஒரு படி நெல்லைக் கூட கொண்டுவர முடியவில்லை.
ஒரு ஏக்கருக்கு ரூ. 1,500-க்கு மேல் செலவு செய்திருக்கிறார்
கள். அந்தப் பயிர்கள் வைக்கோல் கூட கிடைக்காத
அளவிற்கு நாசமாகிவிட்டது. பல இலட்சம் ஏக்கர்கள்
பாழாகியிருக்கிறதே, அதற்கு இந்த அரசு என்ன செய்யப்
போகிறது என்று சொல்லவில்லை. மதுரை மாவட்ட ஆட்சித்
தலைவர் கொடுத்த அறிக்கையைப் பார்க்கிறபோது
வேதனையாக இருக்கிறது. ஆலுங்கட்சியைச் சேர்ந்த தங்க
ராஜ் சொன்னார்கள்—அதிகாரிகள் தவறான குறிப்புகள்
கொடுத்திருக்கிறார்கள். எவ்வளவு பாதிப்போ அதைக்
கொடுக்கவில்லை. மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல்லில்
250 குடிசைகளுக்குமேல் அழிந்திருக்கிறது. அட்டவணையில்
மதுரை மாவட்டத்தில் 907 குடிசைகளுக்கு மேல் அழிந்திருக்
கிறது என்று தெரிகிறது. அதிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு
என்ன நிவாரணம் என்று சொல்லவில்லை. அவற்றால் பல
இலட்சம் ஏக்கரா வைகைப் பாசனம் பாதிக்கப்பட்டிருக்கிறது.
குறிப்பாக மதுரை மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்
திலும் ஏற்பட்ட சேதங்களை எடுத்துக்கொண்டால், மதுரை
மாவட்டத்தில் 6 ஆயிரம் ஏக்கர் பாதிக்கப்பட்டு இருக்கிறது
என்றும், மிளகாய் 1,500 ஏக்கர் அளவிற்கு பாதிக்கப்பட்டு
இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல்
மதுரை மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும், பாதிப்பு
எந்த அளவிலே இருக்கிறது என்று இதிலே சொல்லியிருக்

கிறார்கள். அதைப் பார்க்கும் போது மிகவும் வேதனை
யாக இருக்கிறது. அவ்வளவு குறைந்து இதிலே சொல்லி
யிருக்கிறார்கள். நான் அந்தப் கிராமப்புறங்களுக்கு உள்ளே
சென்று போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். அவர்களை
யார் என்று கேட்க நாதியில்லை. ஆனால் இங்கே இந்த
அறிக்கையில் அமைச்சர் அவர்கள் எல்லாம் சென்று பார்த்தார்
கள் என்று செய்தி வந்திருக்கிறது. பத்திரிகையிலும் படங்கள்
வந்திருக்கின்றன. கிராமப்புறத்தில் உள்ள மக்களைப் பற்றி
சரியான தகவல்கள் கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் இருந்தவர்கள்.
1956 ஆம் ஆண்டு உரக் குழிக்காக பணம் ஒதுக்கீடு செய்யும்
நிலைவந்தபோது, நம்முடைய அமைச்சர் அவர்கள்
பாராளுமன்றத்தில் இருந்திருக்கிறார்கள். அப்போது
The total area of the compost pit exceeded the total area of the land
in India. என்ற பதில்தான் பாராளுமன்றத்தில் வந்தது. இந்தத்
தகவல் பாராளுமன்றத்திற்கு சென்றது. தனிப்பட்ட வித்த்
தில் யாரையும் நான் சொல்லவில்லை. வெள்ளத்தால்
ஏற்பட்ட பாதிப்புகளைப் பற்றி உடனடியாக விவரம்
வேண்டும் என்று சொல்லும்போது, அங்கேயிருக்கக்கூடிய
தாசில்தார்களை கூப்பிட்டு, அறிக்கை கேட்கிறார்கள்.
உண்மையிலே பாதிக்கப்பட்ட இடங்களை எல்லாம் அந்த
ஏரியாக்களை எல்லாம் சென்று பார்த்துவிட்டு வந்தபிறகு
கொடுக்கின்ற அறிக்கையாக இருந்தால், அது உண்மையான
அறிக்கையாக வந்திருக்கும். இப்படி பாராளுமன்றத்திலே ஒரு
தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

மதுரை மாவட்டத்தில் 250 குடிசைகள்தான் பாதிக்கப்
பட்டு இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் நான் நேரடி
யாகப் போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். அங்கே பல
ஆயிரக்கணக்கான குடிசைகள் பாதிக்கப்பட்டும், சுவர்
இடிந்தும் அங்குள்ள மக்கள் இரவிலே படுக்கக்கூட முடியாமல்
அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரை
யில் நிவாரண உதவி கிடைக்கவில்லை.

அதேபோல் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், பயிரிடப்
பட்ட பயிர்கள் இன்றைக்கு இந்த பெரு மழையினால் பாதிக்கப்
பட்டு இருக்கிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறைந்த
பட்சம் 1,500 ரூபாய் ஒரு ஏக்கருக்கு என்று கொடுத்தால் தான்
அவர்கள் செலவு செய்த அந்தத் தொகையாவது அவர்களுக்குக
கிடைக்கும்.



வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அந்த விவசாயப் பெருங்குடி
மக்கள் அவதிக்கு உள்ளாகியிருக்கும்போது, கூட்டுறவுக் கடன்
கள் வசூல் செய்கின்ற நிலைமையிருக்கிறது. அவர்களுக்கு மீண்
டும் பயிர் செய்ய நாம் ஏதாவது உதவி செய்ய வேண்டாமா ?
அடுத்த ஆண்டு விவசாயத்திற்கு என்ன செய்யப் போகிறோம்
என்று அந்த விவசாயிகள் மிகவும் கவலைக்குள்ளாகியிருக்கிறார்
கள் இப்படி இருக்கும்போது கூட்டுறவுக் கடன்களை வசூல்
செய்ய நடவடிக்கைகள் எடுப்பது என்பது மிகவும் வேதனையான
விஷயம். இப்படிப்பட்ட நிலையில் அவர்கள் இருக்கும்போது
அந்தக் கடன்களை கொஞ்ச காலத்திற்குத் தள்ளிப் போட
வேண்டாமா ? பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வரி வஜா செய்ய
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த மழையினால் கால்நடைகள், ஆடு, மாடுகள்
மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. எங்கள் பகுதியிலே
எந்தவிதமான மானியமும் கொடுக்கவில்லை. இந்த அறிக்கை
யில் மதுரை மாவட்டத்தைப் பற்றி மிகவும் தவறான தகவல்கள்
கொடுக்கப்பட்டு இருக்கின்றன. எங்கள் பகுதியிலே சேடப்பட்டி
என்ற இடத்திலே எப்படி சீக்கிரம் கொடுக்கப் [illegible]
அபாயம் இருக்கிறது. இந்த அரசு பல திட்டங்களைத் தீட்டியிருந்
தாலும், 125 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய அரசைக் கேட்
டிருந்தாலும், அது மக்களுக்கு எப்படிப் போய்ச் சேருகிறது என்
பதை நாம் பார்க்க வேண்டும். மக்களுக்குப் போய்ச் சேருகிற
வகையில் நாம் திட்டம் தீட்ட வேண்டும். அதைப்பற்றி இந்தக்
குறிப்பிலேயில்லை. அரசு அதிகாரிகளும் அதைப்பற்றி அமைச்சர்
அவர்களுக்குச் சொல்லவில்லை. ஏழை எளிய விவசாயிகள்
பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எப்படி இந்தத்
தொகையை கொடுக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை.
சட்டமன்றக் கூட்டம் முடிந்து ஊருக்குப் போனால் பொது
மக்களுக்கு என்ன பதில் சொல்வது என்று எங்களுக்குத் தெரிய
வில்லை. எந்த நிதியிலிருந்து அவர்களுக்கு உதவப் போகிறார்
கள் என்பதும் இங்கே இல்லை. எனவே பாதிக்கப்பட்ட விவசாயி
களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 1,500 என்ற அளவில் கொடுக்க
ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து கிராமப் புறங்களில் தீப்பிடிப்பது என்பது எப்
போதோ ஒரு முறை நடக்கும் தீப் பிடித்து எரிந்தால் 200
ரூபாய், 5 கிலோ அரிசி என்று கொடுக்கிறார்கள். சரி. இந்த
200 ரூபாயை வைத்துக் கொண்டு இன்றைக்கு எரிந்து போன
வீட்டைக் கட்ட முடியுமா என்பதையும் நாம் சிந்தித்து பார்க்க
வேண்டும். அவர்கள் வீட்டைக் கட்டுவதற்கு கடன் கேட்கிறார்
கள். அவர்களுக்கு கொடுக்கும் பணம் போதவில்லை என்று
சொல்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் எளிதான முறையில்
கடன் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும்,
அதற்கு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய
வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1984 பிப்ரவரி 22

அடுத்து பாதிக்கப்பட்ட அந்த கிராமப்புற மக்களுக்கு உதவிகள் உடன் போய்ச் சேருகின்ற வகையில் நாம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டின தலைநகரம் சென்னை. இங்கே பாதிக்கப்பட்ட மக்களைப் போய் அமைச்சர்கள் பார்த்திருக்கிறார்கள் தலைநகரமாக இருப்பதால் போய்ப் பார்த்திருக்கிறார்கள். அதே சமயத்தில் கிராமப்புற மக்களையும், இந்த அரசு கவனிக்க வேண்டும். அவர்களுக்காக ஒதுக்குகின்ற அந்த நிதி அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும். அதை எப்படிச் செய்யப் போகிறார்கள் என்று கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

(இரவு 7-10)

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த 2, 3 ஆண்டுக் காலமாக வறட்சியினால் நாம் மிகவும் பாதிக்கப் பட்டிருந்தோம். அப்படிப்பட்ட நேரத்தில் ஜனங்களுக்கு ஏதாவது வேலை கொடுத்து அவர்களுக்குக் கூலி கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில், தண்ணீர்வளத் திட்டத்தின் கீழ் அதற்காகவே ரோடுகளைப் போட்டோம்.

அதுவும் மண் ரோடுகள் போட்டோம். அடியில் ஜல்லிக் கற்களைப் போட்டு, அதற்கு மேல் மண்ணைக் கொட்டி போட்டு, ரோட் ரோலர்களைக் கொண்டு உருட்டி, ரோட்டை சமன் செய்து வைத்திருந்தோம். அதைப் போலவே கசிவு நீர் குட்டைகளையும் பல இடங்களில் ஏற்படுத்தியிருந்தோம். ஆனால், அதற்குப் பின்னாலே பெய்த கடுமையான மழையின் காரணமாக, கசிவு நீர்க் குட்டைகளும் பாதிக்கப்பட்டன. ரோட் ரோலர்களைப் போட்டு சமன்படுத்திய அந்த மண்ணெல்லாம் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகக் கூடிய அந்த நிலைமையும் ஏற்பட்டது.

நான் பேச எழுந்திருக்கும் போதே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒன்றை முக்கியமாக குறிப்பிட எண்ணியிருந்தேன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி மதுரை மாவட்டத்தை எதிலேயும் சேர்க்காமல் விட்டு விட்டார்கள் என்று எனக்குப் புரியவில்லை. மதுரை மாவட்டத்தில் போடப்பட்ட அந்த மண் ரோடுகளையெல்லாம் மேட்ச் வொர்க் செய்து சீர்திருத்து வதற்கே பல கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழிக்க வேண்டும் என்கிற நிலைமை இருக்கையில், ஏன் அதை விட்டுப் போனார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.



1984 பிப்ரவரி 22] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

இங்கே பேசிய நமது நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் மலைப் பகுதிகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். மலைப் பகுதிகள் எவ்வளவு மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று எடுத்துச் சொன்னார்கள். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட, வைகைப் பகுதி, பெரியார் பகுதி போன்றவற்றைச் சொன்னார்கள். வைகைப் பகுதி, பெரியார் பகுதி மாத்திரம் அல்ல, மதுரை மாவட்டத்தில் எல்லாப் பகுதி களிலும் உள்ள பயிர்களுமே புகையான் என்ற நோயினால் பாதிக் கப்பட்டு, விவசாயிகளுக்கு பொருளாதார சீர்குலைவு ஏற்படுகிற நிலைமை ஏற்பட்டிருந்தது. இப்போது இந்த பெரு மழையும் பெய்த காரணத்தாலே, வெள்ளம் வந்து, ஊரையே அடித்துக் கொண்டு போகவில்லையே தவிர, பெரு மழையின் காரணத் தால் வெள்ளம் அதிகமாக வந்து, விவசாயிகள் பயிர் செய்திருந்த நிலத்தில் இடுப்பளவு தண்ணீர் ஏறியதால், கதிர்கள் வெள்ளத் திலேயே மூழ்கி விட்டன. அதற்குப் பிறகும் அறுவடை செய்ய முடியாமல், நெல் மணிகள் கீழே விழுந்து முளைத்து விட்டன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் விவசாய மக்கள் பாதிக்கப்பட் டிருக்கிறார்கள்.

மதுரை மாவட்ட கலெக்டர் அவர்கள் மிகவும் சிறப்பான முறையில் நல்லவிதமாக அறிக்கை கொடுக்கக் கூடியவர்கள். ஏன் என்று தெரியவில்லை. இந்த விவரங்களையெல்லாம் அவர்கள் உங்களுக்குத் தரவில்லை. 14 ஆம் தேதி மட்டும் திண்டுக்கல்லிலே 122 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறது. மாண்புமிகு அமைச் சர் அவர்களுக்கு அந்தந்த துறையைச் சார்ந்தவர்கள் இந்த கணக்குகளையெல்லாம் கொடுத்திருப்பார்கள். ஒரு பகுதியி யிலேயே மட்டும் 122 மில்லி மீட்டர் மழை ஓரே நேரத்தில் பெய்திருப்பதோடு, டிசம்பரில் சமீபத்தில் பெய்த மழையால் எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கும் என்பதைத்தான் நான் இங்கே. சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த விவரங்களின் தன்மை களை அறிந்து கொண்டு வருவதற்காகவே, நான் நேற்றைய தினம் ஊருக்குச் சென்றுவிட்டு வந்தேன்.

வெள்ளம் அதிகமாக பெருக்கெடுத்து ஓடிவந்த காரணத்தால் தண்ணீர் நிறைய வந்து பல இடங்களில் குடிசைகள் அழிக்கப் பட்டு, நீரில் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. ஆளுநர் அவர்களுடைய உரையிலே கூட, 7 இலட்சத்து 10 ஆயிரம் குடிசைகள் முழுவதுமாக அழிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட் டிருக்கிறது. பல இடங்களில் தண்ணீர் வந்த வேகத்தில் அங்கே யிருந்த குடிசைகள், கால்நடைகளோடு, பண்ட பாத்திரங்களோடு முழுவதுமாக அடித்துச் செல்லப்பட்டு அழிந்து விட்டன. அது மட்டும் அல்ல, ஒரு சில கூரை வீடுகளில் ஒரு பக்கம் தண்ணீர் ஒழுகிக் கொண்டேயிருக்கும், இன்னொரு பக்கம் ஆடு மாடுகள் சாவதும் நீரில் அடித்துச் செல்லப்படுவதுமாக நிலைமை இருந்து கொண்டிருக்கும். இன்னொரு பக்கம் வீட்டின் ஒரு பக்கச் சுவர் இடிந்து விழுந்து கொண்டிருக்கும். இப்படி பல முனைகளிலும் இடர்ப்பாடுகள் அந்த ஏழை மக்களுக்கு ஏற்பட்டன.

ஆகவே, எங்கெங்கேயெல்லாம் குடிசைகள் விழுந்து மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ, அங்கேயெல்லாம் கண்டிப்பாக நிவாரண வேலைகளை நிரந்தரமாகத் தந்தாக வேண்டும். இதை நான் இப்போது மாத்திரம் அல்ல, 1979 இல்கூட, இதே போன்று வெள்ளத்தால் ஏற்பட்ட விபத்துக்களைக் கூட இந்தச் சட்டமன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன். இப்படிப் பட்ட நேரங்களில் மழையினால் பாதிக்கப்பட்டு எங்கெங்கே குடிசைகள் முழுமையாக அழிந்து போயிருக்கின்றனவோ, அங்கே யெல்லாம் அவர்களுக்குத் துணிமணிகளைக் கொடுத்தால் மாத்திரம் போதாது.

அவர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் மானியமாகவும், 3 ஆயிரம் ரூபாய் திருப்பி வாங்கக் கூடிய கடனாகவும், கொடுத்து உதவலாம். ரூரல் ஹவுசிங் மூலமாக அணுகினால், Ist ஈ.சி, IInd ஈ.சி. வாங்கி ஆக வேண்டும். பின்னால், கட்டும் வீட்டையே பதிந்து கொடுக்க வேண்டும். இதனால் காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே, கஷ்டப்படும் ஏழைகளுக்குத் தேவையான உதவி களை ரெவின்யூ துறை மூலமாகவோ அல்லது பிளாக் டெவலெப் மெண்ட் மூலமாகவோ செய்ய வேண்டும். எங்கேயெல்லாம் ஏழை எளிய விவசாய மக்கள் இப்படி வெள்ளத்தினால் பாதிக்கப்பட் டிருக்கிறார்களோ அவர்களுக்கு இந்த மாவட்டம் அந்த மாவட் டம் என்று பிரித்துப் பார்க்காமல், மாநிலம் முழுவதற்கும், இந்த உதவிகளை அவர்கள் பெறும் வகையில் ஏற்பாடு செய்யவேண்டும்.

மிகச் சிறிய விவசாயிகளாக இருப்பார்களேயானால், அவர் களுக்கு முழுவதையும் மானியமாகவே கொடுத்து உதவும் வகையில் அரசு வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது மாவட்டந்தோறும் நிறைய பெர்க்கு லேஷன் பாண்ட்ஸ்களை—கசிவு நீர்க் குட்டைகளை—கட்டிக் கொண் டிருக்கிறோம். பெரிதும் பாராட்டப்படக்கூடிய ஒன்று. இப்படிப் பட்ட பெர்க்குலேஷன் பாண்ட்ஸ்களை, மாநிலம் முழுவதிலும் பரவலாக எத்தனை வேண்டுமானாலும் கட்டுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை ஒரு நிரந்தரமான திட்டமாக வைத்து செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொளகிறேன்.

இன்றைக்கு ஒரு ஏக்கர் நிலத்தை விவசாயம் செய்ய வேண்டும் என்றால்— நானும் ஒரு விவசாயி என்ற வகையில் சொல்கிறேன் — குறைந்தது ஆயிரம் ரூபாய் ஆகிறது. ஆகவே, மழையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள விவசாய மக்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் அவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு குறைந்தது ஆயிரம் ரூபாய் என்றாவது ஒரு குறியீடு வைத்து, நிவாரணம் கொடுப்பதற்கு மைய அரசு, மாநில அரசு ஆகிய இரண்டும் சேர்ந்து முன் வந்து, அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள் கிறேன்.



நாம் பல நீர்த் தேக்கத் திட்டங்களைச் செய்து இருக்கிறோம். அது சம்பந்தமான ரோட் ஒர்க்ஸ்களைப் பற்றிச் சொல்ல விரும்பு கிறேன். நான் நேஷனல் ஹைவேஸ் ரோடுகளைப் பற்றிச் சொல் கிறேன். அந்த ரோடுகளில் நடக்கக் கூட முடியவில்லை. சைக் கிளில் போக முடியவில்லை. பஸ்களும் போக முடிவதில்லை.

நாம் சில காரியங்களுக்குப் பணம் ஒதுக்குகிறோம். நாம் சாதாரணமாக இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு அக்டோபர், நவம்பர் மாதங்களில்தான் பணம் ஒதுக்கு வோம். ஆனால் இந்த ஆண்டு ஏற்பட்டதுபோல், எதிர்பாராத விதமாக பிப்ரவரி, மார்ச் மாதங்களில் மழை, வெள்ளம் வருகின்றபோது, இதற்காக ஸ்பெஷலாக பட்ஜெட் போட்டு தொகைகள் ஒதுக்கி செலவு செய்கின்ற நிலைமை இல் லாமல் உடனடியாக வேலைகளை, பாட்ச் ஒர்க்கையாவது முதலில் செய்ய பணம் ஒதுக்க வேண்டும்.

இன்றைக்கு தன்னிறைவுத் திட்டத்தின் மூலம், ஓரளவிற்கு நல்ல முறையிலே வேலைகள் செய்திருந்தாலும் கூட, தார் ரோடு போடாத காரணத்தால், மண் ரோடாகப் போட்ட காரணத் தால் அந்த ரோடுகள் முழுமையாகப் பாழடைந்து விட்டன. இப்படிப்பட்ட நிலைமைகளைச் சரி செய்ய, உடனடியாக எவ் வளவு தேவையோ அவ்வளவு பணம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். சென்ற ஆண்டு ரூ. 1,777 கோடிக்கு பட்ஜெட் போட்டிருக் கிறோம். அதிகமான வருவாய் வந்திருக்கிறது. பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடத்திலே நம்முடைய அமைச்சர்கள் சென்று, பேசி இன்னும் அதிகப்படியான தொகையை ஒதுக்கிக் கொடுங்கள் என்று கேட்டால், அந்தப் புண்ணியவதி அம்மாள் நிச்சயமாக அதிகமான பணத்தைக் கொடுப்பார்கள். அந்தப் பணத்தோடு நம்முடைய பணத்தையும் போட்டு இந்த வேலை களைச் செய்து கொடுக்க முடியுமென்று கூறிக் கொள்ள விரும்பு கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** துணைத் தலைவர் அவர்களே, விரைவில் முடித்து விடுகிறேன். பழைய காலத்திலே, காங்கிரஸ் பீரியடிலே, மதுரை மாவட்டத்திலே, குடகனாறு அணை கால்வாயை வெட்டி இருக்கிறோம். அன்றைக்கு யாரும் அதை எதிர்க்கவில்லை. நிலக்கோட்டை பகுதியிலே உள்ள கண் மாய்களில் இன்றைக்கு ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லை. நிலக்கோட்டை கால்வாய் அடைபட்டிருக்கிறது. தூர் எடுத்து அந்தக் கண்மாய்களில் தண்ணீர் விட்டால், விவசாயிகளுக்கு கிணறுகளிலேயிருந்து தண்ணீர் கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மஞ்சளாறு திட்டத்தில் மழை இல்லாத காரணத்தினாலே தண்ணீர் சரியாக வரவில்லை. கண்மாய்களில் தண்ணீர் இல்லை. இப்போது நிறைய மழை பெய்திருக்கின்றது. ஆலங்குளம் நிறைந்தவுடன் அதற்குக் கீழே உள்ள கண்மாய்களுக்குத் தண்ணீர் கொண்டுபோக கால்வாய்களைச் சீர் செய்ய வேண்டும். ஆலங்குளத்திலிருந்து பொட்டைக்குளத்திற்கு கால்வாய் வெட்டி பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது. இன்ஜினீயர்கள் எல்லாம் இங்கே இருக்கின்ற காரணத்தால் இம்மாதிரியான வேலைகளையெல்லாம், துரிதமாக, ஒரு வாரத்திற்குள்ளாக அவர்கள் முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்று, அரசாங்கம் அந்த வேலைகளை முடித்துக் கொடுக்க வேண்டும் அல்லது அங்கேயிருக்கின்ற ஆட்களை வைத்து அந்த வேலைகளை நாங்களே செய்து கொள்வதற்கு அரசு உதவி செய்ய வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு உதவுவதில் சற்று அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும என்று கேட்டு, துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

**திரு. என். பழனிவேல் :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தினால் ஏற்பட்ட நிலை குறித்த இந்த வெள்ள நிவாரண அறிக்கையின் மீது இங்கே பல உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தபோதிலும், நான் நமது துணை சபாநாயகரின் அனுமதியோடு என்னுடைய மனதில் இருக்கக்கூடிய ஒரு சில பிரச்சினைகளை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மதுரை மாவட்டத்தைப் பற்றி இந்த வெள்ள அறிக்கையிலே சொல்கிறபோது, ஏதோ அந்த மாவட்டத்தின் பெயர் வரவேண்டுமென்று பெயருக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மையான நிலையைப்பார்த்தால் வேறு விதமாக இருக்கிறது. சென்ற ஆண்டு டிசம்பரில் ஆரம்பித்து பிப்ரவரி வரையில் விடாது மழை பெய்திருக்கிறது. மதுரை மாவட்டத்தில் பெய்த கடும் மழையின் காரணமாக நெல்—ஐ.ஆர். 50 நெல்— சோளம், மொச்சை, புஞ்சை தானியங்கள், பருத்தி போன்றவை சேதம் அடைந்து, ஏறக்குறைய ரூபாய் 100 கோடிக்கு மேல் மதிப்புள்ள பொருள்களை இம்மாவட்டத்திலுள்ள மக்கள் இழந்து வாடுகின்றனர்.





(இரவு 7–20)

அதேபோல் அந்த மாவட்டத்திலே மாங்காய் பல கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வரக்கூடிய ஒரு தொழில். அது முழுவதும் அழிந்துவிட்டது. கடந்த 3 மாதங்களாகப் பெய்த மழையால், பூவிலேயே அழிந்துவிட்டன. அது மட்டுமல்ல, உருளைக்கிழங்கு, வெங்காயம், காலிபிளவர் அழிந்துவிட்ட சூழ்நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவரை நானும் மற்றும் பல உறுப்பினர்களும், வளர்ச்சி மன்றத்தைக் கூட்டுங்கள், சட்டமன்றம் கூடப்போகிறது, நாங்கள் விவரங்களைத் தெரிந்துகொண்டு அங்கே சொல்வதற்கு தோதுவாக இருக்கும் என்று தபால் எழுதினோம். ஆனால், அவர்கள் கூடவில்லை என்றார்கள். அமைச்சர் அவர்கள் 13ஆம் தேதி மதுரையிலே வந்து பாருங்கள் என்று சொன்னார்கள். உங்களுக்குத் தெரியும், அன்றைக்கு அகில இந்திய அளவிலே ஒப்புக்கொள்ளப்பட்ட முறையிலே பாத யாத்திரை செய்ய வேண்டுமென்பது தெரியும். ஆனால், வேண்டுமென்றே அமைச்சர் அவர்கள் மதுரைக்கு வாருங்கள் என்று கூப்பிட்டார்கள். மதுரை மாவட்டத்திலே நிவாரண நடவடிக்கைகள் எடுக்கவில்லை. 53 கிராமங்கள் பாதிக்கப்பட்டதாக சொல்கிறார்கள். உதவி கொடுத்தது 250 குடிசைகளுக்கு மட்டும்-அதுவும் திண்டுக்கல்லிலே கொடுத்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த 250 குடிசைகளிலே முழுமையாக பாதிக்கப்பட்டது 161தான் என்றும் 250 குடிசைகளிலே 250 குடிசைகளுக்கு உதவித்தொகை கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 78 குடிசைகளுக்கும் 50 ரூபாய் கொடுத்தார்களா, 200 ரூபாய் கொடுத்தார்களா என்ற விவரம் கொடுக்கவில்லை.

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** துணைத் தலைவர் அவர்களே,

** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. என். பழனிவேல் :** 161 குடிசைகள் முழுவதும் சேதமடைந்து இருப்பதாகவும் அதிலே 78 பேர்களுக்கு மானியம் வழங்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. மதுரையிலே சார்சரி பெய்யவேண்டி மழையின் அளவு 9 மில்லிமீட்டர். இந்த ஆண்டு 111 மில்லிமீட்டர் மழை பெய்திருக்கிறது என்றால் எவ்வளவு சேதம் இருக்கும் என்றும், அதனால் எவ்வளவு விவசாய தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு பட்டினிகிடந்து இருப்பார்கள் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும். இந்த சூழ்நிலையில்,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேட்டி-சேலை வழங்குகிறபோது அமைச்சர் அவர்கள் சொல்லலாம், ஏழைகளுக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறது என்று. ஆனால் வேட்டி சேலை வழங்குவதிலே பல ஊழல்கள் நடந்திருக்கின்றன. ஆனால், அமைச்சர் அவர்கள் எழுதிக்கொடுங்கள் என்று சொல்வார்கள். எழுதிக் கொடுத்தும் பிரயோசனம் இல்லை. அனுபவப் பூர்வமாகச் சொல்கிறேன். ஏழை எளியவர்களுக்குத்தான் இந்த வேட்டி சேலை என்றால் என்ன அடிப்படையை வைத்துக் கொடுக்கிறீர்கள்? **(மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சேலை பற்றி கூறியது நீக்கப்படுகிறது.

**திரு. எம். ஆறுமுகம் :** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற, வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கையிலே, கோவை, பெரியார் மாவட்டங்களில் உள்ள நிலைமைகள் இல்லை, மற்ற மாவட்டங்களைப்பற்றி இருக்கிறது. இந்த இரண்டு மாவட்டங்களிலேயும் இராமநாதபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதியும், திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு பகுதியும் இப்போதும் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிற நிலை தொடர்ந்து இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அளித்த இந்த அறிக்கையிலே அது பற்றி குறிப்பிடாதது வருந்தத்தக்கது. கடந்த 10 ஆம் தேதி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே பேசுகின்றபோது எடுத்துக் கூறியிருக்கிறேன். தஞ்சாவூர் போன்ற மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கோவை மாவட்டம் கடுமையான, வறட்சியால் தொடர்ந்து பாதிக்கப்பட்டிருக்கிறது, ஆகவே நிவாரணப் பணிகளைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவினாசி தொகுதியில் கடுமையான குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. பல்லடம், பொங்களூர் போன்ற பகுதிகளிலே தொடர்ந்து வறட்சி நிலை இருந்துகொண்டிருக்கிறது. அவினாசி, பல்லடம் போன்ற பகுதிகளிலே குடிநீர்ப் பிரச்சினை கடுமையாக இருந்துகொண்டிருக்கிறது. அங்கே குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பல்லடம், பொங்களூர், சுல்தான்பேட்டை ஆகிய இடங்களிலே விவசாயிகளின் மின் இணைப்பு துண்டிப்பு தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 200 விவசாயிகளுக்கு மின் துண்டிப்பு செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இதுபோன்று கடுமையான வறட்சி இருக்கிறபோது ஜப்தி போன்ற நடவடிக்கைகளிலே அதிகாரிகள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மின் இணைப்பு மீண்டும் கொடுக்க வேண்டும் என்றும், ஜப்தி நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு கோவை, பெரியார் ஆகிய மாவட்டங்களிலே வரிவசூல் செய்யக்கூடாது என்ற சூழ்நிலையை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்த வேண்டும். ஆழ்குழாய் கிணறுகள் ஏற்படுத்த

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப்பெற்றது.





வேண்டும், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கால்நடைகளுக்கு இலவசமாக தீவனம் வழங்கவேண்டும். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும், கிணறுகள் வெட்டுவதற்கு நிலவள வங்கிகள் கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கோவை மாவட்டத்திலே ஜப்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு மின் துண்டிப்பு நிறுத்தப்பட்டு தொடர்ந்து மின் இணைப்புக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் 15 பேர்கள் தங்களுடைய உணர்வுகளை இங்கே சொன்னார்கள். அப்படி சொல்லுகின்றபோது இந்த அரசு செய்கின்ற பணிகள் சிறப்பாக அமையவேண்டும் என்றும், எங்காவது தவறு நடந்தால் அந்தத் தவறை நீக்க வேண்டும் என்றும், மீண்டும் நல்ல பணிகள் மக்களுக்கு போய்ச் சேர வேண்டும் என்றும் அதனால் அரசுக்கு நல்ல பெயர் வர வேண்டும் என்றும், நல்ல ஆசையில் தான் இவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று நான் முதலில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அன்பில் அவர்கள் 1907 ஆம் ஆண்டு தான் இந்த மாதிரியான வெள்ளம் வந்ததாக அவர்கள் தாத்தா சொன்னதாக இங்கே சொன்னார்கள். அப்படியானால் இந்தமாதிரியான மழை இதற்கு முன்னால் வரவில்லை என்பதும், இப்படிப்பட்ட வெள்ளம் 80 ஆண்டுகளுக்குப்பிறகு இப்போது வந்து இருக்கிறது என்றும் இங்கே பேசியவர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி மழை வந்தபோது இந்த அரசு எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எல்லாம் எடுத்தது என்பதை விளக்கத்தான் இந்த வெள்ளை அறிக்கை என்பது உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். வெள்ளை அறிக்கை என்று சொன்னாலே அது தூய்மையான அறிக்கை என்று நான் இங்கே உங்களுக்குத தெரிவித்துக்கொள்கிறேன். அறிக்கையைப் பொறுத்தவரைக்கும மிக தூய்மையான அறிக்கைதான் என்பதை மீண்டும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிகாரிகள் இங்கே தவறு செய்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், அதிகாரிகள் யாருமே தவறு செய்ய மாட்டார்கள் என்றால் அதற்கு பிறகு சட்டமன்றம் வேண்டாம், முதலமைச்சரும் வேண்டாம், அமைச்சரும் வேண்டாம், சட்டமன்ற உறுப்பினர்களும் வேண்டாம். ஆனால், தவறு செய்வார்கள் அதைத் திருத்த வேண்டும். கண்டிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாம் எல்லாம் இங்கே

இருக்கிறோம் என்பதை நான் முதலில் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வெள்ள நிவாரணத்தை வேகமாக செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட வெள்ளம் வந்த உடனேயே, கேள்விப்பட்ட உடனேயே தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் 26 ஆம் தேதியிலிருந்து 27, 28 மற்றும் 29 ஆகிய 4 நாட்களுக்கு தென் ஆற்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய மாவட்டங்களுக்கு எல்லாம் அவர்கள் எலிகாப்டர் மூலமும், ரோடு மூலமும் சென்றார்கள்.

(இரவு 7—30)

நான் சார்ந்திருக்கின்ற கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள்கூட அங்கே வருத்தப்பட்டார்கள். அவர்கள் காரிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் போன்றவர்களும், மற்றவர்களும் ஏறிக்கொண்டு போகிறார்கள், நாங்கள் வேறு கார்களில் போகிறோம் என்று சொன்னார்கள். அதற்கு என்ன காரணம் என்றால், மற்ற சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தால்தான் சொல்கிறபொழுது நன்றாகச் சொல்வார்கள். எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தால், முதலமைச்சரிடத்தில் எப்படிச் சொல்வது என்று சங்கோஜப்பட்டாலும் படுவார்கள் என்பதால் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களை அவரது காரில் அழைத்துக்கொண்டு முதலமைச்சரவர்கள் போகின்றபொழுது அவர்கள் குறைகளைச் சொல்லுவார்கள் என்ற நல்லெண்ணத்தில் தான் நடந்திருக்கிறது. அந்த அளவிற்குத் திறம்பட நடத்தப்பட்டது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு மின் துறை அமைச்சரவர்கள் சென்றார்கள் ; மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சரவர்கள் சென்றார்கள் ; மாண்புமிகு அமைச்சர் அருமைச் சகோதரர் திருநாவுக்கரசு அவர்கள் புதுக்கோட்டையிலே தங்கியிருந்து பார்வையிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் சௌந்தரராசன் அவர்கள் திருச்சியிலே தங்கியிருந்து அந்த மாவட்டப் பணிகளையெல்லாம் செய்தார்கள். அதைப்போலவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கள் இராதா அவர்கள், கோவேந்தன் அவர்கள், கோமதி சீனிவாசன் அவர்கள், யூசுப் அவர்கள் ஆகியவர்கள் எல்லாம் பல்வேறு இடங்களில் தங்கிப் பணிபுரிந்தார்கள். அதைப்போல, நம்முடைய மீன்துறை அமைச்சரவர்கள் சென்று பார்த்தார்கள்.

இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், இதைத் திறம்பட நடத்த வேண்டுமென்றுதான் பல்வேறு பட்ட அமைச்சர்கள் பல்வேறு இடங்களுக்கும் சென்று காரியங்களைப் பார்த்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.



அமைச்சர்கள் போனால் மட்டும் போதாது ; தலைமைச் செயலாளர், இரண்டாம் செயலாளர். சிறப்பு ஆணையாளர், நிலச்சீர்திருத்த அதிகாரிகள், வேளாண்மைத் துறைச் செயலாளர், வேளாண்மைத் துறை இயக்குநர், பொதுச் சுகாதாரச் இயக்குநர், ஆகிய இவ்வளவு பேர்களும் சென்று பணிகளைச் செய்தார்கள்.

ஆனால், தீவிரமாகப் பணி நடந்ததா, இல்லையா என்பதற்கு எடுத்துக் காட்டு சொல்லவேண்டுமென்றால், எதிர்பாராத விதத்தில், 1909ஆம் ஆண்டு மட்டும்தான் பெய்த மழை இன்றைக்குப் பெய்தது என்றால், அதுவும் வருஷம் பூராவும் பெய்யவில்லை, இரண்டே நாளே, மூன்றே நாளே கொட்டு கொட்டு என்று கொட்டிவிட்டது. அப்படிக் கொட்டியும் அந்தத் தண்ணீர் எங்கே போக வேண்டும், எங்கே வர வேண்டுமென்று தெரியவில்லை. ஆனால், எப்படி நிவாரண வேலைகள் நடந்தன என்பதற்கு எடுத்துக்காட்டுகள் சொல்ல வேண்டுமென்றால்-இப்படி எதிர்பாராத விதத்தில் ஏற்பட்டபோது, அதிகாரிகள் எல்லாம் திட்டமிட்டு வேலை செய்யாவிட்டால் உயிர்ச்சேதம் இதைவிட வெகு அதிகமாக இருந்திருக்கும். பத்து இலட்சம் பேர்களுக்கு உணவு போடுவது என்றால் அது மிகச் சாதாரணமான காரியமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பத்து இலட்சம் பேர்களையும் பாதுகாப்பான இடத்தில் வைக்க வேண்டும். உணவு கொடுக்க வேண்டும், சமைப்பதற்குப் பாத்திரங்கள் வேண்டும், இதையெல்லாம் திறம்பட எப்படிச் செய்தார்கள் என்றால், அதை என்னால் எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை. ஏனென்றால் எதிர்பார்த்து, முன்கூட்டியே திட்டமிட்டுச் செய்யக்கூடிய காரியங்கள் அல்ல இவை. எதிர்பாராத விதத்தில் வந்ததால். . . .

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எதிர்பாராதவிதமாக வந்துவிட்டது, அது நாம் திட்டமிட்டுச் செய்யக்கூடிய விஷயம் அல்ல என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். 1977 ஆம் ஆண்டு சைக்ளோன் ஏற்பட்ட பொழுது, அதன் படிப்பினையிலிருந்து, அந்த நேரத்தில் அரிசியைக் கொண்டுபோக முடியாத சிக்கல் இருந்தது தெரிந்தது. பிறகு, கலெக்டர் தலைமையில், எம். எல். ஏக்களும், அதிகாரிகளும் கூடி, இனிமேல் இப்படிப்பட்ட வெள்ளமோ, சைக்கிளோனோ வந்தால் என்ன செய்வது என்பதற்கு, ஒரு கன்டின்ஜென்சி பிளான் தயாரித்து, அக்டோபர், டிசம்பர் மாதங்களில் இது ஏற்பட்டாலும் ஏற்படும் என்று கருதி, அக்டோபர் மாதத்தில் அரிசி, மண்ணெண்ணெய், பருப்பு போன்ற நான்கு பொருட்களை, வெள்ளம் வந்தாலும் வராவிட்டாலும் அனுப்ப வேண்டுமென்று திட்டமிடப்பட்டது. அது அமல் நடத்தப்படவில்லை.

[1984 பிப்ரவரி 22

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை நான் கேட்டுக்கொள்கிறேன். ஆனால், எதிர்பாராத விதமாக நிலைமை ஏற்பட்டது. மழை பெய்கிறபோது மழை பெய்யும், உடனே குறைந்து விடும், இது மாண்புமிகு உறுப்பினர் களுக்கு நன்றாகத் தெரியும். திருத்துறைப்பூண்டி, முத்துப் பேட்டை போன்ற பகுதிகளில் 13 நாட்களாகத் தண்ணீர் வடிய வில்லை, ஒரு நாள் இரண்டு நாள் அல்ல. 13 நாட்களாகத் தண்ணீர் வடியாத நிலைமை இருக்கின்றது. இப்படிப்பட்ட, நிலைமை பல கிராமங்களில் இருந்தது. இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் அரிசியை எப்படிக் கொண்டு போவது? மண்ணெண் ணெயை எப்படிக் கொண்டு போவது? வழியில்லை. படகு போக முடியாது. அதிகமான தண்ணீர் இருந்தால்தான் படகு போக முடியும். அந்த இடத்திலே போனால் படகு எங்கேயாவது மோதி விழுந்துவிடும். அப்படி விழுந்து பலர் கீழே விழுந்திருக்கிறார்கள். இருந்தாலும் நிலைமைகளை நாம் சமாளித்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அத்தனை பேரையும் நான் மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முத்துப்பேட்டைக்கு அருகிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப் பினர்கள் பார்த்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். சில ஊர்களைப் பொறுத்தவரையில் வயலுக்கும், ஊருக்கும் 3, 4 கிலோ மீட்டர்கள் தூரம் இருக்கும். அப்படிப்பட்ட பகுதிகளில் 6 அடி, 7 அடி தண்ணீர் இருக்கும். அப்படிப்பட்ட பகுதிகளுக்கு நாம் எப்படி போக முடியும்? இருந்தாலும், அந்தப் பகுதி களுக்கு உணவுத் துறையிலேயிருந்து அரிசியை எப்படிக் கொண்டு போனார்கள் தெரியுமா? ஒவ்வொரு அரை மூட்டை அரிசியை யும் ஆட்களின் தலை மேலே வைத்து தூக்கிக்கொண்டு சென் றார்கள். இப்படி 10 நாட்கள், 12 நாட்கள், 15 நாட்கள் என்று தண்ணீர் வடியாமல் இருக்கின்றபோது அப்படிப்பட்ட நகரங்களில் உணவின் விலை, மண்ணெண்ணெயின் விலை ஏறாமல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. அப்படி என்றால் அங்கே அரிசி கொண்டு போகப்பட்டிருக்கின்றது, மண்ணெண்ணெ கொண்டு போகப்பட்டிருக்கின்றது. ஜீனியை விட்டுவிடுங்கள். அத னுடைய விலை ஏறினால் என்ன? ஏறாவிட்டால் என்ன? அத னைச் சாப்பிடுகின்றவர்கள் சாப்பிடட்டும். மிக முக்கியமான பொருட்களாகிய மண்ணெண்ணெ, அரிசி ஆகியவற்றின் விலை கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதற்குக் காரணம் என்ன? அதிகாரிகளின் பெருமுயற்சிதான். அதற்குக் காரணம். ஆகவே, வெள்ளம் வந்து இரண்டு நாள், ஒரு நாள் என்று ஆனதற்குப் பிறகு ஏற்படுகின்ற நிலைமைகளை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.



1984 பிப்ரவரி 22] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அதாவது காலரா போன்ற நோய்கள் வரக்கூடும். ஆனால் இப் போது இவ்வளவு பெரிய வெள்ளம் வந்ததற்குப் பிறகும், கால ராவிலே உயிரிழந்தார்கள், நோய்வாய்ப்பட்டு உயிரிழந்தார்கள் என்ற கணக்கு இங்கே கொடுக்கப்படவில்லை என்றால், அதற்கு என்ன காரணம்? அதுதான் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுத் துக்கொண்ட பெருமுயற்சியாகும். இம்மாதிரி நோய்கள் எல்லாம் வராத வகையிலே அதிகாரிகள் எல்லாம் மிகத் திறமையாகச் செயல்பட்டார்கள். இல்லாவிட்டால் நிறையப்பேர் காலரா போன்ற வியாதிகளினால் பாதிக்கப்பட்டு இறந்திருப்பார்கள். 28 இலட்சம் பேர்களுக்கு காலரா ஊசி போடப்பட்டிருக்கின்றது. சில ஊர்களிலே காலரா ஊசி போட்டுக்கொள்ள மாட்டேன் என்று சொன்னார்கள். அப்போது வரிசையாக நின்று காலரா ஊசி போட்டுக்கொண்டால்தான் பொருட்கள் தரப்படும் என்று சொல்லி ஊசி போடப்பட்டது. இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், அந்த அளவுக்கு நம்முடைய மக்கள் பின்தங்கி இருக் கிறார்கள். தாங்களாகவே முன்வந்து தடுப்பூசியினைப் போட் டுக்கொள்ள வேண்டும் என்ற முனைப்பு இல்லை. ஆகவே, இம் முறை இவ்வாறு காலரா ஊசி போடப்பட்டவர்கள் மட்டும் 28 இலட்சம் பேர். பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுபோய் வைக்கப்பட்டவர்கள் 10 இலட்சம் பேர், ஆனால், ஊசி போடப் பட்டவர்கள் 28 இலட்சம் பேர். அவர்களிடத்திலே போய் பேசி, சமாதானப்படுத்தி, ஊசி போட்டுக்கொள்ள வைப்பது என்றால் அது பெரிய காரியம். அம்மைப் பால் குத்துவதற்கு வருகிறார் கள் என்றவுடன் ஓடிவிடுவார்கள். அப்படி ஓடுகின்றவர்களைப் பிடித்து ஊசி போட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அதுமட்டுமல்ல. ஊசி போட்டால் மட்டும் போதாது. தண் ணீர் கொடுக்க வேண்டும். அதாவது உணவைக் கொடுப்பது கஷ்டம் இல்லை, மண்ணெண்ணெய் கொடுப்பது கஷ்டம் இல்லை. குடிநீரைக் கொடுப்பதுதான் மிகவும் கஷ்டம்.

(இரவு 7-40)

தண்ணீர் சுற்றிலும் சூழ்ந்து நிற்கிறது. தண்ணீரைக் குடித்தால் காலரா வந்துவிடும். காய வைத்துக் குடியுங்கள் என்றால், விறகு இல்லை, காய வைத்துக் குடியுங்கள் என்றால் மண்ணெண் ணெய் இல்லை; அடுப்பு இல்லை. நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த அரசும், அதிகாரிகளும் எப்படி காரியங் களைச் செய்திருக்கிறார்கள் என்பதை மனக்கண் முன்னால் சிந்தித்து பார்த்தால் உண்மையிலே பாராட்டுவீர்கள். பாராட்டி னீர்கள். இல்லையென்று சொல்லவில்லை. குறை சொல்வது எதற்காக என்றால் குறை இல்லாமல் இருக்க வேண்டும், அதற் குப் பிறகு இந்த அரசை மக்கள் பாராட்டவேண்டுமென்ற நல்ல ஆசையில்தான் நீங்கள் சொன்னீர்கள் என்றுதான் நம்பு கிறேன். 3 இலட்சங்களுக்கு அதிகமான குளங்களிலே, காலரா வராமல் இருக்க, மருந்துகள் போடப்பட்டிருக்கின்றன என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல' சாதாரணமாக கொடுக்கப்படுகிற அரிசியை விட, அந்தக் காலத்தில் 4,500 டன் அரிசி அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்திற்கு 800 டன்; திருச்சிக்கு 60 டன் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரிசி மட்டும் அல்ல. 5 லிட்டருக்கு அதிக மண்ணெண்ணெய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு செய்திருக்கிறது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்கு இவை எல்லாம் அத்தாட்சி என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதிகாரிகள் எதையும் செய்யவில்லை என்று சொன்னார்கள். நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், 22, 23 ஆம் தேதி மழை. 10, 15 நாள் தண்ணீர் நின்று கொண்டே இருக்கிறது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். ஜீப்பிலே போகும் போது முதலமைச்சருடன் நம்முடைய திரு. உமாநாத் அவர்களும் வந்தார்கள். முதலமைச்சரிடத்திலே நான் காண்பித்தேன், கண்ணுக்கு எட்டிய வரையிலே வெள்ளமாக இருந்தது. அங்கே மரமே இல்லை. திரு. உமாநாத் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். திருவாரூரிலிருந்து நீடாமங்கலம் வரையில் கண்ணுக்கு எட்டிய வரையில் தண்ணீர்தான் இருந்தது. அப்படி என்றால் எப்படிப் போவது? ரோடு ஏது ? வாய்க்கால் ஏது? ஒன்றுமே இல்லை. ஆனால் உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன், 23–24 ஆம் தேதி வரைக்கும் மழை பெய்திருக்கிறது. திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, திருவாழத்தான், நீடாமங்கலம், முத்துப்பேட்டை, வேதாரண்யம், தலைநாய்க்கன் பகுதிகளில் 2ஆம் தேதி, 3 ஆம் தேதி வரைக்கும் தண்ணீர் வடியவில்லை. ஆனாலும் நான் உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு சாலைகள் எல்லாம் 30 ஆம் தேதிக்குள் செப்பனிடப்பட்டு இருக்கின்றன. எல்லா இடங்களிலும் போக்குவரத்து போக முடிந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். 25 ஆம் தேதி திருச்சியிலிருந்து தஞ்சைக்குப் போக முடியவில்லை. புதுக்கோட்டைக்குச் சென்று— நான் அந்த ஊர்க்காரன் என்பதால் எப்படிப் போய், எப்படிச் சேரலாம் என்று தெரிந்தவனாதலால்—தஞ்சாவூருக்குப் போய்க் கொண்டிருந்தேன். அந்த திருச்சி, தஞ்சை சாலை பல இடங்களிலே உடைபட்டது. மறுநாள் அங்கு பேருந்தே போனது. பேருந்து போனது என்றால் அதிகாரிகளை எப்படி நான் பாராட்டாமல் இருக்க முடியும்? 25 ஆம் தேதி போக முடியவில்லை. 26 ஆம் தேதி முதலமைச்சர் வந்தார்கள். முதலமைச்சர் வந்தார் என்றால், அவர்கள் காரில் ஏறிப் போனார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். 25 ஆம் தேதி போக முடியவில்லை. ஆனால் 26 ஆம் தேதி போக முடிந்தது. 27, 28 ஆம் தேதி நம்முடைய அமைச்சர்கள் வந்து விட்டார்கள். மத்திய அமைச்சர் அவர்களும் வந்தார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். உதாரணத்திற்கு ஒன்றை நான் சொல்ல



வேண்டுமென்றால், மொத்தமாக நம்முடைய பொதுப் பணித் துறையின் வாய்க்கால்களும் ஏரிகளும் உடைபட்டவை 2,787. ஆனால் இன்றைக்கு எல்லாமே சரிசெய்யப்பட்டுவிட்டது. சரியாக சரி செய்யப்பட்டுவிட்டது, அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்ததைப் போல இல்லை என்பதற்கு எடுத்துக் காட்டு. அதற்குப் பிறகு இந்த மாதம் பெய்த மழை அதிகமாக இருந்தும் அவை உடையவில்லை. 2,787-ல் ஐந்தே ஐந்து இடங்களில்தான் உடைந்திருக்கின்றன. இது சாதாரணமா ? அவ்வளவு நல்லமுறையில் அதிகாரிகள் பணி செய்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் எந்த வேலையும் செய்யவில்லையென்று நான் சொல்ல மாட்டேன் 30-ம் தேதிக்குள் எவ்வளவு செய்திருக்கிறார்கள் என்றால் 582 வேலைகளைச் செய்திருக்கிறார்கள். 2ஆம் தேதிக்குள் 1,400 வேலைகளைச் செய்திருக்கிறார்கள். இப்படி அவர்கள் செய்தது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. நிஜமாக சொல்கிறார்களா இல்லை பொய் சொல்கிறார்களா என்று ஆச்சரியப்படத்தக்க அளவிற்கு பொதுப்பணித் துறையினர் இவ்வளவு வேலைகளைச் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்வேன். அவர்கள் அப்படியென்றால் நெடுஞ்சாலைத் துறையினர் அவர்களையும் மிஞ்சினார்கள். சாலைகளில் உடைப்புகள் எவ்வளவோ ஏற்பட்டிருக்கின்றன. ஐயாயிரத்துச் சொச்சம் சாலைகள், பாலங்கள் 609, 26 ஆம் தேதி வரையில் 23 வேலைகள் வரையில் செய்தார்கள். ஆனால் 28ம் தேதி பல இடங்களில் தண்ணீர் நின்றது. 154 வரை செய்திருக்கிறார்கள். 30 ஆம் தேதி, 302; 7 ஆம் தேதிக்குப் பிறகு எதுவும் அடைபடவில்லை என்ற கணக்கை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்றால் அவர்களை பாராட்டாமல் எப்படி இருக்க முடியும்? பாராட்டித்தான் ஆக வேண்டும். இப்படி இந்த வேலைகளை எல்லாம் திறம்படச் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவைகளை எல்லாம் செய்தாலும் நஷ்டங்கள் எப்படி என்றால் நாம் எல்லாம் எதிர்பாராத அளவிற்கு மிகவும் அதிகமாக நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மத்திய அரசிலேயிருந்து வந்த நிபுணர் குழு ஒரு மாதம் கழித்து வந்தார்கள். ஒரு மாதம் கழித்து வந்தாலும் வெள்ளத்தினுடைய சுவடி அப்படியே தெரிந்தது. அரசு தன்னுடைய பணிகளை திறம்படச் செய்திருக்கிறது என்றும் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். மத்திய அரசின் மாண்புமிகு பாதுகாப்பு அமைச்சர் அவர்களும் நேரிடையாக பார்த்து செய்த பணிகளை பாராட்டி இருக்கிறார்கள். அந்தக் குழுவிலே வந்த அத்தனை பேரும் யாரோ, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களோ, எந்த மொழி பேசுபவர்களோ, தமிழ் மொழியை அறியாதவர்கள், அவர்களும் பாராட்டி இருக்கிறார்கள். நாம் கேட்டிருக்கிற பணம் இங்கே சொல்லியபடி 267 கோடி ரூபாய். நாம் மிகமிக நியாயமாக

கேட்டிருக்கிறோம். பேராசை வேண்டாம் என்று பாதுகாப்போடு மிகமிக சிக்கனமாக நாம் கேட்டிருக்கிறோம். சிக்கனமாக கேட்டிருப்பதாலே அவர்கள் சிக்கனம் காட்டாமல் தாராளமாக கொடுக்க வேண்டுமென்று இந்த அவையின் மூலம் மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித்தேவர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்வேன். பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும் என்பதைப் போல முதலில் விவசாயிகளுடைய நிலம் எல்லாம் மழைபெய்து தண்ணீருக்குள்ளே இருந்தது. தொடர்ந்து மழை பெய்தது, உங்களுக்கே தெரியும்; நீங்கள் எல்லோரும் விவசாயிகளாக இருக்கிறீர்கள் என்றே நினைக்கிறேன். நிலத்திலே இறங்கி, பாடுபட்டு, சேர் அமைத்து, நாற்று நட்டு, களையெடுத்து, பயிர் விளைந்து கதிர் அறுக்கிற சமயத்தில் கதிர் அறுக்க இயலாமல் தண்ணீரில் மூழ்கி இருக்கிறதென்றால் விவசாயிகளுடைய மனது எப்படி இருக்கும் என்றால், தான் பெற்றுவளர்த்தக் குழந்தை தன் கண் முன்னாலேயே தண்ணீரில் மூழ்குவதைப் போலத்தான் இருக்கும். அந்த அளவிற்கு விவசாயிகள் வேதனைப் படுவார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நானும் வேதனைப்பட்டுக்கொண்டு தான் இருக்கிறேன். பெரிய அளவில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

(இரவு 7-50)

மின்கம்பங்கள் சேதம் அடைந்தது குறித்த கணக்கு இன்னும் எடுக்கப்படவில்லை. அதற்கான கணக்கு எடுக்கப்பட்டு, அதனால் எவ்வளவு நஷ்டம் என்பதையும் கணக்கிடச் சொல்லியிருக்கிறோம். அந்தக் கணக்குவந்த பின்பு அதையும் சேர்த்து அறிக்கை அனுப்பப்படும்.

அதைப்போலவே, ஆதி-திராவிட பெருங்குடி மக்கள் தாழ்வான பகுதிகளில் வசித்துவருகிறார்கள். மழை பெய்தவுடன் அங்கேயெல்லாம் தண்ணீர்போய், அவர்கள் குடிசைகள் தண்ணீரில் மூழ்கி இடிந்து விழுகின்றன. அவர்களுக்கு அந்த நேரத்தில் ரூ. 200 நிவாரண நிதி கொடுக்கப்படுகிறது. இந்த நிலைமைகளுக்கு பதிலாக அவர்களை மேடான பகுதியில் குடியமர்த்த வேண்டும் என்று சொன்னார்கள். அவர்களை மேலே கொண்டு வரவேண்டும் என்பதில், உங்களுக்கு ஆர்வம் இருப்பதைப் போலவே இந்த அரசுக்கும் இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். அதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே சொன்னார்கள். அவர்களுக்குமேடான இடத்தில் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று, அதுவும் உங்களுக்குந் தெரியும். அதற்கும் இந்த அரசு திட்டம்போட்டு மத்தியப் பேரரசுக்கு அறிக்கை அனுப்பி பணம் கேட்பதாக இருக்கிறோம். அதற்கும் மத்திய அரசு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நிலையைப் பற்றி உண்மையிலேயே கவலைப் படுவதாகவும், தான் ஒரு விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும் சொன்னார்கள். நாங்களும் கேட்டுக்கொண்டோம். ஆனால் இன்றைக்கு இந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள அந்த விவசாயிகளுக்கு எந்த வகையில் இந்த அரசு நிவாரணம் அளிக்க இருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன். ஏனென்றால் ஒரு பக்கத்தில் அவர்கள் இப்படி பாதிக்கப்பட்டு கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறபோது, ஜப்தி, மின் துண்டிப்பு, நிலவரி வசூல் போன்றவை நடந்து வருகின்றன. ஆகவே, அரசாங்கம் ஒட்டுமொத்தமாக இவர்களுக்கு என்ன உதவி செய்ய இருக்கிறது என்பதை அமைச்சர் சொல்வார்களா ? இப்போது சொல்லாவிட்டாலும் அமைச்சரவை ஒன்று கூடி அங்கே கேட்டு சொல்வார்களா? அந்த விவசாயிகளுக்கு நிரந்தரமான நிவாரணம் செய்ய இந்த அரசு முன்வரவேண்டும். அவர்கள் பெற்ற கடன்களை ஒத்தி வைத்தால் மட்டும் போதாது. அவர்கள் வாங்கி அந்தக் கடனுக்கு வட்டிக்கு மேல் வட்டி ஏறிக்கொண்டு இருக்கிறது. அவர்களால் எந்தக்காலத்திலும் அவற்றைத் திருப்பித் தரும் சக்தி கிடையாது. ஆகவே, அவர்களுக்கு முழுமையான நிவாரணம் ஏதாவது செய்வதற்கு திட்டங்கள் அரசாங்கத்திடம் உள்ளதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இல்லாவிட்டாலும், அமைச்சரவையில் ஒன்றுகூடிப்பேசி அறிவிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பெண் என்றால் பேயும் இரங்கும் என்று சொல்வார்கள். இன்று நம்முடைய நாட்டின் தலைமை அமைச்சராக ஒரு பெண்மணி இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அதன் காரணமாகத்தான் விட்ட குறை தொட்ட குறை என்ற காரணத்தாலே, அங்கே இருந்துவிட்டு வந்த காரணத்தாலே அருமை சகோதரி திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள், அவர்களைப் புண்ணியவதி என்று சொன்னார்கள். இந்தியாவின் தலைமை அமைச்சரை அவர்கள் புண்ணியவதிதான் என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அந்த புண்ணியவதி கடைக்கண் பார்க்கவேண்டும் என்று இந்த அவையின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கையில் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய ஏற்பட்ட வெள்ளச்சேதத்தைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளச்சேதம் பற்றி அரசாங்கத்திற்கு கணக்கு வந்து விட்டதா? அது சம்பந்தமாக விவர அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு விட்டதா? மத்திய அரசிடம் இதற்காக எவ்வளவு உதவித் தொகை கேட்பதாக உத்தேசம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அனுப்புவது என்றால் முதலிலேயே நாம் எதிர்பார்த்து அறிக்கை தயாரிப்பது அல்ல. அதைப் பற்றி உத்தேசிக்கவில்லை. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக அறிக்கை தயாரித்து அனுப்பச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் பழனிவேல் பேசுகிறபோது குறிப்பிட்டதைப் போல சில இடங்களில் வறட்சியான நிலையும் இருக்கிறது. (குறுக்கீடு) கன்னியாகுமரி மாவட்டம் குரல் கொடுக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலும் வறட்சி இருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு நிலைமைகளையும் கருத்தில் கொண்டு அறிக்கை அனுப்ப வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். மின் கம்பிகள் சேதம் அடைந்தது பற்றியும், மேட்டுப் பாங்கான இடத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் பற்றியும் திட்டமிட்டு அதற்கான வகையில் சேர்த்து, அறிக்கை அனுப்பச் சொல்லியிருக்கிறோம். அது இன்னும் வந்து சேரவில்லை. அதையெல்லாம் சேர்த்து நாம் நிச்சயமாக மத்திய அரசுக்கு அனுப்ப இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

பல இடங்களில் மணல் மேடிட்டு நிலங்கள் பாழாகி இருக்கின்றன என்று சொன்னார்கள். எங்கே மணல் மேடு இருக்கிறதோ, அங்கேயெல்லாம், விவசாயிகள் ஒன்றும் செய்ய வேண்டியது இல்லை. அது பற்றிய தகவலை விவசாய பொறியியல் துறையிடத்தில் சொல்லி, அவர்களை அழைத்து வந்து காண்பித்தால் அவர்கள் அதை எடுத்து விடுவார்கள். சிறிய விவசாயிகள், மார்ஜினல் விவசாயிகள் எந்த விதமான கட்டணமும் கட்ட வேண்டாம். பெரிய விவசாயிகளாக இருந்தால், அவர்களுக்கு 10 இடத்தில் நிலம் இருந்தாலும், ஒவ்வொரு இடத்திலும் தனித்தனியாக வந்து எடுப்பார்கள். அப்படி எடுப்பதற்கான செலவில் 50 சதவீதம் மானியமாகவும், 50 சதவீதம் கட்டணமாகவும் வசூலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெசவாளர்களுக்கு, மீனவர்களுக்கு, மட்பாண்டம் செய்பவர்களுக்கு இந்த அரசு இதுவரை உத்தரவு போடா விட்டாலும், அதையும் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கெல்லாம் நான் முதலிலே சொன்ன மாதிரி கடைக்கண் காட்ட வேண்டுமே!

விவசாயிகளைப் பொறுத்தவரையில் நான் சொன்னேன். நீங்கள் எல்லாம் எவ்வளவு வேதனைப்படுகிறீர்களோ, அதைவிட அதிகமாக நான் வேதனைப்படுகிறேன். ஏனென்றால் எனக்கு அதுபற்றித் தெரியும். விவசாயம் செய்ய ஆரம்பித்து விட்டால் ஒருவன் அதை விட்டுவிட்டு வெளியே வர மாட்டான். அந்த அளவுக்கு அவனுக்கு அதிலே ஆசை இருக்கிறது, இன்பம் இருக்கிறது.





முன்னாள் தொழில் அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு தொழிற்சாலையில் 10 வருஷம் நஷ்டம் வந்தாலும் ஒரு வருடத்தில் இலாபம் வந்தால் அந்த ஒரு வருட இலாபம் 10 வருட நஷ்டத்தையும் சரிக் கட்டிவிடும். ஆனால் விவசாயிக்கு அப்படியல்ல. ஒரு வருடம் நஷ்டம் வந்தால் மறு ஆண்டில் விளைச்சல் வந்தாலும், அவனால் அந்த நஷ்டத்தை சரிக்கட்ட முடியாது. காரணம் விளைச்சல் வந்த அந்த ஆண்டு இடுபொருள், உரம், விதை, போக்குவரத்துக்குத் தான் அது சரியாக இருக்கும். அந்த ஆண்டுக்கு தன்னைக் கட்டிக் கொள்ளும். ஆனால் முன் ஆண்டு நஷ்டத்தை ஈடு செய்ய முடியாது. அது அப்படியே இருக்கும் என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. வருவாய்த்துறை அமைச்சரும் உணர்ந்திருக்கிறார். ஆகையால் இதை எல்லாம் இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : கடைக்கண் காட்டுவது பணம் வருவதற்காக. ஆனால் நம்முடைய பவரில் இருக்கக் கூடிய விஷயம் இருக்கிறதே, அதை இந்த அரசாங்கம் செய்ய வேண்டாமா ? 1908 இல் இருந்த மழை மாதிரி இருக்கிறது. பெரிய விபரீதம் எல்லாம் வந்திருக்கிறது என்று சொல்லும் போது, ஜப்தி நடவடிக்கை உங்கள் அதிகாரத்திற்குட்பட்டது, நில வரியை வஜா செய்வது, உங்கள் அதிகாரத்திற்குட்பட்டது, மின்சாரத்தை துண்டிப்பது, உங்களுடைய பவருக்கு உட்பட்டது. இவ்வளவு பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று நீங்களே சொல்கிறீர்கள். அப்படி இருக்கும்போது உங்களுடைய அதிகாரத்திற்குட்பட்ட காரியங்களை நீங்கள் செய்யலாம் அல்லவா ? ஜப்தி நடவடிக்கை, மின் துண்டிப்பு, நிலவரி வசூல் போன்றவை நிறுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : எந்த எந்த நிலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறதோ, அதுவும் பாதிக்கப்பட்ட நிலம் விளைந்திருந்தாலும் 50 சதவீதத்திற்கு குறைவாக விளைந்திருந்தால் தண்ணீர் தீர்வை வசூல் செய்வதில்லை. அதற்கு உத்தரவு போட்டிருக்கிறோம். அதைப் போன்று, தண்ணீர் தீர்வை எங்கே இல்லையோ அங்கே கூட்டுறவுக் கடனை நிறுத்தி வைக்கிறோம். மின் இணைப்புத் துண்டிப்புச் செய்ய மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். ராஜு : துணைத் தலைவரவர்களே, நெல் விளைந்து அறுவடை செய்கின்ற பருவத்திலும், கரும்பு வெட்டக் கூடிய அந்த பருவத்திலும், நூற்றுக்கணக்கான ஏக்கர், ஆற்றுக்குப் பக்கத்தில் இருக்கிற நிலம், ஆற்று நீரால் மண் மேடிட்டு 2 அடி, 3 அடி 4 அடி உயரத்திற்கு இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு விளைந்த பொருளை அறுவடை செய்ய முடியாதது

ஓர் இழப்பு, மணல் மேட்டை நீக்கும் செலவு இரண்டாவது பாதிப்பு. ஆக இப்படி இரண்டு வகைகளில் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு எந்த வகையில் நிவாரணம் அளிக்கப்படும் என்பது பற்றி ஒன்றும் சொல்லவில்லையே, அதற்கு என்ன நிவாரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, அந்த மணலை எடுக்கின்ற பொறுப்பை இந்த அரசே ஏற்றுக் கொள்கிறது என்று சொன்னேன். அங்கே இருக்கிற விவசாயத் துறையிடம் மனு மூலம் தெரிவித்தால் அவர்கள் வந்து மணலை அகற்றிவிடுவார்கள். எங்கே உடைப்பு எடுத்திருக்கிறதோ அதற்கு அருகிலே இருக்கிற மணலை மட்டும் தான் அவர்கள் அகற்றுவார்கள். அங்கிருந்து 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற மணலையும் எடுக்க வேண்டும், அமைச்சர் சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், அவர்கள் அதைச் செய்ய மாட்டார்கள். அதைப் போன்று கூட்டுறவுக் கடனைப் பற்றியும் இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவரவர்களே, 50 சதவீதத்திற்கும் குறைவாக விளைச்சல் இருந்தால் அந்த நிலத்திற்கு தண்ணீர் தீர்வை, மற்ற வரிகளை அரசு தள்ளுபடி செய்யும், அந்த நிலம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுக் கடனை ஒத்தி வைக்கும் என்று சொன்னார்கள்.

(இரவு 8-00)

அதை மதிப்பிட்டுச் செய்வது யார்? சாதாரணமாக அனாவாரி சர்டிபிகேட் 35 பைசாவுக்கு குறைந்த வருமானம் என்பதைக் கூறி, அவர்களுக்கு சென்ற ஆண்டு வறட்சியின்போது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது, பொதுவாக. ஆகவே, தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்திலும், திருச்சி போன்ற மற்ற மாவட்டங்களிலும், இலட்சக்கணக்கான ஏக்கர் நிலம் இன்றையதினம் பாழ்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் உண்மையிலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக இந்த மாவட்டங்களிலே வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே இருக்கின்ற நிலங்களுக்கான தண்ணீர் தீர்வை, மற்ற வாய்தாக்கள் இவைகளைத் தள்ளுபடி செய்வதோடு, கடனை வசூல் செய்வது என்பது அல்லாமல்; கடனைத் தள்ளுபடி செய்வதற்கும், குத்தகையைத் தள்ளுபடி செய்வதற்குமான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : குத்தகையைப் பற்றி தனியாக ஒரு சட்ட முன்வடிவு விரைவிலேயே இங்கே வந்து நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



அனாவாரி சர்டிபிகேட் எப்படி வாங்குவார்கள், எப்படி கொடுப்பார்கள் என்பதிலே உங்களுக்கு சங்கடங்கள் வர வேண்டியதில்லை. மாண்புமிகு உறுப்பினர் கருப்பையாவுக்கு எவ்வளவு கவலை இருக்கிறதோ, அந்த அளவிற்கு நானும் கவலைப்படுகிறேன். அவர்கள் ஏன் அதைப்பற்றி கவலைப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அதையெல்லாம் நான் இங்கே சொல்லக்கூடாது. 1978 ஆம் ஆண்டு எப்படி கொடுத்தார்களோ, அப்படி கொடுப்பார்கள். எப்படி கொடுத்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அப்படிக் கொடுக்கப்படும்போது, இதிலே, எந்தவிதமான சங்கடங்கள் இல்லாமலும், அதிகாரிகள் போய் அந்த நிலத்தைப் பார்த்து, குடியானவர்களைக் கூப்பிட்டு பேசாமலும்....

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனாவாரி சான்றிதழ் கொடுப்பது அதிகாரிகளுடைய மனோ நிலையைப் பொறுத்திருக்கிறது. அவர்கள் பேரம் சரியாக வந்தால் சர்டிபிகேட் கொடுப்பார்கள். இல்லையென்றால் இல்லை என்று சொல்வார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதைத் தான் நான் சொன்னேன். நாகப்பட்டினத்தில்—மன்னார்குடி, திருவாரூர் பகுதிகளில் 1978 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலில் அனாவாரி சர்டிபிகேட் எப்படி கொடுத்தார்களோ அப்படி கொடுப்பார்கள் என்று சொன்னேன். அது எப்படி என்பது உங்களுக்குத் தெரியும். அப்போது பேரம் தேவைப்படவில்லை என்பதையும், அவர்கள் கிராமத்திற்குச் செல்லவில்லை என்பதும், அதற்காகத் தான் இதை எடுத்துக் காட்டாகச் சொன்னோம்.

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நமது மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்த வேளாண்மை உயர்மட்டக் குழுவில் விவசாயிகள் பேசும்போது கூட, பணம் கொடுத்தால்தான் சர்டிபிகேட் கொடுக்கப்படும் என்று அதிகாரிகள் கூறியதாக திருவாரூரில் நடந்த அந்த விவசாயிகள் உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் விவசாயிகள் கூறினார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதற்குத்தான் இதை மீண்டும் மீண்டும் நான் பேசுவது—அங்கே அதிகாரிகளுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் உங்களைப் பேசச் சொல்லி, நான் பதில் சொல்லியிருக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இனிமேல் அந்த கிராமத்தார்கள் கிராமத்தினுடைய சொந்தப் பணத்தைக் கொடுத்தார்களானால், அந்த கிராம மக்களே தண்டித்துக் கொள்வது ஆகும். நான் அதைச் சொல்வதற்குக் காரணம்—உங்களுக்கு இந்த அரசின் மீது நம்பிக்கை இருக்கிறது—முதலமைச்சர் மீது நம்பிக்கை

இருக்கிறது. அமைச்சர்களின் மீது நம்பிக்கை இருக்கிறது. அங்கே அப்படி எழுதப்படவில்லை என்றால், நேரடியாக என்னிடம் சொல்லுங்கள். நாகப்பட்டினத்திற்கு காரிலே போகும் போது நீடாமங்கலம் வரைக்கும் கண்ணுக்கு எட்டிய வரைக்கும் தண்ணீர் இருக்கிறது. அதற்கு மேலே அந்த அதிகாரிகள் அந்த கிராமங்களுக்குச் சென்று, வயல்களைப் பார்த்து, அனாவாரி சர்டிபிகேட் எழுதுவதற்கு அவர்கள் ஏதாவது கேட்டால், அவர்களை என்ன செய்யலாம், அவர்களை தூக்கிலே போடலாம். நான் இதைக் கண்டிப்பாகச் சொல்வதற்குக் காரணம். அனாவாரி சர்டிபிகேட் கொடுப்பதற்கு எங்கேயாவது சங்கடங்கள் இருந்தால், நேரடியாக என்னிடத்திலே சொல்லலாம். அல்லது தொலை பேசி மூலம் சொல்லலாம். அனாவாரி சர்டிபிகேட் உங்களுக்கு நியாயமான இடத்தில் நிச்சயமாகக் கிடைக்கும். முதலில் உங்களுக்கு உங்கள் மீது நம்பிக்கை வேண்டும். என் மீது நம்பிக்கை வர வேண்டும். அந்த இடங்களிலே, கிராமங்களிலே அனாவாரி சர்டிபிகேட்-ஐ அதிகாரிகள் கொடுக்காவிட்டால், வருவாய்த்துறை அமைச்சர் கொடுங்கள் என்று உத்தரவு போடுவார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு வர வேண்டும். அந்த நம்பிக்கையின் மீது நீங்கள் நடக்க வேண்டும் அந்த நம்பிக்கையிலே நீங்கள் இருக்க வேண்டும். அனாவாரி சர்டிபிகேட் நிச்சயமாகக் கிடைக்கும். அனாவாரி சர்டிபிகேட் பற்றி கவலை இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே அணாவரி சர்ட்டிபிகேட் கிடைப்பதற்கும் இன்னும் மற்றவைகளுக்கு எல்லாம் இந்த அரசு நடவடிக்கைகளையும் உதவிகளையும் செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பல இடங்களில் எவ்வளவோ பெரிய உடைப்புகள் வந்திருக்கின்றன. ஒன்றிரண்டைச் சொல்ல வேண்டும் என்றால், அம்மாப்பேட்டை யூனியனில் சொல்லவேண்டும் என்று சொன்னால், கம்பன்நத்தம், பெரிய ஏரி உடைப்பு. 60 மீட்டர் நீளம். அதைப்போலவே கம்பந்தன்குடி பாலம், அது 20 மீட்டர் நீளம். அதைப்போல வலங்கம்பாடி யூனியனில் சொல்லவேண்டும் என்றால், ஆலங்குடிக் கோயில், சிந்தாமணி ரோடு, சந்திரசேகரபுரம், அஸ்திவாரன்குடி, இப்படி பல்வேறு விதமான ரோடுகளில் உடைப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன. இதைப் படித்துக்காட்டுவதற்குக் காரணம் எவ்வளவு மீட்டர் நீளமாக இருந்தாலும் உடனடியாக அதைச் செப்பனிட்டு அங்கே வாகனங்கள் சென்றன என்பதற்காகத்தான் ஒன்றிரண்டைப் படித்துக் காட்டினேன். இப்போது கொடைக்கானலில் 3 இடங்களில் மழை நன்றாக பெய்திருக்கிறது. இதனால் 3 இடங்களில் மலை சரிந்து அங்கே 2 நாட்கள் பஸ் போக்குவரத்து தடைப்பட்டுவிட்டது. அதிகாரிகள் மிக விரைவிலே வேலை செய்யாததற்குக் காரணம், 3 இடங்களில் பேய் மழை பெய்து, பெரிய மண்ற் பாறைகள் சரிந்துவிட்டன. ஆகவே, 2 நாட்களிலே சரிசெய்து, 21 ஆம் தேதியிலிருந்து அங்கே பேருந்துகள் செல்லுகின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதைப்போலவே கொடைக்கானலைப் போல, நீலகிரியிலேயும் இப்படி ஏற்பட்டிருக்கிறது. மூன்றிலே அப்படி சரிவு ஏற்பட்டது. இரண்டு நாட்கள் பேருந்துகள் செல்ல முடியவில்லை. அவைகளை உடனடியாக சரி செய்து இன்றைக்கு பேருந்துகள் அங்கே, நேற்று 1 மணியிலிருந்து செல்லுகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி பல்வேறு உதவிகளை இந்த அரசு செய்துகொண்டு வருகிறது என்பது மட்டுமல்ல....

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் நாகப்பட்டினம் சப்-கலெக்டரிடம் ஆயிரக்கணக்கான பெட்டிசன்கள் உண்மையிலே கிடைக்க வேண்டியவைகள் பெண்டிங்காக இருக்கின்றன என்று சொல்கிறபோது—இப்போது வரக்கூடியது அல்ல—அந்த ஸ்டேஜிலேயே கொடுத்தது. அவர்கள் அரசாங்க இன்ஸ்ட்ரக்‌ஷன்படி அதையெல்லாம் குளோஸ் பண்ணிவிட்டதாகச் சொன்னார்கள். அப்படியானால் அந்த பெட்டிசன்கள் எல்லாம் ரீ-வெரிபிகேசன் வருமா என்று கேட்டேன். இல்லை என்று சொன்னார்கள். ஆகவே, கவர்ன்மென்ட் அதை முடித்தாகிவிட்டதா ? அந்த பெட்டிசன்கள் பரிசீலனை செய்யப்படமாட்டாதா ? நான் உங்களுக்கு எழுதிக் கொடுத்து இருக்கிறேன். 20 ஆயிரம் பெட்டிசன்கள் 3 தாலுக்காக்களிலே இன்னும் பென்டிங்காக இருக்கின்றன. அன்று கொடுத்த பெட்டிசன்கள், அதை மறுபடியும் வெரிபிகேசன் செய்து ஜெனியுன் கேஸ்களிலே கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சில இடங்களில் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அரசு தானே பணம் கொடுக்கிறது. கொடுக்கட்டுமே என்று, 200 ரூபாய் என்று பல பேர்கள் கேட்கிறார்கள். சிலர் என்ன நினைக்கிறார்கள் என்றால், ஒரு சுவர் விழுந்து விட்டது, அதற்கும் 200 ரூபாய் ஏன் கொடுத்தார்கள் என்று கேட்கிறார்கள். 50 ரூபாய் கொடுக்கப்பட்டவர்கள் 200 ரூபாய் கேட்கிறார்கள். 200 ரூபாய் கொடுக்கப்பட்டவர்கள் 500 ரூபாய் கேட்கிறார்கள். அதுவும் கொடுக்கப்படாதவர்கள் 50 ரூபாய் கேட்கிறார்கள். இது ஒரு பக்கம் இருக்கிறது. ஆனால், சில இடங்களில் ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கான பேர்களை எடுக்கிறபோது சில இடங்களில் தவறு நடந்திருக்கும். அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் கோவேந்தன் அவர்கள் சொல்கிறபோது சில இடங்களில் தவறு நடந்திருக்கிறது என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள் என்று ஒரேபிடியாக பிடித்துக்கொண்டீர்கள். அவர்கள் நல்ல எண்ணத்தில்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான இடங்களில் இப்படி நடக்கிறபோது, சில இடங்களில் தவறு நடந்து இருக்கக்கூடும். இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால், இப்படி கொடுக்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1984 பிப்ரவரி 22

கப்பட்ட மனுக்களில் நியாயமான, தகுதியுடையவர்கள் விட்டு இருந்தால், அதை வெரிபை பண்ணி, அவர்களை தகுதியுடையவர்களாக்கி, அவர்களுக்கும் கிடைப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களை கலந்து பேசி ஆவன செய்வேன் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நிவாரண வேலைகள் வேகமாக நடைபெற்றன என்பதற்காக உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால், தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகத்தை எடுத்துக்கொண்டால், அங்கே ஒரு டெபுடி கலெக்டர் போடப்பட்டிருக்கிறது. திருச்சியிலேயும், ஒரு ஆர்.டி.ஓ., டெபுட்டி கலெக்டர் எல்லாம் போடப்பட்டிருக்கிறது. இன்னும் பல்வேறுபட்ட அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள் இன்றைக்கு தஞ்சையிலே மட்டும், அங்கே தங்கி வேலை செய்ய வேண்டும் என்று, பொதுப்பணித்துறைக்கும், நெடுஞ்சாலைத்துறைக்கும், 2 தலைமை இன்ஜினியர்களையும், அவர்களுக்குத் துணையாக பல இன்ஜினியர்களையும் இந்த அரசு போட்டிருக்கிறது என்பதை நான் சொல்லி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 23–2–1984 காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8–10 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது

## 10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

(86) வருவாய்த்துறையின் 28–3–1959ஆம் நாளிட்ட S.R.O. ஏ. 1966/1959ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 20—12—1983 ஆம் நாளிட்ட 1452 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(87) உள்துறையின் 31—3—1979 ஆம் நாளிட்ட II(2)/HO/2308/79 ஆம் எண். அரசாணையின்படி இந்திய அரசுக்குச் சொந்தமான அனைத்து மோட்டார் வண்டிகளுக்கும் அனுமதிக் கப்பட்ட விலக்கினை ரத்து செய்வதுகுறித்து உள்(போக்குவரத்து) துறையின் 27—12—1983 ஆம் நாளிட்ட 2725 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].



1984 பிப்ரவரி 22]

(88) தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

(17) உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (முதல் பட்டியல்).

# இணைப்பு

(182-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கை

**வறட்சி**

தமிழகத்தில் 1980, 1982 ஆகிய ஆண்டுகளில் தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்து விட்ட காரணத்தால் எல்லா மாவட்டங்களும் 1981-82, 1982-83 மற்றும் 1983-84ல் வறட்சியால் பாதிக்கப்பட்டன.

1983-ஆம் ஆண்டில் போர்க்கால அடிப்படையில் வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. முடிக்கப்பட்ட பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகளும், அவற்றிற்கான செலவினங்களும் பின்வருமாறு :

| பணிகள்/திட்டங்கள் குறித்த விவரம். (1) | முடிக்கப்பட்ட பணிகளின் விவரம். (2) | செலவு (ரூபாய் இலட்சத்தில்.) (3) |
|---|---|---|
| அ. குடிநீர் வழங்கல். | | |
| 1 தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூலம் புதிய துளைக் கிணறுகள் அமைத்தல் .. .. | 21,726 | 4,579.00 |
| 2 பொதுக்கிணறுகளை ஆழப்படுத்துதல் | 20,260 | 373.41 |
| 3 உள்ளாட்சிகளின் மேல் நிலைத் தொட்டிகளில் நீர் வழங்கும் பணிகளுக்கு மின்கம்பித் தொடர்புகள் அமைக்க .. .. .. .. | 48 | 250.00 |



| | | |
|---|---|---|
| 4 ஏரிகளின் அருகில் திறந்தவெளிக் கிணறுகள் அமைக்க .. .. | 339 | 312.64 |
| 5 திறந்த கிணறுகளில் டீஸல் இயந்திரம் அமைத்தல் .. .. .. | 22 | 1.64 |
| 6 குடிநீர் வழங்கலை அதிகரிப்பதற்காக நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு நிதியுதவி .. .. .. .. | 86 | 155.42 |
| 7 சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல் | 6,500 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. 2,850 தண்ணீர் தொட்டிகள் மாநகரின் பல பகுதிகளில் நிறுவப்பட்டு அவற்றிற்கு 250 லாரிகள் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டது .. | 1,036.00 |
| 8 மதுரை மாநகரில் குடிநீர் வழங்கல் .. | .. | 30.00 |
| 9 லாரிகள், டிராக்டர்கள் மூலம் குடிநீர் கொண்டு செல்லுதல் .. .. | 704 | 150.77 |
| 10 சிறிய கிணறுகள் மற்றும் உறைக் கிணறுகள் அமைத்தல் .. .. | 767 | 10.00 |
| ஆ. வேலை வாய்ப்புத்திட்டங்கள் | | |
| 1 நீர்ப்பாசன வேலைகள் .. .. | 14,859 | 1,731.35 |
| 2 புதிய மண்சாலைகள் அமைத்தல் .. | 1,565 | 272.36 |

வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் நலிவுற்ற பிரிவி[illegible]கு நிவாரணம் அளிக்கும் வகையில், நிலமற்ற விவசாய தொழிலாளர்களின் குடும்பத்திற்கு ஒரு ஜனதா வேட்டியும், [illegible] ஜனதா சேலையும் இலவசமாக வழங்கப்பட்டது. இதுவரை [illegible],81,836 வேட்டிகளும், 24,19,940 சேலைகளும் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள நிதி உதவி வேண்டி ரூ. 217.73 கோடி அளவிலான திட்டம் மத்திய அரசிற்கு 1983 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் மார்ச் திங்களில் சமர்ப்பிக்கப்பட்டது. மத்திய அரசின் குழு மார்ச் திங்கள் முதல் வாரத்தில் தமிழகத்தில் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டது. மேற்படி குழுவின் பரிந்துரையின்படி கடந்த ஏப்ரல் திங்களில் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுக்கென பல்வேறு தலைப்புகளில் செலவிட ரூ. 63.72 கோடி மத்திய அரசு உச்சவரம்பு நிர்ணயித்தது. பின்னர் ஜூன் திங்களில் வேளாண்மை இடு பொருட்களுக்கு ரூ. 4.64 கோடி நிதி உதவி அளித்தது. மாநில அரசு பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மத்திய அரசு குறித்திருந்த இலக்குக்கு மேல் செலவிட்டுள்ளது. எனவே, குடிநீர் பணிகளுக்கென கூடுதலாக செலவிடப்பட்டுள்ள நிதியை அளித்து உதவுமாறு மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இம்மாநில அரசின் கோரிக்கையை ஆய்வு செய்வதற்காக, மத்திய அரசு மீண்டும் ஒரு குழுவை கடந்த அக்டோபர் திங்கள் முதல் வாரத்தில் தமிழகத்திற்கு அனுப்பி வைத்தது. இக்குழு சென்னை நகர் குடிநீர் ஆதாரங்களையும், செங்கல்பட்டு, தென்னாற்காடு, வடஆற்காடு, சேலம், மதுரை, மேற்கு இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட சில பகுதிகளில் நடந்தேறிய குடிநீர்ப் பணிகள் மற்றும் வேலைவாய்ப்பு பணிகளை பார்வையிட்டது. இக்குழு வறட்சி நிவாரண வேலைகள் மிகச் சிறப்பாக செய்யப்பட்டுள்ளதாக பாராட்டியுள்ளது. இந்த இரண்டாவது மத்திய குழுவின் பரிந்துரையின் பேரில் தற்போது குடிநீர் பணிகளுக்கென கூடுதலாக ரூ. 9.18 கோடி செலவிட மத்திய அரசு அனுமதித்துள்ளது. ஆக மொத்தம் மத்திய அரசு பல்வேறு வறட்சி நிவாரணப்பணிகளுக்கு ரூ. 77.54 கோடி நிதி உதவியை அனுமதித்துள்ளது.

மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ள ரூ. 77.54 கோடியில், நமது மாநில வரவு-செலவுத்திட்டத்தில் வருடந்தோறும் இயற்கை இடர்ப்பாடுகள் நிவாரணம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டு வரும் மார்ஜின் தொகையான ரூ. 8.59 கோடியில் இரண்டு ஆண்டுகளில் சேர்ந்துள்ள (1982-83 மற்றும் 1983-84) ரூ. 17.18 கோடியை கழித்து (77.54— 17.18— 60.36 கோடி) மீதமுள்ள ரூ. 60.36 கோடியை திட்ட முன்பணமாகவும் மத்திய அரசின் சிறப்பு நிதியாகவும் கொடுத்து உதவியளிக்கும். இதுவரை மத்திய அரசு ரூ. 48 கோடி நிதி விடுவித்துள்ளது. இதில் ரூ. 14.40 கோடி மானியமாகவும், ரூ. 33.60 கோடி கடனாகவும் அமையும்.



30-9-1983-ல் வறட்சிப் பணிகள் அநேகமாக முடிந்த பிறகும் இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தொடர்ந்து குடிநீர்ப் பிரச்சினை நிலவியதால் அம்மாவட்டங்களில் வறட்சி நிவாரணத்தின் கீழ் 484 குழாய்க் கிணறுகள் ரூ. 91.80 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இதில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 271 குழாய்க் கிணறுகளும், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் முறையே 146, 67 குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில் போதுமான மழையில்லாமல் இருப்பதாகவும், அங்கு குடிநீர்ப் பிரச்சினையை சமாளிக்க நிதி அனுமதிக்கும்படியும் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் சம்பந்தப்பட்ட தலைமைத் துறை அலுவலர்களுடன் அம்மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நிலைமையை ஆய்ந்து அறிக்கை தருமாறு கோரப்பட்டுள்ளார்.

30-9-1983-ல் வறட்சிப் பணிகள் அநேகமாக முடிந்துவிட்டன ; 1983-ல் தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் நன்றாக அமைந்ததால், எல்லா மாவட்டங்களிலும், குறிப்பாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் பயிர்கள் நன்கு விளைந்து பயனைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், துரதிஷ்டவசமாக 21-12-1983 முதல் 24-12-83 வரை பெய்த கடுமையான மழையினால் வெள்ளச் சேதம் ஏற்பட்டது. 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பெய்ய வேண்டிய இயல்பான மழையின் அளவும், பெய்த மழையின் அளவும், டிசம்பர் 22-ந் தேதி முதல் 28-ம் தேதி வரை பெய்ய வேண்டிய இயல்பான மழை அளவும், பெய்த மழையின் அளவும், சதவிகித வேறுபாடுகளும் இணைப்புகள் 1, 1ஏ-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

வெள்ளம் :

தமிழ்நாட்டில் பல பகுதிகளில் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில், அதாவது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தென்னாற்காடு மாவட்டங்களிலும் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் சில பகுதிகளிலும் சென்னை நகரிலும் கடுமையான மழை பெய்தது. உண்மையிலேயே சில பகுதிகளில் ஒரு பருவத்தில் பெய்யக்கூடிய மொத்த மழை 2 அல்லது 3 நாட்களில் பெய்தது.

நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. இராணுவ உதவிகளும் பெறப்பட்டன. இராணுவத்தைச் சேர்ந்த ஹெலிகாப்டர்கள் தண்ணீரால் சூழப்பட்ட கிராமங்களில் உணவுப் பொட்டலங்கள் மற்றும் ரொட்டித் துண்டுகள் போட பயன்படுத்தப்பட்டன. தண்ணீரால் சூழப்பட்ட பகுதிகளிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கு விமானப் படையைச் சேர்ந்த படகுகள் பயன்படுத்தப் பட்டன. இது தவிர மூன்று படகுகள் (Inflatable Liferafts) ரூ. 74,000-க்கு விலைக்கு வாங்கி பயன்படுத்தப்பட்டன. ரொட்டிகளும், உணவுப் பொட்டலங்களும் விமானம் மூலம் தண்ணீரால் சூழப்பட்ட மக்களுக்குப் போடப்பட்டன. மருத்துவக் குழுக்கள் உடனடியாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்பப்பட்டன. மருத்துவ வசதியுடன் 30 ஊர்திகளும், ஆம்புலன்ஸ் வண்டிகளும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்பப் பட்டன. 22,18,627 பேர்களுக்கு காலரா தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. 1,89,062 நீர் நிலைகளில் குளோரின் தெளிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சுமார் 10 இலட்சம் மக்கள் தாழ்வான பகுதிகளிலிருந்து 1,658 நிவாரண முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. இதற்காக ரூ. 267.79 இலட்சம் செலவிடப் பட்டது.

சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் திரு. ஏ. பத்மநாபன் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் தங்கி வெள்ள நிவாரணப் பணிகளை நேர்முகமாக கவனித்தும், அதிகாரிகளுக்கு வேண்டிய உத்திரவுகள் மற்றும் அறிவுரைகள் அவ்வப்போது வழங்கியும், தேவையான போது தலைமைச் செயலர் மற்றும் வருவாய் செயலருடன் தொடர்பு கொண்டு தேவையான உத்திரவுகளை அவ்வப்போது வழங்கி தாமதமில்லாமல் வேலைகள் நடக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு வந்தார்கள்.

நிலச் சீர்திருத்த ஆணையர் திரு. என். ஹரிபாஸ்கர் அவர்கள் திருச்சியில் தங்கி அம்மாவட்டத்தில் வெள்ள நிவாரண நடவடிக்கைகள் விரைவில் நடக்க முனைப்பாக ஈடுபட்டார்கள்.

நீர்ப்பாசனத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை தலைமை பொறியாளர்கள் தஞ்சையில் தங்கி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆறுகள், கால்வாய்கள், ஏரிகள், சாலைகள் மற்றும் பாலங்களை விரைவில் சரி செய்வதற்கு மற்ற அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் கவனித்து வந்தார்கள்.

விவசாயத் துறை இயக்குநர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை சுற்றிப் பார்த்து, பாதிக்கப்பட்ட விவசாயப பயிர்களுக்கு அரசு மூலமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை கவனித்தார்கள்.





பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரும் கால்நடைத் துறை இயக்குநரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு சென்று வேண்டிய நோய் தடுப்பு பாதுகாப்புகளை மேற்கொண்டனர்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகள் தஞ்சை மாவட்டத்திற்கு சென்று, அத்தியாவசியமான பொருள்களான அரிசி, மண்ணெண்ணெய் போன்றவைகளை தடங்கலின்றி கிடைக்க ஏற்பாடுகள் செய்தும், வெள்ளத்தில் அடிபட்டதினால் நிறம் மாறிய நெல்லை வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தனர். அத்துடன் ஈரப்பதம் உள்ள நெல்லை 18 சதவீதத்திலிருந்து 25 சதவிகிதம் இருந்தாலும் வாங்க வேண்டும் என்று சொல்லி விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்கள்.

மூன்று பெய்லி பாலங்கள் மயிலாடுதுறை-திருத்துறைப்பூண்டி-முத்துப்பேட்டை-பட்டுக்கோட்டை சாலையில் இராணுவத்தினரால் போடப்பட்டன.

தமிழக முதல்வர் அவர்கள் வெள்ளப் பகுதிகளை விமானப் படை ஹெலிகாப்டர் மூலமாகவும், சாலை வழியாகவும் கீழ்க் கண்டவாறு பல்வேறு இடங்களில் பார்வையிட்டார்கள்:—

| | |
|---|---|
| 26-12-1983 | —தென்னாற்காடு, தஞ்சை மாவட்டங்கள். |
| 27-12-1983 | —தஞ்சை, இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்கள். |
| 28-12-1983 | —திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 29-12-1983 | —திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்கள். |

அநேக இடங்களில், ஹெலிகாப்டர் மூலமாக ரொட்டித் துண்டுகள் மற்றும் உணவுப் பொட்டலங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போடுவதை, முதலமைச்சர் அவர்கள் ஹெலிகாப்டரிலிருந்து பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் 23-12-1983 அன்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபம் மற்ற இடங்களுக்கும் 25-12-83 அன்று புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களுக்கும் சென்று வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டார். 26-12-1983-லிருந்து 12-1-1984 வரை தஞ்சை மாவட்டத்தில் தங்கி இருந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு, வெள்ளத்தால் அல்லலுற்ற மக்களுக்கு ஆறுதல் கூறியும், தேவையான நிவாரணங்களை உடனடியாக வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தார்கள். மேலும் பல துறைகளை சார்ந்த அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி நிவாரணப் பணிகளை தீவிரப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள்.

[1984 பிப்ரவரி 22

மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ். இராமச்சந்திரன், திரு. கே. காளிமுத்து, டாக்டர் எச். வி. ஹண்டே, திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. ஆர். சௌந்தரராஜன், திரு. எஸ். ஆர். இராதா, திரு. எம். ஆர். கோவேந்தன், திருமதி கோமதி சீனிவாசன், திரு. ஒய். எஸ். எம். யூசுப், திரு. க. கலைமணி அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டு தேவையான போது அங்கே தங்கியும் மக்களுக்கு ஆறுதல் கூறி மற்றும் அரசு அதிகாரிகளுடன் கலந்து ஆலோசனை செய்தும் நிவாரண வேலைகளை தீவிரப்படுத்த பணிபுரிந்தனர்.

தலைமைச் செயலர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு முதலமைச்சருடன் சென்று பார்வையிட்டார்.

30-12-1983 அன்று மத்திய இராணுவ அமைச்சர் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் வெள்ளப் பகுதிகளை விமானம் மூலம் பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மக்களை நிவாரண இல்லங்களுக்கு உடனடியாக அழைத்துச் சென்று அவர்களுக்கு உணவு வழங்க மாநில அரசு எடுத்த நடவடிக்கைகளை அவர் பாராட்டினார். ''என்னைச் சந்தித்த மக்கள் எல்லோரும் மாநில அரசு வழங்கிய நிவாரண உதவிகள் திருப்திகரமாக இருக்கிறது என்று மகிழ்ச்சிகரமாக தெரிவித்தார்கள். யாரிடமிருந்தும் என்னிடம் ஒரு புகார் கூட சொல்லப்படவில்லை'' என்று அவர் கூறினார்.

டிசம்பர் மாதம் பெய்த மழையினால் 43 இலட்சம் மக்கள் தொகையடங்கிய 5,893 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. பயிர் செய்யப்பட்டிருந்த 2.2 இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் பாதிக்கப்பட்டன. தானிய இழப்பின் மதிப்பு சுமார் 102 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. 110 பேர்கள் உயிரிழந்தனர். 16,300 கால்நடைகளும் உயிரிழந்தன. 3,27,236 குடிசைகள் முழுமையாகவும், 3,82,834 குடிசைகள் பகுதியாகவும் சேதமடைந்தன. மாவட்ட வாரியான சேதங்களின் விபரங்களை இணைப்பு 2-ல் காணலாம், 319 கிலோ மீட்டர் தூரமுள்ள அரசு சாலைகள் முழுமையாகவும், 503 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலைகள் பகுதியாகவும், 7,000 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலைகள் ஓரளவும் மாவட்டங்களில் பாதிக்கப்பட்டன. மூன்றாண்டுகளாக தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் போடப்பட்ட சாலைகள் சேதமடைந்தன. இதைத் தவிர நகராட்சி சாலைகளும் மற்றும் 153 கிலோ மீட்டர் தூரமுள்ள சென்னை மாநகராட்சி சாலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. 3,183 நீர்ப்பாசன நிலையங்கள் சேதமடைந்துள்ளன. 1,110 பள்ளி மற்றும் மருத்துவ கட்டிடங்கள் பாதிக்கப்பட்டன. 611 பாலங்கள் சேதமடைந்துள்ளன.



1984 பிப்ரவரி 22]

வெள்ளத்தால் சேதமடைந்த ஒவ்வொரு குடிசைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வரைமுறைகளின்படி குடிசை மானியம் முழுச் சேதமடைந்த குடிசைக்கு ரூ. 200-ம், பகுதிச் சேதமடைந்த குடிசைக்கு ரூ. 50-ம், ஒவ்வொரு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கும் தலா 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு சேலை, ஒரு வேட்டி முதலியன இலவசமாக வழங்கப்பட்டன. மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ. 1,000 உதவித் தொகையாக வழங்கப்பட்டது. இது தவிர பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, வெல்லம், கரும்பு மற்றும் மஞ்சள் வாங்குவதற்காக குடிசையிழந்த குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 10 நிவாரணமாக அளிக்கப்பட்டது. மத்திய அரசின் உதவியை எதிர்நோக்கி ரூ. 37.54 கோடி கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ளது :

| நிவாரணப் பணிகள் | ரூபாய் கோடியில். |
|---|---|
| நெடுஞ்சாலைத் துறை (மீனவர்கள் குடியிருப்புக்குச் செல்லும் சாலைகள், பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய சாலைகள் உட்பட) .. .. | 12.50 |
| பொதுப்பணித்துறை (பாசனம்) .. .. | 8.00 |
| பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்) .. .. | 1.00 |
| சென்னை மாநகராட்சி சாலைகள் .. .. | 2.00 |
| நகராட்சி சாலைகள் .. .. .. | 2.00 |
| குடிதண்ணீர் .. .. .. .. | 0.30 |
| விவசாயிகளுக்கு சலுகைகள் .. .. .. | 0.53 |
| மருத்துவ உதவி .. .. .. .. | 1.00 |
| **கருணை மானியம்** | |
| தஞ்சாவூர் மாவட்டம் .. .. .. | 8.50 |
| புதுக்கோட்டை மாவட்டம் .. .. | 0.50 |
| திருச்சிராப்பள்ளி மாவட்டம் .. .. .. | 0.25 |
| தென்னாற்காடு மாவட்டம் .. .. .. | 0.25 |
| பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடிசையை இழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 10 வீதம் .. .. .. .. .. | 0.71 |
| மொத்தம் .. | 37.54 |

மேலே கூறப்பட்ட கருணை மானியம், அரிசி, துணிமணி முதலியன, நிவாரண இல்லங்களில் உணவளித்த செலவு, உணவுப் பொட்டலங்கள், ரொட்டி, முதலியன கொடுத்தது, ஆகியவற்றின் மொத்தச் செலவு சுமார் ரூ. 1,594 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த விபரங்கள் மாவட்ட வாரியாக இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

பயிர் செய்தநிலங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு, விதை உரம் முதலியன வாங்குவதற்கு சிறு விவசாயிகளுக்கு (Small Farmers) 25 சத விகிதம் மானியமும், குறு விவசாயிகளுக்கு (Marginal Farmers) 331/3 சத விகிதம் மானியமும், மீதி கடனாகவும் அளிக்கப்படுகிறது. சுமார் 2,262 ஏக்கர் நிலங்கள் மண்ணால் மூடப்பட்டது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மண் மூடப்பட்ட நிலங்களை இலவசமாக சீரமைக்க அரசு உத்தர விட்டுள்ளது. இதர விவசாயிகளுக்கு 50 சத விகிதம் உதவியுடன் (ஒரு ஏக்கருக்கு ரூ. 1,000-க்கு மேல் போகாமல்) இந்த சீரமைப்பு செய்யப்படுகிறது.

16,300 கால்நடைகள் வெள்ளத்தால் இழக்கப்பட்டன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வாங்கப்பட்டு இழக்கப்பட்ட கால்நடைகளின் உரிமையாளர்களுக்குக் காப்பீட்டுத் தொகையை விரைவில் வழங்க காப்பீடு நிறுவனங்கள் கோரப்பட்டு மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கடன் மூலம் பெறப்பட்ட கால்நடைகளுக்கு அடர் தீவனம் பாதி விலையில் நாள் ஒன்றுக்கு ஒரு கறவை மாட்டிற்கு 2 கிலோ வீதம் 15 நாட்களுக்கு வழங்குவதற்காக அரசு ஆணை வழங்கப்பட்டது. இதனால் 10,000 கால்நடைகள் பயன் அடைந்துள்ளன. மேலும் கால்நடைகளின் நலத்தைக் கருத்திற் கொண்டு, 31 குழுக்கள் அமைக்கப்பட்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இது வரை 3,21,278 கால்நடைகளுக்குத் தடுப்பூசியும், 45,557 கால்நடைகளுக்கு சிகிச்சையும், 13,420 கால்நடைகளுக்குக் குடற்புழு நீக்கமும் செய்யப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களில் பயிர் விளைச்சல் 37 காசுக்கு, அதாவது 50 சதவீதம் குறைவாக இருக்கும் இனங்களில் நிலவரி முதலியவற்றை அரசு தள்ளுபடி செய்துள்ளது.

1983-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21, 22, 23, 24-ந் தேதி வரையில் பெய்த எதிர்பாராத மழையால் சேதமடைந்துள்ள சாலைகள் மற்றும் நீர்ப்பாசன ஆதாரங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| சேதங்களின் விவரம். | சேதங்களில் எண்ணிக்கை. |
|---|---|
| சாலைகள் | 4,559 |
| ஆறுகள் .. .. .. .. .. | 1,599 |
| குளங்கள் .. .. .. .. | 1,152 |





இச்சேதங்களினால் போக்குவரத்து முழுமையாகப் பாதிக்கப் பட்டது. இருப்பினும் அதிகாரிகளுடைய பெருமுயற்சியால் போக்குவரத்துத் தடைகளும், நீர்ப்பாசன ஆதாரங்களில் ஏற் பட்ட உடைப்புகளும் மிக விரைவில் சரி செய்யப்பட்டன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் 1983-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதிக்குள், போக்குவரத்துத் தடை முழுமையாக நீக்கப்பட்டது என்று சொல்லலாம். இம்முயற்சிக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இந்த அரசு பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது.

எதிர்பாராதவிதமாக பல கிராமங்கள் வெள்ளப் பெருக்கினால் பல நாட்கள் சூழப்பட்டு இருந்தன. அப்படி சூழப்பட்ட கிராம மக்களை பாதுகாப்பான இடத்திற்கு தக்க நேரத்தில் வருவாய்த்துறை அதிகாரிகளும் மற்றவர்களும் கொண்டு வந்து சேர்த்தார்கள். அப்படி உடனடி நடவடிக்கை எடுத்திரா விட்டால் உயிர்ச்சேதம் மிக அதிகமான அளவில் நேர்ந்திருக்கக் கூடும்.

இந்தப் பணிகள் சிறப்பாக நடைபெறுவதற்காக இரவு பகலாக பாடுபட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் அவர் களுக்கு உறுதுணையாக இருந்த வருவாய்த்துறை மற்றும் இதர துறை அதிகாரிகளையும், இந்த அரசு பாராட்ட கடமைப்பட் டுள்ளது.

இந்தியப் பிரதமர் உடனடியாக தமிழ் நாட்டிற்கு ரூ. 5 கோடி உதவிப் பணம் வழங்கினார். 1984-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆம் தேதியில் முதலமைச்சர் அவர்களிடமிருந்து இந்திய பிரதமருக்கு வெள்ள நிலைமையைப் பற்றி ஒரு நேர்முகக் கடிதம் அனுப்பப்பட்டது. அதில் ரூ. 50 கோடியை இடைக்கால உதவியாக உடனடியாக அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டில் வெள்ள நிலவரம் பற்றி முதல் விரிவான அறிக்கை தயார் செய்து மத்திய அரசுக்கு 1984-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ஆம் தேதி அன்று கொடுக்கப்பட்டது. மத்திய நிபுணர் குழுவை அனுப்புவதற்கு முன்பு இடைக்கால உதவியாக ரூ. 50 கோடி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள், ஜனவரி 23-ஆம் தேதி, இரண்டாம் செயலர், மற்றும் சிறப்பு ஆணையர், மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருடன் புது டில்லி சென்று, மத்திய அரசின் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்களைச் சந்தித்து, தமிழ் நாட்டில் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து எடுத்துச் சொன்னார்கள். உடனடியாக மத்திய நிபுணர் குழு தமிழ் நாட்டுக்கு வரவேண்டிய முக்கியத்துவத்தையும் எடுத்துச் சொன்னார்கள். உடனடியாக தமிழ் நாட்டுக்கு நிதி உதவி அளிக்க வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினார்கள்.

[1984 பிப்ரவரி 2

மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்களையும், வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் சந்தித்து தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்கள் குறித்து விவாதித்தார்.

அவ்வாறே மத்திய அரசு ஒரு நிபுணர் குழுவை, தமிழ் நாட்டிற்கு 1984-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ஆம் தேதி அன்று அனுப்பி வைத்தது. அந்தக் குழு இரு பிரிவுகளாகப் பிரிந்து 1984-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ஆம் தேதி முதல் 1984-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ஆம் தேதி வரை தமிழ் நாட்டில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைப் பார்வையிட்டு வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களைக் கண்டறிந்தது. வெள்ளத்தினால் பயிர்களுக்கும், நீர்ப்பாசன திட்டங்களுக்கும், நெடுஞ்சாலைகள், அரசு மற்றும் தனியார் சொத்துக்களுக்கும் ஏற்பட்ட மாபெரும் சேதங்களை, வெள்ளம் ஏற்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகியும் தங்களால் நன்றாகக் கண்டறிய முடிந்தது என்று மத்திய நிபுணர் குழுவின் தலைவர் பத்திரிகை நிருபர்களிடம் பேசும் போது சொல்லியிருக்கிறார். இந்த வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்பு, தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் தஞ்சை மாவட்டத்து மக்களையும், அதன் மூலம், தமிழ் நா்டு முழுவதையும் வெகுவாகப் பாதித்துள்ளது என்றும் அவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரிடையாகப் பார்த்த மத்திய அரசின் நிபுணர் குழு தமிழ் நாடு உடனடியாக எடுத்த நடவடிக்கைக்ளை வெகுவாக பாராட்டியது.

ஒரு இறுதி விரிவான அறிக்கை மத்திய அரசுக்கு 1984-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3-ஆம் தேதி அன்று கொடுக்கப்பட்டது. இதில் வெள்ள நிவாரணத்திற்காக ரூ. 128 கோடி தேவைப்படும். எனவும் இத்தொகை முழுவதும் தமிழ் நாட்டிற்கு மானியமாகத் தரும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டது. மத்திய அரசின் உதவி விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே அளிக்கப்பட்ட ரூ. 5 கோடி தவிர, ரூ. 10 கோடியை மத்திய அரசு வெள்ள நிவாரணப் பணிகளுக்காக விடுவித்துள்ளது.

வெள்ளத்தினால் மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட மின் கம்பங்கள் போன்ற இழப்புகளையும் தாழ்வான பகுதியில் குடிசையில் வசிக்கும் மக்களை மேட்டுப் பகுதிக்குக் கொண்டு வருவது, தாழ்வான பகுதியை மேடாக்குவது, இவைகளுக்கு ஆகும் செலவைப் பொறுத்தும் மத்திய அரசிற்கு விரைவில் ஒரு அறிக்கை அனுப்பப்படும்.



1984 பிப்ரவரி 22]

1983-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளத்தையும், அதனால் உண்டான கடும் சேதங்களையும் ஒருவாறாக சமாளித்து, எஞ்சிய இடங்களில் உள்ள நிலங்களில் சம்பா அறுவடை உச்ச நிலையில் உள்ள நேரத்தில், எதிர் பாராத விதமாக இவ்வாண்டு, பிப்ரவரி திங்கள் 6-ந் தேதியன்று ஆரம்பித்து, ஏறக்குறைய பத்து நாட்கள் பரவலாக கடுமையாக மழை பெய்தது. இதனால் ஏற்பட்ட சேதங்கள் மாவட்ட வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**தஞ்சாவூர் மாவட்டம் :—**

தஞ்சை மாவட்டத்தில் 1984-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4 ம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை 3,757 மில்லி மீட்டர் அளவு மழை பெய்துள்ளது. பொதுவாக சராசரியாக 201 மில்லி மீட்டர் மழை அளவுதான் இந்த மாதத்தில் இதற்கு முன்பு பெய்துள்ளது. இந்தப் பெரு மழையினால், ஆறுகளும், குளங்களும் நிரம்பின. நெற்பயிர் அறுவடை பெரிதும் பாதிக்கப்பட்டது. நெல்லை அறுப்பதற்கோ, அறுத்த நெல்லை அடிப்பதற்கோ அடித்த நெல்லை காயவைப்பதற்கோ, வீட்டுக்கு எடுத்துச்செல்லவோ, விற்கவோ இக்கட்டான நிலையை இந்த மழை உருவாக்கி விட்டது. ஆறுகள் மற்றும் குளங்கள் ஆகியவற்றில் பெரும் உடைப்புகள் ஒன்றும் ஏற்படவில்லை. இந்த மழை தொடர்ந்து பெய்தால், நீர்நிலைகளும் பாதிக்கப்படுமோ என்ற அச்சநிலை உருவாகியது.

கீழ்க்கண்ட சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன —

(1) ஒட்டங்குடி - ஆயங்குடி சாலையில் 2 மீட்டர் அளவு உடைப்பு ஏற்பட்டது:

(2) பட்டுக்கோட்டை - அறந்தாங்கி சாலையில் உள்ள சிறு பாலம் உடைந்துவிட்டது ;

(3) கும்பகோணம், மன்னார்குடி, மதக்கூர், அதிராமப்பட்டினம் சாலையின் இருபுறமும் உடைப்பு ஏற்பட்டது ;

(4) பட்டுக்கோட்டை - சேதுபாவா சத்திரம் சாலையில் ஒரு உடைப்பு ஏற்பட்டது.

மேலே சொன்ன உடைப்புகள் உடனே சரி செய்யப்பட்டு விட்டன.

[1984 பிப்ரவரி 22

இதுவரையில் கிடைத்த தகவல்கள்படி கீழ்க்கண்ட பயிர்சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

(1) 2 இலட்சம் ஏக்கர் நெற்பயிர் தண்ணீரில் மூழ்கியுள்ளது. இதில் பெரும்பாலான பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

(2) 63,202 ஏக்கரில் கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலான பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

(3) 1,25,390 ஏக்கரில் சிறு தானியங்கள் பயிர் செய்யப்பட்டன. இதில் பெரும்பாலான பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன

(4) 500 ஏக்கரில் பயிரிடப்பட்ட பருத்தி முழுமையாக பாதிக்கப்பட்டது.

வருவாய்த்துறை, காவல் துறை, பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் உடனடியாக தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். இம்மாவட்டத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் : —

இம்மாவட்டத்தில் 6—2—84 முதல் 18—2—84 வரை 1,523 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. பொதுவாக இந்த மாவட்டத்தில் இந்த நாட்களில் 6 மில்லிமீட்டர் மழைதான் பெய்வது வழக்கம். இந்த பெருமழையினால் நெல் விளைச்சலுள்ள 4,305 ஏக்கர்களும், கடலை விளைச்சலுள்ள 5,000 ஏக்கர்களும், சிறு தானியங்கள் விளைச்சலுள்ள 6,000 ஏக்கர்களும் பாதிக்கப்பட்டுள்ளன. 8,405 ஏக்கர் நிலங்களில் பூச்சி அரிப்பும் ஏற்பட்டுள்ளது. 5 குளங்களும், 2 அரசு சாலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

தென்னாற்காடு மாவட்டம் : —

இம்மாவட்டத்தில் 6—2—84 முதல் 18—2—84 வரை, 1,873 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. பொதுவாக இந்த நாட்களில் 708 மில்லிமீட்டர் மழைதான் பெய்வது வழக்கம்.

104 கிலோ மீட்டர் நீளமுள்ள அரசு சாலைகளும், 95 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளும் பாதிக்கப்பட்டன. திண்டிவனம் ஏரி உடைப்பு ஏற்பட்டது. 10 ஏக்கர் நிலம் மண்மேடிடப்பட்டது. வானூர் சாலையில் உடைப்பு ஏற்பட்டது. இது உடன் சீர் செய்யப்பட்டது. காட்டுமன்னார்குடி வீராணம் ஏரியிலிருந்து 5,600



1984 பிப்ரவரி 22]

க.அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. 15 சிறு பாலங்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. 13 பள்ளிக் கட்டடங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 8,905 ஏக்கர் நிலங்களில் சம்பா பயிரும், 1,995 ஏக்கர் நிலத்தில் நாளடி பயிரும், 7,265 ஏக்கர் நிலத்தில் நவரைப் பயிரும் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் 5,830 ஏக்கர் நிலத்தில் மேற்படி பயிர்கள் சிறிதளவு பாதிக்கப்பட்டன. கடலைப் பயிர் விளைந்துள்ள 7,650 ஏக்கர் நிலம் தண்ணீரில் மூழ்கியுள்ளது. மேற்படி தானியம் விளைந்துள்ள 12,750 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டுள்ளது. 375 ஏக்கர் நிலத்தில் எள் விதைப்பு பாதிக்கப் பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் : —

இம்மாவட்டத்தில் 6—2—84 முதல் 18—2—84 வரை 93 மில்லி மீட்டர் மழை பெய்தது. பொதுவாக இந்த நாட்களில் 45 மில்லி மீட்டர் மழைதான் பெய்வது வழக்கம். ஜயங்கொண்டான் தாலுவில் 5 இடங்களில் சாலைகளில் சிறு உடைப்புகள் ஏற்பட்டு உள்ளன. 62,500 ஏக்கர் அறுவடைக்குத் தயாரான நிலங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. சோளம் மற்றும் தானிய வகைகள் விதைப்பு இம்மழையினால் தாமதப்படுகிறது. சுவர் இடிந்து விழுந்ததால் 2 பேர் இறந்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம் : —

இம்மாவட்டத்தில் 4—2—84 முதல் 18—2—84 வரை பெய்த மழை அளவு 2,177 மில்லி மீட்டர், சாதாரணமாக பிப்ரவரி மாதம் 20 மில்லி மீட்டர் மழை அளவுதான் பெய்வது வழக்கம். 6,250 ஏக்கர் பயிர் நிலம் தண்ணீரில் மூழ்கியது. 1532.50 ஏக்கர் நிலத்தில் விளைந்த மிளகாய் தண்ணீரால் சேதமடைந்தது.

மதுரை மாவட்டம் : —

இம்மாவட்டத்தில் 5—2—84 முதல் 18—2—1984 வரை 111 மில்லிமீட்டர் மழை பெய்தது. பொதுவாக இந்நாட்களில் 9 மில்லிமீட்டர் மழைதான் பெய்வது வழக்கம்..

திண்டுக்கல்லில் தாழ்வான பகுதிகளில் 250 குடிசைகள் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான பகுதிக்கு கொண்டு சென்று உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. சுவர் இடிந்து விழுந்து ஒருவர் இறந்து விட்டார். அவரது மனைவி மற்றும் குழந்தை காயமுற்றனர்.

[1984 பிப்ரவரி 22

திருநெல்வேலி மாவட்டம் :—

இம்மாவட்டத்தில் 4–2–1984 முதல் 18–2–1984 வரை 81 மில்லி மீட்டர் மழை பெய்தது. பொதுவாக இந்நாட்களில் 16 மில்லி மீட்டர் மழைதான் பெய்வது வழக்கம். 180 குடிசைகள் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. உயிரிழப்பு ஏதும் இல்லை. அம்பா சமுத்திரம், திருச்செந்தூர், தூத்துக்குடி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி தாலுக்காக்களில் சாலைகள் பாதிக்கப்பட்டன. கீழ்க்கண்ட நீர்ப் பாசன ஆதாரங்கள் பாதிக்கப்பட்டன :—

1. கேசவநேரி ஏரி.
2. விஜயநாராயணம் ஏரி.
3. எலந்தைக்குளம் ஏரி.
4. பிராணூர் வாய்க்கால்.
5. பணிச்சியார்குளம் ஏரி.

2,000 ஏக்கர் நிலத்தில் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டன. சோளம், கம்பு, தானிய வகைகள் சில இடங்களில் பூச்சிகளால் பாதிக்கப்பட்டன. தாம்பிரபரணி ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டது. அதனால் நீர்நிலைகளில் எல்லாம் தண்ணீர் பெருகிற்று.

வடஆற்காடு மாவட்டம் :—

இம்மாவட்டத்தில் 1–2–1984 முதல் 18–2–1984 வரை 1,665 மில்லி மீட்டர் மழை பெய்தது. சாதாரணமாக பிப்ரவரி மாதத்தில் 125 மில்லிமீட்டர் மழைதான் பெய்வது வழக்கம்.

இதன் விளைவாக ஒரு ஓட்டு வீட்டின் சுவர் இடிந்து விழுந்து ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்தனர். இறந்தவர் ஒருவர் அரசு ஊழியரானதால் குடும்பநலநிதிட்ட நிதியிலிருந்து ரூ. 1,000 வழங்கப்பட்டது. மீதி ரூ. 9,000 வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவன செய்வார். கீழ்க்கண்ட நீர்ப்பாசன ஏரிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

1. புரிசை இசா ஏரி
2. குளத்தூர் ஏரி.
3. மேலசமுத்திரம் ஏரி.
4. பட்டேரு அரசுனர்புரம் ஏரி.

பொதுப்பணித்துறை மற்றும் வருவாய் நிருவாக அதிகாரிகள் உடனே நடவடிக்கை எடுத்து மேற்கூறிய ஏரிகளில் உடைப்புகளை சீரமைத்தார்கள்.



1984 பிப்ரவரி 22]

சம்பா நெற்பயிர் 1,500 ஏக்கர் நிலத்தில் பாதிக்கப்பட்டது. வேர்கடலை 5,000 ஏக்கர் நிலத்தில் தண்ணீர் தேங்கியதாலும் வடிவதற்கு வழி இல்லாததாலும் சேதமுற்றது. 7,500 ஏக்கர் நிலங்களில் பூச்சி அரிப்பு ஏற்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம் :—

செங்கல்பட்டு மாவட்டத்தில் 4–2–1984 முதல் 18–2–1984 வரை 1912.8 மில்லி மீட்டர் அளவு மழை பெய்துள்ளது. பொதுவாக இந்த நாட்களில் 7 மில்லிமீட்டர் மழை அளவுதான் பெய்வது வழக்கம்.

இதுவரை கிடைத்த தகவல்படி 1,609 குடிசைகள் சேதமடைந்துள்ளன. சில வட்டங்களில் சேதம் கணிக்கப்பட்டு வருகிறது. 2,515 ஏக்கர் அறுவடைக்குத் தயாரான நிலங்கள் தண்ணீரில் மூழ்கியது. 1,036 ஏக்கர் நிலத்தில் பூச்சி அரிப்பு ஏற்பட்டுள்ளது. கீழ்க்கண்ட ஏரிகள் பாதிக்கப்பட்டன :—

1. திருப்புலிவனம் ஏரி.
2. பெருங்கூழி ஏரி.
3. உத்திரமேரூர் பழைய ஏரி.
4. எடமாட்சி ஏரி.
5. நீர்ப்பேர் ஏரி.
6. சின்னகிலகாபு ஏரி.
7. மிட்னமல்லி ஏரி.
8. வெல்லபோரூர் ஏரி.
9. ஆதம்பாக்கம் ஏரி.
10. பல்லாவரம் ஏரி.

அநேகமாக எல்லா பாதிப்புகளும் சரி செய்யப்பட்டு விட்டன. செம்பரம்பாக்கம் அநேகமாய் நிரம்பிவிட்டது. சைதாப்பேட்டை மற்றும் ஸ்ரீபெரும்புதூர் மக்கள் இது குறித்து எச்சரிக்கப்பட்டார்கள். உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2 சாலைகள் பாதிக்கப்பட்டன. அவை உடனே சரி செய்யப்பட்டன. சைதாப்பேட்டை வட்டம் நரவரிக்குப்பம் கிராமத்தில் இரண்டு பேர் அறுந்து விழுந்த மின்சாரக் கம்பியுடன் தொடர்பு கொண்டதால், ஒருவர் இறந்தார், மற்றவர் காயமுற்றார்.

சென்னை :—

பிப்ரவரித் திங்கள் 16 மற்றும் 17–ந் தேதி பெய்த கடும் மழையினால் சென்னையில் வியாசர்பாடி, பெரம்பூர், புளியந்தோப்பு, செம்பியம், அகரம், கொருக்குப்பேட்டை மற்றும் ஏனைய தாழ்வான பகுதிகளில் மூன்று முதல் நான்கு அடி உயரத்திற்கு தண்ணீர் தேங்கியிருந்தது.

கூவம் மற்றும் அடையாறு கரையோரப் பகுதிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டன. வீடுகள் மற்றும் சுவர்கள் இடிந்து விழுந்ததின் காரணமாக வேளச்சேரியில் மூவர், சேத்துப்பட்டில் ஒருவர் மற்றும் என்.எஸ்.கே. நகரில் மூவர் ஆக மொத்தம் ஏழு பேர் உயிர் இழந்தனர். அதில் ஆறு பேர்கள் சிறுவர் சிறுமியர்கள்.

பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களுக்கு உணவுப் பொட்டலங்களும், ரொட்டிகளும் வழங்கப்பட்டன.

பால்வள அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம், உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு மற்றும் சுகாதார அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் 17–2–1984 அன்று மாவட்ட ஆட்சியருடன் சென்று தாழ்வான பகுதிகளில் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவளிக்கவும், மற்ற நிவாரணங்களை உடனடியாக வழங்கவும் ஆவன செய்தனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 18-2-1984 அன்று வட சென்னையில் மழையினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார்கள். அனேக இடங்களுக்குக் கால்நடையாகவும் ஊர்தி செல்லாத இடங்களுக்கு ஜீப்பிலும் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க ஆவன செய்தார்.

19-2-1984 அன்று காலை கீழ்க்கண்ட இடங்களில் உள்ள பாதிக்கப்பட்ட இடங்களை அமைச்சர்கள் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடுகள் செய்தனர் :—

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி. | ஆயிரம் விளக்கு. |
| மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம். | தி. நகர். |
| மாண்புமிகு திரு. இராம வீரப்பன் .. | சைதாப்பேட்டை. |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் .. | அண்ணா நகர். |
| மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு .. | சேப்பாக்கம். |
| மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். | எழும்பூர். |
| மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே .. | பூங்கா நகர். |





| | |
|---|---|
| மாண்புமிகு திரு. எஸ். முத்துசாமி .. | புரசைவாக்கம். |
| மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு .. | மயிலாப்பூர். |
| மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி. .. | பெரம்பூர். |
| மாண்புமிகு திரு. இரா. சவுந்தரராஜன். . | ஆர். கே. நகர். |
| மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா .. | திருவல்லிக்கேணி |
| மாண்புமிகு திரு. ஒய். எஸ். எம். யூசுப் | துறைமுகம். |
| மாண்புமிகு திரு. க. கலைமணி .. | இராயபுரம். |

ஏழை எளியவர்கள் நலத்தையே கருத்தில் [illegible]டு செயல்படும் இந்த அரசு, வறட்சியால் பாதிக்கப்பட்ட [illegible]றும் குறு விவசாயிகளுக்கும், வெள்ளம் மற்றும் கடுமையான மழையினால் பாதிக்கப்பட்ட ஏனைய மக்களுக்கும், எந்தவிதமான பாரபட்சமும் இன்றி வழங்க வேண்டிய எல்லா நிவாரணங்களையும் உடனடியாக வழங்கி வந்துள்ளது. இனி வழங்கவும் தயங்காது என்று உறுதி கூறுகிறது.

இணைப்பு 1.

1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், மாவட்ட வாரியாக பெய்த மழை விவரம் (மில்லி மீட்டர்).

| மாவட்டம். | இயல்பான மழை. | பெய்த மழை. | இயல்பான மழையிலிருந்து சதவீத வேறுபாடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| சென்னை .. .. | 139.2 | 413.0 | (+)196.7 |
| செங்கல்பட்டு .. | 125.6 | 289.0 | (+)130.0 |
| தென்னாற்காடு .. | 134.6 | 387.5 | (+)187.7 |
| வட ஆற்காடு .. .. | 60.9 | 211.8 | (+)247.8 |
| சேலம் .. .. | 33.5 | 156.5 | (+)367.2 |
| தர்மபுரி .. .. | 33.7 | 121.8 | (+)261.4 |
| கோயம்புத்தூர் .. | 43.3 | 103.9 | (+)140.0 |
| பெரியார் .. .. | 33.8 | 159.5 | (+)371.9 |
| திருச்சிராப்பள்ளி .. | 62.0 | 286.7 | (+)362.4 |
| தஞ்சாவூர் .. .. | 168.1 | 651.9 | (+)287.8 |
| புதுக்கோட்டை .. | 81.6 | 268.1 | (+)228.6 |
| மதுரை .. .. | 58.6 | 156.7 | (+)167.4 |
| இராமநாதபுரம் .. | 87.5 | 237.9 | (+)171.9 |
| திருநெல்வேலி .. | 111.6 | 112.9 | (+) 1.2 |
| கன்னியாகுமரி .. | 72.2 | 153.2 | (+)112.2 |
| நீலகிரி .. .. | 72.4 | 228.1 | (+)215.1 |
| மாநிலம் .. | 79.4 | 235.8 | (+)197.0 |





இணைப்பு 1-ஏ.

1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் 22ந் தேதி முதல் 28ந் தேதி வரை பெய்த மழை விவரம் (மில்லி மீட்டர்).

| மாவட்டம். | இயல்பான மழை. | பெய்த மழை. | இயல்பான மழையிலிருந்து சதவீத வேறுபாடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| சென்னை .. .. | 12.3 | 336.3 | 2634 |
| செங்கல்பட்டு .. | 10.2 | 160.6 | 1475 |
| தென்னாற்காடு .. | 15.3 | 300.9 | 1867 |
| வட ஆற்காடு .. | 4.0 | 156.9 | 3823 |
| சேலம் .. .. | 3.9 | 154.7 | 3867 |
| தர்மபுரி .. | 3.0 | 104.3 | 3377 |
| கோயம்புத்தூர் .. | 2.3 | 81.6 | 3435 |
| பெரியார் .. .. | 3.4 | 140.1 | 4021 |
| திருச்சிராப்பள்ளி .. | 10.2 | 288.3 | 2726 |
| தஞ்சாவூர் .. .. | 31.0 | 507.1 | 1536 |
| புதுக்கோட்டை .. | 16.4 | 229.9 | 1302 |
| மதுரை .. .. | 10.2 | 132.3 | 1197 |
| இராமநாதபுரம் .. | 12.5 | 214.0 | 1612 |
| திருநெல்வேலி .. | 18.5 | 41.3 | 123 |
| கன்னியாகுமரி .. | 4.8 | 25.5 | 431 |
| நீலகிரி .. .. | 9.9 | 115.9 | 1017 |

இணைப்பு 2.

1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரம்

| மாவட்டத்தின் பெயர். | பாதிக்கப் பட்ட கிராமங் களின் எண் ணிக்கை. | பாதிக்கப் பட்ட மக்கள் (இலட்சத் தில்). | உயிரி ழப்பு. | கால் நடை இழப்பு. | பாதிக்கப்பட்ட குடிசை களின் எண்ணிக்கை. பகுதிச் சேதம். | பாதிக்கப்பட்ட குடிசை களின் எண்ணிக்கை. முழுச் சேதம். | பயிர்ச் சேதம் ஹெக்டேர் (இலட்சத் தில்). | பயிர்ச் சேதத்தின் மதிப்பு. ரூபாய்( இலட்சத் தில்.) |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. தஞ்சாவூர் .. .. | 1967 | 20.22 | 72 | 14,252 | 2,25,352 | 2,84,161 | 1.6617 | 90.87 |
| 2. திருச்சிராப்பள்ளி .. | 874 | 4.80 | 13 | 429 | 38,187 | 19,037 | 0.1355 | 1.21 |
| 3. புதுக்கோட்டை .. | 563 | 1.50 | 4 | 1,154 | 23,433 | 3,065 | 0.0918 | 5.69 |
| 4. தென்னாற்காடு .. | 1697 | 3.68 | 8 | 1,246 | 83,854 | 15,939 | 0.2641 | 4.50 |
| 5. இராமநாதபுரம் .. | 532 | 0.2127 | 4 | 210 | 1,546 | 430 | .. | .. |
| 6. செங்கல்பட்டு .. | 179 | 0.4136 | 1 | .. | 1,954 | 2,405 | 0.0080 | 0.1985 |
| 7. சென்னை .. .. | 5* | 5.00 | .. | .. | 4,853 | 1,468 | .. | .. |
| 8. வட ஆற்காடு .. .. | 24 | 7.10 | 1 | 5 | 571 | 124 | 0.0088 | 0.0663 |
| 9. தர்மபுரி .. .. | .. | 0.007 | 2 | .. | 116 | 20 | .. | .. |
| 10. பெரியார் .. | .. | 0.014 | .. | .. | 225 | 73 | .. | .. |
| 11. சேலம் .. .. | .. | 0.102 | 2 | 4 | 1,724 | 395 | .. | .. |
| 12. கோயம்புத்தூர் .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 13. நீலகிரி .. .. | .. | .. | .. | .. | 13 | .. | .. | .. |
| 14. கன்னியாகுமரி .. .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. |
| 15. திருநெல்வேலி .. | 4 | 0.004 | 1 | .. | 41 | 48 | .. | .. |
| 16. மதுரை .. .. | 53 | 0.0393 | 1 | .. | 965 | 161 | .. | .. |
| மொத்தம் .. | 5,893 | 43.2926 | 110 | 16,300 | 3,82,834 | 3,27,236 | 2.1699 | 102.5348 |

* வட்டங்கள்.

## இணைப்பு 3.

1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிய கருணை மானியம் போன்ற நிவாரணங்களின் விவரம்.

| மாவட்டத்தின் பெயர். | குடிசை மானியம். | அரிசி. | மண்ணெண்ணெய். | வேட்டி. | சேலை. | நிவாரண இல்லங்கள். | உணவு பொட்டலங்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | | | | (மதிப்பு ரூபாய் இலட்சத்தில்). | | | | |
| 1. தஞ்சாவூர் .. .. .. | 775.70 | 60.00 | 11.20 | 200.00 | .. | 250.00 | 0.30 | 1,297.20 |
| 2. திருச்சிராப்பள்ளி .. .. | 65.20 | 6.50 | 1.20 | 4.00 | 12.00 | 12.66 | 0.84 | 102.40 |
| 3. புதுக்கோட்டை .. .. | 20.48 | 2.58 | 0.35 | 2.21 | 5.55 | 0.49 | .. | 31.66 |
| 4. தென்னாற்காடு .. .. | 86.00 | 16.60 | 0.01 | 31.29 | .. | 0.41 | 2.19 | 136.50 |
| 5. இராமநாதபுரம் .. .. | 1.25 | 0.53 | 0.10 | 0.15 | 0.15 | .. | .. | 2.18 |
| 6. செங்கல்பட்டு .. .. | 6.23 | 0.47 | .. | 0.35 | 0.44 | .. | .. | 7.49 |
| 7. சென்னை .. .. .. | 6.00 | 0.69 | .. | 2.04 | 3.38 | .. | 0.88 | 11.99 |
| 8. வட ஆற்காடு .. .. .. | 0.90 | .. | .. | 0.05 | 0.05 | .. | 0.02 | 1.02 |
| 9. தர்மபுரி .. .. .. | 0.23 | .. | .. | .. | .. | .. | .. | 0.23 |
| 10. பெரியார் .. .. .. | 0.26 | .. | .. | .. | .. | .. | .. | 0.26 |
| 11. சேலம் .. .. ... | 1.64 | .. | .. | 0.01 | 0.01 | .. | .. | 1.66 |
| 12. நீலகிரி .. .. .. | 0.01 | .. | .. | .. | .. | .. | .. | 0.01 |
| 13. மதுரை .. .. .. | 0.78 | .. | .. | .. | .. | .. | .. | 0.78 |
| 14. திருநெல்வேலி .. .. | 0.13 | 0.01 | .. | 0.01 | 0.02 | .. | .. | 0.17 |
| 15. கன்னியாகுமரி .. .. | 0.02 | .. | .. | .. | .. | .. | .. | 0.002 |
| மொத்தம் .. | 964.812 | 87.38 | 12.86 | 240.11 | 20.60 | 263.56 | 4.23 | 1,593.552 |



13621 சென்னை-600 008
V911,31 N84
N84.58-1